சதாவதானி

செய்குதம்பிப் பாவலர்

நினைவு மலர்



பதிப்பாசிரியர்:

பேராசிரியர் சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.ஓ.எல்.

சதாவதானி

செய்குதம்பிப் பாவலர் நினைவு மலர்

★

பதிப்பாசிரியர்:

பேராசிரியர் சி. சுப்பிரமணியன், M. A., B. O. L.

வெளியீடு:

சதாவதானிப் பாவலர் மன்றம்

இடலாக்குடி, நாகர்கோவில்.

உரிமை வெளியிடுவோர்க்கு.

மலர் பற்றிய எல்லாவிதத் தொடர்புகளையும் கீழ்க்கண்ட முகவரியில் வைத்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

முகவரி:

சதாவதானிப் பாவலர் மன்றம்
இடலாக்குடி,
நாகர்கோவில்.

அச்சிட்டோர்: ஸ்ரீ ராஜன் பிரிண்டிங் பிரஸ், வடசேரி, நாகர்கோவில்.

பதிப்புரை

தமிழகப் பெருமைக்கு நாஞ்சில் நன்னாடு நாடியளித்த கலைஞர் ஒரு சிலர். அவருள் தலைமணியும், கலைமணியுமாய் விளங்கியவர் பெருந்தகை, சதாவதானி, **செய்குதம்பிப் பாவலராவார்.** இவர்கள். 1874–ஆம் ஆண்டில், நாஞ்சில் நாட்டின் நடுவூராகிய நாகர்கோவிலைச் சார்ந்த கோட்டாறு எனும் பகுதியில், ஞானியார் சாகிபு அவர்கள் வழிவந்த தாயார்க்கும், பக்கீர்மீரான் அவர்களுக்கும் திருமகனாகப் பிறந்து திகழ்ந்தார். பொருள் நிலையால் ஏழ்மைச் சிறுமையிலிருந்தும், அறிவால், செயலால், திறத்தால் சிறந்து பெருமையடைந்தார். ஐந்திலேயே ஐந்து கற்று அறிவின் விளக்காகித் திருக் குர்ஆன் முதலிய நூற்களையும், தமிழ் நூற்களையும் கற்றார். பிறருதவி பெரிதுமின்றித் தம்முழைப்பால் தழைத்த ஒருவரானார்.

இளமையிலேயே நினைவாற்றலுக்கோர் நிலைக்களமானார். உளத்திற்கு உய்தி தரும் செய்தித்தாளாசிரியரானார். முன் முயற்சியும், முழுப் பயிற்சியுமின்றிப் பலர் வேண்டப் பாரறியச் செயற்கரிய சதாவதானம் செய்து சதாவதானியானார். அதுவன்றி, இவரது வாழ்வு முற்றிலுமே அவதானமாகவே திகழ்ந்தது என்றால் அது மிகையாகாது. பேச்சும், செயலும் எப்போதும் அவதானம் செய்வதாகவே அவர் மனம் செயல்படும் சுருங்கக் கூறின் அவர் ஓர் நடமாடும் கலைக்களஞ்சியமானார்.

பின் எண்ணிறந்த மாணவர்க்கு நல்லாசிரியரானார். உதவியாதும பெறாது ஊக்கமுடன் கற்பித்து உயிர்கொடுத்து உருக்கொடுத்த ஓர் பேராசிரியரானார். இத்தகைய பெரியார் சீறாப் புராண உரையாசிரியரானார். தேவலோகப் பழிக்குற்றவழக்கு, வேதாந்த விவகாரப் பழிக்குற்ற வழக்கு, சீறா நாடகம் முதலிய உரை நூலாசிரியரானார். கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், கோட்டாற்றுப் பதிற்றுப்பததந்தாதி, திருநாகூர்த திரிபந்தாதி, கல்வதது நாயகம் இன்னிசைப் பாமாலை, சம்சுத்தாசீன் கோவை, அழகப்பக் கோவை, சசிவோத்தமன் கோவை, நபிநாயக மான்மிய மஞ்சரி முதலியவற்றுக்கு நூலாசிரியரானார். தனிப்பாடல் பலவற்றின் தனியாசிரியரானார். பாரிற் சிறந்த பாவலரானார்.

இலக்கணக்கடல் என யாவரும் வியந்துரைக்க விளங்கினார். திருக்குறள், கம்பராமாயணம் போன்ற சிறந்த பேரிலக்கிய நூற்களுக்குப் புதிய பேருரை விளக்கும் பெருமகனாரானார். கேட்டார் பிணிக்கப் பேசும் நாவலரானார். பல பொருள்படப் பேசும், எழுதும் பான்மையராகி நாடறியும் நல்லரசியலறிஞரானார்.

இவ்வாறு தமிழகமறியும் சதாவதானி, பாவலர், நாவலர், தமிழ்க் காவலர், இலக்கணக் கடல், உரையாசிரியர், பேராசிரியர், பேறிஞர் எனும பெயர்படைத்த பெருந்தகை, செய்குதம்பிப் பாவலரவர்களது பருவுடல் 1950-ஆம் ஆண்டு மறைந்தது. ஆயின், என்று மழியாத அவர்களது நுண்ணுடலாகிய உளத்தை, உரையை, செயலை முறையே மென்மையாக, வண்ணமாக, மணமாகக் கொண்ட இம்மலரைத் தமிழினத்தார் ஒவ்வொருவர் மனமும் நுகர்ந்து மகிழுமாறு முயன்றோம்.

இத்தகைய மலருக்குக் கதிரவன் ஒளி போன்று கட்டுரை, கவியுதவிய அறிஞர் பலர்; உரமாகப் பொருளுதவியோர் பலர்; நீர்மையடையப் பிழை திருத்தும் நீர்வார்த்தார் பலர்; உறுதுணையாகக் காற்றுப் போன்று விளம்பரம் தந்து ஊற்றமளித்தார் பலர்; இது உருவாக நிலைக்களனாக நின்றுதவினார் பாவலர் மன்றத்தார்; இராசன் அச்சகத்தார். இவ்வகையான பலர்க்கும், பிறர்க்கும் இது குறித்த எமது நன்றியைத தெரிவிக்கும் கடமைமிகவுடையேன்.

இவற்றிற்கெலாம் முதலாக வித்துப்போன்றமையும் பாவலரவர்களது கருத்துக்கு வணக்கம் செய்து,

இவ்வாறாக உருப்பெற்ற இம் மலரைத் தமிழ்த் தாயின் திருவடிக்குச் சூட்டி, தமிழினத்தார் கைக்கணியாக்குகின்றோம்.

வணக்கம்.

இவை,

சி. சுப்பிரமணியன்.

(பதிப்பாசிரியர்)

மலர் ஆசிரியர் குழு.

முதுபெரும் புலவர்
தா. சாத்தாங்குட்டிப் பிள்ளை,
தெங்கொமபுதூர்.

டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம்,
எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், கேரளப்
பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

திரு என். சாகுல் ஹமீது சாகிப்,
முன்னாள் நகரமன்றத் தலைவர்,
பத்மனாபபுரம்.

டாக்டர் எஸ். முத்துக்கறுப்ப பிள்ளை,
எம். பி., பி. எஸ்.,
தேரூர்.

திரு கே. பி. எஸ். ஹமீது,
பி. எஸ்ஸி., பி. எல்.,
அகில இந்திய வானொலி, சென்னை.

திரு சி. சுப்பிரமணியன்,
எம். ஏ., பி. ஓ. எல்.,
பேராசிரியர், இந்துக்கல்லூரி,
நாகர்கோவில்.

வித்துவான்
எஸ். ஆறுமுகம், எம். ஏ., பி. டி.,
தமிழாசிரியர், அரசினர்
உயர்நிலைப் பள்ளி, இடலாக்குடி.

திரு பி. முகம்மது இஸ்மாயில்,
எம். ஏ., பி. எல்.,
வழக்குரைஞர், தக்கலை.

வித்துவான் சி சதாசிவம் பிள்ளை,
தமிழாசிரியர்,
எஸ். எல். பி. உயர்நிலைப் பள்ளி,
நாகர்கோவில்.

வித்துவான் ஏ. மாடசாமி,
தமிழாசிரியர், தே. வி. உயர்நிலைப்பள்ளி,
கோட்டாறு.

திரு பி. எஸ். மணி,
ஆசிரியர், 'கன்னியாகுமரி',
நாகர்கோவில்.

திருமதி நமச்சிவாயம் அம்மாள்,
மாதர் சங்கத் தலைவி, சுசீந்திரம்.

நன்றியுரை

"உலகெலாம் படைத்தே உயர்வுறக் காக்கும்
புலமையோன் தனக்கே புகழெலாம் உரிய"

தமிழ்ப்பெரும் புலவர், கலைக்கடல், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், அல்லாமா (டாக்டர்), மகாமதி, சதாவதானி **கா. ப. செய்குதம்பிப் பாவலர்** அவர்கள் தம் வாழ்நாள் முழுவதையும் தாய்மொழியாம் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், நாட்டு விடுதலைக்கும் தியாகஞ் செய்த பெருந்தகையாவார். வடலூர் வள்ளலாரின் அருட்பாவை மருட்பாவென்று மறுத்தோரை எதிர்த்து மருண்டோடச்செய்து 'அருட்பா அருட்பாவே' என்று நிலைநாட்டிய "தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்"; சீறாப்புராணத்திற்குச் சிறந்ததோர் உரை நூல் எழுதிய உரையாசிரியர்; செயற்கருஞ் செயலாம் சதாவதானம் செய்து தமிழன்னையின் புகழ்பரப்பிய "சதாவதானி"; இன்று நாஞ்சில் நாட்டுலாவும் பல தமிழறிஞர்களின் பேராசிரியர். இத்தகைய நாட்டுத் தொண்டரை, உண்மைத் தியாகியை, தமிழ்ப்பெரும் புலவரை, அவர்தம் கைம்மாறு கருதாக் கடப்பாட்டைத் தமிழர்கள் ஒருபோதும் மறந்துவிடமாட்டார்கள்.

நாஞ்சில் நாட்டுத் தமிழ்ப் பெருமக்களின் நெஞ்சங்களில் நீணெடுநாட்களாகவே அரும்பாக இருந்துவந்த இவ்வெண்ணம் தமிழ்ப் பெருமக்களின் அரும்பெரும் முயற்சியால் மலர்ந்து எங்கள் மன்றத்தின் முதல் வெளியீடாக உங்கள் பொற்கரங்களில் எழில்மணம் வீசுகிறது.

மலருக்குக் கவிதை, கட்டுரை, வாழ்த்துரை, விளம்பரம், நன்கொடை ஆகியவை தந்து மலருக்கு மணம் சேர்த்த பெருமக்களின் தமிழ்ப் பணியையும், பாவலர் பெருந்தகைமீது அவர்களுக்கிருக்கும் அன்புணர்ச்சியையும் பாராட்டி எங்கள் நெஞ்சங்கலந்த நன்றியை நவில்கின்றோம். மலர் ஆசிரியர் குழுவினராக இருந்து வேண்டியாங்கு வேண்டிய அறிவுரைகள் தந்து வழிகூறிநின்ற மலர் ஆசிரியர் குழுவினருக்கும் எங்கள் மனங்கலந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

தமிழ்ப் பேரறிஞராம் பாவலர் பெருந்தகையின் நினைவாக வெளிவரும் இந்த மலருக்கு அவர் வழிவந்த தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் பதிப்பாசிரியராக இருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். பதிப்பாசிரியராக இருந்து மலருக்கு நறுமணம் சேர்த்த பேராசிரியர், பண்டித, வித்துவான் ***சி. சுப்பிரமணியன்***, எம். ஏ., பி. ஓ. எல். அவர்களுக்கு எங்கள் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

மேலும் மலருக்கு நன்கொடை, விளம்பரங்கள் வாங்கித்தந்து பல வகையிலும் துணைநின்ற நண்பர்கள் திரு எஸ். எம். பீருமுகம்மது, திரு வை. தங்கப்பன், திரு எஸ். எம். பகறுதீன், திரு பொ. சிசுபாலன் திரு சி. எம். பெருமாள், திரு அ. ஜெய்னுல் ஆப்தீன் ஆகியோருக்கும், சிறந்த முறையிலே அச்சிட்டுத்தந்த இராசன் அச்சகத்தாருக்கும் குறிப்பாக மேலாளர் திரு. வே. ப. பெருமாள் அவர்களுக்கும் மலர் வெளிவரத் துணைநின்ற ஏனையோர்க்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியறிதலான வணக்கம் உரித்தாகுக.

இவண்,
சதாவதானிப் பாவலர் மன்றத்தார்.

சதாவதானிப் பாவலர் மன்றம்

இடலாக்குடி, நாகர்கோவில்.

செயற்குழு:

தலைவர்:

திரு ம. பீ. செயிக்

துணைத்தலைவர்:

திரு எம். எஸ். இக்பால்

செயலாளர்:

திரு செ. ப. ஜமால் முகம்மது

துணைச்செயலாளர்:

திரு மு. கா. ஜவஹர்

பொருளாளர்:

திரு சு. இரத்தினராசு.

உறுப்பினர்கள்:

வித்துவான் செ. அய்தர் அலி, B. A.

திரு ஓ. எம். இராசன்

" கே. மாடசாமி

" பெ. சுகுமாரன்

" பா. கல்யாணசுந்தரம்

" கே. எஸ். ஜனார்த்தனன்

" எம். செய்யிது முகம்மது

" எஸ். பெருமான்

★

உள்ளுறை.

			பக்கம்
தமிழ்த்தாய் வாழ்த்து	....	சதாவதானிப் பாவலர்	9
செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ?	....	கவிமணி,தாசன்	10
வாழ்த்துக்கள்	....		11
வாழ்க்கைச் சுருக்கம்	....		17
இயன்மொழி வாழ்த்து	....	நாஞ்சில் நாட்டார்	21
என்னருமை ஆசிரியர் அவர்கள்	....	தா. சாத்தான்குட்டிப் பிள்ளை	23
சதாவதானிப் பாவலர்	....	புலவர் – 'அரசு'	29
நான் கண்டபடி	....	தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், M. A., B. L., M.O.L.	30
ஏகனே இறைவன்	....	சதாவதானிப் பாவலர்	31
சதாவதானி பாவலர் பாராட்டு	....	ஆறுமுக நாவலர்	32
சதாவதானம்	....	வித்துவான் சி. குமரேசபிள்ளை	33
பாவலர் பஞ்சகம்	....	வித்துவான் சு. உமைதாணுபிள்ளை	40
நான் கண்ட பாவலர்	....	வித்துவான் செ. சதாசிவம்	43
நோன்பை மறவாதே	....	சதாவதானிப் பாவலர்	48
தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்	....	வித்துவான் ஏ. மாடசாமி	49
பிறப்பாரோ பாவலரைப்போல்!	....	புலவர் ஆபிதீன்	52
பாவலப் புலவன் நீயலவோ?	....	மா. இளையபெருமாள்	53
என்னருமைத் தந்தையார் அவர்கள்	....	கே. பி. எஸ். ஹமீது, B. SC., B. L.	54
கள்ளைக் குடியாதே	....	சதாவதானிப் பாவலர்	61
பாவலரின் தமிழ்த் தொண்டு	....	ஆர். வீரபத்திரன், M.A., L.T.	62
எங்கள் பாவலர்!	....	கவிஞர் தே. ப. பெருமாள்	66
ஐந்தின் வகை தெரியும் அறிவின் திருவுரு	....	சி. சிப்பிரமணியன், M. A., B. O. L.	68
ஞாபகச் சின்னம் வேண்டும்	....	நாரண. துரைக்கண்ணன்	70
நம் பாவலர்	....	பண்டித க. பிச்சைக்கண்ணு.	72
எந்தநாள் காண்போம்!	....	சி. நயினுர் முகம்மது, M. A.	74
பாவலனை மறந்ததேனே?	....	செ. பசுலு முகியித்தீன், M.A.	83
செந்தமிழுக்கொரு செய்குதம்பி	....	'சோமலே'	84
பாவலரும் வள்ளலாரும்	....	அரசு. ஆறுமுகம், M. A.	85
தமிழ்ப் பரம்பரையின் தந்தை	....	வித்துவான் எஸ். ஆறுமுகம், M.A.,B.T.	89
புகழ்ப் பாமாலை	....	பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை	93

			பக்கம்
சரித்திரம் கண்டறியா சதாவதானி	....	என். ஷாகுல் ஹமீது சாஹிப்	94
மங்கல வாழ்த்து	....	சதாவதானிப் பாவலர்	96
பாவலரா, நாவலரா?	....	இராம. சுப்பிரமணிய நாவலர்	97
ஷம்சுத்தாசீன் கோவை	....	வித்துவான் ந. அபூபக்கர், B.A.	100
வாழ்த்துகிறேன்	....	டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், M. A., Ph. D.	103
போற்றுத நாவும் உண்டோ?	....	கா. முகம்மது பாரூக், M. A.	104
தற்காலத் தமிழ் ஆக்கப்பெயர்கள்	....	முத்துச்சண்முகன்	107
பாவலரின் வருங்கால உணர்வு!	....	அவ்வை தி. க. ஷண்முகம்	111
திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி	....	சதாவதானிப் பாவலர்	113
பாவலர் நாயகம்!	....	"சோமு"	114
நானறிந்த பாவலர்	....	திருமதி நமச்சிவாயம் அம்மாள்	117
அவதான அரசர் செய்குதம்பி	....	பண்டிட் மு. அப்துல் மஜீது	119
வளவிய புலமைப் பாவலன்	....	ஔவை சு. துரைசாமி	121
உவமை விலக்கு	....	சதாவதானிப் பாவலர்	125
பாவலர் வாழ்க! பைந்தமிழ் வாழ்க!	....	"அறிவு தாசன்"	126
என் நினைவுகள்	....	டாக்டர் எஸ். முத்துக்கறுப்ப பிள்ளை, M. B., B. S.	127
திருநாகூர்த் திரிபந்தாதி	....	சதாவதானிப் பாவலர்	128
செய்குதம்பிப் பாவலர், சிலேடை நயம்	....	வித்துவான் கோ.வே. பெருமாள், B.A.	137
மகாமதியின் நினைவாற்றல்	....	எஸ். கே. சுவாமி	141
உந்தீற்றுச் சொற்கள்	....	மா. இளையபெருமாள், M.A., M.Litt.	145
கல்வத்துநாயகம் இன்னிசைப் பாமாலை	....	வித்துவான் செ. அய்தர் அலி, B.A.	146
பெண் மாட்சி	....	சதாவதானிப் பாவலர்	152
பல்கலை வல்லார்	....	ம. பி. செயிக்	155
நபிநாயக மான்மிய மஞ்சரி	....	செ. ப. ஜமால் முகம்மது	157
பாவலர் பெருமானைப்பற்றி இவர்கள்...	....	வை. தங்கப்பன்	161
வசன ரூபக வெண்பாக்கள்	....	சதாவதானிப் பாவலர்	162
அசைவம்!	....		163
நாவாரப் போற்றிடுவோம்!	....	சதாவதானிப் பாவலர் மன்றத்தார்	164

தமிழ்த்தாய் வாழ்த்து

(சதாவதானிப் பாவலர்)

தாயே தாயே தமிழ்த்தாயே
தகைசா லின்பிற் றழைத்தாயே
வேயே தோளா யடுத்தாயே
மேனி வெண்மை பூத்தாயே.
மலையி னிடையே யுதித்தாயே
வாணர் பரவ மிளிர்ந்தாயே
நிலையில் வையம் தனிவிளங்க
நிறைசே ரிருளும் நீத்தாயே.
பாலே யனைய வெள்ளுடையும்
பணியு மணியு புனைந்துபெரும்
நூலே சுமந்த கையினொடு
நொய்தீர் தவமு நோற்றாயே.
வேதன் மனையா நாவிடத்தும்
வெள்ளைக் கமலப் பூவிடத்தும்
போத வதிந்த தன்றிநல்லோர்
புந்தி யிடத்தும் போந்தாயே.
குமரி முனையும் வேங்கடமுங்
குடகுங் கடலுந் திசையாக
அமரு மெல்லை யுள்ளிருந்தே
அகில முழுதும் படர்ந்தாயே.
தெலுங்குந் துளுவும் கன்னடமுந்
திறல்சேர் மலைநாட் டொருமொழியு
மிலங்கு மகவா யீன்றெடுத்தும்
எழில்சேர் கன்னி யானாயே.

வடபா லோடி மறைந்துலக
வழக்கே யொழிந்த வாரியமும்
இடபா லாகப் பூர்வதிசை
எதிர்ந்தார் காண வெழுந்தாயே.
சேர சோழ பாண்டியரா
செப்பு மரச ரொருமூவர்
தேரக் கொலுவில் வீற்றிருந்தே
செங்கோன் மாட்சி தெரித்தாயே.
சங்கப் பலகை தவழ்ந்தாயே
சகல கலையு நிறைந்தாயே
அங்கம் பெண்ணு யமைந்துவர
அரிய மாட்சி விளைத்தாயே.
நீரின் எதிரே நடந்தாயே
நெருப்பில் மூழ்கி யெழுந்தாயே
பார முதலை யுண்டசிறு
பாலன் தனையு மழைத்தாயே.
நாதன் தூதாய் நடந்துசெல
நண்ணும் நாட்ட மீந்தாயே
வேதக் கபாடந் திறந்தாயே
வியன்சேர் வியப்பு மளித்தாயே.
எல்லாம் வல்ல நின்பெருமை
இயம்பற் கரிய வாயிடினும்
வல்லார் நாவி லெந்நாளும்
வாழாய் வாழாய் தமிழ்த்தாயே.

செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ?

["கவிமணிதாசன்" – சி. ஆதிமூலப்பெருமாள்]

கன்னிநிலத் தாய்வயிற்றில் தோன்றி அன்புக்
கலைமகளின் ஞானப்பா லுண்டு நாட்டில்
தன்னிகரில் லாத்தமிழண் ணுவி யான
சங்கரநா ராயணன்பால் தமிழைக் கற்றுப்
பன்னுபெரும் புலவர்களைப் பாருக் கீந்து
பலரேத்த மாமதியாம் அணையி லேறித்
தென்னகத்தே தமிழாண்ட செம்மல் எங்கள்
செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ?

எக்கவிக்கும் வெட்டியொட்டிப் பொருள்சொல் வல்லான்
இதயத்தே நினைவாட்சி புரிந்த ஏந்தல்
தக்கபெருங் கற்பனைகொள் கவிதை யூற்றுச்
சங்கநூற் கடலாழங் கண்ட சான்றோன்
மிக்ககுணக் கவிமணியார் புகழ்ந்த மேதை
வேதாந்த நாதாந்தம் விளக்குந் தீபம்
திக்கெட்டும் புகழ்வளர்த்த திறலோன் எங்கள்
செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ?

இந்துமுடித் திறைநடஞ்செய் அருட்பா வென்னும்
எழிற்கடலின் அமுதெடுத்து நீதி மன்றில்
வந்தவர்க்கும் இருந்தவர்க்கும் வழங்கி இஃது
வாழ்வளிக்கும் அருட்பாவே யென்று வென்று
கந்தமுறும் "தேவாமிர் தப்பிர சங்கக்
களஞ்சிய"மெ னும்பெரிய பட்டந் தன்னைச்
சிந்தைமகிழ்ந் திடப்பெற்ற தீரன் எங்கள்
செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ?

காங்கிரசு மேடைமிசைக் கர்ச்சித் தாலும்
கண்டனக்கூட் டத்தரங்கில் கடாவி னாலும்
பாங்குடைய இலக்கியப்பே ரவையுற் றாலும்
பலர்நடுவே பரிவுறுசொல் பகர்ந்திட் டாலும்
ஓங்கைங்கோண் இலக்கணச்சக் கரத்துக் குள்ளே
ஒளிநடஞ்செய் தமிழ்த்தாயை உவக்கக் காட்டித்
தேங்கறிவுச் செல்வனெனத் திகழ்ந்த எங்கள்
செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ?

வித்தகர்தம் நூறுவினா அங்கு சங்கள்
விரைந்தெழுகால் தனதுவிடைத் துதிக்க ரத்தின்
சத்தியினால் பிடித்தடக்கிக் காள மேகந்
தான்மீண்டும் அவதரித்தான் என்று சொல்ல
முத்தமிழும் மதம்பொழிந்த தமிழ்மா வேழம்
முருகுறுநா றவதான முதல்வன் வாணி
சித்திபெறு தெய்வீகப் புலவன் எங்கள்
செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ?

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்,
கலைக்கடல், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்,
அல்லாமா (டாக்டர்), மகாமதி,

சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர்

தோற்றம்: 31-7-1874 மறைவு: 13-2-1950

வாழ்த்துக்கள்

NEW DELHI.

VICE-PRESIDENT

August 31, 1961.

Dear Sir,

Thank you for your letter of August 29. I wish your Special Number success.

Yours faithfully.
(Sd.) S. Radhakrishnan

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்

செனய் நகர்
சென்னை-30
19—9—1961

அன்புடையீர்,

தமிழ்ப்பெரும் புலவர் சதாவதானி பாவலர் அவர்களின் தொண்டும் புகழும் நீடு ஓங்கி விளங்குக. சாதி சமய வேறுபாடு இன்றித் தமிழுள்ளமும் கலையார்வமும் கொண்டு அவர்கள் ஆற்றியுள்ள அரும்பணிகள் மேன்மேலும் ஒளிர்வனவாக.

பாவலர் புகழ் பல்லாண்டு பல்லாண்டு வாழிய!

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்) மு. வரதராசன்

C. SUBRAMANIAM
MINISTER FOR FINANCE

FORT ST. GEORGE
MADRAS

20—9—1961

தமிழ் வளரப் பணி செய்த பெரியோர்கள் என்றும் நம் மதிப்புக்கு உரியவர்கள். திரு. செய்குதம்பிப் பாவலர் நாளும் நற்றமிழ்ப் பணி செய்தவர். அன்னாரது பன்னிரண்டாம் ஆண்டு நினைவு விழா கொண்டாடப்படுவது அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். விழாவுக்குக் காரணமான சதாவதானி பாவலர் மன்றத்தின் சிறந்த முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

நினைவு விழா இனிது நடந்தேறுவதுடன், விழாவையொட்டி வெளிவரும் மலர் சிறந்த முறையில் அமைவதாகுக! என் நல் வாழ்த்துக்கள்.

அன்புடன்,
(ஒப்பம்) *சி. சுப்பிரமணியம்*

LOURDHAMMAL SIMON
MINISTER FOR LOCAL ADMINISTRATION

FORT ST. GEORGE
MADRAS-9

7—10—1961.

வாழ்நாள் முழுவதையும் இலக்கியச் சேவைக்கு அர்ப்பணிக்கும் புலவர் பெருமக்கள் இந்நாளில் மிகக் குறைவாகவே உள்ளனர். அத்தகைய புலவர் பெருமக்களில் சதாவதானி, டாக்டர் கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களுக்கு முக்கிய இடம் உண்டு. அவரது சிறந்த இலக்கியத் தொண்டை கௌரவிக்கும் வகையில் சதாவதானி பாவலர் மன்றம், கருத்துக் கருவூலமான நூல் ஒன்று வெளியிடுவது கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். பாவலரின் வாழ்க்கையும் இலக்கியச் சேவையும் என்றும் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடியவை. அன்னாரின் தமிழ்த் தொண்டைத் தெளிவாக விளக்கும் வகையில் மலர் இலக்கிய மணத்துடன் வெளிவர எனது நல் வாழ்த்துக்கள்.

(ஒப்பம்) **லூர்தம்மாள்**

பொருளாதார நிபுணர்

டாக்டர் பா. நடராஜன், M. A., D. Litt.

அறியாத இளம் பருவத்தே எனக்கு அரசியல் ஞானப்பாலூட்டிய அம்மையப்பர் மகாமதி செய்குதம்பிப் பாவலர் ஆவார். அன்று எனக்கு ஆண்டு பன்னிரண்டிருக்கும்; காந்தியடிகள் காங்கிரசைக் கைக்கொண்டு, பட்டதாரிகள் ஒருசிலர் நிறுவனம் என்றிருந்ததைப் பல் கோடி மக்களின் சாத்வீகப் போர்க்களமாக்கிச் சபர்மதிச் சிறைசென்ற காலம். ஒவ்வொரு மாதமும் பதினெட்டாம் நாள் அடிகள் சிறை சென்றதின் நினைவாக நாடெங்கும் தொண்டர்கள் தேசீய முழக்கத்தோடு ஊர்வலம் வந்து, மக்களைத் திரட்டி, சொற்பொழிவுகளாற்றித் தட்டி எழுப்பி வந்தனர். இடலாக்குடியில் டாக்டர் எம். இ. நாயுடு அவர்களின் இல்லமே தேசீயப் பாசறையாகப் பொலிந்தது. அங்கிருந்து அங்கப்பன் அவர்கள் இனிய, எழுந்த குரலில் பாரதிப் பாடல்களைப் பாட, அன்றைய தலைவர்கள் அணிவகுக்க ஊர்வலம் புறப்பட்டு, நகரை வலம் வந்து கிருஷ்ணன்கோவில் போய்ச் சேரும். அங்கே கலைமகள் பெயரில் நிறுவப்பட்ட இளைஞர் கழகத்தின் சார்பில் பெருங் கூட்டங்கள் நடைபெறும். இவ்வாறு திங்கள் தோறும் நடைபெறும். இதில் சிக்குண்ட சிறுவனாகிய நான் முதன்முதற் கேட்ட அரசியல் சொற்பொழிவு மகாமதி செய்குதம்பிப் பாவலருடையதே சொற்பொழிவென்றால் போதாது; "தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்" என்ற பட்டம் அவர்களுக்கு முற்றிலும் பொருந்தும்; அவர்களுக்கே பொருந்தும். என் இளமை உள்ளத்தில் அன்றே நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் நட்டுச் சென்றார். அவர் நினைவுக்கு எவ்வாறு கைம்மாறு செய்வேன்!

நாற்பது ஆண்டுகளுக்கு முன் மகாமதி வகுத்துத் தந்த தடத்தில் சென்று, நாட்டின் பொருளாதார விடுதலைக்காகத் தோளோடு தோள் சேர்த்து, மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, பாவலர் பெருமான் கனவுகண்ட சமதர்மக் கனவை நனவாக்க உழைப்பதல்லால், அவர் நினைவுக்கு நாம் செய்யும் மற்று நன்றி யாது? வாழ்க நம் புலவர் பெருமான் திருப்பெயர். வாழ்க அவர் புனிதத் தொண்டு. மலர் சிறக்க என் நல்வாழ்த்துக்கள்.

(ஒப்பம்) பா. நடராஜன்

DR. HAJI N. A. NOOR MUHAMMAD
LEGAL OFFICER
UNITED NATIONS TECHNICAL ASSISTANCE BOARD
MOGADISCIO
SOMALI REPUBLIC

மொகடிஷியோ
4—9—1961

சதாவதானி பாவலர் மன்றம் "பாவலர் நினைவு மலர்" வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

பாவலர் அவர்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தவர்களில் நானும் ஒருவன். சுதந்திரப் போராட்ட காலத்தில் காலஞ்சென்ற டாக்டர் எம். இ. நாயுடு அவர்களோடு சேர்ந்து பாவலர் அவர்கள் நாஞ்சில் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பியது இன்றும் ஞாபகமிருக்கின்றது. தமிழ் இலக்கிய உலகில், தம் கவிதைத் திறத்தால் மாத்திரமல்ல, பேச்சுத் திறத்தாலும் தமிழ் உணர்வைத் தந்தார்கள் பாவலர் அவர்கள். நபிதின விழாக்களின் போது இஸ்லாத்தைப் பற்றியும், சீருப்புராணத்தைப் பற்றியும் அவர்கள் நிகழ்த்திய சொற்பெருக்குகள் முஸ்லிம்களின் உள்ளங்களிலும், ஏனையோரின் உள்ளங்களிலும் மதக்கனலைத் தூண்டிவிட்டன. நான் அறிந்த காலத்தில் பாவலர் அவர்கள், தேசம், மொழி, மதம் ஆகியவற்றிற்கே தம் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். "பாவலர் நினைவு மலர்" பாவலர் புரிந்த அரிய சேவைகளை ஞாபகமூட்டுவதோடுகூட, அவர்கள் காட்டிய சேவைப் பாதையிலே இன்றைய இளைஞர்களையும் ஈர்த்துச்சென்று, அப்பெருந்தகை கண்ட கனவு நினைவாக்க உதவிபுரியும் என்று பெரிதும் எதிர்பார்க்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பானாக!

சதாவதானி பாவலர் மன்ற உறுப்பினர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நா. அ. நூர் முஹம்மது

அகிலன்
171, லாயிட்ஸ் ரோடு,
சென்னை—14

P. V. AKILANDAM (P. V. AKILAN)
171. Lloyds Road,
MADRAS—14.

22—7—1961.

அன்புடையீர்,

வணக்கம்

தமிழ்ப்பெருந் தொண்டர் திரு செய்குதம்பிப் பாவலர் அவர்களது நினைவாகத் தங்கள் மன்றம் மலர் வெளியிடுவதறிந்து மகிழ்ச்சியுறுகிறேன். சதாவதானி பாவலர் அவர்கள் இந்த நாட்டுக்குச் செய்துள்ள அரும் பணிகள் மிகவும் உயர்ந்தவை. பழம் பெரும் மொழி யாகிய தமிழின் வளத்தைப் பாதுகாத்துப் பரப்பிய பெரி யோர்களில் முக்கியமானவர்கள் அவர்கள். அவர்களது சதாவதானத் திறமையைப் பலர் சொல்லக்கேட்டு வியப் பெய்தியிருக்கிறேன். நடமாடும் தமிழ்க் கலைக்களஞ்சிய மாக விளங்கியிருக்கிறார்கள். அவர்களது மொழிப் பற்று சாதி சமய வேறுபாடுகளைக் கடந்த பரந்த நோக்குள்ளது என்பதற்கு அவர்கள் வள்ளலாரின் அருட்பாவை அருட் பாவே என்று வாதாடி நிலைநாட்டிய பெருந்தன்மையே சான்று.

தமிழ் வளர்ப்பதில் ஊக்கம் கொண்ட அனைவரும் ஒரே நோக்கத்துடன் அவர்களது உழைப்பை நாட்டில் பரப்புவது பயனுள்ளதாகும். நமக்குள்ளே உள்ள சின் னஞ்சிறு வேற்றுமைகளைக் கடந்து நாம் தமிழ்த்தாய் வயிற்று மக்களாய் வாழ இதுபோன்ற முயற்சிகள் மிக வும் தேவையானவை. மலர் சிறப்புடன் வெளிவரவும், மன்றம் தன் பணிகளில் முன்னேறவும் என் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

தங்களன்புள்ள,
அகிலன்

தமிழ்வாணன்
தியாகராய நகரம், சென்னை-17

எவ்வழி நல்வழி
அவ்வழி நம்வழி
7—9—1961.

அன்புள்ளம் கொண்டவர்களே,

வணக்கம்.

தங்கள் பொன்னான முயற்சி போற்றத்தக்கது. புலவர்களும் அறிஞர்களும் இறந்தும் இருப்பவர்களே என்பதற்கு எடுத்துக்காட்டு, சதாவதானி கா. ப. செய்கு தம்பிப் பாவலர் அவர்களே. நம்மிடையே அவர் உடல் இல்லை. உழைப்பு இருக்கிறதே. நாஞ்சில் மாவட்டத்தில் எங்கு அருட்பா ஒலித்தாலும் உடன் பாவலர் அவர்கள் உருவம் நம் கண்முன்னே நிற்குமே. அவரது புலமையும், பேச்சுத் திறமையும் தமிழ் மொழியை, தமிழர் இனத்தைப் பெருமைப்படுத்தின. அவரது நினைவு கொண்டு நீங்கள் வெளியிடும் மலர், பொன்மலராகப் புகழ் மலராகச் சிறப்புப் பெறவேண்டுமென வாழ்த்தி வணங்கி நிற்கிறேன்.

தங்கள்,
(ஒப்பம்) தமிழ்வாணன்

பாவலர் மன்ற வாழ்த்து.

திருப்பெருந்திரு கிருபானந்தவாரியார்

விருதுநகர்,
18—7—1961

நேரிசை வெண்பா

சதாவதா னிச்செய்கு தம்பியெனுந் தக்கோன்
உதாரவரன் கீர்த்தி உயர்க — சிதாகரமாய்ப்
பல்லாண்டு வாழியவே பாவலர்தம் மாமன்றம்
எல்லா நலமும் இயைந்து

அன்பன்,
கிருபானந்தவாரி

தமிழ்ப்பெரும்புலவர், கலைக்கடல், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்,
மகாமதி, சதாவதானி, அல்லாமா (டாக்டர்)

கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களின்

வாழ்க்கைச் சுருக்கம்

"குமரி முனையும் வேங்கடமும் குடகுங் கடலும் திசையாக அமருமெல்லை உள்ளிருந்தே அகிலம் முழுதும் படர்ந்து" அவனிக்கே வழிகாட்டி தென்னவர் திரு நாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை நந்தமிழ் அன்னையைச் சாரும் "தெலுங்குந் துளுவும் கன்னடமும் திறல்சேர் மலைநாட்டொருமொழியும் இலங்கு மகவாய் ஈன்றெடுத்தும் எழில்சேர் கன்னி"யான நந்தமிழ் அன்னையைப் புலவரும் புரவலரும் தம் கண்ணின் மணியைப்போற் காத்துவந்தனர். இனிமையுடனே எழில்சேர்ந்து தனிமை கொண்டு இயங்கவல்லதண்டமிழ்மொழிமீது காதல் கொண்டு வண்டமிழ்க் கவிபாடி எண்டிசையும் அதன புகழ் பரப்பிய ஒண்டமிழ்க் கவிஞர் கணக்கிலடங்காப் பெருந்தொகையினராவர். சொன்மாலை பலபுனைந்து என்மாலை இவையெனத் தென்மொழியாம் நன்மொழி தமிழுக்கு எந்நாளுஞ் சூட்டி ஏற்ற மிகு எழில்செய்து அவனியெங்கும் அதன் புகழ் பெய்து வாழ்ந்த புலவர் பெருமக்களுள் முஸ்லிம் புலவர்களும் பலர் உளர் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத பேருண்மை. அத்தகைய புலவர்கள் வரிசையிலே புலவர் மணியாய், பாவலர் திலகமாய், பண்புறும் நிலையராய், காவலர் புகழும் கலை பல உடையராய், மாவலக் கருத்தராய், மாமேதையாய் விளங்கிக்கொண்டிருந்தவர் **தமிழ்ப்பெரும்புலவர், கலைக்கடல், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, சதாவதானி, அல்லாமா (டாக்டர்) கா. ப. செய்குதம்பிப் பாவலர்** பெருந்தகையாவார்.

கண்டனைய செந்தமிழின் விண்டிட இயலாப் புகழுக்குக் காரணமாய் விளங்கிய-விளங்கும் நாஞ்சில் நன்னாட்டின் பண்டைய தலைநகரான **கோட்டாறு** என்னும் பதியில் 1049 ஆடித் திங்கள் 17-ம் நாள் வெள்ளிக்கிழமையன்று (1876-ல்) நல்ல குடிப் பிறந்தார் **நம் செய்குதம்பி** என்பார். தந்தையார் **பக்கீர் மீரான்** என்னும் பண்புடைப் பெரியார். தாயார் ஹசரத் ஞானியார் சாகிபு எனும் பெரியாரின் உயர்குலத் துதித்தவர்.

செய்குதம்பி அவர்கள் இளமையிலேயே தன் வேத மொழியாகிய அரபியை ஐயந்திரிபறக் கற்றுத்தேர்ந்தார். தமது எட்டாம் அகவையில் ஆரம்பப்பள்ளியில் சேர்க்கப்பட்ட இவர் "மூவுலகங்களையும் ஓரடியாலளந்த மாயவனைப்போல" நான்கு வகுப்புக்களையும் ஒரே ஆண்டில் தேறி அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றார். அதற்கு மேலும் படிக்க அவா மிகக்கொண்டாராயினும் பொருளாதார நிலைமை இடந்தராத காரணத்தால் பள்ளிப் படிப்புக்கு அத்துடன் புள்ளி வைத்துவிட்டுத்தன் தந்தையாருடன் நெய்தற்றொழிலில் ஈடுபட்டார். ஆயினும் தமிழ்மீது தணியாக் காதல்கொண்டு தமிழைக் கற்க உளங்கொண்டார். அக்காலை கோட்டாற்றில் தமிழ்க்கடலாய்த் திகழ்ந்த பெரியார் **சங்கரநாராயண அண்ணாவி** என்பாரிடம் நாளுஞ் சென்று நற்றமிழ்ப் பாடங் கேட்டு வந்தார். ஆசிரியர் இருவென இருந்து, படியெனப் படித்து, எழுவென எழுந்து செல்லெனச் சென்று மிகமிக மரியாதையோடும் பயபக்தியோடும் கற்றுவந்தார். நாளடைவில் தமிழில் நல்ல பயிற்சி பெற்றார். மலையாளத்திலும் தேர்ச்சியுற்றார். இவ்வாறு இளமையிலேயே கற்பன கற்று, கலைநலம் உற்று, பொற்பெலாம் பெற்று, புனிதராய் வாழ்ந்துவந்தார். இளமையிலேயே அருந்தமிழ்க் கவிபாடும் பெருந்திறன் இவருக்கு அமைந்திருந்தது. இவர்தம்

பாவன்மை கண்ட பாகுதமிழ்ப் புலவோரால் **பாவலர்** என்று அழைக்கப்பட்டார். இவ்வாறு செய்குதம்பி, **செய்குதம்பிப் பாவலர்** ஆயினர்.

இவ்வாறிருக்கையில் 1895-ஆம் ஆண்டில் ஓர்நாள் ஞானியார் சாகிபு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய "**மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டு**" என்னும் நூலை அச்சிடும் பொருட்டுப் பெரியார் ஒருவர் விழைந்து வேண்ட அவருடன் சென்னைக்கு ஏகினர். அங்கு அப்பணியைச் செவ்வனே இனிது முடித்தார். அங்கு வைத்து பாவலர்தம் கலைத்திறனைக் கண்டுவந்த அச்சகத் தலைவரான இட்டா பார்த்தசாரதி நாயுடு என்பவர் அவர்தம் கலைத்திறனை நாடோறும் கண்டும் கேட்டும் உவக்கும் அவா மேலீட்டால் பாவலர் அவர்களைப் பிரிய மனமின்றித் தமது பதிப்பகத்திலேயே பிழை திருத்தும் வித்துவானாக அமர்த்தி இன்புற்றார். சின்னாட்களில் பாவலர் பெருமான் தன் கைவரப் பெற்ற கலைத்திறமையால் அங்குள்ள வித்துவான்களின் தலைவராக ஆக்கப்பட்டார். அப்பதிப்பகத்தில் ஏனைய வித்துவான்களின் தலைவராக இருந்து பணிபுரியுங்காலை "**யதார்த்தவாதி**" "**இஸ்லாமிய மித்திரன்**" என்னும் இருபெரும் பத்திரிகைகளுக்கு ஆசிரியராக அமர்ந்து இனிது நடத்திவந்தார் அப்பத்திரிகை வழி அமிழ்தினும் இனிதினிக்கும் அருந்தமிழைப் பரப்பி வந்தார்.

சென்னை வாழ்க்கைதான் பாவலர் பெருமானுக்குப் புகழ் ஈட்டித்தந்தது. சென்னையில் இருந்துவரும் நாளில் முஸ்லிம் பெரும் புலவராம் உயர்திரு உமறுப்புலவரவர்கள் பாடியருளிய சீறாப்புராணச் செய்யுட்கள் அத்தனைக்கும் அரும் உரையெழுதி வெளியிட்டுப் பெரும்புகழ் பெற்றார் "**தேவலோகப் பழிக்குற்ற வழக்கு**" (தேவலோகத்துக் கிரிமினல் கேஸ்) "**வேதாந்த விவகாரப் பழிக்குற்ற வழக்கு**" (வேதாந்த விவகாரக் கிரிமினல் கேஸ்) என்னும் இரு உரைநடை நூல்களையும் இயற்றி வெளியிட்டார். "**சீரு நாடகம்**" என்னும் சிறந்ததோர் நூலையும் எழுதினர். பாவலர் தம் உரைநடை வன்மைக்கு இவைகள் சான்று பகர்கின்றன.

பாவலர் அவர்கள் அவதானம் செய்யும் அரியதோர் திறமையும் பெற்று விளங்கிவரு நாளில் சென்னையினின்றும் தம் ஊருக்குத் திரும்பினர். அவர்தம் அவதானத் திறமையைக் கேள்வியுற்றிருந்த கோட்டாற்றூர் மக்கள் அவதானம் கண்டு களிக்கும் அவா மிக்குடையோராய்ப் பாவலரை அண்மினர், "தங்களின் அவதானம் எனும் அதியற்புதச் செயல்காண அவாமிக்குடையோராய் இருக்கின்றோம்; தாங்கள் அவதானம் செய்து எங்களை மகிழ்விக்க வேண்டும்" என்று விழைந்து வேண்டினர். பாவலர் அவர்களும் உடன்பட்டனர்.

1905-ஆம் ஆண்டு ஓர் வெள்ளிக்கிழமையன்று கோட்டாறு ஜும்ஆ மஸ்ஜிதின் முன் அமைக்கப்பட்ட பந்தலில் பல்லாயிரவர் முன்னிலையில் **ஆற்றக்கோயா தங்கள்** என்னும் அறிஞர் தலைமையில் "சோடசாவதானம்" எனும் 16 அவதானத்தை வெற்றிகரமாகச் செய்து "**சோடசாவதானி**" எனும் பட்டமும் பெற்றார். தனக்குப் பரிசிலாக வந்த பொன்னுடைகள் பலவற்றையும் அவதானம் காண வந்திருந்த தம் ஆசிரியப் பெருந்தகையாம் அண்ணாவி அவர்களுக்கு அன்புடன் அளித்து நன்றிக் கடனாற்றினர்.

இது நடந்து சின்னாள் கழிந்து ஓர் நாள் மீண்டும் சென்னைக்கு ஏகினர். பாவலர் அவர்கள் சென்னை செல்லுமுன்னரே அவதானச் செய்தி சென்றுவிட்டது. எனவே பாவலர் அவர்களின் வரவை மிக ஆவலோடு எதிர்நோக்கியிருந்த அனைவரும் அவதானம் காண அவா மிகக்கொண்டனர்; பாவலரை வேண்டினர்; பாவலரும் உடன்பட்டனர். அவதான அறிக்கை அச்சிட ஆயத்தமாயினர். கம்பராமாயணம், தஞ்சை வாணன் கோவை முதலிய நூல்களுக்கு உரை எழுதிய **மகா வித்துவான் இராமசாமி நாயுடு** என்பார், "நான் பச்சையப்பன் கல்லூரியில் ஒருவர் சோடாசாவதானம் செய்வதைப் பார்த்திருக்கின்றேன்; சதாவதானம் செய்யக் கண்டதில்லை; அதைத் தாங்கள் செய்யவேண்டும்" என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தினர். பாவலர் அவர்களும் அவரின் வற்புறுத்தலுக்கு இணங்கி "சதாவதானம்" என்னும் 100 அவதானங்களைச் செய்ய ஒப்புக்கொண்டார், சதாவதான அறிக்கையும் வெளியானது.

"சதாவதானம்" என்பது நாவானது ஒன்றைப் பேசிக்கொண்டிருத்தலும், கையா

னது ஒரு செயலைச் செய்துகொண்டிருத்தலும், இவ்விரண்டும் நிகழும்போதே ஏனைய 98 அரிய சோதனைகளை ஒரே சமயத்தில் மனத்தில் நிறுத்தி குறை சிறிதுமின்றி விடையிறுக்கும் அரிய செயலாகும். 1907 மார்ச் 10-ல் **மகா வித்துவான் கண்ண பிரான் முதலியார்** என்பார் தலைமையில் அறிஞர்கள் பலரும் மேடையை அலங்கரிக்க பல்லாயிரவர் முன்னிலையில் பாவலர் அவர்கள் "**சதாவதானம்**" என்னும் 100 அவதானங்களை வெற்றிகரமாகச் செய்து '**மகாமதி**' '**சதாவதானி**' என்னும் பட்டங்களைப் பெற்றார். அச்சகத் தலைவரான இட்டா பார்த்தசாரதி நாயுடு என்பாரால் இரு கைகளுக்கும் தங்கத் தோடாக்கள் அணியப்பெற்றும் பலரால் பொன்னாடை போர்த்தப்பெற்றும் நகர் வலம் வந்தனர் அறிஞர் பலர் பாவலரின் வன்மையை வியந்து பாமாலை பல புனைய அது '**சதாவதானச் சிறப்பு**' என்னும் நூலாகப் வெளியிடப்பெற்றது இவ்வாறு செய்குதம்பிப் பாவலர், **மகாமதி, சதாவதானி செய்குதம்பிப் பாவலர்** ஆயினார். 1907-ல் மீண்டும் கோட்டாற்றுக்கு வந்தார். அப்போது இவரின் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. இல்லறமாம் நல்லறத்திற் புகுந்து நன்மக்கட் பேற்றினையும் பெற்றார்.

சதாவதானம் செய்ததில் இருந்து பாவலர் தம் புகழ் பாரெங்கும் பரவியது. அக்காலை வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பாவை மருட்பா என மறுத்துவந்த திரு நா. கதிர்வேல் பிள்ளை அவர்களின் சொற்பொழிவுகளை மறுத்து மாற்றுப்பொருள் கொடுத்து '**அருட்பா அருட்பாவே**' எனப் பல இடங்களிலும் பேசிவந்தார். '**கதிர்வேல் பிள்ளையின் எதிர்வேல் பிள்ளை**' எனப் பட்டமும் பெற்றார். இறுதியில் காஞ்சியில் வைத்து ஆணித்தரமாக வாதாடி 'அருட்பா அருட்பாவே' என நிலைநாட்டி அருட்பா மருட்பா போருக்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமைக்குரியவரானார். அருட்பா மருட்பா போரில் அவர்தம் நாவன்மை கண்டு வியந்த அறிஞர்களால் காஞ்சியில் வைத்து '**தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்**' எனும் பட்டமும் பெற்றார். யானை மீதமர்த்தி நகர்வலம் வரப்பெற்று காஞ்சி கோவிலில் பூரண கும்ப மரியாதையும் செய்யப்பெற்றார். இவ்வாறு **தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, சதாவதானி செய்குதம்பிப் பாவலர்** ஆயினார்.

மதுரையை அடுத்த தொண்டி என்னும் ஊரில் சீறாப்புராண உரை நிகழ்த்தச் சென்றிருந்தபோது அவர்தம் கலைத்திறனைக் கண்ட தொண்டிவாழ் மக்கள் '**கலைக்கடல்**' எனும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்தனர். திண்டுக்கல் மக்கள் பாவலர் அவர்களை உரை நிகழ்த்த அழைத்து அவர்தம் உரையில் திளைத்து மகிழ்ந்து அறிவாற்றலை வியந்து **அல்லாமா (டாக்டர்)** எனும் அரும் பெரும் பட்டத்தை நல்கினர். நாஞ்சினாட்டு மக்களால் **தமிழ்ப்பெரும் புலவர்** என்று பாராட்டப்பட்டார். இவ்வாறு **தமிழ்ப்பெரும் புலவர், கலைக்கடல், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, சதாவதானி, அல்லாமா** ஆயினார். (**டாக்டர்**) **செய்குதம்பிப் பாவலர்** மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களிலுமொருவரானார்.

இவ்வாறு 1895-ஆம் ஆண்டு முதல் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் சென்னையில் வாழ்க்கை நடத்திவிட்டுத் தம் ஊருக்குத் திரும்பினார். அந்நியராட்சியில் தன்னாட்டவர் படும் அல்லல்களைக் கண்ணுற்றார். தாய்நாட்டு விடுதலைப் போரில் பெரும் பங்கு கொண்டு உழைத்தார் அந்நாளில் இவர் இல்லாத கூட்டங்களே நடந்ததில்லை என்னலாம். தேசீயக் கூட்டமாயினும் சரி இலக்கியக் கூட்டமாயினும் சரி பாவலர்தம் தலைமையிலேயே நடைபெறுவது வழக்கம். கிழமைதோறும் நாகர்கோவில் நகர்மன்றத் திடலில் பாவலர் தலைமையில் கூட்டங்கள் நடைபெறுவதுண்டு

1924-ல் இரவிபுதூர் என்னுமிடத்தில் ஒரு பெருந் தேசீயக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பேச்சாளர்களாக பாவலர் அவர்களும், டாக்டர் எம். இ. நாயுடு அவர்களும் வ. வே. சு ஐயர் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். பாவலர் அவர்கள் தலைமையில் அக்கூட்டத்திலேயே அந்நியத் துணி எரிப்பும் நிகழ்ந்தது. பின்னர் தம் வாணாளில் கதருடையைத் தவிர வேறு ஆடையை அவர் அணிந்ததில்லை இடுப்பில் 4 முழ வேட்டி, மேலே முழுக்கைச் சட்டை, தோளில் துண்டு, தலையில் காந்திக் குல்லாய் இத்தகைய கதராடைகள் தூய

வெண்மை நிறத்தில் அணியப்பெற்றுக் காட்சி தருவார்கள். 1937-ல் நடந்த தேர்தலில் பல இடங்களிலும் காங்கிரசுக்கு வெற்றித் தேடித்தந்த பெருமை பாவலர் அவர்களையே சாரும்.

இவ்வாறு வாழ்ந்துவரும் நாட்களில் தன்னை நாடிவரும் பலருக்கும் தமிழறிவை ஊட்டி அவர்களைத் தமிழ் வித்துவானாகவும் தசாவதானியாகவும் ஆக்கிய சிறப்புக்குரியவர். தென்கொம்புதூரில் வாழ்ந்து தமிழ்ப் பணி செய்துவரும் முதுப்பெரும் புலவர் தா. சாத்தாங்குட்டிப்பிள்ளையவர்கள் பாவலர் அவர்களின் முதல் மாணவராவார். இன்று நாஞ்சில் நாட்டில் உள்ள தமிழ் வித்துவான்களும் தமிழறிஞர்களும் பாவலர் அவர்களின் மாணவர்கள் என்று தம்மைக் கூறுவதில் பெருமையடைகின்றனர்.

அச்சாகி வெளிவந்த **சீறப்புராண உரை, தேவலோகத்துக் கிரிமினல் கேசு, வேதாந்த விவகாரக் கிரிமினல்கேசு, சீரு நாடகம்**, என்னும் உரைநடை நூல்களும், **கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ், கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, திருநாகூர் திரிபந்தாதி, சம்சுத்தாசீன் கோவை, கல்வத்து நாயகம், இன்னிசைப் பாமாலை** ஆகிய கவிதை நூல்களும், அச்சாகாமலிருக்கும் **அழகப்பக் கோவை**, சர்.சி.பி. பேரில் பாடிய **சசிவோத்தமன் கோவை, நபிநாயக மான்மிய மஞ்சரி** ஆகிய கவிதை நூல்களும் கணக்கிலடங்கா தனிப் பாடல்களும் பாடியுள்ளார்கள்.

இவ்வாறு செந்தமிழ்க் கவிதைகளால் நந்தமிழ் அன்னையின் புகழை நாற்றிசையும் போற்றிசைப்ப வாழ்ந்துவரும் நாளில் 1950-ஆம் ஆண்டு பிப்ருவரித்திங்களில் தஞ்சாவூரில் ஓர் கூட்டத்திற்குச் சென்றிருந்தார்கள். அதுதான் தன்னுடைய இறுதிக் கூட்டம் என்பதை அவர்கள் அறிந்திருந்த காரணத்தால் இது தான் தன்னுடைய இறுதி உரையென்றும் தன் சாவு ஊருக்குத் தான் வந்திருப்பதாகவும் கூட்டத்திலேயே கூறினார்கள். தஞ்சாவூரில் இருந்து வந்த ஒரு சில நாட்களில் 1950-ஆம் ஆண்டு பிப்ருவரித் திங்கள் 13-ஆம் நாள திங்கட்கிழமையன்று இந்த மணணுலகை விட்டு விண்ணுலகெய்தினார்கள். பாவலர்தம் புகழ் பாரெங்கும் என்றும் நின்று நிலவுவதாக.

வாழ்க பாவலர் திருப்பெயர்! வளர்க தமிழ் நெஞ்சம்!!

நீதி வெண்பா

(சதாவதானி பாவலர்)

அருளைப் பெருக்கி யறிவைத் திருத்தி
மருளை யகற்றி மதிக்கும் — தெருளை
அருத்துவது மாவிக் கருந்துணையா யின்பம்
பொருத்துவதுங் கல்வியென்றே போற்று.

வாய்த்த கலையுணர்ச்சி மாண்ட மனத்துரவோர்
சாய்ந்த தலைதூக்கித் தருக்கார்காண்—காய்த்தகிளை
பாரம் பொறுமல் படிந்துதலை தாழ்த்தலல்லால்
நேர நிமிருமோ நின்று.

பூவாமற் காய்ப்பதுவே பூம்பனசம் போலுமொன்றை
ஏவாமற் செய்வதுவே எச்சமென்க — ஓவாமல்
ஏவியுஞ் செய்யா இழிமகவுக் கென்னுவமை
நாவியு மாமோ நவில்.

கூடாரைக் கூடற்க கூடிற் குறித்தவெலாம்
நாடா தெறிந்தேனும் நட்பொழிக — ஆடுமயில்
பச்சோந்தி பாற்படா பட்டால் மணிவிழிக
ளச்சோ வழித்தொழியு மால்.

நிந்தனையும் வந்தனையு நேர்ந்தொன்றுய்க் காண்பதல்லால்
சிந்தை திரிவாரோ சீரியோர் — அந்திமுல்லை
தன்மணத்தை யென்சொலினுந் தந்தருள்வ தன்றி மற்றோர்
புன்மணத்தை நல்கிடுமோ பூத்து.

பாலுற்ற நீருமப் பாலாம் பருக்கிலப்பால்
மேலுற்றுத் தீக்குளித்து வேகுங்காண் — ஏலுற்ற
தக்கார்மற் றூர்சாரிற் றூமாக்கித் தற்பிரிந்தார்
லொக்கா ருயிர்வாழற் குற்று.

கோட்டாறு, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவர்களிலொருவராகிய
தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி,
சதாவதானி, அல்லாமா, (டாக்டர்)
கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களது
70-ஆவது ஆண்டு பிறந்ததின விழாவின்போது
நாஞ்சில் நாட்டு மக்கள் மனமுவந்து வாசித்தளித்த

இயன்மொழி வாழ்த்து.

தமிழ் உலகப் பெருஞ்சேயே!

நீவிர் நாஞ்சில் நாட்டின் நடுநகரென நவிலப்பெறும் கோட்டாற்றில் தூய்மைசால் இஸ்லாமிய மரபில் செழுங்குடிப்பிறந்து இளமைதொட்டே தமிழ்த் தாயின் செம்மலரடிகளில் அமைந்து தமிழர் சிறக்கவும் தமிழ்ப்பயிர் தழைக்கவும் அரிய செந்தமிழ்ப் பாக்கள் இயற்றும் வன்மை மிக்குற்றுப் பாவலரென நாமம் பூண்டு இந்நாட்டிற்கு அணிகலனுய்த் திகழுமோர் அறிவுப் பண்டசாலையாய் அமைந்து விளங்கும் மேன்மையை உள்ளுந்தோறும் எங்கள் உள்ளம் கழிபேருவகை அடைகின்றது நினைக்குந்தோறும் நெஞ்சம் நெகிழ்கின்றது. மனம் மகிழ்கின்றது.

அறிவால் சிறந்த அருந்தவத்தோய்!

புலமையின் நறுமணம் நாடும் நகரமாம் மதுரையில் தமிழ்ச் சங்கத்தில் கலைப் பெருக்கும் கவிப் பெருக்கும் மேவிய புலவர் பெருமக்களிடையே பல்லாண்டாகப் புகழ்பெறும் அங்கம வகித்து அச்சங்கம் வாழ்விலும் வளத்திலும் வளர்ந்தோங்கச்செய்து வருவதை உன்னிய உள்ளம் யாண்டும் உவகையில் விஞ்சுகின்றது.

அருநூல் இயற்றும் ஆற்றல்சால் புலவ!

தமிழகம் தழைத்துய்யத் தாங்கள் இயற்றிய பல அந்தாதிகள், கோவைகள், இன்னிசைப் பாமாலைகள், மஞ்சரிகளாதிய தனிச் செய்யுட்களும், ஆழ்ந்த கருத்தினைத் தெரிக்க வல்ல வசன நூல்களும், முஸ்லிம் மத காப்பியமாகிய சீறாப் புராணம் போன்ற அரும்பெரும் நூல்களுக்களித்த அரிய உரைகளும், தமிழகத்துக் கீடு மிக்க பயனை அளிக்கத் தகுந்த பல்லாயிரக்கணக்கான நவீன சொற் கூட்டங்களைத் தொகுத்து விரித்த பேரகராதியும், மற்றும் கவிச்சிறப்பம், புலமைத்திறன், கலை நுட்பம் வாய்ந்த பன்னூல்களும், எங்களுக்கோர் அறிவுக்களஞ்சியமாய் நிற்கும் பெற்றியை யாங்கள் என்றும் மறப்பேமல்லேம்.

கொள்ளக் குறையாக் கல்விப் பெருங்கடலே!

கைம்மாறு கருதாமல், எவ்வகைப் பொருளினையும் எத்துணை நிலையினையும் மனக்கண் முன்னே தெளிவுறப் புலப்படுத்திச் சித்திரிக்கும் சிறப்பியல் வாய்ந்து,

காலம் அளவு முதலிய வரையறையின்றிச் செவிநுகர் கனிகளைச் சொரிந்து தர வல்ல கற்பகத் தருவாய் விளங்கும் தங்களிடத்தே அண்மிய மாணவர்கள் இந் நாஞ்சில் நாட்டில் நூற்றிற்கு ஐம்பதின்மேல் புலவர்களாகவும் பண்டிதர்களாகவும் அவதானிகளாகவும் சிறந்திலங்கக்கண்ட நாங்கள் களிதுளும்பி உங்களைப் புகழா திருத்தல் இயலுமோ?

நுணுகிப் பரந்த மதிவீறுடையோய்!

சென்னை நகர் விக்டோரியா நகர மண்டபத்தில் 1907-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ஆம் நாளன்று பேரறிஞர் குழுமிய பெரும்பேரவையத்து, தமிழ்மொழி தங்கள் தனியரசினுக்கு அடங்கி நின்று குற்றேவல் புரியும் தன்மை இலங்கப் பெற்று, ஏறுபோல் பீடுடன் இருந்து கண்டார் வியந்து களிக்க நூறு அவதானம் (சதாவதானம்) செய்து காட்டி வெற்றிபெற்ற தங்கள் அரிய ஆற்றலை யாருக்குத் தான் மறக்க இயலும்.

அருள் வளம் அனைத்தும் வரையாது பெற்றோய்!

சென்னையில், வித்துவ ரத்தினமாகிய ஆறுமுக நாவலரவர்கள் காலமுதல் உயர்திரு நா. கதிர்வேல் பிள்ளையவர்கள் காலம் ஈறுக நடைபெற்ற அருள்பெரும் வள்ளல் இராமலிங்க அடிகளது திருவருட்பா மறுப்புப் போரில் இறுதியாகத் தாங்கள் முனைந்து, முடிந்த நூல்கள் முகமாகத் தங்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையெனக் காட்டி உயர்திரு கதிர்வேல் பிள்ளையோடு அவர்களது தொண்டர் களை எதிர்த்துப் போராடி வென்று திருவருட்பா திருவருட்பாவே என்று உலகம் உவப்ப நிலைநாட்டி அப்போருக்கோர் முற்றுப்புள்ளியிட்டுக் கதிர்வேல் பிள்ளை யின் எதிர்வேல் பிள்ளையெனப் பட்டமும் சூட்ட வாய்ந்த கூர்த்த மதியால் உதித்த ஆர்வத்தை வியந்த நாங்கள் இம்மாபெரும் செயலுக்கேற்ற கைம்மாறு செய்யும் வகை தெரியாது இன்னும் உழலுகின்றோம். தங்கள் அறிவே பேரறிவு! தங்கள் ஆற்றலே பேராற்றல்

செந்தமிழுக்கோர் செழுஞ்சுடரே!

தங்களிடத்துக் கற்பான் வரும் மாணவர்கள் தங்களது அமிழ்தினும் இனி தினிக்கும் விரிவுரையின் ஏற்றத்தால் அவைகள் அவர்களது உள்ளத்தில் பசு மரத்தாணிபோல் பதியப்பெறும் தன்மையையும், பாங்கினும் பான்மையினும் சிறந்த தங்கள் சொற்பொழிவுகளையும். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சொற்றிறனையும் நினைக்க நினைக்க எங்கள் உள்ளத்தை அவைகள் கொள்ளை கொள்ளுகின்றன. எங்கள் வாழ்நாளில் அவை என்றும் மறத்தற்குரியனவல்ல. தாங்கள் தமிழுலகம் என்றும் தழைத்துய்யுமாறு நீடிய வாயுளும், கூடிய செல்வ மும் பெற்றுப் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,
தங்கள்பால் அன்பும் கடமையும் பூண்ட,
நாஞ்சில் நாட்டார்.

நாகர்கோவில்,
23—12—1119.

என்னருமை ஆசிரியர் அவர்கள்!

(கல்வி வள்ளல், முதுபெரும் புலவர் தா. சாத்தாங்குட்டிப் பிள்ளை)

நாஞ்சில் நாடு என்பது தோவாளை, அகத்தீசுவரம் என்னும் இரு தொகுதிகளைக் கொண்ட ஒரு சிறு நிலப்பகுதி. இது சேர மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. தற்போது தமிழ் நாட்டோடு சேர்ந்த குமரி மாவட்டத்தின் ஒரு பகுதியாய் விளங்குகிறது. இந்நாடு நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் நிறைந்து நாற்புறங்களும் நஞ்சை நிலங்கள் மலிந்தது. பழையாறு என்னும் பஃறுளியாறு இதனை வளப்படுத்துகின்றது. இதன் அழகை மனோன்மணீய ஆசிரியர் அவர்கள் அழகுற விளக்கியுள்ளார்கள். இங்கு வாழும் மக்கள் தமிழர்கள். தொழில் விவசாயம். இவர்கள் தமிழ் மக்களாக இருந்தபோதிலும் தமிழைப் பேசுவார்களே யொழிய தங்கள் மொழியைப் பயிலவோ அதனைப் பரப்பவோ இயலாத நிலையில் இருந்துவந்தனர். ஏனெனில் அக்காலத்தில் நாட்டில் மலையாளப் பள்ளிகள் இருந்தனவே யொழிய மருந்துக்குங்கூட தமிழ்ப் பள்ளிகள் இருந்ததில்லை. தமிழ் மொழியில் ஆர்வம் கொண்ட பெரியவர்கள் ஒவ்வொரு ஊரிலும் திண்ணைப் பள்ளிகள் ஏற்படுத்தித் தமிழ் மொழியில உள்ள எழுத்துப் பயிற்சியை அளித்து வந்தனர். ஒன்றிரண்டாண்டுகள இந்தப் பள்ளிகளில் படித்துக் கிடைத்த அறிவோடு விட்டு நீங்குவர். இதனைக் கண்ணுற்ற தமிழ்ப் பெருமக்கள் இடைக்காலத்தில் தமிழ் மாநாடு கூட்டிக் கிளர்ச்சி செய்ததின் பயனாக ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்ப் பள்ளிகள் தோன்றலாயின. பெயர்தான் தமிழ்ப் பள்ளிகளே யொழிய தமிழறிவில்லாத மலையாளத் தேர்வில் தேறியவர்களே அங்கு ஆசிரியர்களாக இருந்துவந்தனர். இந்த மலையாள ஆசிரியர்களுக்கு ஒரு தேர்வு ஏற்படுத்தப்பட்டது. அதில் தேறியவர்கள் தமிழ்ப் பள்ளிகளில் ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டனர். இந்த நிலையில் நாஞ்சில் நாட்டு மக்களுக்குத் தமிழ் நூல்களைப் படித்தறியவோ உணர்ந்துகொள்ளவோ முடியாத நிலையைக் கவிமணியவர்கள் தமது 'மருமக்கள் வழி மான்மியத்'தில் திருவாசகம், திருப்புகழ் முதலிய தமிழ் நூல்களையும் தமிழனாயப் பிறந்தும் படித்தறிய முடியாத நிலை கண்டு வருந்துவாராயினர்.



எழுதியவர்

அறுவடை முடிந்தபின்னர் வேனிற் காலங்களில் ஊருக்கு ஊர் தமிழ்ப் புராணங்கள் படிக்கப்படும். ஒருவர் படிக்க, ஒருவர் விரிவுரை நிகழ்த்த, ஊரிலுள்ள பலரும் அமைதியாக இருந்து ரசித்துக் கேட்பார்கள். இதுவே இந்நாட்டார் பொழுதுபோக்கு. இந்தக் காலத்தில் தமிழறிந்த பெரியார்கள் நாட்டில் இல்லாமலும் இல்லை. ஒரு சிலர் இருந்தாலும் அவர்களிடத்தில் சென்று முறையாகப் பாடங் கேட்டுக்கொள்ள வாய்ப்பும் வசதியும் இல்லை. இது ஒருகாலம். இவ்வாறிருக்கும்போது அமிழ்தினும் இனிதினிக்கும் இருந்தமிழ்மொழியைப் பயிலவேண்டும் என்னும் பேரவா ஏற்பட்ட காலையில் சென்னையினின்றும் தமது சொந்த ஊராகிய கோட்டாறு என்னும் பதியில் சந்தித் தெருவில் வந்து வதிந்துவரும் தமிழ்க் கடல், சதாவதானி கா. ப. செ. பாவலர் அவர்களைத்

தரிசிக்கும் பேறு கிடைத்தது. பாவலர் அவர்களை அறிமுகப்படுத்தியவர் அக்காலம் பிரபல ஜவுளி வர்த்தகராயிருந்த திரு பி. வேலாயுத முதலியார் அவர்களாவார். சென்னையில் நடத்திய அவதானச்சிறப்பையும் கவி பாடும் வன்மையையும் வேலாயுத முதலியார் அவர்கள் எடுத்து விளங்கப் பேசினார்கள். பாவலர் அவர்களைத் தேடிச் சென்று கண்டு வணங்கி நின்றேன். யாரையும் ஒருமையில் பேசியறியாத பாவலர் அவர்கள் இளைஞனாகிய என்னைப் பார்த்து, "நீங்கள் யார்? தங்களுக்கு யாது வேண்டும்?" என்று கேட்ட போது விடையிறுக்க இயலாமல் நான் அப்படியே இருந்துபோனதைக் கண்டு சிறிது நேரங்கழித்துப் பின்னும் வினவினார்கள். அப்போது தமிழைப் பயில வேண்டும் என்ற எனது பெரு விருப்பத்தை அவர்களிடம் கூறினேன். 'இதற்கு முன்னர் தாங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். நல்வழி, மூதுரை முதலிய சிறு நூல்களைப் படித்திருக்கின்றேன் என்று மறுமொழி கூறினேன். என்னிடம் ஒரு புத்தகத்தைத் தந்து படிக்கும்படிக் கூறினார்கள். அதைப் பிழையறப் படிக்க இயலாதிருந்த என் நிலைகண்டு 'முயன்றால் எளிதாகக் கற்றுக்கொள்ளலாம்; என்னால் உதவி செய்யத் தடையுமில்லை' என்று அன்பொழுகக் கூறினார்கள்.

அதுமுதல் அடிக்கடி அவர்களைக் காணவும் அவர்களோடு பழகவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டு பாடங்கேட்கத் துவங்கினேன். நள வெண்பாவும், நாலடியாரும் செவ்வையாகப் படிக்கவேண்டுமென்று கூறி இரு புத்தகங்களும் தந்தார்கள். ஒரு சிறு குறிப்புப் புத்தகத்தில் இலக்கணப் பாடக் குறிப்புகளை எழுதிக்கொள்ளும் படிக் கட்டளையிட்டார்கள். இவ்விதம் ஆறு திங்கள் வரையிலும் நான் படித்த நாலடியார், நள வெண்பா பாடங்களைக் கேட்டும் இலக்கணப் பாடங்களைப் விளக்கியும் பாடங் கற்பித்து வந்தனர். ஆசிரியர் மாணவருக்குப் பாடஞ் சொல்ல வேண்டிய முறைபற்றி நன்னூலார்—'விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து கொள்வோன் கொள்வகை அறிந்து அவனுளங்கொளக் கற்பிக்கும்' மரபுக்கு இலக்கணமாகப் பிழையின்றிப் படிக்க முடியாத என்னைப் பொறுமையோடு மறுமுறையும் மறுமுறையும் திருத்திக் கருணையோடு கற்பித்ததை எண்ணுங்கால் அத்தகைய பெரியாரிடம் பாடங்கேட்கும் பாக்கியத்தைப் பெற வெகு புண்ணியம் செய்திருக்கவேண்டும் என்று நினைத்து உளம் பூரித்து ஆசையோடு படிக்கத் துவங்கினேன். பாவலர் அவர்களுடைய அத்தகைய உயர்வான பண்பை இன்று நினைத்தாலும் என் நெஞ்சம் நிறைவு பெற்றுவிடுகிறது.

நன்னூல் பாடங்கேட்கத் துவங்கிய காலத்தில் அதற்குத் துணையாக அதிவீரராம பாண்டியர் இயற்றிய நைடதம் கற்பித்து வந்தார்கள். பாடஞ் சொல்லும்போது நன்னூலுக்கு மேற்கோளாக நேமிநாதம், இலக்கண விளக்கம், வீரசோழியம், தொன்னூல் விளக்கம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கம் தருவார்கள். நைடதம் பாடம் நடக்கும்போது சீறா, இராஜநாயகம், இராமாயணம், பாரதம் முதலிய நூல்களில் இருந்து மேற்கோள் தருவார்கள். ஒவ்வொரு பாடலையும் குறிப்பெடுத்துக்கொள்வேன். இவ்விதமாக இலக்கிய இலக்கண நூல்களைப் படிக்கவேண்டுமென்ற அவா என்னுள்ளத்தெழுந்தது. பிற்பாடு இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து கற்று வந்தேன். இவ்விதம் இருபத்தைந்து ஆண்டுகள் பாடங்கேட்ட பின்னர் நான் அறிந்துகொண்டது "அவர்களுக்கு மாணவனாக இருப்பதற்கு வேண்டிய தகுதி மாத்திரம் எனக்கு உண்டென்பது ஆகும்." பின்னர் அவர்களை அடுத்துப் பாடங்கேட்க வசதியில்லாமல் போய்விட்டது. காரணம் வயிற்றுக் கொடுமையே. பலவிடங்களிலும் நான் தமிழாசிரியனாகத் திறம்படப் பணியாற்றிய பெருமை என்னருமை ஆசிரியர் பாவலர் அவர்களையே சாரும். படிக்கும்போது ஆரம்பமாகக் காணிக்கை பெற்றுக்கொண்டார்களே தவிர யாதொரு ஊதியமும் பெற்றுக்கொண்டதில்லை. 'தமிழ்ப் படிக்க விரும்பும் மாணவனுக்கு ஊதியம் பெறாமல் கற்பிக்கவேண்டும் என்பது எனது விருப்பம்" என்று அடிக்கடி கூறுவார்கள். தமிழ் கற்றவர்களிடத்தில் மிகுந்த மதிப்பும் நேசமும் காட்டி வந்தார்கள். ஏதோ ஒன்றிரண்டு நூல்களின் பெயரை அறிந்து வைத்துக்கொண்டு 'நானும் ஒரு புலவன்' என்று டாம்பீகமாகப் பேசுவோரைக் கண்டால் விரும்பமாட்டார்கள்.

என்னோடு பல மாணவர்கள் அவர்களிடம் பாடங்கேட்டு வந்தார்கள். அவர்களுள் இன்றிருப்பவர்களில் தேரூர் வித்துவான் உ. சிதம்பரதாணுபிள்ளையவர்களும், கோட்டாறு ரா. உடையார் பிள்ளை B. A. L. T. அவர்களும் என் சக மாணவர்கள். எனது இருபத்தைந்தாண்டு பழக்கத்தில் ஒரு நூலையாவது தொட்டுப் பார்க்கவோ கடுதாசியில் பாடல்களை எழுதவோ நான் கண்ட

தில்லை. மாணவர்களையே படிக்கச் சொல்லி விளக்குவார்கள். மாணவர்கள் தவறாகப் படிக்கும் போது புத்தகத்தில் இருப்பதுபோல் திருத்திச் சொல்லுவார்கள். இவ்வாறு வியக்கத்தக்க விதத்தில் நினைவாற்றல் பெற்றிருந்தார்கள். அவர்களிடம் அமைந்திருந்த நினைவாற்றல் போல் வேறு எவரிடமும் இருக்க நான் கண்டதில்லை.

பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் இயற்றிய சந்திர விலாசம், உமறுப் புலவரவர்களின் ஆசிரியராகிய கடிகைமுத்துப் புலவர் இயற்றிய சமுத்திர விலாசம், திருமலைவேல் கவிராயரவர்கள் இயற்றிய இரத்தினாகர விலாசம், முதலிய அரிய நூல்களுக்கு இவர்களைத் தவிர வேறு எவரும் உரைசொல்ல நான் கேட்டதில்லை எந்த நூலை எடுத்துப் பாடங்கேட்டாலும் எந்த விதமான இலக்கண ஐயப்பாடுகளைக் கேட்டாலும் ஐயமகல விளக்குவதில் அவர்களுக்கு அவர்களே நிகர்.

இவர்களுடைய ஆசிரியர் சங்கரநாராயண உபாத்தியாயர் அவர்களாவார். அண்ணாவி எனறே பெரும்பாலும் அழைக்கப்படுவார் நான றிந்த வரையில் என்னருமை ஆசிரியர் அவர்களை செய்குதம்பி என்று அழைப்பது அவர் ஒருவரே. ஏனையவர் பாவலர் என்றே அழைத்து வந்தனர். அண்ணாவியின் முன்னிலையில் அவர் இருக்கச் சொன்னாலும் பாவலர் அவர்கள் இருப்பதில்லை. ஆசிரியரை இருக்கச் செய்து தான் நின்று கொண்டே அவர் வந்த காரியத்தை வினவி அவரை அனுப்பிய பின்னரே ஓரிடத்தில் வந்து உட்காருவது வழக்கம். ஆசிரியரைக் காணும் போது கலைமகள் சோலைக்குள் சென்று பக்தர்கள் வழிபடுகிறபோது எவ்விதப் பணிவை மேற்கொள்ளுவார்களோ அவ்விதமே பணிவுடனும் பக்தியுடனும் காணப்படுவார்கள்.

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களியற்றிய பாடல்களில் பாவலர் அவர்களுக்கு மிகுந்த அன்பும் ஈடுபாடும் உண்டு அவர்கள் இயற்றிய திருவருட்பாவை மருட்பா என மறுத்த திரு நா. கதிர்வேல்பிள்ளையின் கூட்டத்தை எதிர்த்து வாதஞ்செய்து பேசி அருட்பா அருட்பாவே என நிலைநாட்டி வெற்றி கண்டார்கள். பாவலர் அவர்கள் மருட்பா கூட்டத்தாரோடு எதிர்வாதஞ்செய்து எழுதி உள்ளவைகளைக் 'குதர்க்காரணிய நாசமகாபரசு' என்னும் நூலில் விளங்கக் காணலாம்.

பாவலர் அவர்களிடம் பாடங்கேட்டு வந்த நாளில் சாற்றுக்கவிக்காகவும் வாழ்த்துப் பாக்களுக்காகவும் பலரும் வருவதுண்டு வருவார் விருப்பத்தை அறிந்து உடன்தானே செய்யுட்களை எழுதிக்கொள்ளும்படிச் சொல்வார்கள். எனது இருபத்தைந்தாண்டு பழக்கத்தில் செய்யுட்கள் கேட்டு வருவாரிடம் முடியாது என்று சொல்லவோ பின்னர் வாருங்கள் எழுதித்தருகிறேன் என்று சொல்லவோ நான் கேட்டதில்லை. உடன்தானே செய்யுட்களைச் சொல்வார்கள். இவ்வாறு கேட்ட உடன்தானே இலக்கண வழுக்கள் சிஞ்சிற்றும் இன்றி இனிய பல செய்யுட்களை யாத்தருளும் இன்தமிழ்க் கவிஞர் பாவலர் அவர்களைப்போல் வேறு புலவரை இவ்வைய கத்து யான் இதுவரை கண்டதில்லை. இத்தகைய கவிததிறன் கைவரப்பெற்ற பாவலர் அவர்களையும் இக்காலக் கவிஞர்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது பாவலர் அவர்களின் கவித்திறன் கண்முன் வருகிறது.

பாவலர் அவர்கள் எவ்வகைப் பா இயற்றிலும் வல்லவராகத் திகழ்ந்து வந்தார்கள். இவர்களுடைய கவிதைகள் அனைத்தும் திட்பமும் நுட்பமும் ஓசை நயமும் செறிந்து விளங்குபவை. இவர்களுடைய பாக்கள் அனைத்தும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத கவியமுதாய் விளங்குகின்றன. படித்தவர் வாய் தேனூறும் படி. இவர்களுடைய வெண்பாக்கள் அமைந்திருக்கின்றன. பாவலர் அவர்களுடைய வெண்பாக்களை நான் படிக்கும்போது நளவெண்பா இயற்றிய வெண்பாவிற் புகழேந்திதான் மீண்டு வந்து மகாமதி பாவலராய் அவதரித்தாரோ என எண்ணி என்னுள்ளம் மகிழ்ந்திருக்கின்றேன். அந்த மகிழ்ச்சி உங்களுக்கும் உண்டாக இதோ பாவலர் அவர்களுடைய ஒரு சில வெண்பாக்கள்:

'தென்னனந்தை செய்தவத்தால் சித்திரைநாள் வந்துதித்த
மன்னவனைச் சேர்குல மாமணியை—உன்னியிரு
கண்ணு மதித்துக் கருணைபொழிந் தாயர்குல
கண்ணு புரப்பாய் கனிந்து'

'மண்முழுதும் போர்த்து மறிகடலுந் தான்போர்த்து
விண்முழுதும் போர்த்துமிக மிஞ்சியதே—உண்முழுதும்
கோபால மாயனடி கொண்டுவக்குஞ் சித்திரைப்பேர்
பூபாலன் பெற்ற புகழ்'

(மேற்கண்ட வெண்பாக்களிரண்டும் சோ நாட்டு மன்னர் சித்திரைத் திருநாள் மீது பாடியவை)

'ஓரேழுபா னுண்டு உனையுவந்த வையகந்தான்
ஈரேழுபா னுண்டும் இனிதுவப்பச்---சீரேழுபா
சிந்தும் பெருமுகிலே தேசிகவி நாயகனே
சந்ததமும் வாழ்க தழைத்து'

(இது கவிமணியின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது பாடப்பட்டது)

'தாய்மொழிக்கே ஆர்வம் ததும்பத் தமிழாரை
வாய்மொழிக்கே ஓர்நூல் வகுத்துரைத்தான் —
ஆய்மொழக்கே
சான்றோரும் மெச்சுதகை சால்பதும னுபனெனும்
வான்றோய் புகழான் மதித்து'

(இது பதுமனுபனென்பார் இயற்றிவந்த நூலுக்களித்தது.)

'பொன்மாலை தேயுமலர்ப் பூமாலை வாடுமணிக்
கன்மாலை துண்டுபடுங் காரணத்தால்—சொன்மாலை
என்மாலை யென்றெருநா ளீந்துவந் தான்பெருமாள்
வன்மாலை நீக்கி மகிழ்ந்து'

(இஃது கவிஞர் சே. ப. பெருமாளுக்களித்தது.)

'ஆகஞ் சுகமா அடுத்தவர்கள் சேமமா
மேகம் வழங்கியநா மேலுமிந்தப் — போகம்
விளையுமா இன்னுமழை வேண்டுமா செல்வம்
வளையுமா ஊர்செழிக்கு மா'

'உள்ளபடி பல்கலையு மோதுகையுட னேந்தனக்குக்
கள்ளமற வோதுவித்த கண்மணியை — எள்ளளவும்
நீங்காம னேசம் நெகிழாமற் பக்கம்விட்டு
வாங்காம லியிருத்தி வை'

(இவையிரண்டும் தனது நண்பர் கோட்டாறு பாக்கியம பண்டாரம் அவர்களுக்கு 1907-ல் சென்னையிலிருந்து பாடலாய் எழுதிய கடிதத்தில இருந்து எடுக்கப்பெற்றவை.)

'பொல்லார்க் குரைக்குநறும் போதனைக ளத்தனையும்
நில்லா தவரகத்தே நீங்கிடுமால் — இல்லிக்
குடத்தகத்தே யள்ளியள்ளிக் கொட்டுநீர் மற்றத்
தடத்தகத்தே நின்றிடுமோ சார்ந்து'

(இது அவர்களது நீதிவெண்பாக்களில் ஒன்று)

பாவலர் அவர்கள் ஆசிரியவிருத்தம் இயற்றுவதிலும் நிகரற்று விளங்கினார்கள் என்பதற்கு அவர்களுடைய ஆசிரிய விருத்தங்களனைத்தும சான்று பகர்கின்றன. அவற்றுள் ஓரிரண்டு இதோ:

'உருமகளை அயன்நாவில் உறைமகளைப்
பொறைமகளை உலகுக் கெல்லாம்
குருமகளை அன்பர்புகழ்க் குலமகளை
மலர்மகளைக் குறைதீர் செல்வத்
திருமகளின் மருமகளை நிலமகட்குங்
கலைமகளைச் செவ்வி வாய்ந்த
ஒரு மகளை எனக்கருள வருமகளைப்
பெருமகளை உன்னல் செய்வாம்'

(அச்சகத் தலைவரின் அன்பு வேண்டுகோளுக் கிணங்கிய பாவலர், சரஸ்வதி பேரில் பாடிய விருத்தம்.)

'ஆயுமகத் தாரகத்து ளநுதினமும்
அகலாம லன்போ டச்சம்
தோயுமகத் தாயெந்தன் தூயகுணச்
சிவதாணுத் தோன்றல் யானின்(று)
ஏயுமகத் தென்றென்று மிருந்துபணி
யிருந்துசெய இருங்கல் லாலோர்
தாயுமக வுந்தருவாய் தகுவிலையே
தருவலிசை தழைக்குந் தானே'

(இது தன்னுடைய புதுமனையிற் குடியேறும் போது தனது நண்பர் சிவதாணு பண்ணையார் என்பாரிடம் ஓர் அம்மிக்கல்லும் குழவியும் கேட்டுப் பாடியது.

பாவலர் அவர்கள் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கையுடையவர்கள் என்பதற்கு சான்று இதோ:-

'ஒன்றுதெய்வ மொன்றுமத மொன்றுமக்கள் சாதியென
நன்றுபெற வோதியவை நாட்டிநவின நான்மறையுங்
குன்றுபெறு தீபமெனக் கோத்தளித்துக் காத்தவுங்கள்
துன்றுழுயர் மாபெருமை சொல்லற் கெளிதேயோ
சோதிநபி நாயகமே சொல்லற் கெளிதேயோ'

(இஃது பாவலர் அவர்களியற்றிய 102 கவிப் பாக்களடங்கிய நபிநாயக மான்மிய மஞ்சரியிலிருந்து எடுக்கப்பெற்றது.

கம்பன் காவியத்தில் பாவலர் அவர்களுக்கு மிகுந்த பற்றுதல் உண்டு. இவர்களுடைய கம்பராமாயணச் சொற்பொழிவுகள் பலவற்றை நான் பலவிடங்களிலும் கேட்டிருக்கின்றேன். 'கம்பன் காவியத்தை நயம்பட விளக்கும் பழையத் தலைமுறைப் பெரியார்களுள் நம் காலத்து வாழ்ந்தவர் பாவலர் ஒருவர்தான்' என்று தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம் கரியசெம்மல்
அல்லொக்கும் நிறத்தினுள்மேல் விடுதலும் வைரக்குன்ற
கல்லொக்கும் நிறத்தில்தங்காது அப்புறம்கடந்து கல்லா
புல்லர்க்கு நல்லோர்சொன்ன பொருளெனப்
போயிற்றன்றே'

இஃது கம்பராமாயணம் தாடகை வதைப்படலத்தில் உள்ளது. இப்பாடலைச் சிதைத்தும் திரித்தும் வெளியிட்டிருந்தார்கள். இப்பாடலை விளக்கங்கேட்ட காலத்தில் கம்பன் பாட்டுக்கும் திருத்தின பாடலுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைச் செவ்விய முறையில் விளக்கினார்கள். அப்பாடல் வருமாறு:—

'சொல்லொக்கும் கடியவேக சுடுசரம் ஒன்றைத்தூய
அல்லொக்கும் நிறத்தினுள்மேல் விடுகலும் வைரக்குன்றக்
கல்லொக்கும் நிறத்தில் தங்காது அப்புறம்கடந்து கல்லாப்
புல்லர்க்கு நல்லோர்சொன்ன பொருளெனப்
போயிற்றன்றே'

என்பது கரிய செம்மல் என்ற பதத்தைக் கம்பன் பலவிடங்களில் அமைத்திருக்கும் நயத்தை விளக்கிக்காட்டி அந்நூலில் இருந்தே பல செய்யுட்களை மேற்கோள் தந்தார்கள். இப்பாடலின் பயனிலை 'போயிற்று' என்பது அஃறிணை ஒன்றன்பால்வினைமுற்று. இதற்கு எழுவாய் 'சுடுசரம்' என்பது. இப்பால் பகா அஃறிணைப் பெயர் ஒருமைக்கும் பன்மைக்கும் உபயோகப்படுவதைப் 'போயிற்று' என்னும் ஒருமை வினைமுற்றினால் விளக்கி யிருப்பதனழகையும், செயப்படுபொருள் விகுதி ஏற்று நின்ற ஒன்றை நின்று பயனின்மை என்பதின குற்றம் தங்க அமைந்திருப்பதையும் விளக்கி அந்நூலில உள்ள பல பாடல்களுக்கும விளக்கம் தந்தார்கள். அவை அனைத்தையும் எனது முதுமையினால் நினைவில் வைத்துக்கொள்ள முடியவில்லை.

கோடீச்வரக் கோவைக்குப் பின்னர் மூன்று கோவை நூல்களைக் குறையறப் பாடிய பெருமை பாவலர் அவர்களுக்கே உரியது. இவ்வாறு கண்டனைய வண்டமிழ்ப் பாக்களை விண்டு தண்டமிழன்னையின் புகழை நாற்றிசையும் போற்றிசைப்ப வாழ்ந்தார்கள். பாவலர் அவர்களுடைய காலத்திலிருந்துதான் நாஞ்சில் நாட்டில் தமிழ்க் கல்வி பெருகி வளர்ந்து நறுமணம் வீசிக்கொண்டிருக்கின்றது இப்பொழுது நாஞ்சில் நாட்டுலாவும் பல தமிழ் வித்துவான்களும், அவர்களின் மாணவர்களும் மாணவர்களுககு மாணவர்களுமே ஆவர் என்பதை எண்ணும்போது அவர்கள் செய்த தமிழ்த்தொண்டு நம கண்முன் வந்து நிற்கிறது அத்தொண்டு என்றும் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை.

பாவலர் அவர்கள் திருநாகூர் திரிபந்தாதி, திருக் கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், கல்வத்து நாயகம் இன்னிசைப்பா மாலை, அழகப்பக் கோவை, சம்சுத்தாசீன் கோவை, சர். சி. பி. பேரில் சசிவோத்தமன் கோவை, நபிநாயக மான்மிய மஞ்சரி முதலிய கவிதை நூல்களும் தனிப்பாடல்களும், சீறாப்புராண உரை, தேவலோகத்துக் கிரிமினல் கேசு, வேதாந்த விவகாரக் கிரிமினல் கேசு முதலிய உரைநடை நூல்களும இயற்றியுள்ளார்கள். இவைகளில் ஒரு சில வெளிவந்துள்ளன. மிகுதியை வெளியிடவேண்டுவது தமிழர்களின் தனிப்பெருங் கடமையாகும். அக்கடமையைச் செய்ய தமிழர்கள் முன்வர வேண்டுகின்றேன்.

வாழ்க பாவலர் திருப்பெயர்!
வளர்க அவர்தம் பெரும்புகழ்!!

'கற்றுவரும் பெருந்தொழிலைக் கனவிடையு
மறவாமற் கருத்துட் கொண்டு
முற்றுறவே யாய்ந்துணர்ந்து முடித்தவந்நூ
லேதினிநீ முடிக்கப் போகுங்
கொற்றமுறு நூலேது மேல்விளங்கு
நூலென்ன குணம தாக
வெற்றிதரு மிலக்கணங்க ளேதேனும்
பயின்றனையோ விள்ளு வாயே.'

(பாவலர் அவர்கள் எழுதிய கடிதத்தில் ஒரு பாடல்.)

'அன்னையுட னப்பனுமிங் கானவுற
வினருமெனக் காற்ற வொண்ணு
நன்னயமார் கல்விபல நாடோறு
நவநவமாய் நவையொன் றின்றிச்
சொன்னயமும் பொருணயமும் பெறப்புகட்டி
மனமயக்கந் தொலைத்தாட் கொண்ட
என்னயரெங் கிருக்கின்றார் சேமமென
யானறிய வியம்பு வாயே.'

(பாவலர் அவர்கள் எழுதிய கடிதத்தில் ஒரு பாடல்.)

பாபு ரேடியோ சேல்ஸ் அண்ட் சர்வீஸ்

கேப் ரோடு, கோட்டாறு, நாகர்கோவில்.

அழகும் வனப்பும் வாய்ந்த மரப் பெட்டிகளில்
பல்வேறு மாதிரிகளில் அமைக்கப்பட்டுள்ள:-

ரீப்பியான் ரேடியோக்கள்.



★

ரேடியோக்களில் சிறந்தவை யெனப் பலராலும் பாராட்டப் பட்டவை.

★

தமிழ்நாடு முழுமைக்கும் எல்லா ஜில்லாக்களிலும்
ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:-

BABU RADIO SALES & SERVICE,
CAPE ROAD, KOTTAR, **NAGERCOIL.**

N.B:—எங்களிடம் OSLO, UMS ரேடியோக்களும் எலக்டிரிக் சாமான்களும் கிடைக்கும்.

சதாவதானிப் பாவலர்

(புலவர்—'அரசு', துணையாசிரியர், "கலைக்களஞ்சியம்" சென்னை.)

சிறப்புரை.

1. செந்தமிழ்த்தேன் ஊற்றெடுக்குந் தென்னஞ்சில் வளநாட்டிற் கோட்டா றென்று
முந்தையுறு சீர்நாகர் கோயிலைச்சார் இளங்கடையில் முஸ்லிம் மக்கள்
சிந்தையுறு தவப்பயனல் பக்கிரிமீ ருன்பொருப்பிற் சிறக்கத் தோன்றிப்
பைந்தமிழார் சங்கரநா ராயணவா ரியின்தமிழைப் பருகி யார்ந்து,

2. கலைவானில் எழுந்துதமிழ்ப் பயிர்தழைத்துக் கவின்பெறவே சதாவ தானக்
கலைமழைபெய் செய்குதம்பிப் பாவலனும் முகில்நன்றி கருதுந் தோறும்
உலைவில்லாப் பேரின்ப அமிழ்தூறி நெஞ்சமெலாம் உவக்கும என்னே
கலையுலகோ, சாதிமதச் சுழல்கடந்துங் கருத்தினிலே கலந்தான் மன்னே.

3. வாய்ப்பறிந்து தொனிப்பொருளைப் பேரவையார்ப் பெடுக்கநுவல் மாண்பி னனை
மீப்புலமை யுடையோரும் வியப்புறப்பன் னூலியற்றி வெளியிட் டானை
மாப்புகழ்சேர் இராமலிங்க வள்ளலருட் பாமறுப்பை மறுத்திட் டானை
நாப்புகழ்ந்து சுவைத்திடவே சீறுவை யுரைவிரித்த நல்லோன் றன்னை,

4. நற்றமிழில் வாதிக்கும் நாவலனை, மாணவர்க்கு நாடித் தூய
நற்றமிழைக் கற்பிக்கும் போதகனை, உரைவிரிக்கும் நயத்தி னனைச்
சொற்பொழிவில் வல்லோனைப் பலநூல்கள் பதிப்பித்த தோன்றல் தன்னைப்
பொற்புறுதே வாமிர்தப் பிரசங்கக் களஞ்சியனைப் போற்று வோமே.

★ நான் கண்டபடி ★

(பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M. A., B. L., M. O. L

தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

நான் சிறுவனாக இருந்த காலம் – பத்தாண்டு நிறைந்த பையனாக வெளியுலகினை அறியாது வீட்டிலேயே பழகிய நாட்கள்–வெளியுலகில் நான் செல்லாவிடினும் வெளியுலகம் என் வீட்டிற்குள் வந்து புழங்கிய காலம்–துறவிகள் - தமிழறிஞர்கள் - நாட்டுப் பற்றில் பழுத்த நல்லவர்கள் – அடிமை நாடாக நம் நாடு இருப்பதா என்று ஆராமைமிக்கு விடுதலைக்காகத் துடிதுடித்தவர்கள். இதனிடையே பழைய பண்பாட்டினைத் தாய்நாட்டு வடிவமாகக் கண்டு போற்றியவர்கள்–தமிழாகக் கண்டு வாழ்த்தியவர்கள்–இவர்களைக் காணும் பேறும், பழகும் பேறும் பெற்ற யான் அவர்கள் அன்பையும் வாழ்த்,தினையும் பெற்று மகிழ்ந்தேன். பத்து ஆண்டுதான் நிரம்பிய பையனுக்கு என்ன விளங்கும்? இருந்தாலும் சூழ்நிலை ஆளை உருவாக்காது விடுவதில்லையே.

என் குடும்ப நிலை இப்போது விளங்குமே. தமிழறிந்த குடும்பம். என் பாட்டனாருடன் மெத்தென்ற படுக்கையில் படுத்திருப்பேன். அவர் அப்போதப்போது எடுத்துரைக்கும் திருக்குறளும், நாலடியாரும் நான் அறிந்தவை. என் தகப்பனார் அட்டாவதானம் சுப்பராயச் செட்டியாரின் மாணவர். அதனாலேயே தம் ஆசிரியரின் ஆசிரியரான மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் பெயரை எனக்குச் சூட்டினார். என் தமையனார், திரு. கிருஷ்ணசாமிப் பாவலர் திரு. வடிவேலுச் செட்டியாரிடம் தமிழ் பயின்றிருந்த காலம். என்னுடைய தமிழ்த் தொட்டில் தெரிகிறதன்றோ?

இந்தக் குழுவில் பல பெயர் வந்தனர். அப்போது வந்தவர் ஒருவர் நினைவு வருகிறது. அவரே **செய்குதம்பிப் பாவலர்**. உடல் நலம் குன்றி இருந்தாலும் உள்ளத் துறுதி குன்றாத் தோற்றம். இசுலாமியர் என்று எண்ண நின்றாலும் பழுத்த தமிழ் வடிவம். நானோ சென்னைவாழ் பையன்; அவரோ நாஞ்சில் நாட்டார். மொழிநடை விளங்குவதும் அரிதாகவே இருந்தது. ஆனால் அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ். பிறர் பேசும் வட்டார மொழிநடையை எல்லாம் அவரவர்கள் உயர்வோடு போற்றும் மனம்பான்மை என்னுள்ளத்தில் எழுந்தது. எள்ளி நகையாடும் பிறர் போக்கு எனக்கு இன்றும் விளங்காமைக்குக் காரணம் இந்தப் பழக்கமே ஆம். என் மொழி நூல் கலைக்கு வித்து அன்றே இடம் பெற்றது.

பாவலர் அவர்கள் திரு அருட்பாக் கூட்டத்தைச் சேர்ந்தவர். அருட்பாவை மருட்பா என்று இழித்துரைத்தவர்களோடு இந்தக் கூட்டம் எழுத்திலும் போராடும்; கூட்டத்திலும் மன்றாடும். அரசியல் போராட்டம் இல்லாத காலத்தில் இத்தகைய போராட்டத்தில் மக்களுக்கு ஓர் ஈடுபாடு. போராட்டம் இன்றி மக்கள் வாழமுடியாது போலும்.

அப்போது திரு கதிரைவேற்பிள்ளையவர்கள் மருட்பாக் கூட்டத்தில் தலைசிறந்தவர். அவர் சதாவதானம் செய்தார். திரு. செய்குதப்பிப் பாவலர் தாமுந்தான் செய்யக் கூடும் எனச் செய்து காட்டினார். பலரும் செய்யக்கூடும் என்றும் வற்புறுத்தினார்.

இது என் தமையனார் ஊக்கத்தைத் தட்டி எழுப்பியது. ஒருவர் செய்வதனை மற்றொருவர் செய்யமுடியும் என்ற நம்பிக்கையில் ஓங்கியவர் அவர். அதனால் பிறர் செய்து காட்டியதனைத் தாமும் செய்து காட்டத் துடிதுடிப்பவர். எனவே தாமும் அவதானம் செய்யவேண்டும் என்று முனைந்தார். அவரிடத்தில் அன்புகொண்ட செய்குதம்பிப் பாவலர் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார். இலாடச் சங்கிலியைக் கழற்றிக்கொண்டே புலவரிடையே சுற்றிக்கொண்டே வரவேண்

டும்; அப்போது ஒருவர் முதுகில் கல்லெறிவார்; ஒருவர் நெல்லெறிவார்; ஒருவர் பல எண்கள் கொண்ட குடங்களிலிருந்து பல சுவை நீரை ஒவ்வொரு சுற்றிலும் தருவார். ஈற்றடிக் கொடுத்து ஒரு வெண்பாவினைப் பாடச் சொல்லுபவரிடம் ஒரு சுற்றுக்கு ஒரு சீராகச் சொல்லவேண்டும். காலில்லா வெண்பாப் பாடச் சொல்வார் ஒருவார்; கொம்பில்லா வெண்பாப் பாடச்சொல்வார் மற்றொருவர். பழந்தமிழிலக்கியத்திலிருந்து ஒரு பாட்டினைக் கொடுத்து விளக்கச் சொல்வார் ஒருவர். இதற்கிடையே சீட்டாட்டத்தில் ஒரு கையாக அவதானியார் இருந்தும் விளையாடி வரவேண்டும். 16 கட்டங்கள் நிறைந்த சதுரத்தில் கொடுத்த எண் எந்தப் பக்கம் கூட்டினாலும் வருமபடி வரிசையாக அமைக்க வேண்டும் ஆண்டவன் திருப்பெயரைச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். இப்படி நூறு பணிகளை மனதொருமைப் பாட்டுடன் செய்வதே சதாவதானம்.

இவ்வாறு பலமுறை எங்கள் தமையனார் செய்துவரும்படி வீட்டிலேயே செய்கு தம்பிப் பாவலர் பழக்கினார். வீண் பெருமை சிறிதும் இல்லை. ஆண்டவனிடம் ஊன்றிய அன்பு, மக்களிடம் பரந்த அருள், ஆன்ற விந்தடங்கிய புலமை, அயரா உழைப்பு, எளிமை - இவற்றையே என்றும் கண்டேன். பல நூல்களை அச்சிடும் வேலையில் ஓயாது அச்சுப்பிழை திருத்தும் பெருந் தொண்டும் என் கண்ணெதிர் நிற்கிறது. இவர் தந்த ஊக்கத்தினால் என் தமையனாரின் ஊக்கம் தழைத்தோங்கியது. அவரும் திரு சதாசிவ ஐயர் தலைமையில் சோடசாவதானம் செய்தார். பின் சதாவதானமும் செய்தார்.

அம்மட்டுமா! சுற்றியிருந்த பலருக்கும் ஊக்கம் வந்தது. எனக்குக்கூட அப்படித் தோன்றியது. இப்படி எல்லோரையும் தம் போலப் பெரியோர் ஆக்கும் சிறப்பினைப் பலரிடம் காண்பது அரிது. திரு செய்குதம்பிப் பாவலர் அந்தச் சிறப்பே உருவானவர். வேறுபல அவரைப்பற்றி கூற முடியும். ஆனால் இதுவே என்னுள்ளத்திலூறி என்னையும் வாழச் செய்தது என்று தோன்றுவதால் இதனை வற்புறுத்துவதோடு முடித்துக் கொள்கிறேன்.

ஏகனே இறைவன்

யோகமன்று ஞானமன்று யூகமன்று மோனமன்று
தேகமன்று நாமமன்று சித்தமன்று சத்தமன்று
போகமன்று சுத்தபரி பூரணத்திற் பூரணமா
ஆகநின்ற யேகமென்ற அத்தனிலை நத்தேமோ
ஆகிர்நபி நாயகமே அத்தனிலை நத்தேமோ.

வானுமில்லை நீருமில்லை வாயுமில்லை தேயுமில்லை
நானுமில்லை நீயுமில்லை நாளுமில்லை கோளுமில்லை
பானுமில்லை மீனுமில்லை பாரமதி யோடுவெளி
தானுமில்லை யேகமென்ற தத்துவத்தை நத்தேமோ
தருமநபி நாயகமே தத்துவத்தை நத்தேமோ.

விண்ணுமில்லை மண்ணுமில்லை மேலுமில்லை கீழுமில்லை
பெண்ணுமில்லை ஆணுமில்லை பேடுமில்லை மூடுமில்லை
தண்ணுமில்லை சூடுமில்லை சார்ந்தகர ணாதிகளின்
கண்ணுமில்லை யேகமென்ற கத்தனிலை நத்தேமோ
கருணைநபி நாயகமே கத்தனிலை நத்தேமோ,

(இந்த மூன்று பாடல்களும் பாவலர் அவர்கள் எழுதிய 'நபிநாயக மான்மிய மஞ்சரி' என்னும் கவிதை நூலில் இருந்து எடுக்கப்பெற்றவை.)

சதாவதானி பாவலர் பாராட்டு

(மகாவித்துவான் ஆறுமுகநாவலர், நாகர்கோவில்.)

கன்னிக் குமரி கடுந்தவம் புரியும் குமரி மாநகரின் மருங்கமர்ந்திலங்கும் கோட்டாற்றிடலாக்குடியெனும் ஊரில் செந்தமிழ்த் தாயின் சீரிய புதல்வராய் செய்குத்தம்பி சிறப்புடன் தோன்றினர். செந்தமிழ் இலக்கிய, இலக்கணக் கடலில் திளைத்துக் களித்து திருவிளையாடினர். மதுரைச் சங்க மாபெரும் புலவராய் மதித்திட அமர்ந்து மாநலம் பெற்றனர். செந்தமிழ் நூற்கள் சிற்சில இயற்றினர். அருந்தமிழ் நூற்கட் குரைவளம் கண்டனர். அவர் தமையடுத்த அந்தமில் தமிழரைச் செந்தமிழ்ப் புலவராய் திகழச் செய்தனர்.

கலைபயில் தெளிவும், கவிபாடும் செவ்வியும் இயற்கையாய்ப் பெற்ற இணையிலா இவரை பாவலரெனவே பாராட்டுவமோ! நாவலரெனவே நவின்றேத்துவமோ! மாமதியோன் என மகிழ்ந்தேத்துவமோ!

அவதானம் பல ஆற்றிப் பேர்பெற்று சதாவதானியாய் செகமெல்லாம் போற்ற பட்டி மண்டபம் பாங்குற ஏறி அவதானத்தால் அருந்தமிழ் வளர்த்தனர்.

திருவிளையாடலில் ஒரு விளையாடலாம் மாமனாய் வந்து வழக்குரைக் காதையில் ஒரு மா புலவர் ஒரு பெரும் வினாவை வினவியே விடையினைக்காண விழைந்தனர்.

அஃது எதுவென அறைகுதும் கேண்மின்:

கணவனை இழந்த கைம்பெண் ஒருத்தி தமயன் ஆதரவால தன்னொருமகனொடு தனிமனை அமர்ந்தாள். மாமன் மருகனைப் புதல்வனென மதித்து தன்னிரு நிதிக்கு தனியுரிமை நல்கி கடுந்தவம் புரியக் கானகம் சென்றனன். சென்றபின் தாயத்தார் அதனையெல்லாம் வௌவிக்கொண்டனர். கவலைக் கடலில் மூழ்கிய காரிகையைத் தேற்ற மதுரை நாயகன் மாதுவனாகி வந்து "தாதுல ராத கோதை தன்னொடுந் தழீஇ" என்ற இடத்து. பெண்ணோ கைம்பெண்; பொன்னோ போயிற்று; மகனோ சிறுவன்; உதவிக்கோ ஒருவர் இல்லை; கவலைக் கடலில் கரை தெரியாமல் கண்ணீர் வடித்துக் கதறும் பெண்ணின் கூந்தலில் (தாது= மகரந்தப்பொடி) புரண்டு இருந்தது எனக் கூறப்படுகிறது. பொருத்தமோ? பொருத்தமெனில் விளக்கம் தருக என்பது வினா.

உரையாசிரியர்களும் "தாது" எனும் சொல்லுக்கு "மகரந்தம்" எனவே உரை கூறிச் சென்றனர் இவ்வினா எழுந்தபோது விடைகாணத் துணிந்தார் நமது வித்தகப் பாவலர். மகரந்தம் பொருந்தாததுதான். தாது என்பதற்கு வேறொரு பொருளும் உளது. அது எதுவெனின் ஒரு முதலின் சினை. ஆதலால் உடைந்து பொடிந்த மண்ணின் சினையாகிய புழுதி புரண்ட கூந்தலையுடையவள். வெப்பத்தால் வடிந்த புழுதி நனைந்து உலர்ந்திலது என பல்லோரும் கேட்க பறையறைந்து முழக்கினர் பாவலர். வினவியர் வெருண்டார். என்னே! இவரது மதிநுட்பம். இவரை மகமதியர் என்பதைவிட மகாமதியர் (பேரறிவில் சிறந்தவர்) என்பதே பொருந்தும் என்றனர். அவையோர் அனைவரும் ஆரவாரித்தனர். இத்தகைப் பற்பல இணையிலாச் செயல்கள் இயற்றித் திகழ்ந்த நம் இன்னிசைச் செந்தமிழ்ப் பாவலர் தோன்றிய இடலாக்குடிக்கா! அவர்தம் இணையிலாக் குடிக்கா! நாஞ்சிலுக்கா! வஞ்சிக்கா! தமிழன்னைக்கா! பரததேவிக்கா! எதற்கு அதற்கு அணிகலனாய் இயங்கினரென இயம்புவது எங்ஙனம்.

கன்னிப் பாரத அன்னை அன்னியர் ஆட்சியால் அவலக்கடலில் ஆழ்ந்து ஆற்றொணாத் துயரில் அழுந்தியகாலை அவள்தன்

சதாவதானம்

(சைவப்புலவர், வித்துவான் சி. குமரேச பிள்ளை)

தமிழன்னையை அணி செய்து வந்த அணிகலன்களில் தனிச் சிறப்புற்ற ஓர் பல் மணிக்கோவை அவதானக் கலை. இன்று ஒளியிழந்து அஃகித்தோன்றும் இவ்வணி அன்று தமிழன்னையை அணி செய்த அணி கலன்களிலே தலை சிறந்ததாக மிளிர்ந்து வந்தது. ஏனைய வளம் பெற்ற நம் நாட்டு மொழிகளிலும் அவதானம் என்ற கலை அண்மைக்காலம் வரை பயிலப்பட்டு போற்றப்பட்டு வந்திருக்கிறது. மேனாட்டினரால் இன்றும் அறியப்படாத இக்கலை நம் பண்டை மக்களின் ஆழ்ந்தகன்ற அறிவுத் திறனுக்கும், நினைவாற்றலுக்கும், உள்ள ஒருமைப்பாட்டிற்கும், அருள் திறத்திற்கும் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

"சிந்தையை அடக்கிச் சும்மா இருக்குந் திறன் அரிது" என்பது ஆன்றோர் கண்ட உண்மை. புலன்கள் வழியாக உலகத்தைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அனுபவித்து வருகின்ற உள்ளத்தை அவ்வழிகளில் செல்லாது அடக்கி உள்ளத்தின் உள்ளாக விளங்கி நிற்கின்ற பரம்பொருள் பால் உள்ளத்தை ஒன்றவைத்து ஏனைய சிந்தனைகள் அறநிற்கின்ற பெருநிலையைத் தான் 'சிந்தையை அடக்கிச் சும்மா இருக்குந் திறன்' என்றனர் அந்நிலையயடைதல அட்டமா சித்தி பெற்றவர்க்கும் அரிதென்று குமரகுருபரர் குறிப்பிடுகின்றார். அப்பெருநிலைக்குரிய ஒருபடி நிலையே அவதான நிலை. குறியீடின்றிச் சென்றுகொண்டிருக்கும் சிந்தையைத் தடுத்துத் தன்பால் நிறுத்தித் தான் விரும்புகின்ற துறைகளில் செலுத்துதல் என்பது அவதானத்தின் அடிநிலை. அறிவுக் கதிரொளியில் உடலுறுப்புக்கள், பொறிபுலன்கள், மனம் ஆகியவை தனித்தனித் துறையில் நின்று பணியாற்றுதல் அவதானம். கால் நடக்க, கையொன்று செய்ய நாவொன்று நவில, கண் அவையைப் பார்க்க, காது ஒலியைக் கேட்க, மெய் உணர, மனம் இத்தனையும் இயக்கி வருகின்ற இடையிலேயே செவிமடுத்த பல் வேறு வினாக்களையெல்லாம் சிந்தனையில் கோத்து ஏற்ற விடையை உருப்படுத்தி வினாவாளர்க்கு முறைப்படி பகர்ந்து வருதல் என்பது அவதானக கலைநிகழ்ச்சி

நினைவு ஆற்றலைப் பெற்று, புலனை அடக்கி அவதானம் செய்யும் அறிஞர் பல துறைகளில் நுணுகிய புலமை உடையவராயிருத்தல் வேண்டும். இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்தகன்ற ஞானம் வேண்டும். கணிதம் சோதிடம் போன்ற கலைகளிலும் நுணுகிய அறிவு பெற்றிருத்தல் வேண்டும் கொடுக்கப்பட்ட ஆசுக்குச் செய்யுளியற்றல் என்பது அவதானத்தின் முக்கிய நிகழ்ச்சி. அவதானிகள் இவ்வகையில் திறமைபெற்

சதாவதானி பாவலர் பாராட்டு (தொடர்ச்சி)

சேயென, அருமைத் தம்பியென தேசப் பணியாற்ற வந்த இவருக்கு சேய்குதம்பி எனும் பெயர் சிறந்த பொருத்தமுடைய தன்றோ!

மலையே வீழினும் நிலைகலங்கா வன்மையும், அஞ்சா நெஞ்சமும், கேளாரும் வேட்ப ஆற்றும் செந்தமிழ்ச் சொன்மாரியும் கண்ணைவிட்டும், கருத்தை விட்டும் அகலாது கலங்கரை விளக்கென இலங்கி நிற்கின்றது.

இத்தகைப் பெரியார் நந்தமைப் பிரிந்தனரெனினும் அவர் ஆற்றிய அந்தமில் பெருந்தொண்டுகள் நம் நெஞ்சைவிட்டகலவில்லை. அவரை நாம் பாராட்டுவது தமிழ் நிலத்தை, தமிழ் மொழியை, தமிழ்க் கலையை, தமிழ்ப் பண்பை பாராட்டுவதாகும்.

வாழ்க பாவலர் பணி; வளர்க செந்தமிழ் மொழி!

றுள்ள துறைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவதானத்தின் பெருமை உயரும். எட்டு, பத்து, பதினறு, முப்பத்தி மூன்று, நூறு வகையான அவதானக் கலைகளிலும் தமது நுண் மாண் நுழை புலனைச் செலுத்தி அவ் வக்கலை விற்பன்னர்கள் அவை பற்றி வின வும் வினக்களுக்கு ஒருங்கே விடை பகரும் திறமையை முறையே அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம். துவதி ரீம் தசாவதானம், சதாவதானம் என்னும் பெயர்களால் அழைப்பது வழக்கம்.

நம் பண்டைப் பெருமக்கள் இவ்வவ தானக் கலையை அருட்கலையாகவே போற்றி வந்தனர். குமரகுருபரர் கந்தர் கலிவெண் பாவில் முருகப்பெருமானை வேண்டும்போது அட்டாவாதானமும் தமக்குச் சித்திக்கவேண் டுமென்று வேண்டுவதிலிருந்துஅக்கலையின் அருமை பெருமை தெரியவரும். அட்டாவ தானத்தின் பெருமை இத்தன்மைத்து என் னல் சதாவதானத்தைப்பற்றி யாது கூற வேண்டும்? சதாவதானம் இயற்றிய புலவ ரின் பெருமைக்கு அளவுகோல் எங்கே தேடு வது? தமிழ் வரலாற்றிலே கவி பாடிய புலவர் பலருண்டு; காவியம் புனைந்தவரும் பல ருண்டு; சதாவதானம் இயற்றி சதாவதானி எனப் புகழப்பட்டவர் ஒருசிலரே. அவருள் தலைசிறந்தவர் அல்லாமா, மகாமதி, தேவா மிர்தப் பிரசங்கக்களஞ்சியம், சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள்.

பாவலர் அவர்கள் தமது முப்பத்தோரா வது வயதில் சென்னை விக்டோரியா மண்ட பத்தில் அறிஞர் பெருமக்கள் முன்னிலையில் அரிய சதாவதானக்கலையை நிகழ்த்திக்காட் டினர்கள். அவர்கள் சதாவதானத்திற்காக எடுத்துக்கொண்ட பொருள் தொகையால் இருபத்தி ஐந்தும் வகையால் நூறுமாகும்.

அவை யாவன:—

1. **இறைநாம உச்சரிப்பு:**— அவதானத் தொடக்க முதல் முடிவு வரை வினக்களுக்கு விடையிறுக்கும் காலம் நீங்கலாக இறை நாமத்தை நவின்றுகொண்டிருத்தல்.

2. **கைப்பணி:-** கையால் இலாடச் சங் கிலியைக் கழற்றவும் பூட்டவும் செய்து கொண்டிருத்தல்.

3. **தலைவரோடு உரையாடல்:-** அவதா னம் நிகழ்ந்துகொண்டிருக்கும் காலத்தி லேயே தலைவரோடு ஏதேனும் ஒரு பொருள் பற்றித் தொடர்பாக உரையாடிக்கொண்டி ருத்தல்.

4. **கவிபாடல்:-** கேள்வியாளர் விரும் பும் யாப்பும் பொருளும் அமைய அவர் கொடுக்கும் ஆசுக்குக கவி பாடுதல்.

5. **இலக்கியம்:-** தமிழ் இலக்கிய நூற் களிலிருந்து வினவப்படும் வினக்களுக்கு விடையிறுத்தல்.

6. **இலக்கணம்:-** வினவப்படும் இலக் கண வினவிற்கு விடை பகர்தல்.

7. **வெண்பாவை இருகால் கேட்டுக் கூறுதல்:-** அவையோர் கூறும் புதிய வெண்பாவை இருமுறைக் கேட்டுத் திரும் பச் சொல்லுதல்.

8. **கண்டப் பத்திரிகை:-** ஏதேனும் ஒரு பாடலில் அடங்கியுள்ள எழுத்துக்களை இலக்கமிட்டு வெட்டி ஒரு பாத்திரத்திலிட்டு குலுக்கி வைத்துக்கொண்டு அவதானி தன் முன் வரும்போது ஒரு துண்டை எடுத்து அஃது இத்தனவது எழுத்து இன்னது என்று கூறுதல் வேண்டும். இவ்வாறு அவதான நிகழ்ச்சியில் கொடுத்துவரும் எழுத்துக்களை உள்ளத்தில் வாங்கிப் பதித் துக்கொண்டு முடிவில் பாடலைக் கூறுதல.

9. **சுவைப் புலனறிவு:-** அவதானி அவதானம் செய்துவருங்கால் பல நீர்நிலை களிலுள்ள நீரைக் கொடுத்துச் சுவை பார்க்கச் செய்து அவை இன்ன நீர்நிலைக ளிலிருந்து எடுக்கப்பட்டன எனக் கூறிவிடு தல். பிறகு ஏதேனும் ஒரு நீர்நிலையிலுள்ள நீரைக் கொடுக்க அவதானி சுவைத்துப் பார்த்து இது இன்ன நீர்நிலையிலுள்ளது எனக் கூறுதல்.

10. **ஒலி மாறுபாடுணர்தல்:-** வேறு பட்ட நிறையுடைய பாத்திரங்களை ஒவ் வொன்றுகத் தட்டி ஒலி எழுப்பி அவற்றின் நிறைகளையும் அவதானியிடம் கூறிவிடுதல். பின் ஏதேனும் ஒன்றினை அடித்து ஒலியெ

ழுப்ப அவ்வொலியின்மூலம் அதன் நிறையை அறிந்து கூறல்.

11. **ஒலி எண்ணம்:-** அவதானம் நிகழுங்கால் பின்னால் ஒருவர் அழைப்பு மணியை இடையிடையே அடித்துக்கொண்டிருப்பார். அவர் வினவுங்கால் எத்தனை முறை அடிக்கப்பட்டது என அவதானி கூறுதல்.

12. **நெல்லெறிதல்:-** அவதானம் நிகழுங்கால் ஒருவர் அவதானியின் முகத்தில் நெல்லெறிந்துகொண்டிருப்பார். அவதான முடிவில் எத்தனை எறியப்பட்டன என அவதானி கூறுதல்.

13. **கல்லெறிதல்:-** நெல்லெறிந்தது போல் கல்லெறிய முடிவில் எண்ணிக்கை கூறுதல்.

14. **கண்டத்தொகை:-** வினவாளர் கூறும் தொகையை பதினாறு அறை கொண்ட சதுர வீட்டில், ஒரு அறையில் வந்த எண் மறு அறையில் வராதவண்ணம் எப்பக்கமாகக் கூட்டினாலும் கேள்வியாளர் விடுத்த தொகை வருமாறு, ஒவ்வொரு அறைக்காக எண் சொல்லி அமைத்தல்.

15. **நூறு சொல்லுதல்:-** அவையிலுள்ள ஒருவரும் அவதானியும் ஒன்றுமுதல் பத்திற்கு மேற்படாத எண்ணை மாறிமாறிக் கூட்டிவரும்போது அவதானி நூறு தான் சொல்லும்படியாக எண்களைக் கூறிவந்து முடிவில் நூறு சொல்லுதல்.

16. **தொகை கூறல்:-** பெரிய எண்களின் கூட்டுத்தொகை, பெருக்குத்தொகைகளை உடன் கூறல்.

17. **நினைத்த எண்கூறல்:-** ஒரு எண்ணை நினைத்துக்கொள்ளக் கூறி பின் அதனோடு சில எண்களைக் கூட்டியும் குறைத்தும் வரச் சொல்லி விடையை வினவி முன் நினைத்த எண்ணைக் கூறல்.

18. **கிழமை கூறுதல்:-** ஆயிரம் ஆண்டுகளுக்குட்பட்ட ஆண்டு, திங்கள், நாளை அவையோர் கூற அந்நாளுக்குரிய கிழமையை அவதானி கூறல்

19. **உடுநாள் கூறல்:** முன்போல் ஆண்டு, திங்கள், நாள் கூற அந்நாளுக்குரிய உடு (நட்சத்திரம்) கூறல்.

20. **நாள் கூறல்:-** ஆண்டு, திங்கள், கிழமை கூற அத் திங்களில் அக்கிழமை வருகின்ற நாட்களைக் கூறுதல்.

21. **திங்கள் கூறல்:-** ஒருவர் பிறந்த ஆண்டும், நாளும், கிழமையும் கூற பிறந்த திங்கள் கூறுதல்.

22. **வயது கூறல்:-** பிறந்த திங்களும் நாளும் கிழமையும் கூற வயது கூறுதல்.

23. **ஆண்டு கூறல்:-** பிறந்த திங்களும் நாளும் கிழமையும் கூற பிறந்த ஆண்டின் பெயர் கூறுதலும்; இறந்த திங்களும் நாளும் கிழமையும் கூற இறந்த ஆண்டு கூறலும்.

24. **சீட்டாடல்:-** குறிப்பிட்ட ஒரு சீட்டாட்டத்திற்கு அதற்குரியவர் சீட்டுடன் ஒரு புறம் இருப்பர். அவதானியின் ஆளாக ஆடத்தெரியாத ஒருவர் இருப்பார். சீட்டுக் கொடுக்கப்பட்டதும் அவதானி தன் ஆளிடம் இருக்கும் சீட்டை ஒரு முறை பார்ப்பார். பின் ஆட்டம் தொடங்கப்படும். அவதானம் நிகழ்ந்துகொண்டிருக்கும் காலத்திலேயே தான் சீட்டு இறக்கவேண்டிய இடம் வந்ததும் தன் ஆளிடம், தன் சீட்டைப் பார்க்காமலேயே சீட்டைக் குறிப்பிட்டு இறக்கும்படியாகக் கூறல். ஆட்டம் பிழைபடாது நடத்தல் வேண்டும்.

25. **பதினைந்து நாயும் புலியும் விளையாடல்:-** மூன்று புலிகளை பதினைந்து நாய்கள் கூடி தடைபடுத்துவதாக, காய்களைக் கொண்டு இருவர் விளையாடும் இந்த ஆட்டத்தில் அவதானியின் ஆளாக ஒருவர் இருப்பார். அவதானம் நிகழ்ந்துவரும் காலையிலேயே தமது ஆளிடம் நகர்த்தவேண்டிய காய்களைக் கூறிவருதல்.

இவ்வாறு தொகையால் வகுக்கப்பட்ட இவ்விருபத்தி ஐந்தில், இறைநாம உச்சரிப்பு, கைப்பணி, தலைவரோடு உரையாடல், சீட்டாடல், பதினைந்து நாயும் புலியும் விளையாடல் நீங்கலாக ஏனையவை ஒவ்வொன்றிலும் பலவகைகள் சேர்க்கப்பட்டு அவதானக் கலைப் பொருள் நூறாகக் கொள்ளப்பட்டது.

பிரபவ ஆண்டு மாசித் திங்கள் 27-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (1907 மார்ச்சு-10)

சென்னை 'விக்டோரியா மண்டபம் அறிஞர் பெருமக்களால் பொலிவுற்று விளங்கியது. காஞ்சி, மகாவித்துவான், இராமசாமி நாயுடு, தஞ்சாவூர், சதாவதானி சுப்பிரமணிய ஐயர்; பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திருவேங்கடசாமி நாயுடு; புலவர் கா. நமசிவாய முதலியார்; இந்து, சுதேச மித்திரன் ஆகிய் செய்தித்தாள்களின் ஆசிரியரான ஜி. சுப்பிரமணிய ஐயர்; திரு. வி. கலியாணசுந்தர முதலியார்; அக்காலையில் சட்டக் கல்லூரி மாணவராயிருந்த டி. கே சிதம்பரநாத முதலியார் ஆகிய தமிழறிஞர்கள் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழறியாத வெள்ளை நீதிபதி ஒருவரும் அவ்விந்தையைக் காண அங்கு வந்திருந்தார். அப்பேரவைக்கு வித்துவான் கணபிரான் முதலியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். வினவாளர் இருபுறமும் அணிசெய்து அமர்ந்திருந்தனர். கலை விழாவைக் கண்டும் கேட்டும் உணர்ந்தும் இன்புறக் குழுமியிருந்த பெருமக்கள் எண்ணிலர்.

பாவலர் அவர்கள் தூய வெள்ளாடை அணிந்து அவையோர் முன் காட்சியளித்தார். அவதானச் சிறப்பையும் பொருளையும் விளக்கிவிட்டு அவதானத்திற்கு ஆயத்தமானார். "**மெஞ்ஞான நாதா; மெஞ்ஞான நாதா**" எனும் சிலேடைப் பொருள் கொண்ட சொற்றொடரை நாநவில, கை இலாடச் சங்கிலியில் பணியாற்ற அவைமுன் உலவி வருவாராயினர். அப்பொழுது ஜி சுப்பிரமணிய ஐயர் அவர்கள் எழுந்திருந்து சிலேடையாக கடவுள் வணக்கச் செய்யுளொன்றைப் பாட வேண்டினர். அக்கணமே பாவலர் அவர்கள்:

"சிரமா றுடையான் செழுமா வடியைத்
திரமா நினைவார் சிரமே பணிவார்
பரமா தரவா பருகா ருருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்"

எனும் பாடலைப் பாடி,

சிரம் ஆறுடையான்: சிரத்தில் கங்கையாற்றை யுடைய சிவபெருமான்
சிரம் மாறு உடையான்: இயல்பிற்கு மாறுபட்ட சிரத்தையுடைய கணபதி
சிரம் ஆறு உடையான்: ஆறு தலைகளையுடைய முருகன்.
சிரம் ஆறு உடையான்: காவிரியாற்றின நடுவில் சிரம் வைத்துள்ள திருமால்

சிரம் ஆறு உடையான்: தலையாய நல்வழிகளை உலகிற்குக் காட்டும் அல்லாஹ்

என அத்தொடருக்கு அமைந்த ஐம்பொருள்களையும், பிறிமொழிச் செம்மொழி சிலேடைகளால் விளக்கி; 'ஐம்பொருளாயும் விளங்குகின்ற இறைவனது திருவடியை மறவாது மனக்கோயிலினுள் இருத்தித் தலைதாழ்ந்து வணங்கிப் பிற பெண்கள் மீது இச்சை வையாது இறைவனையே எண்ணி உருகுகின்றவர்கள் பெருந்தவத்தினராய் விளங்கிச் சிறப்புறுவர் என விளக்கவும் அவையோர் அவரது பொது நோககையும் ஒழுக்கத்தில் கொண்டிருந்த உறுதிப்பாட்டினையும் எண்ணிக் குதூகலித்தனர்.

ஏனைய வினவாளரும் தத்தமருகில் அவதானியார் வரும்போது தாம் ஆயத்தப் படுத்தியிருந்த வினாக்களை விடுப்பாராயினர். கண்டப் பத்திரிகையாளர் எழுத்துக்களைக் கொடுக்கத் தொடங்கினர். அதனை வாங்கிக் கொண்ட அளவிலேயே அடுத்தவர் **'விராடனையே பெண் எனலாமே'** என்பதனை ஈற்றடியாக வைதது வெண்பா ஒன்று பாடும்படியாக வேண்டினர். இதனைக்கேட்ட அவையோர் முகங்களில் வியப்புக்குறி எழுந்தது. விராடன் என்ற ஆண்மகனை எவ்வாறு பெண் எனக் கூறலாம் என வியந்தனர். அவ்வினவைச் செவிமடுத்தவாறே பாவலர் அடுத்தவர் அண்மையில் சென்றார். அவர் **'மாமனுக்குக் கந்தன் மகன்'** என்ற ஈற்றடிக்கு வெண்பா ஒன்று வேண்டினர். மறுகணமே மற்றொரு புலவர் எழுந்திருந்து **"கண் கெட்டபின் என்றும் காணாத காட்சியைக் கண்டனரே"** என்பதனை ஈற்றடியாக வைத்துக் கட்டளைக் கலித்துறை ஒன்று பாடும்படியாக வேண்டினர். இதனைக் கேட்ட அவையோர் கண்ணுள்ளபோது தானே காட்சியைக் காணமுடியும்; கண் கெட்டபின் எவ்வாறு காட்சியைக் காணமுடியும் என வியந்தனர். இவ்வினாக்களைச் சிந்தித்தவாறே இறை நாம உச்சரிப்புடன் உலவி வருங்கால் இலக்கிய வினவாளர் ஒருவர் எழுந்து பரஞ்சோதி திருவிளையாடலில்

மாமனுக வந்து வழக்குரைத்த படலத்தி லுள்ள

'மாதுல ராகி வந்தோர் மருகனைத் தம்பின் வந்த
தாதுல ராத கோதை தன்னொடுக் கழிஇத கண்ட
மீதுல ராத சாம வேதமார்ப் பவர்போல் வாய்விட
டாதுல ரானீ ரந்தோ வையவென் றழுது நைந்தார்"

எனும் பாடலுக்குப் பொருள் வினவினர்.

பாவலர் அவர்கள் அப்பாடலின் பொருளை விளக்கினர் ஆனால் வினவாளர் மீண்டும் அவரை நோக்கித் '**தாதுல ராத கோதை**' எனும் தொடரை விடுத்தார். அதனைச் செவியில் வாங்கியவாறே அப்பால் நகர்ந்தார் அவதானி. கண்டப் பத்திரிகையாளர் எழுத்தினைக் கொடுத்தார். கல்லெறிப வரும் நெல்லெறிபவரும் தத்தம் பணியை யாற்றினர். மேடையின் பின்புறம் இருந்த ஒருவர் அழைப்பு மணி ஒலியை எழுப்பினர். பல்வேறு நிறையுடைய பாத்திரங்களில ஒலியை எழுப்பி அவை ஒவ்வொன்றின நிறையையும் கூறினர் ஒருசார். பல நிறநிலை களிலுள்ள நீர் சுவைத்துப் பார்க்கக் கொடுக்கப்பட்டு அவற்றிற்குரிய நீர்நிலை களின் பெயரும் கூறினர் இன்னொரு சார். இவற்றை யெல்லாம் உள்ளத்தில் வாங்கிப் பதித்துக்கொண்டே வந்தார். சீட்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தமது சீட்டைக் கவனித்துக்கொண்டார். கண்டத் தொகையாளர் தம் வினவை விடுத்தார். அறை அமைத்து வரிசை எண் இட்டுக் கொள்ளும்படியாகக் கூறிவிட்டு அப்பால நகர்ந்தார். ஈற்றடி மூரீப்புக் கொடுத்தவர் அருகில் வந்தார். அவரவர் செய்யுட்களுக் குரிய சீர்களில் ஒவ்வொன்று கூறிக் கொண்டே 'தாதுல ராத கோதை' வினவிய வரை அடைந்தார். அவர் மீண்டும் அவ் வினவை விடுத்தார். பாவலர் அவரை நோக்கி தாதுலராத கோதை என்பதற்கு மகரந்தப் பொடி நீங்காத கூந்தலுடையாள் என்பது யான் கூறிய பொருள். அப்பெண் விதவையாதலின் அப்பொருள் பொருந்தா தென்பது உங்கள் கருத்து. அவள் அண்மையிலேயே விதவை ஆயினள் என்பதைக் காட்ட அவ்வாறு கூறினர். மேலும் கைம்மை நோன்பு கொண்டார் தரையிலே பாயின்றிப் படுத்தல் வழக்கம். அப்பெண் கைம்மை நோன்பை மேற்கொண்டவளாத லின் கூந்தல் புழுதி நீங்காதிருந்தது என் பதைக் காட்ட 'புழுதி' என்னும் பொருள் பட தாது எனும் சொல்லை அமைத்தார் எனி னும் அமையும். அன்றியும் தாயத்தார் அவ னைத் தரையில் தள்ளி அடித்தார் என முன் பாடலில் குறிப்பிடப்படுவதால், அத ஞல் படிந்த புழுதி நீங்காத கூந்தலுடை யாள் எனக் கூறுதலும் பொருந்தும், எனப் பொருளுரைத்தார். வினவாளர் அதற்கு மேல் வாய்திறக்கவில்லை. இலக்கிய வினக் கள் மேலும் சில வினவப்பட்டன. தகுந்த விடையளித்தார் பாவலர்.

இலக்கண வினக்கள் ஐந்து வினவப் பட்டன. அவற்றுள் ஒன்று, 'தொடக்கப்பள் ளிகளில் எழுத்துக்களைப் படிப்பிக்கும்போது, அ னு; ஆ வனு; க னு; கா வனு, எனப் படிப் பிப்பது இலக்கணத்திற்குப் பொருந்துமா?' என்பது. அதற்குப் பாவலர் அவர்கள்:-

'மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்
ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாம சாரியை பெறும்பிற"

என்னும் நன்னூல் சூத்திரத்தின்படி எழுத் துக்கள் அ**கரம்**, அஃ**கான்**, அ**காரம்,** ஆ **காரம்**, எனச் சாரியைகள் பெறுவதோடு கூட, பிற என்ற மிகையினுல் அனு, ஆ **வனு** எனச் சாரியைகள் பெற்று வருவதும் இலக் கணத்திற்குப் பொருந்துமென்ருர்.

பிற அவதான நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடந்து வந்தன. அவையிலி ருந்த ஒருவரும் அவதானியும் ஒன்று முதல் பத்திற்கு மேற்படாத தொகையை ஒருவர் பின் ஒருவராக அவதான நிகழ்ச்சிகளினி டையே கூட்டி வந்தனர் இறுதியில் அவ தானி நூறு எனக் கூறி முடித்தார். ஆயிரம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட ஆண்டு, திங்கள், நாள் கூறி கிழமைகள் ஐந்து கேட்கப்பட் டன. 1905-ஆம் ஆண்டு டிஸம்பர் திங்கள் 9-ம் நாள் என்ன கிழமை என்று கேட்டவ ருக்குச் சனிக்கிழமை என்ருர். வினவியவர் இல்லை என்ருர். அவதானி மீண்டும் சனிக் கிழமை என்ருர். வினவாளர் இல்லையென மறுக்கவே கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட் டது. அப்பொழுது கூட்டத்திலிருந்த ஒரு

வர் தம்மிடமிருந்த நாட் குறிப்பைப் புரட்டிப் பார்த்துச் சனிக்கிழமையாகவே இருக்கக் கண்டு தெரிவித்தார். வினவியவரும் தம் தவறுணர்ந்து தாம் 1805–ஆம் ஆண்டு என எண்ணி வினவியதாகத் தெரிவித்து மன்னிப்பு வேண்டினர். உடுநாள், பிறந்த மாதம், வயது கூறுதல் ஆகியவை பற்றியும் ஐந்து வீதம் வினக்கள் எழுந்தன. பெருந்தொகைகளுக்குக் கூட்டுத்தொகை, பெருக்குத்தொகை வினவியவர் ஐவர். கேட்டவுடனேயே இவைகளுக்கு விடைகள் அளிக்கப்பட்டன. நினைத்த எண்ணைக் கூறுதல் ஐந்து தடவை நிகழ்ந்தது.

அறிஞர் பதின்மர் தாம் இயற்றி வைத்திருந்த வெண்பாக்களை அடுத்தடுத்துக் கூற, ஒருகாற் கூறிய அளவிலேயே அதனை நெஞ்சிற் பதித்துக்கொண்டு, அவதான நிகழ்ச்சிகளிடையே ஒவ்வொருவரிடமும் அவர்கள் கூறிய வெண்பாக்களைக் கூறினர். இவ்வாறு கூறப்பட்ட வெண்பாக்கள் நூற்றைம்பது. இடையிடையே எறியப்பட்ட கல், நெல் இவற்றை எண்ணிக்கொண்டே வந்து அவர்கள் வினவியபோது எண்ணிக்கையைக் கூறினர். இவ்வாறு ஐந்து தடவை வினவப்பட்டன. மேடைக்குப் பின்னல் அழைப்புமணியை எழுப்பிக்கொண்டிருந்தவர் ஐந்து தடவைகள் வந்து அதுவரை அடிக்கப்பட்ட எண்ணிக்கையைக் கேட்க அவதானி கூறினர். நால்வகைப் பாத்திரங்களை ஓசைபட முழக்கினர்; நிறையறிந்து கூறினர். முன்னல் சுவைத்துப் பார்த்த வெவ்வேறு நீர் நிலைகளிலுள்ள நீரை ஒவ்வொன்ருக நான்கு தடவைகள் கொண்டு கொடுக்க சுவைத்துப் பார்த்து இன்ன நீர் நிலையிலுள்ளது என்ருர். கண்டத் தொகையாளருக்கு ஒவ்வொரு சுற்றிலும் ஒவ்வொரு எண்ணைக் கூறிக்கொண்டே வந்து முடித்தார். இவ்வாறு முடிவுற்ற கண்டத்தொகைகள் ஐந்து. சீட்டாட்டமும் வெற்றிதர முடிந்தது. அவதானத் தொடக்கத்தில் தலைவரோடு தொடங்கப்பெற்ற உரையாடல் அவதான நிகழ்ச்சிகளினிடையே தொடர்பாக நிகழ்ந்து முடிவுற்றது கண்டப் பத்திரிகையாளர் ஐவர் தொடக்கம் முதல் எழுத்துக்களைக் கொடுத்துக்கொண்டே வந்தனர். இப்பொழுது ஐவருக்கும் ஒருசேர விடையளித்தார் அவதானி. பதினைந்து நாயும் புலியும் விளையாடல், கிழமைக்கு நாள் வினவுதல் இவற்றிற்கு வினவாளர் அமையவில்லை.

ஈற்றடி மூரீப்புக் கொடுத்தவர்களுக்குச் சீர்களைக் கொடுத்துவந்த அவதானிக்கு பாடலை முடித்துக்கூறும் சமயம் வந்தது. 'விராடனையே பெண்ணெனலா மே' என வெண்பா ஈற்றடி கொடுத்தவரை நோக்கி:-

'உண்ணும் பொழுதும் உறங்கும பொழுது
மொன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்னய் - மண்ணில்
வாாடவனை யேதெய்வ மன்னெனும் சொற்ற
விராடனையே பெண்ணெனலா மே'

எனும் வெண்பாவைக் கூறி; உண்ணும்பொழுதும் உறங்கும்பொழுதும் ஒன்றை எண்ணுமபொழுதும், அக்கினிச் சான்ருய்த் தன்னைக் கைப்பிடித்த ஆடவனையே தெய்வமாகக் கொண்டு அவனுடைய சொல் தவிராதவளையே பெண் என்று கூறலாம்' என்று பொருளும் கூறினர். இப்பாடலில் ஈற்றடி 'விராடனையே பெண்ணெனலா மே' என்றிருப்பினும் முன்னடியின் ஈற்றுச் சீராகிய 'சொற்ற' என்பதனேடு சேரும்போது 'சொல் தவிராள் தனையே' எனப் பொருள் தரும் அருமைப்பாடு அறிந்து இன்புறத்தக்கது.

'மாமனுக்குக் கந்தன்மகன்' என்னும் ஈற்றடியைக் கொடுத்தவர் முன்வந்தார்; பாடலை விடுத்தார்.

'அண்டர் முறையால் அலைகடலில் பள்ளிகொண்ட
கொண்டல வண்ணமேனிக் குரிசிலாம் - விண்டு
பெற்ற
காமனுக்கு முற்றும் கருதும் படியமைந்த
மாமனுக்குக் கந்தன் மகன்' .. . . . என்ருர்.

திருமாலின் மகனுகிய மன்மதனுக்கு முறைமையால் மாமனை சிவபெருமானுக்குக் கந்தன் மகன் எனக் கூறி 'மாமனுக்குக் கந்தன் மகன்' என்ற சிக்கலை அறுத்தெறிந்த அற்புதத்தை எண்ணி வியந்தனர் அனைவரும்.

கட்டளைக் கலித்துறை வினவியவர் அருகே வந்தார். எஞ்சிய சீர்களைக் கொடுத்தார். பின் பாடலின் முழு உருவமும் கொடுக்கலானர்.

'விண்தொட் டசையும் தருமலி கானில் மிகு
திண்ணனார்
பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் போற்றும்
பரமன்விழி
புண்பட்ட தென்றுதம் கண்ணைப் பெயர்த்துப்
பொருத்தியிரு
கண்கெட்ட பின்னென்றுங் காணாத காட்சியைக்
கண்டனரே'....என்றார்.

சிவபெருமான் இடக்கண் புண்பட்டு விட்டதென்று எண்ணி, ஊனுக்கு ஊன் மருந்து எனும் உண்மையை நினைத்தவராய்த் தம் இடக் கண்ணைக் கையம்பால் பெயர்த்தெடுத்துப் பொருத்த; மேலும் வலக் கண்ணில் குருதி பாய, அதனைத் தடுக்க தன் வலக்கண்ணையும் தோண்ட முனைந்து இரு கண்ணும் புறக் காட்சியற நின்ற நிலையிலே இறைவன் காட்சி கொடுக்க, அக் காட்சியைக் கண்டுகளித்த கண்ணப்பரின் பெருநிலையைப் புலப்படுத்திய அவதானியாரின் மதிநுட்பத்தைச் சிந்தித்த யாவரும் வியப்புக்கடலில் ஆழ்ந்தனர்.

அவதானம் வெற்றி முழக்கோடு முடிந்தது. பொதுமக்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர். பூமாலை புனைந்து புகழ்ந்தேத்தினர் பலர். பொன்னாடை போர்த்திப் போற்றினர் பலர். அவதான நிகழ்ச்சிகளுக்குக் குக் காரணராயிருந்த **இட்டா பார்த்தசாரதி நாயுடு** அவர்கள் இன்பக் கடலில் மூழ்கிக் கரையேற முடியாமல் தத்தளித்தவராய்ப் பாவலரின் இரு கரங்களையும் பிடித்துத் தங்கத் தோடாக்களிட்டுக் கரையேறினர். சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 'மகா மதியர்' எனப் புகழ்ந்து '**மகாமதி**' எனப் பட்டம் வழங்கினர். தலைவர் பாராட்டுரை பகர்ந்து '**சதாவதானி**' எனும் பட்டம் வழங்க 'மகாமதி, சதாவதானி செய்குதம்பிப் பாவலர் வாழ்க' என அவை வாழ்த்தியது. அங்கு வந்திருந்த வெள்ளையராகிய நீதிபதி அடைந்த வியப்பிற்கோர் அளவில்லை. ஒரே பொழுதில் இரு எண்ணங்கள் தங்கா என் றல்லவா உளநூற்கள் கூறுகின்றன. இவரோ ஒரே பொழுதில் நூறு எண்ணங்களைச் சிந்தையிலடக்கிச் செயலாற்றி விட்டாரே என இறும்பூதெய்தினர். புலவர் பெருமக்கள் காற்று வருட காளமேகம் பொழிந்தாலெனக் கவிகளைப் பொழிந்தனர். அக்கவியமுதனைத்தும் 'சதாவதானச் சிறப்பு' எனும் சிறு நூலாக வெளிவந்துள்ளது. காஞ்சிபுரம் மகாவித்துவான் இராமசாமி நாயுடு அவர்கள்,

'சீராரு நங்கள்செய் குத்தம்பிப் பாவல
ரின்றுசெய்த
ஏராரி ரைம்பா னவதாந கோன்மை
யிசைத்திடற்கண்
டாரா ரறிஞர், புகழும் அநந்தன்,
அரிபவன்பாற்
பேரார் இலக்கணங் கற்றோன், இவனன்றிப்
பேசிடினே'

என்று பாராட்டினர்.

ஆதிசேடனும், இந்திரனிடம் ஐந்திர வியாகரணம் கற்ற தொல்காப்பியனுமல்லாது, அவதானப் பெருமை பேசுதற்கு அறிஞர் யாருளர் என்றார். அவ்வவதானத்திற்குப்பிறகு சதாவதானம் செய்ய முன்வந்த அறிஞர்களும் யாருளர்? பாவலர் அவர்களுக் குப்பின் அவர்களது மாணவர்களில் ஒருவராகிய சுசீந்திரம், தசாவதானி பெ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் தமிழகத்தில் பல இடங்களிலும் தசாவதானம் இயற்றிப் புகழ் பெற்றார். இப்பெருமக்கள் அருள் நோக்கால் அவதானக்கலை தமிழகத்தில் மேலும் தழைத்தோங்குவதாக.

★

முடியாட்சி யென்றுமுழு மோசநிலைக் காளாக்குந்
தடியாட்சி நீத்தொறுத்து சர்வசன நாயகமாங்
குடியாட்சி கொள்ளவடி கோலிமுதன் மாதிரியாப்
படியாட்சி செய்தவுங்கள் பாரமதி யென்னேயோ
பான்மைநபி நாயகமே பாரமதி யென்னேயோ.

மக்களிடை தாழ்வுயர்வு வன்மைமென்மை நீண்டாமை
மிக்ககுல பேதமுதல் வேற்றுமையெ லாமொறுத்துத்
தக்கசம தத்துவமாந் தண்ணிழற்கீ ழாக்கியென்றும்
தொக்கவருள் கூர்ந்துவந்த துய்யநிலை பொய்யேயோ
சோதிநபி நாயகமே துய்யநிலை பொய்யேயோ.

(பாவலர் அவர்களின் 'நபி நாயக மான்மிய மஞ்சரி' யிலிருந்து)

பாவலர் பஞ்சகம்

(வித்துவான் சு. உமைதாணு பிள்ளை)

1. தாலமெல்லாம் போற்ற
சதாவதானஞ் செய்திந்த
ஞாலமிசை நன்குயர்ந்த
நாவலனை — ஜாலமிகு
சித்தங் குடிகொண்ட
செய்குதம்பிச் சீமானை
நித்தமும் நெஞ்சே நினை.

2. ஓதும் அவதானம்
ஒருநூறுஞ் செய்திந்த
மேதினியில் மீக்குயர்ந்த
வித்தகனை — கோதிலா
செய்ய தமிழ்த்தொண்டன்
செய்குதம்பிப் பாவலனை
வையமிசை நாவேநீ வாழ்த்து

3. பக்திச் சுவைசொட்டும்
பாவாம் அருட்பாவைச்
சொக்கப் புகழ்மணக்கச்
சொல்லியவன் — திக்கெல்லாம்
தேடுகின்ற சீருடையான்
செய்குதம்பிச் செல்வனைப்
பாடுகவே என்நா பணிந்து

4. தீண்டாமை போக்கத்
திருச்சுசிந்தை வீதியிலே
நீண்டமறிச் சான்தாண்ட
நின்றவன்காண் — பூண்டபுகழ்
பாவலன் செய்குதம்பிப்
பண்டிதன் பேரோங்கி
பூவுலகில் வாழ்க பொலிந்து.

5. நாஞ்சிநாட்டுச் சிங்கமாய்
நாடறியக் காங்கிரசை
வாஞ்சையுடன் போற்றிய
வள்ளல்காண் — தீஞ்சொலன்
தன்னேரில் செய்குதம்பித்
தண்டமி ழாசான்றன்
நன்னாமம் வாழியவே நன்கு.

தந்தி: KIRKARI. தபால்பெட்டி எண்: 1965. தொலைபேசி: 23829.

குறைந்த விலையில்

உங்களுக்குத் தேவையான

★

பைப், பைப் பிட்டிங்ஸ், கை பம்புகள்

மின்சார மோட்டார்கள்

★

முதலியவைகளுக்கு எங்களை அணுகுங்கள்.

★

காமர்ஸ் யூனிவர்ஸல்

54, லிங்கிச் செட்டித் தெரு

சென்னை-1

உ

"உங்கள் திருப்தியே எங்கள் லட்சியம்"

சி. சரவண ஆச்சாரி

தங்கம், பவுன், நகை வியாபாரம்,

கேப் ரோடு ★ நாகர்கோவில்.

உங்களுக்குத் தேவையான எல்லாவிதமான நகைகளும் நவீன டிசைன்களில் பவுன் மாற்றுக்கு உத்திரவாதத்துடன் எப்பொழுதுன் எங்களிடம் கிடைக்கும்.

தங்கம், பவுன், வெள்ளி மற்றும் ரெங்கூன் வைரங்கள் பதித்த நகைகளும் வெள்ளிப்பாத்திரம், கொலுசு, கொடி முதலிய உருப்படிகளும் நியாயமான விலைக்கு உத்திரவாதத்துடன் எங்களிடம் கிடைக்கும்.

கியாரண்டி சீல் **C. S.** பவுன் மாற்றுக்கு உத்திரவாதம்.

N. B:- ஆர்டர்கள் குறித்த தவணையில் கை தேர்ந்த ஆட்களைக் கொண்டு நேர்த்தியான முறையில் செய்து கொடுக்கப்படும்.

நான் கண்ட பாவலர்

(வித்துவான் செ சதாசிவம்)

1924 இந்திய விடுதலை ஏட்டில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்த காலம். ஒவ்வாத ஆட்சியை ஒழித்துக் கட்டுவதற்கென்று ஒத்துழையாமை இயக்கம் தொடங்கினார் காந்தி அடிகள். அதனால் அவர் மீது அரச நிந்தனைக் குற்றம் சுமத்தியது அரசாங்கம். ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அடிகளை எரவாடாச் சிறைக் கோட்டத்துக்குள் தள்ளினர் வெள்ளையர். இது கேட்டதும் இந்திய மக்கள் அனைவர் உள்ளங்களும் குமுறின. அடிகளுக்கும் அரசாங்கத்துக்கும் - ஏன்? நாட்டு மக்களுக்குமே முதல் அனுபவம் இது. என்ன செய்வதென்று தெரியாத இளைஞர் உள்ளங்கள் புகைந்துகொண்டிருந்தன. நல்ல வேளையாக ஓராண்டுக்குள் அடிகள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார். இப்போது, மாந்தரின் மனத்துயரெல்லாம் மகிழ்ச்சிப் பெருக்காக மாறிற்று என்றால் அதில் வியப்பில்லை யல்லவா? நாடெங்கும் கொண்டாட்டம்; விடுதலைக் கொண்டாட்டம். சீறூர்களிலும் பேரூர்களிலும் எல்லா நகரங்களிலும் காந்தியார் விடுதலை பெற்ற நாளைச் சிறப்பாகக் கொண்டாடினர்

நான் பிறந்த சிற்றூர் இரவிபுதூர். அங்கும் விடுதலைக் கொண்டாட்டம் நடைபெற்றது. விழாவுக்கு வெளியூர்ப் பெரியார்கள் மூவர் அழைக்கப்பட்டிருந்தனர். ஒருவர் வ. வே. சு ஐயர் அவர்கள். அவர் அப்போது சேரன்மாதேவியில் குருகுலம் அமைத்து நடத்திக்கொண்டிருந்தார். ஏனைய இருவரும் கோட்டாற்றுப் பெரியார்கள். ஒருவர் டாக்டர் எம். இ. நாயுடு அவர்கள்; இன்னொருவர் பாவலர் அவர்கள். சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் அவர்களைப் பாவலர் என்று சுருக்கமாகச் சொல்வதுதான் வழக்கம்

நான் அந்நாளில் சிறுவன். பதினைந்தாண்டு கூட நிரம்பியிருக்காது ஆயினும் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் உற்சாகத்தோடு கலந்துகொண்டேன். ஆவலோடு பேச்சுக்களைக் கேட்டுச் சுவைத்தேன். பாவலர் பேச்சுத்தான் எல்லோரையும் பிணித்து நின்றது. கை தட்டலும் ஆரவாரமும் அதற்கே மிகுதியும் இருந்தன.

அப்போதுதான் நான் முதன் முறையாகப் பாவலரைப் பார்த்தது. அவர் பேச்சு என்னைக் கவர்ந்ததா? அவர் தோற்றம்தான் என்னைக் கவர்ந்ததா என்று சொல்லமுடியவில்லை. அந்தக் கதருடையும், கதர்ச் சட்டையும், காந்திக் குல்லாவும் மட்டுமல்ல, கேட்டார்ப் பிணிக்கும் சொல்வன்மையும் என்னைக் கண் இமைக்காமல் செய்துவிட்டன என்றே சொல்லவேண்டும். பேச்சின் ஒரு பகுதி இன்றும் நன்றாக நினைவிருக்கிறது. கதர் உடுக்க வேண்டியதன் இன்றியமையாமையைப் பற்றிக் கூறிவந்தார் பாவலர். இறுதியாகச் சொன்னார்:—

''நம்மவர் திருமணத்தின்போது கட்டுவது கூறை ஆடை எனப்படும். அது கோடி ஆடை; அதாவது புத்தாடை. பிணத்தைப் பொதிவதும் புத்தாடைதான்; ஆனால் அது மில் துணியாயிருக்கும். திருமணத்தின்போது மில் துணி கட்டுவது வழக்கமில்லை. கோடித் துணி கட்டுபவன் மணமகன்; மில் துணி கட்டுபவன் பிணமகன். ஐயா! நீங்கள் மணமக்களாக இருக்க விரும்புகிறீர்களா? அல்லது பிண மக்களாக இருக்க விரும்புகிறீர்களா? இல்லை, இல்லை. நீங்கள் மணமக்களா? பிணமக்களா? மணமக்களானால் கையால் நூற்று

நெய்த கதராடையை இன்றே கட்டுங்கள்; பிணமக்களானல் மில் துணியைக் கட்டுங்கள்; விதவைப் பெண்களைப் போல அந்த வெள்ளைத் துணியைக் கட்டிக்கொள்ளுங்கள்; ஏ மணமக்களே, நீங்கள் கதர் அணியப்போவதற்கு அறிகுறியாக உங்கள் மேலே கிடக்கும் அந்தப் பிண அடையை இப்பொழுதே எடுத்தெறியுங்கள்; எரிக்கு இரையாக்குங்கள்; இங்கே, இப்பொழுதே ஒரு சொக்கப்பனை எழட்டும்.''

அவ்வளவுதான்; பிலுபிலுவென்று மேலாடைகள் கழற்றி எறியப்பட்டன; உடுப்புகள் கழற்றி வீசப்பட்டன. துணிமலை ஒன்று உருவாயிற்று அதிலே தீ மூட்டப்பட்டது. கணப்பொழுதில் அது ஏழுநா விட்டு எரியத் தொடங்கியது. நீரற்று விரிந்து பரந்து கிடந்த அந்த ஏரியின் திடலில் எழுப்பப்பட்ட எரியின் கோலம் கண்கொள்ளாக் காட்சியாயமைந்தது. இனிக் கதரே அணிவதென்று அந்தச் செந்தீயின் முன் பலரும் சபதம் எடுத்துக்கொண்டனர்.

அன்றைய கூட்டத்திற்குப் பிறகு எங்களூரில் மில் துணி கட்டியவரைக் கண்டால் 'நீ மணமகனா? பிணமகனா?' என்று சொல்லி வேடிக்கை செய்வது வழக்கமாகப் போயிற்று. பேச்சு வேடிக்கையாக இருந்தாலும் பெற்ற ஊதியம் பெரிது. இதனால் ஏராளமானோர் தேசிய மனப்பான்மையுடையவராயினர்; கதராடை கட்டினர்; தம்மைத் தேச சேவையில் ஈடுபடுத்திக் கொண்டனர். உலகம் தெரியாத கிராம மக்களிடையே இப்படி ஒரு புரட்சியைக் கிளப்பிவிட்டுச் சென்ற பாவலர், அன்றே என் இளம் உள்ளத்தில் பசுமை கொழிக்க இடம் கொண்டுவிட்டார்.

இதன் பின் பல ஆண்டுகளாகப் பாவலர் தென்னகத்தில் காங்கிரசுக்கோர் தூணாகவே விளங்கி வந்தார். 1937-ல் காங்கிரஸ் தேர்தலில் கலந்துகொண்டபோது பல்வேறு இடங்களிலும் சென்று பிரசாரம் செய்து காங்கிரசுக்கு வெற்றியைத் தேடித்தந்தவர் பாவலர். பாளையங்கோட்டையில் காங்கிரசை எதிர்த்து நின்றவரைக் கட்டிய பணம் இழக்குமாறு செய்தார். அப்போது முழக்கி வந்த தாரக மந்திரம் 'மஞ்சள் பெட்டி மங்கலப் பெட்டி; வெள்ளைப் பெட்டி வெறும் பெட்டி' என்பதாகும். மஞ்சள் பெட்டியை நிரப்புங்கள்; வெள்ளைப் பெட்டியை வெறும் பெட்டியாக்குங்கள்' என்று எழுப்பிய குரல் வீண் போகாமல் சிறந்த பயனையே தேடிக் கொடுத்தது.

இப்படியெல்லாம் தேசத்தொண்டு ஆற்றிவந்த பாவலர், பின் நாளில் நூல்கடை வைத்து நடத்திவந்தார் என்றால் நம்பமுடிகிறதா? ஆனால் உண்மை அது. நூலென்றால் கதர் நூலா? மில் நூலல்லவா? இதனை என் கண்ணாரக் கண்டு உள்ளங் குமுறியிருக்கிறேன். இப்படித் தம் கொள்கைக்கு மாறுபட்ட தொழிலில் அவர் ஈடுபட்டதேன்? பாரியும் பேகனும் அதிகனும் குமணனும் வாழ்ந்த காலமல்லவே அது! நாடென்றும் மொழியென்றும் பாடித்திரிந்தால் வாயும் வயிறும் நிறையாதே! வாழ்வு தழைக்காதே! அவருக்குப் பொருட்குறை உண்டாகாமல் போற்றிக் காக்க ஒரு புரவலன் மட்டும் இருந்திருந்தால் பாவலர் பலப்பல பாரகாவியங்களுக்குத் தந்தையாயிருந்திருப்பார்; பலவேறு அவதானிகளுக்குக் குருவாயிருந்திருப்பார்; இன்னும் பல பாவலர் நாவலர் பண்டிதர் வித்வான்களைப் படைத்திருப்பார்; என்செய்வது!

ஏறக்குறைய இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்பிருந்தே பாவலர் அவர்களை நெருக்கமாகத் தெரிந்துகொள்ளும் பேறு எனக்குக் கிடைத்தது. அதற்குக் காரணம் உண்டு. பாவலர் என் ஆசிரியருக்கு ஆசிரியர். அதாவது, எனக்கு எழுத்தறிவித்த ஆசிரியத் தந்தையான பண்டித-சாஸ்தாங்குட்டிப் பிள்ளையவர்களை முதன் மாணவராகக் கொண்டவர். அவர்களுடைய ஆசிரியத் தந்தை. ஆகவே, பாவலர் எனக்குத் தாத்தா ஆசிரியர். ஆதலால் நான் நாகர்கோவிலில் தங்கிய காலத்தில் பாவலர் அவர்களை நாள்தோறும் காண்பேன்; கண்டு மகிழ்வேன்; அதற்கு வாய்ப்பும் இருந்தது.

பொன் வாணிபம் நடத்திவந்த திரு சரவணை ஆச்சாரி, பாவலருடைய கடைக்குட்டி மாணவர். தம் மாணவரைப் புலவராக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் பாவலர். நாள்தோறும் ஆச்சாரியார் கடைக்குப் பாவலர் வருவார். அப்போது அவரைச் சூழ்ந்து அறிஞர் குழாம் ஒன்று எப்போதும் இருக்கும். கற்றுக்குட்டிகளும் அங்கே நிற்பர். நானும் அவர்களுக் கிடையில் இடம் பிடித்துக்கொள்வேன். மகாமதியின் செந்நாப்போது எப்போது மலரும் என்று ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். வாயிலிருந்த சுருட்டை எடுத்துக் கீழே வைத்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்துவிட்டாரானல் 'இன்று நமக்குக் கொண்டாட்டம்தான்' என் றெண்ணி எல்லோரும் குதூகலம் கொள்வார்கள். கவிச்சுவை தேரும் உள்ளங்களைக் களிப்பில் ஆழ்த்தவல்ல பேச்சு வெளிப்படுவதற்கு அறிகுறி அது. சொற்பெருக்குப் பெரும் பாலும் கம்பராமாயணத்தைப் பற்றியதாக இருக்கும். இராமாயணத்தில் ஆழ்ந்த பயிற்சி பாவலருக்கு உண்டு. ஒருநாள் நிகழ்ச்சி:

அன்று கிட்கிந்தைப் படலப் பாடலொன்று அறிஞர்க்கு விருந்தாயமைந்தது. பாடல் வருமிடம் இது:—

இராமனருளால் ஆட்சி பெற்ற சுக்கிரீவன், சீதையைத் தேடித்தர உதவுவதாக வாக்களித்தவன், சொன்ன சொல்லை மறந்து இன்பப் போதையுள் ஆழ்ந்து தன் வய மிழந்திருக்கிருன். கார்காலமும் கடந்தது. பிரிவுத் துயரால் பொருமியிருக்கும் இராம னுக்கு, மோகத்தில் மயங்கிக் கிடக்கும் சுக்கிரீவன் செயல் எல்லையற்ற கோபத்தை எழுப் பியது. ஒருநாள் இராமன் தன் தம்பியை அழைத்தான். "மொய்ம்பினேய்! சொன்ன எல்லை யினூங்கும் தூங்கினன் சுக்கிரீவன்; பெறலருந் திருப் பெற்றுதவிய நம் திறம் நினைந்தி லன்; அறம் மறந்தனன்; நம்மறம் அறிந்திலன்; வாழ்வில் மயங்கினன். நன்றி கொன்று அரு நட்பினை நாரறுத்து ஒன்றும் மெய்ம்மை சிதைத்து உரை பொய்த்த அவனைக் கொன்று நீக்குதல் குற்றமாகாது. சென்று மற்றவன் சிந்தையைத் தெரிந்துவா" என்று கூறினன். இக்கருத்தோடு உறவாடிவரும் பாடல் இது:—

"நஞ்ச மன்னவ ரைகலிங் தாலது
வஞ்ச மன்றும னுவழக் காதலின்
அஞ்சி லம்பதில் ஒன்றறி யாதவன்
நெஞ்சில் நின்றுநி லாவநி றுத்துவாய்"

'கொடியவர்களை ஒறுத்தல் குற்றமன்று; மனுவறத்துக்கு ஒத்ததே. சுக்கிரீவன் **அஞ்சிலம்பதில் ஒன்றறியாதவன்**. அவன் மனத்தில் பதியுமாறு இதனைக் கூறிவா' என் பது இதன் திரண்ட பொருள்.

'நஞ்ச மன்னவர்' என்னும் தொடரை மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் கண்டார் பாவலர்.

நஞ்சம் மன்னவரை — நஞ்சைப் போன்ற மன்னர்களை
நஞ்சம் அன்னவரை— நஞ்சை ஒத்த கொடியவர்களை
நஞ்ச மன்னவரை — அறநெறியினின்று நைந்து கீழான மன்னர்களை.

மூன்ருமடி பாவலரின் விளையாட்டரங்கமாயிற்று. அதற்குப் பொருள் கண்ட முறை முற்றிலும் புதுமையாயிருந்தது அவை:—

அஞ்சில், அம்பதில் ஒன்றறியாதவன் — இளையனயிருந்த ஐந்து வயதுப் பருவத்திலும் சரி; முதியனை ஐம்பது வயதுப் பருவத்திலும் சரி; உறுதிப்பொருள் ஒன்றையும் அறியாத மூடன் (சுக்கிரீவன்)

அம் சிலம்பதில் ஒன்றறியாதவன் — அழகிய கிட்கிந்தை மலையிலே அரசு வீற்றிருக்கிற ஒரு பொருளுமறியாத சுக்கிரீவன்.

அஞ்சிலம்; பதில் ஒன்றறியாதவன் — (இவனைக் கொல்வது மனு வழக்காதலால் கொல்ல) அஞ்சினேமில்லை; எமக்குப் பதில் வந்துகூற அறியாத இந்தச் சுக்கிரீவனுடைய.

அம்சில் அம்பு அதில் ஒன்று அறியாதவன் — (எம்மிடமுள்ள) அழகிய சில அம்புகளில் ஒன்றன் வலிமைகூட இன்னும் நன்கு அறிந்திருக்கமாட்டான்; அத்தகைய சுக்கிரீவனுடைய

அஞ்சு இல்; அம்பது இல்; ஒன்றறியாதவன் — (இவனை அழிப்பதற்கு) ஐந்து வேண்டிய தில்லை; ஐம்பது வேண்டியதில்லை; ஒரு அம்பே போதும். இதனை அறியமாட்டாத சுக்கிரீவனுடைய

அஞ்சு; இல்; அம்பு அதில் ஒன்று; அறியாதவன் — (நீ சுக்கிரீவனை நோக்கி) 'நீ என் தமையன் அம்புக்கு அஞ்சு; இல்லாவிட்டால் அவன் அம்புகளில் ஒன்றை (உன் தமையனைப்போல நீயும்) ஏற்றுக்கொள்' என்று, ஒன்றும் அறியாத அந்தச் சுக்கிரீவனிடம் சொல்.

என்றின்னவாறு வகுத்து வகுத்துச் சொல்லிக்கொண்டே போனார். ஒவ்வொரு வகையாகச் சொல்லும்போதும் கேட்டவர் உள்ளம் கிளர்ந்தெழுந்து கூத்தாடலாயிற்று. இப்படிப் பதச்சேதம் செய்தலும் புதுப் பொருள் காண்டலும பாவலரிடம் அமைந்த தனித் தன்மைகள் ஆகும், வாதத்திறனும் அவருக்கென வாய்த்திருந்தது. இலக்கணம், தருக்கம் இவற்றை முன்நிறுத்தி அவர் புத்துரையோ மறுப்புரையோ கூறும்போது அவர் மாமேதை பொலிவுற்றுத் திகழ்வதைக் காண்போம்.
இதற்கோர் நிகழ்ச்சி:

ஏறக்குறைய இருபது ஆண்டுகள் இருக்கும். கோட்டாற்றுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் வந்திருந்தார். பாவலர் தலைமையில் திருக்குறள் பற்றிப் பேசினார். குறளுக்குச் சில பாடபேதங்கள், பரிமேலழகர் உரைக்குச் சில மறுப்புக்கள் என்பவை அன்றைய பேச்சில் இடம்பெற்றிருந்தன. பாரதியாரின் நாவன்மையும், புலமையும், அஞ்சாமையும் தமிழகம் நன்கு அறிந்தவை. ஆகவே, அவர் சொற்பொருளில் யாவரும் கட்டுண்டு கிடந்தார்கள் என்று சொல்வதில் சிறப்பில்லை. ஆனால் பாவலர் மட்டும் நாவலர் கூற்றை ஏற்கத் தயாராக இல்லை என்பது முடிவுரையில் தெரிந்தது. முடிவுரையில் தம் கருத்துக்களைக் கூறியிருப்பார் பாவலர். அதற்கு இயற்கை இடங்கொடுக்கவில்லை.

ஆகவே, இதனை மறுப்பதற்கென்றே மறுநாள் கூட்டம் கூட்டப்பட்டது. நாவலர் அன்று இருக்கவில்லை எனினும் பாவலர் தம் மறுப்புரையை வழங்கலானார். அவற்றுள் ஒன்று,

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்'' என்ற குறளுக்குப் பரிமேலழகர் கூறிய உரை ஆகும். 'செல்வர் முன் ஏழைகள் நிற்குமாறு போலத் தாமும் ஆசிரியர் முன் ஏக்கற்று (ஆசையால் தாழ்ந்து) நின்றும் கற்றார் தலையாயினார்; அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரே யாவர்' என்பது பரிமேலழகர் உரைப்பொருள்.

இப்பாட்டில் 'கல்லாதவர் கடையர்' என்பது தனித்தொடர். இதை நீக்கிவிட்டால் எஞ்சியிருப்பது "உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்'' என்னும் முதலடி. கற்றார் என்பது கற்றலைச் செய்தவர் என விரியும் எவ்வாறு கற்றலைச் செய்தவர் என்பதைத்தான் அதற்கு முன் நிற்கும் சொற்கள் அனைத்தும் சேர்ந்து காட்டுகின்றன. கற்றார் என்பது, அதற்கு முன்னுலுள்ள சொற்பொருளை அடைமொழியாகப் பெற்றுவந்த எழுவாய். அந்த எழுவாய்க்கு ஏற்ற பயனிலை அத்தொடரில் இல்லை. இல்லாமலிருக்க, பரிமேலழகர் 'தலையாயினார்' என்னும் பயனிலையை வருவித்துரைத்தார். 'கடையர் என்றதனால் அதன் மறுதலைப்பெயர் வருவித்துரைக்கப்பட்டது' என விளக்கவுரையும் கூறினார் அவர். இதனை இந்தப் பன்னூற்றாண்டாக அறிஞர் உலகம் ஏற்றுத்தான் வந்திருக்கிறது. ஆனால் இங்கே எதிர் நீச்சலிட்டார் பாரதியார். பரிமேலழகர் கொண்ட முறைக்குக் குறைபாடும், திருத்தப்பாடும் நாவலரால் கூறப்பட்டன. அவர் கூற்றின் சுருக்கம் வருமாறு:—

"இரண்டாமடியில் 'கல்லாதவர் கடையரே' என்று சொன்னதுபோல, முன்னடியில் கற்றார் இத்தகையர் எனப் பயனிலை கூறியிருக்க வேண்டுமல்லவா? உரையாசிரியர் சொல்வதுபோல, நாயனார் பயனிலை கூறாது, உய்த்துணருமாறு விட்டிருப்பாரா? எழுவாய் கூறாது விடுவதுண்டு; தொடர்புபட்டு வருவதனால் உணர்ந்துகொள்ள முடியும். பயனிலை கூறாது விடுவதுண்டோ? விட்டால் கருத்து முடியுமோ? இங்ஙனம் பயனிலை யில்லாப் பாடல் ஒன்றாவது உண்டா? எனவே, பயனிலை கூறாத பழியை நாயனார் மீது ஏற்றுவது அறிவுடைமையாகாது

"அவர் கூறாதிருக்கவில்லை; கூறியிருக்கிறார். முதலடியிலுள்ள உடையார் என்பதே பயனிலையாகும். 'முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் (பின்) உடையார் (ஆவர்)' என இயைத்துப் பொருள் கொள்ளவேண்டும். அதாவது, முன் வறுமைப்பட்டு நின்றவர் செல்வத்தின்மீதுள்ள ஆசையால் தாழ்வு பாராது உழைத்துச் சேர்ப்பதுபோல, கல்வியின் மீதுள்ள ஆசையால் அறிவுடையார் முன் தாழ்ந்து நின்றும் கற்றவர் அக்கல்விச் செல்வம் பெற்றபிறகு எல்லாம் உடையாராவர் என்ற பொருள் இதில் அமைந்திருக்கிறது. இங்ஙனம் கொள்வதே பொருத்தமும் சிறப்பும் ஆகும். இதனை உணராமல் பரிமேலழகர் தப்புவழி காட்டிவிட்டார்" என்று கூறினார்.

இவ்வுரை, கேட்டார்க்கு வியப்பையும் இன்பத்தையும் ஒருங்கே எழுப்பியது. இதுவே மெய்யுரை என எல்லோரும் ஏற்றுக்கொண்டனர் மறுநாள் நடந்த மறுப்புக் கூட்டத்தின்போது பாவலர் இதனை எப்படித்தான் மறுத்துவிடப் போகிறார், பார்ப்போமே' என்று அன்பர்கள் ஆவலோடு செவியைத் தீட்டிக்கொண்டிருந்தனர்.

"நேற்று, நாவலர் சோமசுந்தர பாரதியார் இந்த உரை மறுப்புக்குக் காட்டிய காரணங்கள் இரண்டு. ஒன்று, பயனிலையின்றிப் பாடல் அமையாது, அப்படி ஒரு பாடலே இல்லை என்பது இரண்டாவது, பொருத்தமான பயனிலையாக 'உடையார்' என்ற சொல் இருக்கிறது என்பது.

நாவலர் கூறிய முதற் குற்றத்துக்குக் காரணம் அவருக்கிருக்கிற இலக்கிய இலக்கணப் பயிற்சியின் குறைவே யன்றி வேறல்ல. நன்னூல் என்ற இலக்கண நூலில், பதவியலில் 'ஏழாமுயிர் இய்யும் இருவும்' எனத் தொடங்குகிறது ஒரு சூத்திரம். அது 'ஆஈறு ஐயும் ஈ ஈறு இகரமும்' என முடிகின்றது. மேல் வருவனவற்றையும் தழுவிக்கொள்வதற்காக ஆசிரியர் பயனிலை கொடுக்காது முடித்தார் என அதற்கு உரை எழுதியோர் அனைவரும் காரணங் காட்டியுள்ளனர். ஆகவே, பயனிலை இன்றி முடிக்கிற பாடல் இலக்கியத்திலல்ல; இலக்கணத்திலேயே இருக்கிறது என்பது தேற்றமாம்.

இனி, அவர் தரும் புதுப்பொருளைப் பார்ப்போம். உடையார் என்பதைப் பயனிலையாகக் கூறுகின்றார். கல்லாதவர் கடையர் என்பது இரண்டாமடியில் கூறப்பட்ட பொருள். கல்லாதவர் கடையரானால் கற்றவர் தலையாயவர் என்று அமைவதுதானே முறை. (மேசை மீது இருந்த மணியைக் கையில் எடுத்துக்கொண்டு) இது பெரியது என்றால் இதற்கினமான இன்னொன்று சிறியது என்பதுதான் பெறப்படும். இரண்டு பொருட்களை வைத்துக்கொண்டு ஒன்றைப் பெரியது என்று சொல்லும்போது ஏனையது சிறியது என்று கொள்ளப்படுவதன்றி அழகானதென்றோ பிறவாறோ கருதப்படுவதில்லை. நாயனாரும் 1. பெருமை, சிறுமை; 2. பெரியார், சிறியார்; 3. அறிவுடையார், அறிவிலார் இப்படி இணைத்து இணைத்துப் பாடியிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, கல்லாதவர் என்னும் எழுவாய்க்குக் கடையர் என்னும் பயனிலை அமைந்திருப்பதற்கு ஏற்ப, கற்றார் என்னும் எழுவாய்க்குத் தலையாயவர் என்னும் பயனிலையை உய்த்துணர்ந்து கொள்வதுதான் முறையாகுமேயன்றி, இருக்கிறதென்று கருதி உடையாரைப் பயனிலையாக்கல் ஒரு சிறிதும் பொருந்தாது. அன்றியும் அங்ஙனம் கொள்ளும்போது, 'முன்' என்னும் சொல் நின்றுவற்றும்.

---

1. திருக்குறள் — 451,978 2. திருக்குறள் — 26 3. திருக்குறள் — 427.

இவற்ருல் பரிமேலழகர் உரையே நேரியது; அறிவுக்கு விருந்தாயது; என்பதைத் துணிந்து கூறுவேன்" என்று கூறிமுடித்தார் பாவலர்.

கேட்டார் அனைவரும் கோட்டாற்றில் இப்படி ஒரு மேதை புதையுண்டு கிடப்பதை அப்பொழுதுதான் உணர்ந்தனர். சில ஆண்டுகளுக்கு முன் சென்னையில் மருட்பா மறுப்பினை ஒழித்துக் கட்டுவதற்காக மகாமதி புரிந்த சொற்போரின் ஆற்றல் எவ்வளவு உயர்வுடையதாயிருக்குமென்பதை இங்கிருந்தே ஊகித்து இறும்பூதெய்தினர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களுடைய திருக்குறள் புத்துரைக்குக் கொடுத்த மறுப்புரையும், அதன் பின்னர் அதாவது 1944-ல் ரசிகமணி டி. கே. சிதம்பர நாதமுதலியார் அவர்களுடைய கம்பராமாயணப் புதுப்பாடங்களுக்குக் கொடுத்த மறுப்புகளும் என் நெஞ்சை விட்டு என்றும் அகலாதவை; அவை எந்நாளும் புதுமைப் பொலிவோடு இனிப்பூட்டிக்கொண்டிருப்பவை. நான் கண்ட பாவலர் ஓர் விடுதலைச் சுடர், அறிவுக் கடல், சொன்மழை, தருக்க வாள். இந்தச் சுடரை, கடலை, மழையை, கூர்வாளை ஒரே இடத்தில் ஒரே வடிவுக்குள் இனி எங்கே காணப்போகிருேம் என்றெண்ணும்போதுதான் பாவலர் பெருமான் தந்துவிட்டுப் போன பிரிவுத்துயரம் பன்னூறு மடங்காகப் பெருக்கெடுத்தோடுகிறது. பாவலர் பரம்பரை முட்டுற்றுப் போகவில்லை. தமபுலமை தழைத்தோங்கச் சில தீபங்களை ஏற்றிவிட்டுத்தான் சென்ருர் அவர். அவற்றுள் ஒன்று தெய்வத் திருவிளக்காய் வாடா விளக்காய்த் தெங்கொம்புதூரில் சுடரொளி பரப்பிக்கொண்டிருக்கிறது. அறிவுச் சுடர்களை, சிறு சிறு கைவிளக்குகளை அங்கங்கே ஏற்றி வைப்பதே அதன் திருப்பணி. பாவலர் விட்டுச்சென்ற அந்த ஒரு சுடர் போதுமே, ஓராயிரம் கோடியாகப் பெருக! தமிழன்னை இதற்குத் தண்ணருள் புரிவாளாக.

வாழ்க பாவலர் நாமம்;
வளர்க தமிழொளி.

★

நோன்பை மறவாதே.

நோன்பை மறவாதே, நெஞ்சேநீ
நோன்பை மறவாதே.

வான்புகழுந் தேவர்பிரான்
வந்தளித்த வண்புர்காண்
தான்புகழ வாய்த்தவெல்லாத்
தத்துவமுஞ் சார்ந்தரம்லான் (நோன்பை)

தேக சுகமளிக்கும்
சிந்தைத் துயராறுக்கும்
மோகக் கனலவிக்கும்
முத்தி நிலைவிளக்கும் (நோன்பை)

உண்ணு வறிய
குறுபசியை இன்னதென
எண்ணு திருந்த
இடும்பர்க் கினிதுணர்த்தும் (நோன்பை)

ஊரனைத்துஞ் சுற்றி
யொருநொடியில் மீண்டுவரும்
பார மனக்குரங்கைப்
பத்தி நெறிநிறுத்தும் (நோன்பை)

தீய புலனவித்துத்
தெய்வ உணர்வளித்து
மாயப் பிரபஞ்ச
மாமயக்கைப் போக்குவிக்கும் (நோன்பை)

சோம்ப லகற்றும்
சுறுசுறுப்பை யுண்டாக்கும்
ஒம்புந் தொழுகைக்
கொருமைப் பதமுதவும் (நோன்பை)

வாய்ந்தசம தத்துவத்தில்
மக்களெல்லாம் வாழநல
னேய்ந்தலகாத் தீந்தெவர்க்கும்
இன்துயிலைப் போக்குவிக்கும் (நோன்பை)

— *சதாவதானி பாவலர்.*

தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்

வித்துவான் ஏ. மாடசாமி

1907-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 10-ம் நாள் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் வித்துவான் திரு. கண்ணபிரான் முதலியார் தலைமையில் வடமொழி - தென் மொழிப் புலவர்கள் - வழக்கறிஞர்கள் பேரறிஞர் - வெள்ளை நீதிபதி ஒருவரும் புடைசூழ மக்கள் வெள்ளம் அலைமோத ஒரே சமயத்தில் நூறு அலுவல்களைச் (சதா வதானம்) செய்யும் ஒருவர், இடுப்பில் தூய வெள்ளுடையணிந்து வறிய மேனி யுடன், கையில் இலாடச் சங்கிலியும், நாவில் மெய்ஞ்ஞான நாதா, மெய்ஞ்ஞான நாதா வென்ற சிலேடைப் பொருட் சொற்றொடர் ஒலியும் முழங்க மேடைமீது தோன்றினர். அவரது நாவும் கையும் வெவ்வேறு வேலை களைச் செய்ய, மனம் மற்ற அலுவல்களை எல்லாம் செய்யத் திட்டம் இட்டுக்கொண்டி ருந்தது. இங்ஙனம் மனமொழி மெய்கள் ஒருங்குகூடிச் செய்த அலுவல்களெல்லாம் வெற்றியுடன் முடிவுற்றது. வாகை சூடி னர் அன்னவர். மகாமதி சதாவதானி என்ற பேரொலி வானைப் பிளந்தது. அந்த அவ தானி நம், மகாமதி சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலரேயாகும். அவர் கொல் லம் தோன்றிய கோட்டாற்றில் இளங்கடை எனுமூரில் கொல்லமாண்டு 1049 ஆடித் திங்கள் 17-ஆம் நாள் பக்கீர் மீரான் எனும் பெரியாரின் மகனாக அவதரித்தார். தம் குல ஆசாரப்படி ஐந்தாவது வயதில் குரான் படிக்க பள்ளிக்கு அனுப்பப்பட்டார். பின் னர் அங்குள்ள அரசாங்க ஆரம்பப் பள்ளி யில் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்டார் ஒரே ஆண்டிலேயே நான்காவது வகுப்பையும் எட்டிவிட்டார். ஆசிரியர், அறிஞர் யாவரும் பிற்காலத்தில சிறந்த அறிஞராக விளங்கு வான் என்று புகழ்ந்தனர். அவருக்கு தமிழ்க் கல்வியில் ஆர்வம் அபாரமாயிற்று. அதனால் அப்போது தமிழ்ப் புலவராய் விளங்கிய அங் குள்ள திருவாளர் **சங்கரநாராயணன்** எனும் தமிழ் ஆசிரியரிடம் துணைவரோடு கல்வி கற்கலானார். வறுமை தாண்டவமா டிற்று. இலக்கண இலக்கியங்களைக் கசடற ஆசிரியரிடம் கற்று, புலமையுமடைந்தார். ஆசிரியர் வியப்படையும் வண்ணம் முன் னாள் படித்த பாடங்களைப் பாராமலேயே ஒப்புவிப்பார். அந்தாதி, பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தப் பாடங்களையும், பல்வ கைச் சித்திரக் கவிகளையும் சிலேடைப் பாக் களையும் . சொன்னயம் - பொருணயம் படும் படி எளிதாகவும், துரிதமாகவும் பாடி வந் தார். அவற்றில் அச்சில் வெளிவந்தவை சில. அவை திருக் கோட்டாற்றுப் பதிற் றுப்பத்தந்தாதி - திரு நாகூர் திரிபந்தாதி முதலியன.

இவர் உயர்திரு ஞானியார் சாகிபு அவர்கள் பாடிய மெய்ஞ்ஞான திருப்பாடல் எனும் நூலை அச்சிடும் பொருட்டு சென் னைக்கு 19-ஆவது வயதில் சென்றார். அங்கு பத்ம விலாசம் என்னும் அச்சு நிலையத்தில் இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்களின் வேண்டுகோளால் பிழை திருத்தும் வித்து வானாக அமர்ந்தார். அங்கிருந்து சைவ - வைணவ நூற்களையும் நீதி நூற்களையும் பரிசோதித்தும் பதிப்பித்தும் வந்தார். பிழை திருத்தும்போதே நூல் முழுமையும் மனப் பாடம் ஆகிவிடும். இவ்வளவு ஞாபகச் சக்தி எவருக்கு வரும் என்று யாவரும் அதிசயிக் கலாயினர். அப்போதுதான் உமறுப்புலவர் செய்த சீறாப்புராணம் முஸ்லிம் அறிஞரின் வேண்டுகோள்படி இவரால் உரையெழுதி அச்சிடப்பட்டது.

இவ்வமயம் வடலூர் இராமலிங்க அடி கள் பாடிய அருட்பா என்னும் நூலை, யாழ்ப் பாணம் ஆறுமுக நாவலரின் மாணவர்கள் 'அது தெய்வ அருளால் பாடப்பட்ட நூலல்ல. ஆகவே அது மருட்பா ஆகும்' என்று வழக்காடினர் சென்னை நகரம் முழு வதும் அதுபற்றிய எதிர்ப்புச் சொற்பொழி வுகளும் தோன்றி அவ்வழக்கைப் பெரிதாக் கின. அப்போது அருட்பா ஆதரவாளராக

தொழூவூர் வேலாயுத முதலியார், வடிவேல் செட்டியார், மறைமலையடிகள் முதலிய தமிழ் அறிஞர்களும்; மறுப்பாளராக கதிர்வேல் பிள்ளை, அவரது மாணவர் கலியாணசுந்தர முதலியார் முதலிய அறிஞர்களும் சிறந்தவ ராவர் அப்போது நம் பாவலர் அருட்பா கட்சியில் சேர்ந்து சொற்போர் நிகழ்த்தியும் பத்திரிகைகளில் எழுதியும் அருட்பாவை அருட்பாவென்றே நிலைநிறுத்தி முடிவில் வெற்றியுமடைந்தார். ஒரு முஸ்லிம சைவச் சார்பில் நின்று போதுமான ஆதாரங்களுடன் வழக்காடுகிருர் என்றவுடனேயே, இவரது சொற்பொழிவைக் கேட்க சென்னை மக்கள் திரண்டு வரலாயினர். அப்போது அருட்பா ஆதரவாளர் நிலையில் சொற்பொழிவாற்றிய ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை யாவரும் அறிய வேண்டுவது அவசியம். அவை - அருட்பா எதிர்ப்பாளர் இராமலிங்க அடிகளின் பாடல்கள் ஆபாசம் நிறைந்தது என்பதற்கு ஒரு நூல் வெளியிட்டனர். அதன் பெயர், 'இராமலிங்கம் பிள்ளை பாடல் ஆபாசத் தர்ப்பணம், அல்லது மருட்பா மறுப்பு' என்பதாகும். இப்பெயரின் பிழையை எடுத்துக்காட்டியுள்ளார் நம் பாவலர். எங்ஙனம் எனில், 'அடிகளின் பாடல்கள் ஆபாசம் நிறைந்ததென்றும் அதை விளக்கிக்காட்டும் கண்ணுடி இந்நூலாகும் என்றும் அவர்கள் கருதினுல், இது இராமலிங்கம் பிள்ளை பாடலின் ஆபாச விளக்கத் தர்ப்பணம் என்றிருக்க வேண்டும். தர்ப்பணம் எனும் வடசொல் தமிழில் தருப்பணம் என்று எழுதப்படும் இலக்கண விதியையும் இவர்கள் உணர்ந்திலரே. இவர் இட்ட பெயர் பற்பலவாறு பிரிந்து நம் கொள்கைக்கே ஆதரவு தரும்.

முதலாவது, இராமலிங்கம் பிள்ளையின் பாடல் ஆ! பாசத்தர்ப்பணம் எனலாம். அதற்கு அடிகளின் பாடல் ஆஹா! என்ன அருமையானது! அது மாயையை விளக்கிக் காட்டும் கண்ணுடியாகவுள்ளது என்று பொருள் கொள்ளலாம்.

இரண்டாவதாக, இராமலிங்கம் பிள்ளை பாடலா பாசத்தர்ப்பணம் எனப் பிரிக்கலாம். இதற்கு அடிகளின் பாடல்களையாச் சொல்லுகிறீர்கள்? அவை மாயையை விளக்கிக் காட்டும் கண்ணுடியல்லவா என்பது பொருள். இங்ஙனம் அவரிட்ட மறுப்புப் பெயர் நம் கூற்றையே வலியுறுத்தி நின்றமை காண்க.

'இன்னும் இராமலிங்கம்பிள்ளை பாடல் ஆபாசத் தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு என்று காணப்படுகிறது. அல்லது என்னும் இடைச்சொல் விளக்கப் பொருளிலும் விகற்பப் பொருளிலும் வரும. விளக்கப் பொருளில் வந்தது என்றுல், முன்னதற்குப் பிற்கூறியது விளக்கமாகுமா? இல்லையாயின் இட்டபெயர் பிழையுடையதாகுமே. அல்லாமலும் மருட்பா மறுப்பு என்று காணப்படுகிறதே, மருட்பாவை மறுத்தால் அருட்பா என்றுதானே ஆகும். ஆகவே இதனை அருட்பாவாகவே ஒப்புக்கொள்கிருர்கள் என்பதாம்? 'இங்ஙனம் மறுப்பாளர்களது வார்த்தைகளைக் கொண்டே தம் கூற்றுக்கு ஆதரவு தேடி எதிரிகளை அடக்கி ஒடுக்கி வந்தார் நம் பாவலர். அவ்வழக்கு உயர்தர நீதிமன்றத்துக்கும் போய் கடைசியில் அருட்பா கட்சியினரே வெற்றிபெற்றனர். அதில் இவருக்கு "தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்" என்ற பட்டம் கிடைத்தது. பாவலரின் புகழ் மேலும் மேலும் பரவியது. வித்துவான்களும், தமிழ் அறிஞர்களும் இவரை வந்து மொய்த்தவண்ணமாக இருந்தனர். இங்ஙனம் சில ஆண்டுகள் கழிந்தன.

சென்னையில் இங்ஙனம் இருக்கும் போது, மதுரையம்பதியை அடுத்த முதுகுளத்தூர் தமிழ்ப் புலவர் கலியாணசுந்தரம் பிள்ளை என்பவர், பாவலரைக் காணவந்தார். அவர் பேச்சுகளுக்கிடையே அவதானமும் தனக்கு தெரியுமென்றுர். ஒருநாள் அவருக்குக் கண்டப்பத்திரிகை கொடுக்கப்பட்டது. அதில் அவர் வெற்றியுமடைந்தார். அது முதல் தானும் அப்படியாக வேண்டுமென்ற எண்ணம் பாவலருக்குண்டாயிற்று. கண்டப் பத்திரிகையிலும் தேர்ச்சியடைந்தார். 1906-ல் ஒருமுறை தனது ஊருக்குத் திரும்பித் தனது ஆசிரியரைப் பார்க்கச்சென்றுர். ஆசிரியர் இவரது புகழைக் கண்டு மெச்சினுர். ஆசிரியருக்கு வேண்டிய உதவியும் அவ்வப்போது செய்துவந்தார். அச்சமயம் கோட்டாற்றிலே கொச்சியில் இருந்து வந்திருந்த ஆற்றக்கோயா என்ற ஹசரத்து செய்து முஹம்மது அபூபக்கருல் ஐதுறூஸ்

தங்கள் தலைமையில் சோடசாவதானம் (16 பொருள்களைப் பற்றி) நடத்தினர். பின் சென்னை சென்றார். முற்கூறியபடி அங்கு சதாவதானம் (100 காரியம்) செய்ய முற்பட்டு பெரும் வெற்றியுமடைந்து மகமதியருள் மகாமதி என்ற பட்டமும் பெற்றார். அவ்வவதானத்தில் அங்கு கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த டி. கே சிதம்பரநாத முதலியார் அவர்களால் கண்டபத்திரிகை கேட்கப்பட்டுச் சரியாக விடையும் கூறி யாவராலும் பாராட்டப்பெற்றார்.

சதாவதானம் வெற்றியோடு முடியவே நம் பாவலர் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவலாயிற்று. சில ஆண்டுகளுக்குப் பின் கோட்டாற்றில் திருமணம் நடந்தது. கோட்டாற்றில் தங்கினர். வாழ்க்கை நடத்த நூல் கடை ஒன்று வைக்கப்பட்டது. அப்போது நாஞ்சில் நாட்டிலுள்ள தமிழ் ஆர்வமுள்ளவர் இவரிடம் தமிழ் இலக்கண இலக்கிய பாடங்களைக் கேட்கவரலாயினர். இலக்கண இலக்கிய அறிவு நாஞ்சில்நாடு முழுவதும் பரந்தது. அவரிடம் பாடம் கேட்பது தங்களுககு பெரும் மதிப்பென்று எண்ணும்படியான நிலையில் அவர் இருநதுகொண்டிருந்தார். ஆனல் புலவர்களுக்குள்ள வறுமை இவருக்கும் தீர்ந்தபாடில்லை.

அப்போது இந்தியா நாடு முழுவதும் உண்டான சுயராஜ்யக் கிளர்ச்சியில் காங்கிரஸ் ஊழியராகச் சேர்ந்து சொற்பொழிவாலும், எழுத்தாலும் அழியாப் புகழ் பெற்றார். காங்கிரஸ் கூட்டம் எங்கு உண்டோ அங்கெல்லாம் பாவலரைக் காணுமலிருக்க முடியாது. அப்போதுதான் வேதாந்த வியவகாரக் கிரிமினல் கேஸ், தேவலோக கிரிமினல் கேஸ், ஷம்சுத்தாஸின் கோவை, கல்வத்து நாயகம். இன்னிசைப் பாமாலை முதலிய நூற்கள் வெளிவந்தன. அச்சில் வராதவைகளும் பல உண்டு. அவர்களின் ஞாபகச்சக்திக்கு ஒரு எடுத்துக்காட்டைத் தருகிறோம்.

ஒருநாள் ஒரு தமிழறிஞர் சில பாடல்களை எழுதிக்கொண்டு, இவரிடம் காட்டி நன்மதிப்புப்பெற வந்தார். வந்தவர் வெளியிலுள்ள திண்ணையில் உட்கார்ந்தார். அப்போது அங்கு பாடங்கேட்கவந்த சிலரும் உண்டு. பாவலர் அவர்கள் சில நிமிடங்களுக்கு முன்னல்தான் உணவு உட்கொள்ள வீட்டினகம் சென்றுள்ளார். வந்தவரை அறிந்திலர். வந்தவரிடம், பாடங்கேட்கவந்தவர் தாங்கள் வந்த காரியம் என்னவென்று வினவ, அவர் வந்த காரியத்தைக் கூறி தான் கொண்டுவந்த பாடல்களைப் படித்துக்காட்டினர். அவர்களும் நன்றாய் இருக்கிறது என்றார்கள். இவர் படித்துககாட்டும்போதே உள்ளிருந்த பாவலர் அவர்கள் மனம், பாடலில் செல்லலாயிற்று. மனப்பாடம் பண்ணிக் கொண்டார். உணவு உணடபின்னர் வெளியில் வந்து, வந்தவரைக் கண்டுபேசலாயினர். வந்தவர் தனது பாடல் நல்ல பாடல் என்று அங்குள்ள மாணவர்களால் நன்மதிப்புப் பெற்றவர். ஆகையால இறுமாப்புடன் தனது பாடலைப் படித்துக் காட்டினர். உடனே பாவலர் அவர்கள் இவைகள் பழம் பாடல்கள். நீங்கள் எங்கிருந்து எழுதிக் கொண்டு வந்தீர்கள் என்று கூறி 1, 2, 3, 4, 5 எனறு பத்துப் பாடல்களையும் பாராமல் சொல்லவே, வந்தவர் திகைத்து, "என்னய்யா இவை பழம் பாடல்கள் அல்ல; எனது சொந்தப்பாடல்கள்" என்று சத்தியமெல்லாம் கூறி வியர்த்து மயிர்க்கூச்செறிந்து ஆவேசம் கொண்டு வருந்தி நிற்கையில், நம் பாவலர் அவர்கள் நீங்கள் வருத்தம் கொள்ளவேண்டாம். இவை உங்களுடைய பாடல்களே. பாடல்கள் நன்றுகச் சொன்னயம், பொருணயங்களோடு எழுதப்பட்டிருக்கின்றன. இவை போன்ற பாடல்களை இனிமேலும் பாடிக்கொண்டு வாருங்கள். நாம் பாடி மகிழலாம் என்றார். அப்போதுதான் வந்தவர் சாந்தமடைந்தார். உயிருள்ளவராக காட்சியளித்தார். அவர் பாவலரைப் பார்த்து, "ஆனலும் எனக்கு ஒரு சந்தேகம். அதாவது இப்பாடல்கள் முழுமையும் உங்களுக்கு எப்படித் தெரியவந்தன? சற்று விளக்கவேண்டும்" என்று கேட்டபோது, சிரித்துக்கொண்டே நான் உணவு உட்கொள்ளும்போது, வெளியில் இருந்து நீங்கள் பாட, அவைகளையும் உட்கொண்டேன் என்றார். வந்தவருக்குண்டான மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. புகழ்ந்து வணங்கினர். விடைபெற்றார்.

தமிழிலக்கணம் நாஞ்சில்நாட்டில் புத்துயிர்பெறக் காரணம் பாவலர் அவர்களே என்பது மிகையாகாது. இன்று சென்னை மாவட்டத்தில் தமிழறிஞர்கள், நாஞ்சில் நாட்டில் அதிகம் தோன்றக் காரணம் நமது பாவலர் அவர்களேயாகும். அவர் வெறும் பாவலர் மாத்திரமல்ல, போதிக்கும் திறமையில் போதனுமுறையில் தேர்ந்த ஆசிரியராகவும்,

பிறப்பாரோ பாவலரைப் போல்!

(புலவர் ஆபிதீன், சென்னை)

செயல்நூறு செய்தவன் செந்தமிழில் சீமான்
பெயல்போலச் சொற்பொழியும் பேரறிஞன் — வயலாரும்
கோட்டாறு தந்தகவிக் கோமான்போல் இப்புவியில்
மீட்டொருவர் உண்டோ விளம்பு.

செத்தும் கொடையீந்த செய்கப்துல் காதிரெனும்
வித்தகர்தம் கால்வழியின் வேரன்றோ! — இத்தரையில்
உன்னதமார் சின்னம் உருவாக்கி வைத்திடுவோம்
அன்னவரின் ஆத்மாவுக் காம்!

போனதெலாம் போகட்டும் பொன்றுப் புகழ்வாழ
ஆனவரை நாமுதவி ஆக்குவிப்பம் — மானமுடன்
செவ்வானை முத்தமிடும் சீராம் கலைக்கூடம்
இவ்வுல குள்ளவரை இங்கு.

எத்தனைப் பாட்டுவகை எந்தமிழில் உள்ளனவோ,
அத்தனையும் சொல்லவல்ல ஆற்றலுடை — வித்தை
இறந்ததுகாண்; சிந்திப்பீர். இப்புவியில் யாரும்
பிறப்பாரோ பாவலரைப் போல!

சொற்போர் நிகழ்த்துவோராகவும், சொற்பொழிவாற்றுவோராகவும், நூலாசிரியராகவும், பழம் ஏட்டுப் பிரதி நூற்களைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியராகவும், நூற்களுக்கு உரை இயற்றும் உரையாசிரியராகவும், அவதான ஆசிரியராகவும் விளங்கினர் என்பது உலகமறியும். அவதானத்தில் பற்பல காரியங்கள் நிகழ்வனபோல நம் பாவலர் அவர்களும் பற்பல விதமான அறிவாற்றல்களை உடையராயிருந்தனர். என்னே இவர் புலமை வளம்! ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியங்களில் புலமை பெற்றிருப்பர் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனல் நம் பாவலர் அவர்களோ மேற்சொன்ன காரியங்களில் எல்லாம் புலமை பெற்றுள்ளார்கள் என்பதை நோக்க யாவரிலும் தெய்வ அருள் மிகுதியும் பெற்றவர் என்பதே போதரும். பொருளீட்டும் பொருட்டு ரங்கூன், மலேயா, சிலோன் முதலிய நாடுகளுக்குச் செல்லும் முஸ்லிம் பெருமக்கள் பலரும் இவரிடம் காத்திருந்து ஆசீர்வாதம் பெற்றுப்போய் இலட்சாதி பிரபுக்களாய் மீண்டு வந்தமை கண்கூடு.

பண்டைக் காலத்தில் புலவர்களை ஆதரிப்பது போலுள்ள நிலமை நம் பாவலர் அவர்களுக்கு இருந்திருந்தால் தமிழில் ஆயிரக்கணக்கான நூற்களை அவர்கள் பேரால் இன்று காணலாம். ஆதரிப்போர் இன்மையால் பல புலவர்கள் போதிய ஆற்றலிருந்தும் தங்களது புலமையை வெளிக்காட்டாது மறைகின்றனர். அந்தோ! பரிதாபம். அவர்களில் ஒருவர் நம் பாவலர் பெருமானும் ஆவர். அவர்களுடைய இறப்பும் தமிழ்த் தொண்டாற்றும் காரணமாகவே நிகழ்ந்தது என்று கூறினல் மிகையாகாது. இங்ஙனம் தமிழ்த் தொண்டாற்றிய அரும் பெரும் புலவர் நம்மை விட்டகன்றது நந் தமிழ் நாட்டுக்குப் பெரும் இழப்பு எனலாம்.

★

பாவலப் புலவன் நீயலவோ?

(மா. இளைய பெருமாள்)

"முன்பே விளங்கும் கவிதைகளின்
மொழியை மனம்போல் திருத்துதற்கு
என்ன முறையிங் குள்ளதடா?
இதயம் குமுறிச் சொல்கின்றேன்
கன்னித் தமிழின் உயிர்நிலையாம்
கம்பனைச் சிதைத்தால் விடுவேனோ?''
என்று முழங்கிய உன்னுரையை
என்னால் மறக்க முடிந்திடுமோ?

மண்ணில் வாழும் உயிரினங்கள்
மல்கு துயரில் மயங்குதலை
எண்ணி எண்ணி நிலையிழந்து
இதயம் நொந்து கண்கலங்கி
அண்ணல் அளித்த அருட்பாவை
அல்ல என்று சொன்னவர்கள்
எண்ணம் தன்னை முறியடிக்க
எழுந்த உள்ளம் உனதன்றோ?

வாழ்க்கைச் சுழலில் சிலமறக்கும்;
வறுமைத் தீயில் சிலபொசுங்கும்;
சூழ்வார் செயலில் சிலமறையும்;
துயரக் கடலில் பலதாழும்;
பாழும் இவற்றிற் கஞ்சாது
பலரும் புகழும் அவதானம்
வாழும் நினைவால் நூறுசெய்த
வன்மை மதியும் உனதன்றோ?

காண்போம் நன்மை புதுமையிலும்;
காலப் போக்கில் மாளாமல்
நீண்டு நிற்கும் பழமையினை
நெஞ்சில் நிறுத்தும் பலநூற்கள்
மீண்டும் காண்போம் எனக்கற்று
மேன்மை யடைந்தப் பரம்பரையைக்
காண்டல் விருப்பால் அருந்தமிழைக்
கற்றுக் கொடுத்ததுன் செயலாகும்.

இலக்கியப் பொருளை எளிதுணர
இயற்கை நெறியில் பிறழாமல்
கலையுணர் இன்பம் அழியாமல்
கருதி வகுத்த இலக்கணத்தை
மலையென மயங்கி ஓடாமல்
மதிவன் மையினால் கற்றுணர்ந்து
பலர்க்கும் எளிதில் எடுத்துரைத்த
பாவலப் புலவன் நீயலவோ.

என்னருமைத் தந்தையார் அவர்கள்

(கே. பி. எஸ். ஹமீது, B. Sc., B. L.)

"மகாமதி சதாவதானி, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர், தமிழ்க் கடல், அல்லாமா கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களைப் போன்றவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது பதினாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உலகத்தில் பிறக்கிறார்கள், பிறப்பெடுக்க முடியும். அவர்கள் ஒரு அபூர்வப் பிறவி. தெய்வத்தின் அருள் கடாட்சம் பெற்றவர்கள். மனித உருவில் பிறப்பெடுத்துவிட்ட அதி அமானுஷ்ய அற்புத மகான். சரஸ்வதியின் முழு அருளுக்கும் பாத்திரமானவர்கள். அதிலும் அவர்கள் இத் தமிழ் நாட்டின் தென்குமரி வட்டாரத்தில் பிறந்தது தமிழும் தமிழ்நாடும் செய்த பாக்கியமாகும்" இவ்வாறெல்லாம் என் தந்தையார் அவர்களோடு நெருங்கிப் பழகியவர்களும், எனது தந்தையார் அவர்களின் மகிமை கண்டு ஆற்றாது புழுங்கிய அறிவுச் செம்மல்களும் எனது தந்தையார் அவர்களின் அதியபூர்வத் தன்மையையும், மேதா விலாசத்தையும், ஞானத்தையும், புலமையையும் பாரபட்சமற்ற முறையில் நிறுத்து எடை போட்டுக் கணித்துக் கூறியிருப்பதை எத்தனையோ தடவைகள் நான் கேட்டிருக்கிறேன். பெருமையும் புளகாங்கிதமும் எய்தி இருக்கிறேன். அத்தகைய மாமேதை ஒருவருக்குப் புத்திரனாகப் பிறந்துவிட்ட பேற்றையும், பாக்கியத்தையும் எண்ணி எண்ணிப் பூரித்திருக்கிறேன். அதே சமயத்தில் என் தந்தையார் அவர்கள் பெற்றிருந்த ஆற்றலில் - திறமையில் - அறிவில் ஆயிரங்கோடிப் பங்கில் ஒரு பங்குகூட பெறுவதற்கான சூழ்நிலையும் - சந்தர்ப்பங்களும்-வசதிகளும் இல்லாமற் போய்விட்ட என் வாழ்வின் துர்ப்பாக்கியத்தை நினைந்து நினைந்து நொந்துருகி வெந்தும் வெதும்பியும் போயிருக்கிறேன்.

(எழுதியவர்)

பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு மூலம் கல்வி கேள்விகளைப் பெற்று அறிவை விருத்தி செய்துகொள்ள வேண்டிய இக்கட்டுக்கு ஆளாகிவிட்ட இக்காலத்து நம் தலைமுறையினர் கற்க முடிவது கடுகளவுதான்; கை மண் அளவு கூட அல்ல. ஆனால் பாவலர் அவர்கள் பிறந்து வளர்ந்த தலைமுறை, குரு சிஷ்ய பரம்பரை வளர்ந்த தலைமுறை. ஆகவே கல்வித் துறையில்-இலக்கண, இலக்கியத் துறையில்-கலைத்துறையில் - அறிவுத் துறையில் அவர்கள் பெற்ற பயிற்சியும் ஞானமும் புலமையும், முழுமையும் பூரணத்துவமும் பெற்றவையாக இருந்தன. ஆகவேதான் பாவலர் அவர்களைக் குறுமுனிக்கடுத்த பெருமுனியாக அவர்கள் காலத்துத் தமிழகம் கருதிற்று. தமிழ்ப் பேராசிரியராகவும், பண்டிதருக்கும் பண்டிதராகவும், தனிப்பெரும் பாவலராகவும், நாவலராகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். பன்னூல் ஆசிரியர், பதிப்பாசிரியர், போதகாசிரியர், பத்திரிகாசிரியர், உரையாசிரியர், சொற்பொழிவாசிரியர், அவதானவாசிரியர் எனப் பிறர் உச்சி மீது வைத்து மெச்சும் பெயர் பெற்றிருந்தார்கள். பாவலர் அவர்கள் சிறந்த தர்க்க சாஸ்திரியாராகவும், தத்துவ ஞான போதகராகவும் விளங்கினார்கள். தமிழை ஒட்டி வளர்ந்திருந்த கலைத்துறைப் பிரிவுகள் எத்தனை எத்தனை இருந்தனவோ

அத்தனையிலும் அவர்கள் ஆழ்ந்த பாண்டித்யம் பெற்றிருந்தார்கள். ஆகவேதான் பாவலர் அவர்களை அவர்கள் காலத்து மக்கள் ஒரு நடமாடும் பல்கலைக் கழகமாகக் கருதினர்.

பௌத்தமும், சைவமும், வைணவமும், கிறித்தவமும், இஸ்லாமும் இதர உலக மதங்கள் அனைத்தும் வளர்த்த தத்துவங்களிலும், தத்துவ விசாரணைகளிலும் பாவலர் அவர்கள் தனிப்பெரும் ஞானம் பெற்றிருந்தார்கள். கணிதத்திலிருந்து சோதிடம் வரையிலும், ஆன்மீகத்திலிருந்து அரசியல் வரையிலும், சமூகம் சரித்திரத்திலிருந்து கலாச்சாரங்கள் வரையிலும் அவர்கள் பெற்றிருந்த பேரறிவு வியக்கத்தக்கதாக இருந்தது.

எனது தந்தையார் அவர்களை இவ்வாறெல்லாம் புகழ்ந்தவர்கள் - புகழ்கிறவர்கள் இம்மட்டோடு நின்றுவிடவில்லை: நிற்பதுமில்லை. பழுத்த மிகப் பெரும் தேச பக்தர் என்றும், மக்கள் நெஞ்சங்களில் சுதந்திரக் கனலை ஜுவாலையாக எழுப்பி விட்டவர்கள் என்றும், வாழ்வின் பெரும் பகுதியை தேச விடுதலைக்காக அர்ப்பணித்தவர்கள் என்றும் புகழ்வர்.

அறிவே உருவாகி வந்த மேதையென்பர் சிலர். தமிழின் காவலன் என்பர் வேறு சிலர். கவி ராட்க்ஷசன் என்றும், ஈவிரக்கமும் பாரபட்சமும் அற்ற தமிழ்க் கோடரி என்றும், விமர்சகர் என்றும், இலக்கிய இலக்கண பிரசங்க விற்பன்னர் என்றும், தமிழ்ப் புலவர் பரம்பரையின் பாதுகாவலர் என்றும், தமிழால் தாம் வாழாமல் தமிழுக்காய்த் தாம் வாழ்ந்தவர் என்றும், தமிழ் வல்லுனரை பிரஜைகளாகக் கொண்ட அந்தத் தனிப்பெரும் ராஜியத்தின் முடிசூடா மன்னரென்றும் புகழ்ந்தனர் இன்னும் சிலர். தமிழேதான் பாவலர் அவர்களென்றும் பாவலர் அவர்களேதான் தமிழ் என்றும் போற்றினர் மற்றும் சிலர். தமிழின் - தமிழ்ப் புலவர்மரபின், கௌரவத்தையும் கண்ணியத்தையும் மாண்பையும் போற்றி நிலைநிறுத்துவதில் பாவலர்கள் அவர்கள் கடைப்பிடித்த கண்டிப்பான கொள்கையையும் விட்டுக் கொடுக்காத தன்மையையும் வீறுப்பையும்

"செந்தாமரை" என்னும் புனைபெயருடைய திரு கே.பி.எஸ். ஹமீது, B.SC., B.L அவர்கள் பாவலர் பெருந்தகையின் மூன்றாவது புதல்வர். அகில இந்திய வானொலியில் 'புரோகிராம் எக்ஸிகியூட்டிவ்' ஆகப் பணியாற்றுகிறார்.

வீம்பையும் கண்டோர் பலர் பாவலர் அவர்களைக் காளமேகத்திற்கும் பிள்ளைப்பாண்டியனுக்கும் வில்லிக்கும் ஒட்டக்கூத்தருக்கும் சீத்தலைச் சாத்தனாருக்கும் நக்கீரருக்கும் ஒப்பிட்டனர். தமிழுக்காகப் பாவலர் அவர்கள் தங்கள் உற்றா உறவினரையும் சுற்றத்தாரையும் ஆருயிர் அன்பர்களையும் நண்பர்களையும் பிரமுகர்களையும் மேதைகளையும் இழந்துவிடச் சித்தமாக இருந்தனர்; இழக்கவும் செய்தனர்.

தமிழ்மேல் ஆர்வங் கொண்டிருந்தவர்களை எல்லாம் அரவணைத்து அவர்தம் நெஞ்சங்களில் எல்லாம் தமிழ்ப்பித்தை ஏற்றி வைத்தவர்கள் பாவலர் அவர்கள். அரைகுறையாகக் கற்று தமிழில் நுனிப்புல் மேய்ந்துவிட்டு அனைத்தையும் கற்றுவிட்டோமென்றச் செருக்கில் திரிந்தோரின் குட்டையெல்லாம் உடைத்துத் தலைகுனிய வைத்தவர்களும் அவர்கள் ஆவார்கள்.

"இந்தத் தலைமுறையில் மகாமதி பாவலர் அவர்களுக்கு தமிழ்த் துறையில் இருந்த நுண்ணிய அறிவும், அபூர்வப் புலமையும் வேறு யாருக்கும் இருந்ததில்லை; அவர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் தமிழ் மொழியின் வரலாற்றுச் சரிதம் இன்றுவரை ஈன்றெடுத்து வளர்த்துக்கொண்டிருந்த முதுபெரும் புலவர் பெரு மரபு இறந்துவிட்டது என்றுதான் அர்த்தம்" என்று பாவலர் அவர்களின் மரணச் செய்தி கேட்டுத் துயருற்ற ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தம் அனுதாபக் கடிதத்தில் குறிப்பிடும் அளவிற்குப் பாவலர் அவர்கள் தம் உயிர் நீங்கும் வரையில் தமிழ்ப் புலவருலகக் கிரீடத்தைச் சூடி இருந்தார்கள்.

சதாவதானம் சரவணைப் பெருமாள் ஐயங்காரின் காலத்திற்குப் பின்னர் இன்று

வரைத் தமிழ் நாட்டில் சதாவதானம் செய்து காட்டிய பெருமையைப் பாவலர் அவர்களன்றி வேறு யாரும் பெற்றதில்லை. 'யாவும் பாடிக் கோவைபாடு' என முத்தமிழ்த் துறையில் முறைபோகிய உத்தமர்கள் அச்சுறுத்தி எச்சரித்துக் கட்டளையிடும் கோவை நூலைத் தமிழ்ப் புலவர் பரம்பரையில் கடைசியாகப் பாடிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரின் கோடீச்வரக் கோவைக்குப் பின்னர் இன்னும் மூன்று கோவைகளைக் குறையறப் பாடித் தமிழுக்குச் சிறப்பளித்த பெரும் பெருமையும் பாவலர் அவர்களையே சாரும்.

இப்படியெல்லாம் பலவாருகத் தமிழ் நாட்டின் இலட்சக் கணக்கான தமிழன்பர்கள் புகழ்ந்தேத்தும் பெரும பேற்றிற்கு அருகதை உடையவர்களாக விளங்கிய என் தந்தையார் அவர்களின் கூர்த்த மதியினுக்கும் மகிமையினுக்கும் மூலகாரணமாக அவர்கள் வாழ்வில் கைகொடுத்து உதவியது அவதானக் கலையில் அவர்களுக்கிருந்த ஆற்றல் என்பர் ஒரு கூட்டத்தினர் மற்றொரு கூட்டத்தினரோ பாவலர் அவர்களின் பெரும் சீர்த்திக்கு வழிவகுத்தது தமிழில் அவர்களுக்கிருந்த ஆழ்ந்த புலமையென்பர். இவ்விரு கூட்டத்தினரின் கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் நிரூபிப்பது போன்று என் தந்தையார் அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை என் தந்தையார் அவர்களிடம் கணக்காயராக இருந்து ஊழியம் செய்து பின்னர் தசாவதானியாராகவும் தமிழ்ப் புலவராகவும் ஆகிய மாணுக்கர் ஒருவர் கூற நான் கேட்டிருக்கிறேன். எத்தனையோ தடவை இந் நிகழ்ச்சி என் ஓய்ந்த நேரங்களில் என் நெஞ்சத்திரையில் சித்திரமாக விரிந்திருக்கின்றது

என் தந்தையார் அவர்களுக்கிருந்த அதிசயிக்கத்தக்க நினைவாற்றல் அவர்கள் காலத் தலைமுறையில் வேறு யாருக்கும் இருந்ததாக யாரும் கூற நான் இதுவரைக் கேட்டதில்லை. அவர்களுக்கிருந்த அபார ஞாபக சக்தி இறைவனுல் அவர்களுக்கு அருளப்பட்ட வரப்பிரசாதமாக இருந்தது எனப் பலரும் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். தமிழின் காவலராகவும் தமிழ்ப் புலவர் மரபின் பாதுகாவலராகவும் விளங்கி வானம் அளந்தது அனைத்தும் அளந்த வண் மொழி வாழ வழிவகை செய்தவர்கள் அவர்கள் என்ருல் அதற்காக அவர்களுக்குத் துணை நின்றது அவர்களது இந்த பெரும் நினைவாற்றலும் பொன்ரு ஞாபக சக்தியுமே. தொல்காப்பியர் காலந் தொட்டு என் தந்தையார் அவர்கள் காலம் வரை தமிழ் கூறும் நல்லுலகில் உலவியும் நிலவியும் வந்த தமிழ் நூற்கள், காவியங்கள், காப்பியங்கள், பிரபந்தங்கள், இயல், இசை, நாடக சிருஷ்டிகள், ஏடுகள் எத்தனை எத்தனை இருந்தனவோ அத்தனையும் அழிந்துபட்டாலும் மறைந்துவிட்டாலும் தங்கள் உயிருள்ளவரையிலும் அவை அனைத்தையும் எப்பொழுது வேண்டுமாயினும் தாங்கள் மனப்பாடமாக எழுத்து, சொல், வரிகளாகக் கால்புள்ளியுடனும் முற்றுப் புள்ளியுடனும் மீண்டும் அப்படியே ஒப்புவிக்க முடியும் என மார்பு தட்டி நின்று பெருமிதத்துடன் தங்கள் நண்பர்களிடமும், தமிழன்பர்களிடமும், மேடைகளிலும், கூட்டங்களிலும் கூறியிருக்கிருர்கள். எந்த ஒரு நூலையும் ஒரு தடவைப் படித்து முடிக்கும்பொழுதே அந்நூலின் மற்ரெரு பிரதியை அவர்கள் தங்கள் மனத்திரையில் பகர்ப்பெடுத்து வைத்துக்கொள்வது வழக்கமாம். எத்தனை ஆண்டுகள் சென்ற பின்னருங்கூட அவர்கள் தங்கள் மனத்தகத்துப் பதித்து வைத்திருந்த நூலின் பகர்ப்பும் பதிப்பும் மறைந்துவிடுவதுமில்லையாம். கண்ணுல் ஒருமுறைப் படித்தவற்றை, காதால் ஒருமுறைக் கேட்டவற்றை அவர்கள் தங்கள் வாணுள் முழுவதும் மறந்ததே இல்லையாம். தமிழோ, ஆங்கிலமோ, பாரசீகமோ, அரபியோ, உரோமானிய மொழியோ எதுவாக இருப்பினும் அவ்வம் மொழிகளிலிருந்தும் ஆயிரமாயிரம் பக்கங்களாக இருப்பினும் ஒரே ஒரு முறை மட்டும் அவர்கள் முன்னிலையில் அவர்கள் காதில் விழும்படி படித்து முடித்துவிட்டு மீண்டும் படித்தவற்றை ஒப்புவிக்குமாறு அவர்களிடம் கேட்டால் அப்படியே ஒப்புவிப்பார்களாம். இத்திறன் அவர்கள் கேள்வி ஞானத்தின் பலதரப்பட்ட அம்சங்களில் ஒன்றையே விளக்குவதாக அமைந்துள்ளது தனித்து ஏகாந்தமாக இருக்கும் போதுமட்டுமல்ல, பலரோடு பேசிக்கொண்டு பல காரியங்களில் சிந்தையை ஈடுகொடுத்துக்கொண்டிருக்கும்போது கூட மேற்கூறியவாறு எதையேனும் படித்துவிட்டு

மீண்டும் ஒப்புவிக்கச் சொன்னால் ஒப்புவிக்கும் அளவிற்கு அவர்களது செவிப்புலனும் நுண்மாண் நுழை புலன்களும் தீச்சண்யமும் கூர்மையும் பெற்றிருந்தன. தமிழிலக்கிய இலக்கணங்களையும் இதர நூற்களையும் எழுத்தெண்ணிப் படித்த பெரும் புலவர்களுள் எல்லாம் முதலிடத்திற்கு அருகதையுடையவர்களாக அவர்கள் விளங்கினார்கள். எழுத்தெண்ணி மட்டும் அவர்கள் படித்திருந்தார்கள் என்றில்லை; எழுத்தின் – சொல்லின் – அடியின் - வரியின் - செய்யுளின் கருத்து. பொருள், நயம், சுவை முதலாய ஒவ்வொன்றையும் சுவைத்துச் சுவைத்தும் ரஸித்து ரஸித்தும் அலசி அலசிப் பகுத்துப் பகுத்தும் பிரித்துப் பிரித்தும், பாட பேதங்களையும் விரிவுரைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தும் அறிந்துணர்ந்தவர்கள் அவர்கள். எந்த நூலுக்காகவும் எந்த வாசகசாலையின் துணையையும் அவர்கள் நாடியதை என்றைக்குமே நான் கண்டதில்லை. அவர்களோடு நெருங்கிப் பழகிய நண்பர்களும் சீடர்களும் பார்த்ததுமில்லை. சங்க இலக்கியங்களோ காப்பியங்களோ இதர பெருங் காவியங்களோ தனிப் பாடல்களோ அவை ஒவ்வொன்றிற்கும் அவர்களின் மனத்தினுள் இருந்த இலட்சக்கணக்கான அறைகளுக்குள் பட்டியல்களிருந்தன. வரிசை வரிசையாக பாக்களின் முதற் குறிப்பு அகராதிகளும் இன்று நாம ஆங்கிலத்தில் சொல்கின்ற 'இண்டெக்ஸ்'களும் பாடபேத விளக்கங்களும் வரிசை வரிசைகளாகவும் மேல் கீழ் அடுக்குகளாகவும் இடம் பெற்றிருந்தன. இதனாற்றான் புலவர் பெருமக்கள் பாவலர் அவர்களின் புலமை கண்டு அஞ்சினர் போலும்? இக்காரணங்களினாற்றான் அவர்களை நடமாடும் பல்கலைக் கழகத்திற்கும் நூல் நிலையத்திற்கும் ஒப்பிட்டனர்போலும்? இத்தகைய அருஞ்சாதனைக் கைவரப் பெறுவதற்கு அவர்களின் அற்புத நினைவாற்றலும் அதியபூர்வ ஞாபக சக்தியும் கூர்த்த மதியும் காரணமாக இருந்திருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியாதல்லவா?

ஆரம்பத்தில் என் தந்தையார் அவர்களுக்கு அவதானம் என்ற கலையில் அணுவும் கூட நம்பிக்கை இருந்ததில்லையாம். அவதானம் செய்ய முடியும் என்று யாரேனும் சொல்லிக்கொண்டு அவர்களிடம் வந்தால், உடனே வந்தவரை ஒருவித பொய்ப் புரட்டுக்காரன் என்று நினைத்து விடுவது வழக்கமாக இருந்ததாம். இப்படி அவர்கள் நினைத்துக்கொண்டிருந்த காலத்தில்தான் அவர்களிடம் முதுகுளத்தூரைச் சார்ந்த கலியாணசுந்தரம் பிள்ளையென்பார் வந்து, கண்டபத்திரிகையில் தமக்குத் தேர்ச்சி உண்டென்று கூறினாராம். எனது தந்தையார் அவர்கள் விழுந்து விழுந்து சிரித்து அவரை ஒரு மாய்மாலக்காரர் என்றார்களாம். ஆனால் பிள்ளையவர்கள் கண்டபத்திரிகையைச் செய்து காட்டியபொழுது எனது தந்தையார் அவர்கள் ஆச்சரியப்படவில்லையாம். நேர்மாறாக மனிதனுக்கு அவதானம் செய்யும் ஆற்றலும் இருக்கத்தான் செய்கிறது என்று எண்ணினார்களாம். மறுகணமே எனது தந்தையார் அவர்களும் கண்டபத்திரிகை செய்து காட்டினார்களாம். அன்றிலிருந்து அவர்களின் ஐம்புலன்களும் அவர்களுக்கு வசப்பட்டன. மண்மீது வாழ்பவர்கள் புற உணர்வுகளையும் புலன்களையும் மட்டும் நீட்டித் தீட்டிக் கூர்மைப் படுத்தி விடுவதோடு நில்லாமல் மனிதனின் உள்ளுணர்வுகளையும் அவனின் உள்ளுக்குள்ளே மறைந்தும் புதைந்தும் இருக்கும் அதி அற்புத சக்திகளையும் தூண்டிவிட்டு ஒளியேற்றும் திறன் பெறவேண்டுமென்றும் எண்ணினார்களாம். அவர்களின் முயற்சியில அவர்கள் வெற்றியும் பெற்றார்கள். ஒரே சமயத்தில் நூறு காரியங்களைச் செய்யும் ஆற்றல் பெற்றிருந்த அவர்கள் மனத்தத்துவ சாஸ்திர ஆராய்ச்சி அபரிமிதமாக வளர்ந்துவிட்ட இன்றைய மேனாட்டவர் மத்தியில் வாழ்ந்திருந்தால் ஆயிரங்கோடி மனங்களைத் தன் ஒற்றைத் தனி மனத்தினுள் அடக்கி வைத்திருக்கும் அற்புத அதிசய மனிதர் இவர் என்று வியந்துரைத்திருப்பார்கள்.

மனத்தத்துவ நிபுணர்கள் மூக்கின் மேல் கை வைத்து வியக்கத்தக்க வண்ணம் எனது தந்தையார் அவர்களின் அடிமனத்தின் அடிமனம் எனப்படுகிற உள்மனத்திற்கும் உள்மன விதானத்திற்கு எல்லையென்பதொன்றே இல்லாதிருந்திருக்க வேண்டும் என்றுதான் நாம் ஊகிக்க வேண்டி இருக்கிறது. இந்தப் பின்னணியிலேயே எனது

தந்தையார் அவர்களின் பழம்பெரும் மாணுக்கரான காலஞ்சென்ற திருவாவடு துறை ஆதீன வித்வான், தசாவதானி ஆறு முகம் பிள்ளையவர்கள் தன் குருவின் வாழ் வில் நிகழ்ந்ததைப் பற்றி என்னிடம் கூறிய நிகழ்ச்சி என் மனத்திரையில் சித்திரமாக விரியும் போதெல்லாம நான் கூர்ந்து கவ னிக்கிறேன்.

எனது தந்தையார் அவர்கள் தங்கள் மனவறைக்குள் கட்டடங்கள் வகுத்தும், குறுக்கும் நெடுக்குமாகச் சிற்றறைகள் அமைத்தும் அவை ஒவ்வொன்றிலும் தமிழ்க் காவியச் செல்வங்கள் ஒவ்வொன் றிற்கும் பாட்டு முதற்குறிப்பு அகராதிகளை யும் முதலெழுத்துக்களுக்கான அட்டவணை களையும் உருவாக்கி வைத்திருந்தார்கள் என்று மட்டுமில்லை; ஒவ்வொரு பாடலுக் கும் செய்யுளுக்கும் அவற்றின் ஒவ்வொரு எழுத்துக்களுக்குங்கூட குறுக்கும் நெடுக்கு மாகவும், மேல் கீழாகவும், இடம் வலமாக வும் எழுத்தகராதி வரிசைப் பட்டியல்களும் ''இண்டெக்ஸ்''களும் தயாரித்து வைத்தி ருந்திருக்கிருர்கள் என்பது தசாவதானம் ஆறுமுகம் பிள்ளை அவர்கள் கூறிய நிகழ்ச் சியிலிருந்து தெரியவருகிறது.

தமிழ் வித்வான்கள், பண்டிதர்கள், புல வர்கள் முதலியோர் வளர்த்து வந்த முது பெரும் புலவர் பரம்பரையினரின் கையிலி ருந்து தமிழும் தமிழ்க் கலைகளும் தமிழ்ப் பத்திரிகைக்காரர்களின் கைக்கு வந்துவிடும் துர்ப்பாக்கியத்தை எட்டாதிருந்த காலம் அது. சென்னையில் தமிழ்ப் பேரறிஞர் அவையில் முதன் முதல் அவர்கள் செய்து காண்பித்த நூறு அவதானத்தின் போது அவர்களைச் சிறிது திணறவைத்த அவதா னம் காலஞ்சென்ற டி. கே. சி. அவர்கள் சோதித்தக் கண்டப்பத்திரிகை தாஜும். அக் கண்டப்பத்திரிகையோ ஐநூறுக்கும் மேற் பட்ட அட்சரங்களைக் கொண்ட பத்திரிகை யாக இருந்ததாம். அதையும் வெற்றிகர மாகச் செய்து அவையோரை வியப்பி லாழ்த்திவிட்டார்களாம்.

இற்றைக்கு ஐம்பத்தைந்து வருடங் களுக்கு முன்னர் நாஞ்சில் நாட்டில் கோட் டாற்றில் தமிழ் முஸ்லிம் பெருங்குடி மக்க ளின் மத குருவாகிய ஆற்றக் கோயா தங்கள் அவர்கள் முன்னிலையில் எனது தந்தையார் அவர்கள் சோடசாவதானம் செய்துகொண்டிருந்தார்களாம். அவதானி யார் அவர்களைக கண்டப்பத்திரிகையில் அப்போது சோதிக்க முன்வந்தவர் சேர நாட்டின் முதுபெரும் தமிழ்ப் புலவராகவும் நக்கீரராகவும் விளங்கிய தாழக்குடியைச் சேர்ந்த பிள்ளையவர்கள் ஆவார்கள். சோட சாவதானத்தில் தம் கண்டப்பத்திரிகையைத் தொடங்கியதும் "முதலடியின் இரண்டாம் எழுத்து தமிழ் வல்லின வரிசையில் ஒற்ற டுத்து வந்த ஒன்ரும்'' என்று ஒரே சமயத் தில் பதினுறு அவதானங்களைச் செய்து கொண்டிருந்த எனது தந்தையார் அவர் களின் காதில் படும்படி கூறிஞர்களாம் மகா வித்வான் பிள்ளையவர்கள். சிறிது நேரம் கழிந்த பின்னர் ''இண்டாம் அடியின் இரண் டாம் எழுத்தும் அஃதே'' என றனராம். எனது தந்தையவர்களோ ''முதலடியிலும் இரண்டாம் அடியிலும் தமிழ் வல்லின வரி சையில் முற்ற முற்ற ஒற்றடுத்து வரும் ஒற்றெழுத்துக்களைக் கொண்ட அடிகள் எத்தனையோ தாம் உளவாமே! நீவிர் அறி யீரோ?'' என அவதானத்திற்கிடையில் தமக்கே உரிய நகைச்சுவை ததும்பக் கேட் டார்களாம். உடனேயே பிள்ளையவர்களும் "முதலடியின் பதினுன்காம் எழுத்தும் தமிழ்ச் சிறப்பெழுத்து மூன்றனுள் ஒன்ரும்'' என்று தமக்கேயுரிய புலவர் நடையில் மொழிந்தனராம். மறுகணம் தானே முதற் பாவலராம் திருவள்ளுவர்தம் முப்பாற் குற ளில் வரும் 'சொலல் வல்ல'ராகத் திகழ்ந்து தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியமாக விளங் கிய பாவலர் அவர்களின் சொற்றிறனும், அவர்களது சொற்போரின் போது இயல் பாகவே பொங்கும் கிண்டலும் இடக்கும் வெளிவந்தன. ''நீவிர் தமிழை நும் நாக் கலப்பையால் உழுவீர் போலும்?'' என நையாண்டி தொனிக்கப் பிள்ளையவர்களை எனது தந்தையவர்கள் கேட்டார்களாம்.

நாஞ்சில் நாட்டில் வயல்களில் நிலம் உழுகையில் ஏர்பூட்டி, எருதுகளின் வால் முறுக்கி ஏரோட்டுகின்ற உழவர்கள் காளை! .... ற் .... ற் .... ற் ....காளை! ற்....என்று குரலெ ழுப்பிக் காளைகளை ஓட்டி வயல் உழுவது இன்றைக்கும் வழக்கம்.

"தமிழாகிய வயலில் நுமது நாவாகிய கலப்பை கொண்டு தமிழின் சிறப்பெழுத்தாகிய 'ற்' என்ற வல்லின ஒற்றெழுத்தை உச்சரித்து உச்சரித்து உழுவது நும்முடைய வழக்கம் போலும்?" என்று கிண்டலாகப் பிள்ளையவர்களைப் பார்த்துக் கேட்டபொழுது அவையிலிருந்த பண்டிதர்களும், வித்வான்களும், புலவர்களும், பிறரும் கொல்லென்று சிரித்தனராம். எனது தந்தையவர்களின் நகைச்சுவைப் பேச்சைக் கேட்டு ரஸித்தனராம். எனினும் அவர்கள் ஒருவரும் கண்டப்பத்திரிகைக்கும் நகைச் சுவைக்கும் இருந்த தொடர்பை அந்தக் கணத்தில் புரிந்துகொள்ளவே இல்லையாம். அர்த்தத்தை விளங்கிக்கொண்ட ஒரே நபர் பிள்ளையவர்களாகவே இருந்தாராம். பிள்ளையவர்களோ ஒன்றையும் புரிந்துகொள்ளாதவர் போல் தம் கண்டப்பத்திரிகையைத் தொடரலானார். "முதலடியின் பத்தாவது எழுத்தும் 'ற்' என்று சொல்லி முடிக்கும் முன்னர் அவதானியார், "வேண்டாம், நிறுத்துவீராக. நுமது கண்டப்பத்திரிகை யான் கண்ட பத்திரிகையாயிற்று" என்று ஒருவித இறுமாப்புடனும் தெம்புடனும் அங்கு தாம செய்துகொண்டிருந்த இதர அவதானங்களுக்கிடையே பதிலிறுததார்களாம்.

மகாவித்வான் பிள்ளையவர்களுக்கோ ஒருபக்கம் ஒரே திகைப்பு; ஒரு பக்கம் ஒரே ஆத்திரம். "என்னத்தைக் கண்டுவிட்டீர் நீவிர்?" என ஒரே ஆங்காரமாகக் கேட்டாராம்.

பிள்ளையவர்களின் ஆத்திரத்திற்குக் காரணம் இருந்தது. முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் இரண்டாம் எழுத்தும் முதலடியின் பதினுன்காம் எழுத்தும் 'ற்' ஆக வரும் குறள் திருவள்ளுவ நாயனாரின் திருக்குறளில் மட்டும்தான் வரமுடியும். தமிழ் இலக்கண இலக்கியங்களை எழுத்தெண்ணிக் கற்றுத் தேர்ந்திருந்த அவதானியாருக்கு தம் சோதனைகளுக்கிடையே கண நேரத்தில் அது தெரிந்துவிட்டதே!

அந்தக் குறளடியின் ஐந்தாம் 'ற்' ஆக வரும் இருபத்து மூன்றும் எழுத்தும் அவதானம் செய்துகொண்டிருந்த பாவலர் அவர்களின் மனத்திரையில் பளிச்சிட்டு வந்து காட்சியளித்துவிட்டது. ஆகவே கண்டப் பத்திரிகையை எழுதி வைத்து அவதானியாரை சோதித்துக்கொண்டிருந்த பிள்ளையவர்களின் கண்டப் பத்திரிகையின் விடையைக் கண்ணிமை மூடி விழிக்கும் நேரத்திற்குள்ளாக பாவலர் அவர்களின் மனவறைகள் கோத்தெடுத்து அவர்களின் அகக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தின. திருக்குறளின் குறட்பாக்கள் அத்தனைக்குமான முதற் பாட்டகராதியின் முதலெழுத்து அகராதி குறட்பாக்கள் ஒவ்வொன்றிற்குமுள்ள ஒவ்வொரு எழுத்துக்களுக்குமான அகராதி வரிசையும் பாவலர் அவர்களின் உள் மனத்திற்கும் உள் மனத்திற்குள்ளே ஏற்கனவேயே எந்தக் காலத்திலோ பதித்து வைக்கப்பட்டிருநதன. பிள்ளையவர்கள் பதினுன்காம் எழுத்து இன்னதென மூன்றும் முறையாகக் கூறிய அக்கணத்திலேயே என் தந்தையார் அவர்களுக்குக் கண்டப் பத்திரிகையின் விடை தெரிந்திருக்கவேண்டும். கண்டப் பத்திரிகை மிக எளிதானதாகவும் அவர்களுக்குப் பட்டிருக்க வேண்டும். அந்த மகிழ்ச்சியிலேயே அவர்கள் நகைச் சுவை ததும்ப "நீவிர் தமிழை நும் நாக்கலப்பையால் உழுவீர் போலும்?" என்று கேட்டிருக்க வேண்டும்.

இரண்டு 'ற்' கள் மூன்று 'ற்' கள் எட்டு 'ற்' கள் வருகின்ற குறட்பாக்கள் திருக்குறளில் எத்தனையோ இருக்கின்றன. இத்தகைய குறட்பாக்கள் எத்தனை இருக்கின்றன என்று துல்லிபமாக இந்தத் தலைமுறையைச் சார்ந்த நம்மில் யாருக்கும நினைதத மாத்திரத்தில் அறுதியிட்டுச் சொல்ல இயலாது. இதற்கென்று இரண்டு வருட ஆராய்ச்சி மாணவனாக இருந்து இரவு பகலாக இந்தக்காலத்தில் நாம ஆராயவேண்டி இருக்கும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

குறட்பாக்களை மனனம் பண்ணி வைத்திருப்பவர்களுக்குக்கூட எடுத்துக் காட்டாக மேலே குறிப்பிட்டிருக்கும் முதற்குறளின் இரண்டாவது அடியில் இரண்டாவதாக வரும் சொல்லிலுள்ள 'ற்' எத்தனைவது எழுத்து என்று கேட்டால் உடனடியாகச் சொல்ல முடியாது. எண்ணிப் பார்த்து ஆறும் எழுத்து என்பர். அந்தக் குறளில் எத்தனை 'ற்' கள் இருக்கின்றன என்று கேட்டாலும் எண்ணிப் பார்த்த பின்னரே எட்டு 'ற்' கள் என்பர். இவ்வாறே மேலே குறிப்பிட்ட குறள் ஒவ்வொன்றிலுமுள்ள 'ற்' களைப் பற்றிக் கேட்கும் போதெல்லாம் எழுத்துக்களையும் 'ற்' களையும் எண்ணிப் பார்க்கத் தொடங்குவர். ஆனால் பதினாறு அவதானங்களையும் ஒரே நேரத்தில் செய்து கொண்டிருந்த எனது தந்தையார் அவர்களோ குறட்பாவின் முதலடியின் பதினான்காம் எழுத்து 'ற்' என்று தெரிந்த உடனேயே அக்குறட்பாவின் எஞ்சிய மூன்றும் ஐந்தாம் 'ற்' களை தாம் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆயிரத்து முன்னூற்றி முப்பது அருங் குறட் பாக்களுக்குள்ளும் பதினான்காம் எழுத்தை 'ற்' ஆகக் கொண்டுள்ள குறட்பா இன்னதுதான் என்பதை அவதானியார் அவர்கள் அரைநொடியில் தெரிந்து கொண்டுவிட்டார்கள்.

இங்கே தான் எனது தந்தையார் அவர்களின் புலமைக்கும், ஞானத்துக்கும், கூர்த்த மதியினுக்கும், மகிமைக்கும், மாட்சிக்கும், சீர்த்திக்கும் துணை நின்றவை தமிழை ஒட்டி வளர்ந்த அவதானக் கலையில் அவர்களுக்கிருந்த தேர்ச்சியும் தமிழில் அவர்களுக்கிருந்த ஆழ்ந்த பயிற்சியும் ஆகும் என்று துணிந்து கூற இடமிருக்கிறது. அபரிமிதமான நினைவாற்றலும் அசாதாரணமான ஞாபக சக்தியும் பெறுதற்கரிய புலமையும் நினைத்தற்கரிய அவதான ஆற்றலும் அவர்களுக்குத் தமிழ்ப் புலவருலகில தனியிடம் தேடித் தந்திருக்கின்றன.

கண்ணிழந்தோரை உய்விக்க வந்த மேலை நாட்டு மூதாட்டியும் சீமாட்டியுமான டாக்டர் ஹெலன் கெல்லர் என்ற அம்மையாரின் நுண்ணிய புலனறிவை மெச்சாதவர்கள் கிடையாது. கண் பார்வை இல்லாத அந்த அம்மையார் மலரொன்றின் மணத்தை வைத்துக்கொண்டே இது இன்ன மலர் என்று சொல்லிவிடுவார்களாம். இதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை என்னலாம். கண் செய்யவேண்டியதை மூக்கு செய்கிறது என்று கூறி விடுவோம். எனினும் மணமே இல்லாத ஒரு மலரை இன்ன நிறமுடையது என்று கண்ணொளி அற்றவர்களால் கூறி விட முடியுமா? ஆனால் ஹெலன் கெல்லர் அம்மையாருக்கு அது என்ன நிறமுடைத்து என்று கூறிவிட முடியுமாம். அந்த விந்தையினும் விந்தையை நினைத்து மூக்கின் மேல் விரலை வைத்து வியக்கலாம். ஆனால் கண் செய்வதை மூக்கும், மூக்கு செய்வதைக் காதும், இவை மூன்றும் செய்வதை நாக்கும், இவை எல்லாமாக இணைந்து செய்வதை மெய்யும் செய்துவிடக் கூடுமென்று இன்றைய விஞ்ஞான உலகம் ஒப்புக்கொள்கிறது. இத்தகைய அமானுஸ்யத் தன்மை முழுக்க முழுக்க கைவரப்பெற்றிருந்த என் தந்தையார் அவர்கள் சோடசாவதானம செய்து கொண்டிருந்தபொழுது 'நும் கண்டபத்திரிகை யான் கண்ட பத்திரிகைதான்' என்று மொழிந்த பின்னருங் கூட ஆத்திரத்துடனும் ஆங்காரத்துடனும் மகாவித்வான் பிள்ளையவர்கள் மடிபிடித்து விடை கேட்பது போன்று, "அங்ஙனமாயின் நீர் கண்ட பத்திரியைத் தான் கூறுமே" எனத் துடுக்காகக் கேட்டார்களாம். சோடசாவதானியார் அவர்களோ மீண்டும் தனக்கே இயல்பாகவுடைய குறும்பும், கிண்டலும், நையாண்டியும், நகைச்சுவையும் நிறைந்த பாணியில் பதில் தந்தார்களாம்

அஞ்சிற்கொள் வாசகமொன் றுண்டே
அருமறையில்
நெஞ்சிற்கொள் வீரலை தறிந்து.

என மற்ற அவதானங்களுக்கிடையில் கண்டபத்திரிகையின் விடையைக் குறள் வடிவில் யாத்துக் கொடுத்தார்களாம் என் தந்தையார் அவர்கள்.

விஷயம் புரியாமல் திகைத்தபடி "இது வன்று என் கண்டப்பத்திரிகைக்குறள்" என்று மகாவித்வான் பிள்ளையவர்கள் மறுத்தபொழுது அவதானியார் அவர்கள் விளக்கம் தரும் முறையில் இலக்கிய நயமும் சுவை

யும் மிக்க இனிய சொற்பொழிவொன்றையே நிகழ்த்தி இருக்கிறார்கள்.

ஐந்து 'ற்' களையுடைய அழகிய குறட்பாவொன்று அருமறையாகிய தமிழ் மறையில் இருக்கின்றது. அதன் பதினைன்காம் எழுத்தும் இருபத்து மூன்றும் எழுத்தும் 'ற்' களாகும். அதுவே:

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

இக்குறளை ஐந்து வயது முதற்கொண்டே நெஞ்சில் பதித்திட வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்றெல்லாம் ஐந்திற் கொள்ளவேண்டிய கல்வியைப் பற்றியும் ஐந்து 'ற்' கொண்ட குறட்பா பற்றியும் அருமையான பிரசங்கம் ஒன்றையே நிகழ்த்தி முடித்தார்களாம். மகாவித்வான் பிள்ளையவர்கள் அப்படியே அகமகிழ்ந்து சொக்கிப்போய் அவதானியார் அவர்களை உறத் தழுவ எழுந்து நின்றார்களாம். மீண்டும் அவதானியார் ஐந்து வயதில் நெஞ்சம் முழுதும் நிரப்பி வைக்கவேண்டிய "சிவாய நம" என்ற மந்திரமும் ஒன்றுண்டு என்று, "அஞ்சிற்கொள் வாசகமொன் றுண்டே" என்ற புதுக் குறளுக்கு வியாக்கியானம் தந்தபொழுது பழுத்த சிவ பக்தராகிய மகா வித்வான் பிள்ளையவர்கள் ஆனந்தப்பெருக்கீட்டால் தமது இரு கரங்களையும் மேல் நோக்கி உயர்த்தி, 'பேஷ், பேஷ்' என்று துள்ளத் தொடங்கிவிட்டார்களாம். அவையிலிருந்தோர் எழுப்பிய கரகோஷம் ஓய்ந்தடங்க எத்தனையோ நிமிடங்கள் ஆயிற்றும். இந்த ஒரு நிகழ்ச்சியை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் எனது அரும் பெரும் தந்தையார் அவர்களின் பாத தூசிக்குங்கூட நிகராகமுடியாத என்னையும் இந்தத் தலைமுறையினரையும் நான் நினைத்துப் பார்க்கிறேன். ரஸிகமணி டி. கே. சி. அவர்களின் அனுதாபக் கடித வரிகளுள் அடங்கியுள்ள உட்கருத்தையும், அங்கலாய்ப்பையும் எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன். தமிழையும் தமிழ் கூறு நலவுலகின் எதிர்காலத்தையும் என்னையறியாமலே எண்ணவும், எண்ணி ஏங்கவும் செய்கின்றேன்.

★

★ கள்ளைக் குடியாதே ★

கள்ளைக் குடியாதே, ஐயா நீ
    கள்ளைக் குடியாதே.

கொள்ளை வியாதிமிகும்
    கொண்ட வறிவழியும்
சள்ளை மலிந்தபல
    சங்கடங்கள் சூழ்ந்துவரும் (கள்ளை)

மான மழிவாகும்
    மதிப்புக் குறைவாகும்
ஈன மலிவாகும்
    இடரோ பெருகிவிடும் (கள்ளை)

உற்ற பொருளழியும்
    ஊரார் பகைவளரும்
குற்ற மிகுந்தபல
    கூடா வொழுக்கமுறும் (கள்ளை)

பெண்டுபிள்ளை தாயென்ற
    பேத மறியாமற்
கண்டபடி திட்டிக்
    கலகமிட நாட்டமிகும் (கள்ளை)

பித்தம் பிடித்தலையும்
    பேய்ப்பட்டி போலுமெத்த
சித்தத் தியக்கேற்றி
    சீரழிவி லாழ்த்திவிடும் (கள்ளை)

தந்தைதாய் சுற்றமெலாஞ்
    சஞ்சலத்தி லாழவெகு
நிந்தைத் துயருறுத்தி
    நிருமூல மாக்கிவிடும் (கள்ளை)

கண்சுழல வாயுளறக்
    கைகால் தடுமாற
மண்சுழல விண்சுழல
    மாய மயக்களிக்கும் (கள்ளை)

— *சதாவதானி பாவலர்.*

பாவலரின் தமிழ்த் தொண்டு

பேராசிரியர் ஆர். வீரபத்திரன், M. A., L. T.,
கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம்.

பரத கண்டத்தின் தென் கோடியில் அமைந்துள்ள நாஞ்சில் நாடு சங்க காலம் முதல் இன்றளவும் தமிழ் வளம் கொழிக்கும் சால்புடன் விளங்குவதைப் பலரும் அறிவர். சங்க இலக்கியங்களில் சிறப்பிக்கப்படும் அதிகமான்களும், நாஞ்சில் வள்ளுவனும் இந்நாட்டை ஆண்ட பெருமைக்கு உரியராவர். நாஞ்சில் நாட்டிலுள்ள பூதப்பாண்டி என்ற ஊருக்கு அப்பெயர் தோன்றக் காரணமாக இருந்த பூதப்பாண்டியனும், அவன் இறந்தபோது உடனுயிர் நீத்த அவன் தேவியும் பாடிய பாடல்கள் அகம் புறம் ஆகிய தொகைநூல்களில் மிளிர்கின்றன. சங்கப் புலவர்களில் ஒருவரான ஔவையாரும் இந்நாட்டோடு தொடர்புடையவராவர். திருவிசைப்பாப் பாடிய ஞானச் செல்வர்களில் ஒருவரான வேணாட்டடிகள் நாஞ்சில் நாட்டின் பகுதிகளை ஆண்ட சேரகுலச் செம்மல் என்று கருதப்படுகின்றூர். இந் நல்லிசைப் புலவர்களுக்குப் பின்னரும் பல கவிஞர்கள் அந்நாட்டில் தோன்றித் தமிழ்த்தொண்டு புரிந்துள்ளனர். கன்னியாகுமரி, சுசீந்திரம், சோழபுரம் முதலிய ஊர்களிலுள்ள திருக்கோவில்களில் பொறிக்கப்பட்டிருக்கும் பாவடிவில் அமைந்த கல்வெட்டுக்களும், இறைவன் துதியாக அமைந்த சுசிந்தை மாலை முதலிய சிறு நூல்களும், திவான் வெற்றி, செண்பகராமன் பள்ளு என்பனவும் இவர்களால் இயற்றப்பட்டனவாம். கோட்டாற்றைச் சார்ந்த இளம் பெருமானுர் என்ற புலவர் பாடிய பாடலொன்று திருச்சியை அடுத்த செந்தலை என்னும் ஊரிலுள்ள சிவன் கோவில் கல்வெட்டில் காணப்படுகிறது.* மேற்குறித்த புலவர் பரம்பரையில் சென்ற பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் மூன்று பேரறிஞர்கள் தோன்றி, நாஞ்சிலின் பெருமையை நாடறியச் செய்ததோடு தமிழ் மொழிக்கும் தகைசான்ற தொண்டு புரிந்துள்ளார்கள். அன்னோர் அறிஞர் கெ. என். சிவராஜ பிள்ளை அவர்களும், கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும், சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களுமம் ஆவர்.

திரு சிவராஜ பிள்ளை அவர்கள் தமிழிலக்கிய இலக்கணங்களில் அழுத்தமான ஞானமும் ஆராய்ச்சி வன்மையும் படைத்தவர்கள். தமிழிற் போலவே ஆங்கில இலக்கியங்களிலும் நிறைந்த புலமை வாய்ந்தவர்கள். அவ்விரு மொழிகளிலும் திட்ப நுட்பம் செறிய எழுதும் கட்டுரை வன்மையும் அவர்கள் பெற்றிருந்தார்கள் அவர்கள் இயற்றிய பண்டைத் தமிழர்களின் கால அடைவு (chronology of the Early Tamils) புறநானூற்றின் பழமை, தமிழ் நாட்டில் அகஸ்தியர் (Aghastiya in the Tamil land) முதலிய நூல்களும், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை பதிப்பித்த மனோன்மணீய நாடகத்துக்கு அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சி முன்னுரையும் தமிழுலகுக்கு அவர்கள் வைத்துப்போன எய்ப்பில் வைப்புக்கள் என்பதில் ஐயமில்லை. மேலும் அவர்களது "கம்பராமாயண கௌஸ்துப மணிமாலை", "நாஞ்சில் வெண்பா" என்னும் கவிதை நூல்களும் பேரறிஞர் போற்றும் பெருமை வாய்ந்தனவாம்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் ஓர் பிறவிக் கவிஞர். அவர்கள் தம்மிடம் இயற்கையிலே அமைந்திருந்த கவிதை உணர்ச்சியை தமிழிலக்கிய இலக்கணப் பயிற்சி மூலமும், ஆங்கிலக் கல்வி மூலமும் வளமும் வனப்பும் உடையதாகச் செய்துகொண்டார்கள். அதன் பயனுய் ஆங்

* சேரனும் செந்தமிழும் – பக்கம் 126

கிலக் கவிதைகளில் கண்ட அரும் பொருளே யும் அமைப்பையும் தமிழ்க் கவிதைகளில் ஏற்றிப் புதிய நெறியிலே இனிமையும் எளி மையும் வாய்ந்த பல பாடல்களை இயற்றினர் கள். அவர்களது தொண்டால் தமிழ் மொழி யில் குழந்தை இலக்கியம் இல்லாதிருந்த குறை அகன்றது. கவிமணியவர்கள் கல் வெட்டாராய்ச்சியிலும் ஆர்வம் உடையவர் கள். தென்னிந்திய வரலாற்றை எழுது வதற்கு அவர்களது ஆராய்ச்சி முடிவுகள் பயன்படுவனவாம். அவர் இயற்றிய "மல ரும் மாலேயும்," "ஆசிய ஜோதி" முதலிய நூல்கள் தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் எந்நாளும் கற்றுப் பயனடைதற்குரிய இலக் கியச் செல்வங்களாகும்.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் தனித்தமிழ் வித்தகர். அவர்களது கல்வியும் கேள்வியும் பழைய மரபினைப் பின் பற்றி ஆழ்ந்தும் அகன்றும் அமைந்தன. அவர்கள் சங்க இலக்கியங்களேயும் பிற்கால இலக்கியங்களேயும் ஐயம்திரிபற மிக நுட்ப மாகக் கற்றுத் தேர்ந்தார்கள். அரிய நினை வாற்றல் படைத்த பாவலர் உள்ளத்தில் அவர்கள் கற்ற கவிதைகளும் இலக்கியங் களும் மங்காது சுடரொளி வீசிக்கொண்டி ருந்தன. எனவே பழைய இலக்கியக் கரு விலே தமது புதிய கருத்துக்களே உருக்கி வார்த்துக் கவிதை புனைவது அவர்களுக்கு மிகச் சுலபமாக அமைந்தது. அவர்களியற் றிய நூல்கள் அவர்களது தமிழிலக்கியப் பயிற்சியையும், பாவன்மையையும், கற்பனே வளத்தையும், இலக்கணப் புலமையையும் பறையறைந்து சாற்றுகின்றன.

பாவலர் பாடிய நூல் வகைகளில் கோவை ஒன்ருகும். அகப்பொருள் பற்றிய அப்பிரபந்தம் தலேவனும் தலேவியும் முதன் முதலாகக் காண்கிற காட்சி முதல் பரத்தை யற் பிரிவு ஈருக நானூறு கட்டளேக் கலித் துறைப் பாடல்களால் அந்தாதியாகப் பாடப் படுவது. தமிழ் மொழியில் கோவை நூல் ஏறக்குறைய ஒன்பதாம் நூற்ருண்டளவில் முதன் முதலாகத் தோன்றத் தொடங்கியது. அதற்கு முன்புள்ள சங்க இலக்கியம் முத லியவற்றில் அகப்பொருள் செய்திகள் கூறப்பட்டிருப்பினும், அவை ஒவ்வோர் துறை பற்றித் தனித்தனிப் பாடல்களாகப் பாடப்பட்டுள்ளனவே யன்றி நாடக இயல்பு புலப்படும் வண்ணம் ஒன்ருேடொன்று பிணைத்துக் கோவையாகப் பாடப்படவில்லே. தொல்காப்பியரும் அகப்பொருள் பாத்திரங் களின் கூற்றுக்களே ஒருசேரத் தனித்தனிச் சூத்திரங்களில் கூறுகிருர்: கோவை நூல் களிற்போல அவற்றை முறைப்பட அமைத் துச் சித்திரித்துக் கூறவில்லே. கோவை நூலே முதன் முதலில் பாடிய புலவர் மணி வாசகப்பெருமானவர். அவர் பாடிய திருச் சிற்றம்பலக் கோவையார் சிற்றின்பச் சுவை யும் பேரின்பக் கனிவும் ஊற்றெடுத்துப் பெருகுவதாய் அமைந்துள்ளது. அவர் பேரின்பமாகிய பக்தி அனுபவ மருந்தைச் சிற்றின்பமாகிய வெல்லத்திற்குள் பொதிந்து காட்டி, மக்கள் கண்ணேயும் கருத்தையும் கவர்ந்து, ஆர்வத்துடன் அருந்தப்பண்ணி, அவர்களே நிலேயாத உலக வாழ்க்கைக் கடலினின்றும் கரை யேற்றி, நிலேத்த வீட்டுலக நெறியிலே உய்க்க விழைகின்ருர். திருக்கோவையா ரைப் பின்பற்றிப் பல புலவர்கள் கோவை பாடும் முயற்சியில் தலேப்பட்டனர். ஆனல் ஆழ்ந்த பக்தி அனுபவமின்றிப் புலமை ஒன்றேயுடைய அப்புலவர்களுக்குத் தமது நூல்களால் மக்களுக்கு முக்தி நெறிகாட்டு தல் இயலாதாயிற்று. எனவே அந்நூல் களில் இலககியச் சுவை மட்டுமே எஞ்சி யது. இலக்கிய நயம் மிக்க கோவைகளில் பொய்யாமொழிப் புலவர் இயற்றிய தஞ்சை வாணன் கோவை சிறப்பு வாய்ந்ததாகும். நமது பாவலர் அவர்களும் மூன்று கோவை நூல்கள் பாடியுள்ளார்கள் அவை முஸ்லிம் வள்ளலான ஷம்சுத்தாசீன் என்பாரைப் பற்றி அமைந்த **ஷம்சுத்தாசீன் கோவையும்,** திருவிதாங்கூரின் திவானக அமர்ந்து எண் ணற்ற நன்மைகளே மக்கட்குப் புரிந்த சசி வோத்தமர் ஸர் சி. பி. ராமசுவாமி அய்யர் மீது பாடிய **சசிவோத்தமக் கோவையும்,** வள்ளல் அழகப்பச் செட்டியார் மீது பாடிய **அழகப்பக்கோவையும்** ஆகும். இந்த மூன்று நூலகளும் தஞ்சைவாணன் கோவைக்கு எவ்வகையிலும் இளேக்காத வனப்புடன் பாவலர் அவர்களின் அரும் புலமையைக் குன்றின்மேலேற்றிய தீபம் போன்று ஒளி விளங்கச்செய்கின்றன.

பாவலர் அவர்கள் சிறந்த நாவலருமா வர். கேட்பாரைப் பிணிக்கும் வகையில்

நயம்படப் பேசும் நாவன்மை படைத்தவர்கள். "சொல்லின் செல்வர்'' என்று அவர்களைக் குறிப்பிடுவது சாலப் பொருந்துவதாகும். அவர்களது உள்ளத்தின் தெளிவால் மொழியும் தெளிவுபெற்றிலங்கியது. பேசும் பொருளைக் காரணகாரிய முறைப்படி நிரல்பட வகுத்து இனிமையாகப் பேசும் ஆற்றல் அவர்களிடம் அமைந்திருந்தது. பேசும் பொருளில் அவர்கள் மனம் தோய்ந்து நிற்றலால் அவர்களது மொழியில் அற்புதமான காந்தவேகம் பிறந்து விடுகிறது. தாம் பேசும் பொருள் எவ்வளவு அரியதாக இருப்பினும் அதனைக் கல்லாதாரும் எளிதில் உணர்ந்து மனம் கொள்ளும் வகையில் பக்குவம் செய்து வழங்குவது அவர்களிடம் காணப்பட்ட தனிச் சிறப்பாகும்.

மகாத்மா காந்தி சுதந்திர இயக்கத்தைத் தோற்றுவித்து ஆங்கில அரசாங்கத்தோடு அறப்போர் நிகழ்த்திய காலங்களில் பாவலர் அவர்களும் அவ்வியக்கத்தில் ஈடுபட்டு நாஞ்சில் நாட்டு மக்களை அதில் தூண்டிவந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் ஆற்றிய மேடைச் சொற்பொழிவுகள் மக்கள் உள்ளத்தில் சுதந்திரக் கனலை எழுப்பி, ஆட்சியாளரின் அடக்குமுறைக்கும் அஞ்சாது நாட்டு விடுதலையின் பொருட்டு அரிய தியாகங்களை மக்கள் புரியுமாறு செய்தன.

பாவலர் அவர்களின் இலக்கியச் சொற்பொழிவுகள் இலக்கிய ரஸிகர்களுக்கு இன் சுவை விருந்தாக அமைந்தன. திருக்குறள், கம்பராமாயணம், சீறாப்புராணம் முதலிய இலக்கியங்களைக் குறித்து அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் அப்பெருநூல்கள் ஒவ்வொன்றிலும் தம் வாழ்வு முழுவதையும் செலவிட்டுக் கற்ற பண்டிதர்களையும் வியக்க வைப்பதாக இருக்கும். ஒருமுறை அவர்கள் திருக்குறள் கடவுள் வாழ்த்தின் முதற் செய்யுளான "அகர முதல வெழுத்தெல்லாம்'' என்று தொடங்கும் குறளுக்கு உரையும், விளக்கமும், நயமும் கூறத்தொடங்கி இரண்டு மணி நேரத்திற்கு அதிகமாக விரித்துரைத்து அவையோரை மகிழ்ச்சிக் கடலில் திளைப்பித்ததாகக் கேள்வியுற்றிருக்கிறேன். "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்குமெனின்'' என்ற குறளுக்கு அவர்கள் கூறும் விரிவுரையைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு ஒரு சமயம் மிக அருமையாக அமைந்தது. ஒரு சொல் பொய்யேயாயினும் அது குற்றமற்ற நன்மையை விளைக்குமாயின் வாய்மையின் பாற்படுவதாக ஆன்றோர்களால் மதிக்கப்படும் என்ற சாதாரணப் பொருளை விரிவாக விளக்கிக் கூறிவிட்டுப் பின்னர் நயங்காணத் தொடங்கினார்கள். ஒரு பொய்ம்மைச் சொல் அது பொய்யிலிருந்து பிறந்த காரணத்தால் பிறர்க்கு நன்மை பயத்தல் அரிது. "நன்மை பயக்கும் எனின்'' என்ற இடத்தில் அமைந்த உம்மையால் இக்கருத்தை வள்ளுவர் குறிக்கின்றார். ஒருககால் அது நன்மை பயப்பதாக இருப்பினும் அது புரைதீர்ந்த நன்மையாக அமைதல் அரிதினும் அரிது. வள்ளுவர் கருத்தின்படி ஒரு பொய்ச் சொல் ஏதேனும் ஒரு சிறு நன்மையை ஒருவனுக்குப் பயந்துவிட்டால், அக்காரணத்தால் அது வாய்மைச் சொல் ஆகிவிடமாட்டாது. அந்நன்மை யாவரும் அங்கீகரிக்கும் வகையில் புரைதீர்ந்த நன்மையாய் அமையவேண்டும். ஒருவனுக்கு ஏதேனும் சிறிதளவு நன்மையைத் தருவதாகத் தோன்றும் அப் பொய்ச்சொல் வேறு ஒருவர்க்கோ பலர்க்கோ பெருந்தீங்கை விளைவிப்பதாகவும் இருக்கலாம். இவ்வகைப் பொய்ச் சொல் ஆன்றோர்களால் வாய்மை என அங்கீகரிக்கப்படமாட்டாது. எத்தகைய சிறிய தீமையையும் எவர்க்கும் எந்நாளும் விளைக்காததாய், ஆனால் பலர்க்கும் பெரு நன்மை அளிப்பதாய் ஒரு பொய்ம்மைச்சொல் இருக்குமானால் அதுவே வாய்மைச்சொல் போல மதிக்கப்படும் என்பது வள்ளுவர் கருத்தாகும். அத்தகைய புரைதீர்ந்த நன்மை பயக்கும் பொய்மைச் சொல்லையும் வாய்மை என்று கூறிவிடுவதற்கு வள்ளுவரின் அறவுணர்ச்சி நிரம்பிய தூய உள்ளம் ஒப்பவில்லை. புரைதீர்ந்த நன்மையே தரினும் பொய் பொய்தானே! அக்களங்கம் அச்சொல்லில் நீங்காத வடுப்போல அமைந்து தானே இருக்கிறது! எனவே அதற்கு மெய்ம்மை போன்று திகழமுடியுமா? மெய்ம்மைக்குரிய தூய தனி இருக்கையில் அதற்கு இடம் உண்டா? வேண்டுமானால் மெய்யின் அருகாமையில் ஓர் இடத்தை அளிக்கலாம். அதுவும் எப்பக்கத்தில்? மேன்மையைச் சுட்டும் வலப்பக்கத்திலா? இல்லை; இல்லை. வலப்

பக்கத்தை அளிப்பதற்கு வள்ளுவர் உள்ளம் மறுக்கிறது. எனவே, வாய்மையின் இடப் பககத்தில் அதற்கோர் இடம் ஒதுக்குகிருர். புரை தீர்ந்த நன்மை பயக்கின்ற பொய்ம் மைக்குங்கூட வாய்மையின் இருப்பிடத் திலோ, சிறப்புக்குரிய அதன் வலப்பக்கத் திலோ அமர்வதற்குரிய தகுதியில்லை. சிறப் பில்லாத இடப்பக்கத்தில் இருப்பதற்குள்ள சற்றுத் தாழ்ந்த நிலேயே அதற்கு உள்ளது. இக்கருத்துக்களையெல்லாம் "வாய்மை இடத்த" என்ற சொற்றெடரில் பொதிந்து வைத்து நுழைபுலமுடையார் உய்த்துண ரும்படி வள்ளுவர் குறளை அமைத்துள்ளார்.

மேற்கூறிய கருத்தைப் பாவலர் அவர் கள் தம் கைவந்த விவாதத் திறமையுடன் சொல் நயம் ததும்ப விரித்துறைத்தபோது அங்கிருந்த மக்கள் அனைவரும் கைகொட்டி, அவர்களது மேதையைப் புகழ்ந்து போற்றி ஞர்கள்.

பாவலர் அவர்களின் அரிய விவாதத் திறமையே அருட்பா - மருட்பாப் போரில், அவர்கள் இராமலிங்க வள்ளலார் சார்பாக நின்று, அடிகளது நூலின் அருமை பெரு மைகளை அறிஞர்கள் முன்னிலையில் விளக் கிக் காட்டி, அது அருட்பாவே என்று நிலை நாட்டத் துணைபுரிந்தது.

பாவலர் அவர்கள் அவதானம் புரியும் அருந்திறல் வாய்ந்தவர்கள். அவர்களது மேதை அவர்கள் நிகழ்த்திய அவதானத் தால் வீறுபெற்றுயர்ந்ததெனலாம். அவதா னிகளில் அஷ்டாவதானி, தசாவதானி, சதாவதானி எனப் பல நிலையினர் உளர். சதாவதானியாக விளங்குபவர்கள் ஒரு தலை முறைக்கு ஒருவர்கூடக் காணப்படுதல் அரிது. நூறு செயல்களில் ஏக காலத்தில் கருத்தூன்றி, அவை பற்றி அரிய கேள்வி கள் கேட்கும் பேரறிஞர் குழாம் உவக்கும் வண்ணம் விடை பகர்ந்து சதாவதானி என் னும் மாபெரும் பட்டத்தைச் சூடிய பாவலர் அவர்களை ஓர் **அவதார புருடர்** என்று பாராட்டுவது பொருத்தமன்ருே?

பாவலர் அவர்களின் தொண்டால் நாஞ்சில்நாடு தமிழ் வளம் பெற்றுள்ளது. அவர்களிடம் கல்வி கற்றுப் புலமை எய்தி ஞேர் பலராவர். அவர்களுள் தசாவதானி ஆறுமுகம் பிள்ளை, முதுபெரும் புலவர் சாஸ் தாங்குட்டிப் பிள்ளை, பறக்கை மாணிக்க வாசகம் பிள்ளை, வித்வான் மாடசுவாமி ஆகி யோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவரும் பாவலர் அவர்களின் மாணக்கர் என்று தம்மைக் கூறிக்கொள்வதில் எப்பொ ழுதுமே பெருமையடைகின்றனர். இவர்க ளில் ஆறுமுகம் பிள்ளை அவர்கள் தசாவதா னம் புரிவதில் வல்லவர்கள். திருவனந்த புரத்தில் நீதிபதி சேஷையர் தலைமையில் அவர்கள் நிகழ்த்திய அவதானத்தைக் கண்டு வியந்து கவிமணியவர்கள் பாடிய சாற்றுக்கவியைப் பலரும் அறிவர். பாவலர் அவர்களின் சதாவதானச் சிறப்பை நேரிற் கண்டுகளிக்கும் பேறு பெருதவர்கள் ஆறு முகம் பிள்ளை அவர்கள் காட்டிவந்த தசாவ தானத்தைக் கண்டிருந்தால் அதனினும் பன்மடங்கு மகத்தான பாவலரின் அருந் திறலை உய்த்துணரக்கூடும்.

திரு சாஸ்தாங்குட்டிப் பிள்ளை அவர் கள் முதுமையிலும் இளமை முறுக்குடனே, ஊக்கமும் உணர்ச்சியும் குன்ருது, தமிழ் மொழிக்குக் காவலராய், தமிழுக்குச் சிறுமை இழைக்கும் அரைகுறைப் புலவர்களையும் ஏனையோரையும் மட்டந்தட்டும் ஒட்டக்கூத் தரே போன்று தமிழுலகில் உலவுகின்றனர். அவர்கள் செய்துவந்த தமிழ் தொண்டைப் பாராட்டி நன்றியுடைய தமிழுலகம் அண் மையில் **முதுபெரும் புலவர்** என்ற பட் டத்தை அவர்களுக்குச் சூட்டி அதனுல் தான் பெருமையுற்றது. இம் முதுபெரும் புலவரின் இலக்கிய வழித்தோன்றல்களாக விளங்கு பவர்கள் வித்வான் சி. சதாசிவம் பிள்ளை, வித்வான் எஸ். ஆறுமுகம், எம். ஏ., பி டி, வித்வான் எஸ். உமைதாணு பிள்ளை, வித் வான் எஸ். சிவனணைந்தபெருமாள் முதலி யோர் ஆவர். இவ்வாறு பாவலர் அவர்கள் ஏற்றிய தமிழ் விளக்கு ஒளி குன்ருமல் நாஞ் சில்நாட்டில் தழைத்தோங்கி வருகிறது.

கலைக்கடல், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, சதாவதானி, அல் லாமா செய்குதம்பிப் பாவலர் அவர்கள் இயற்றிய நூல்கள் அனைத்தும் தமிழ்ச் சந் ததியார்களுக்கு எந்நாளும் பயன்படுதல் வேண்டும். அவற்றை நல்ல முறையிலே

(68-ம் பக்கம் பார்க்கவும்)

எங்கள்

கவிஞர் தே. ப.

1. பிறவியிலே இலக்கியமாம் திருவைப் பெற்று,
பிழையில்லா நினைவாற்றல் முதிர்ச்சி யாலே
மறவாதே யவதானம் நூறும் செய்து,
வையத்துப் புலவரெலாம் வியக்க நின்ற
இறவாத புகழுடையாய்! செய்கு தம்பி
என்றதமிழ்க் கற்பகமே! புலவர் கோவே!
நறவாக அமுதாக உரைகள் செப்பி
நற்றமிழின் சுவையெல்லாம் தெரிவித் தாயே !

2. நாஞ்சியினில் தமிழ்ப்பண்ணை செழிப்பு கொண்டு
நல்விளைவைத் தந்திடவே நாளும் நீதான்
வாஞ்சையினுல் பணிசெய்தாய்! பயனே வென்ருல்
வண்புலவர் பண்டிதர்கள் நிரம்ப லானுர்!
ஊஞ்சலென மனமாட, இளைஞ ரெல்லாம்
உவகைவெறி கொண்டுதமிழ்க் கற்க லானுர்!
யாஞ்சிறந்தோம் உனைப்பெற்ற இறுமாப் பாலே;
இன்றந்தப் பீடெல்லாம் இழந்தோ மன்ருே !

3. நினைத்ததுமே கவிபாடும் மேதைக் கம்பன்,
நிறைபுலமைப் புகழேந்தி, ஒட்டக் கூத்தன்,
நனியிணையும் இரட்டையர்கள், காள மேகம்
நாமிவரைக் கற்றதன்றிக் கண்ட தில்லை!
இணையவர்கள் அடிச்சுவடு நோக்கிச் சென்ற
எங்களுயர் பாவலரை நேரில் கண்டோம்!
கனிவளிக்கும் சொற்கேட்டோம்! கவிதை கேட்டோம்!
களிப்புற்ருேம்! நாம்நல்ல பேறு பெற்ருேம்!

4. பாவலரின் கவிதைகளில் உவமை பேசும்;
பழுதற்ற சீரணியும் முகத்தைக் காட்டும்;
கூவிடுமே குயிலிசையாய் ஓசை ஒன்றி;
கொட்டிடுமே நன்மழைபோல் பொருள்கள் கூடி

பாவலர்!

பெருமாள்

ஆவல்தரும் சுனையூற்றின் தெளிவு தங்க,
அற்புதமாய் மந்திரங்கள் விந்தை செய்யும்!
மேவிடுவாள் உண்மையெனும் வடிவ நங்கை!
வித்தாரம் பேசிடுவாள் நகைத்து நிற்பாள்!

5. குளிர்சாந்தம் மணம்கமழும்; தென்றல் வீசக்
குறுநகைசெய் முல்லையுமே களிப்பு நல்கும்;
விளைந்துள்ள சுவைக்கனியை உண்ணுங் காலை,
விஞ்சுரசப் பெருக்காலே நாவும் சொக்கும்;
அலையாத நறுந்தேனை அள்ளி யுண்ண,
ஆனந்தத் தேக்கெறியும்; அருவி சொல்லும்
தெளிவான பண்ணிசையில இன்பம் துள்ளும்!
சேகுதம்பீ! நின்கவியில் அனைத்தும் பெற்றோம்!

6. மூண்டெழுந்த பக்தியினுல் அன்பு பொங்க,
மோதுணர்வில் நற்கவிதை நித்தி லங்கள்,
நீண்டொளிரக் கோதையாய் யாத்துத் தந்த,
நிறைஞான இராமலிங்க வள்ள லாரின்
தூண்டுமொளி யருட்பாவை மருட்பா வென்ற
சொற்சிலம்பப் புலவரையே வாதில் வென்றே
யாண்டுமொளிர் புகழ்வேய்ந்தாய்! ஞான மென்னும்
எழில்விளக்கின் சுடர்தந்தாய்! தெளிவு தந்தாய்!

7. தேசீய இயக்கத்தி லீடு பட்டுச்
செய்திட்ட நின்னுரைகள், இன்னும் காதில்
ஓசையிடும்; நெஞ்சமதில் உணர்வை யூட்டும்;
ஒளிமணியே! தமிழ்த்தாயின் அருமை மைந்த!
மாசில்லா நின்னறிவுப் பேழை தந்த
மணிமணியாம் இலக்கியச் செல்வந் தன்னில்
ஆசில்லா நின்வடிவை இனியாம் காண்போம்!
ஆனந்த அநுபவத்தில் திளைப்போ மிங்கே!

ஐந்தின் வகை தெரியும் அறிவின் திருவுரு

(சி. சுப்பிரமணியன்)

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு"

என்பது வள்ளுவர் வாய்மொழி. அஃதாவது, ஐம்பூதங்களாலாய உலகு, ஐம்பொறியாலறியவல்ல ஐம்புல நுண்மையுடையாரது அறிவின் கண்ணது என்பது.

உலகு குறித்த உணர்வு, ஐம்பொறியுணர்வினைப் பொறுத்தது. உலக வாழ்வின் உயர்வு ஐம்புல உணர்வின் ஆற்றல் குறித்தது. இத்தகைய உணர்வினையும், ஆற்றலினையும் உடைய அறிஞரே உலகில் உயர்ந்தாராகக் கருதப்படுகின்றனர். உலகில் உயர்வுக்குரிய, குறிப்பிடப்பட்ட அறிவு, இயல்பில் கருவில் பெறும் இயற்கையறிவு, செயலில் முயல்வில் பெறும் செயற்கையறிவு என இருவகைப்படும். சிலர் செயற்கையறிவு மிகக் கொண்டு சிறப்புறுவர். சிலர் இயற்கையறிவு மிகக் கொண்டு ஏற்றமுறுவர். சிலர் இரண்டும் மிகக்கொண்டு ஈடேறுவர். உண்மையான உயர்ச்சிக்கு அடிப்படையாகிய இயற்கையறிவு இன்றியமையாது வேண்டப்படுவது. இவ்வாறான இயற்கையறிவுடையாரைக் கருவிலே திருப்பெற்ற செல்வர் என்கின்றோம். இவ்வகையில் கருவிலே திருப்பெற்ற செல்வர் ஒரு சிலருள் அரிய ஒருவரே நம் பாவலர் அவர்கள்.

அவர் ஐந்தில் அறிஞர். அஃதாவது ஐந்து வயதிலேயே அறிஞர்; ஐந்து வகுப்புக்களையே கற்றும் அறிஞர்; ஐந்திலக்கணத்தில் அறிஞர்; ஐந்து புலத்தறிவோடு ஆறிலும் பேரறிஞர்; நூறிலும் (அவதானத்தில்) தனியறிஞர். இவரது ஐந்து வயது பருவத்தில் தம்மை யொப்பாரினும் தனியறிவோடு ஏற்றம் பெற்றார். 'திருக் குர்ரான்' முதலிய மெய்யறிவு நூற்களை அப்பருவத்திலேயே கேட்கப்பெற்றார். இனி இவர் பள்ளியில் கற்றதும் ஐந்து வகுப்புக்களே. அதுவும் ஒவ்வோர் வகுப்பிலும் சிற்சில திங்களே கற்க நேர்ந்தது. ஏனெனில் இவரறிவின் திறங்கண்டு ஒவ்வோர் வகுப்பிலும் சிற்சில திங்கள் கற்றலே போதும் எனத் தேற்றங் கொடுக்கப்பட்டாராதலால். பின் தனி ஓர் ஆசிரியரையடைந்து சிலகாலம் ஐந்திலக்கணம் முதலியன கற்றார். ஆயின் கற்றார் பலரும் கடல் நடுவே கட்டுமரமாக இவர் மட்டும் அன்னோரையெல்லாம் தன் வசப்படுத்தும் கலங்கரை விளக்கமாக விளங்கினார்.

இனி இவர் ஐந்து புலத்தறிவில் நுண்மையோடு, ஆறிலும் தனி வன்மை பெற்றார் என்பதனை இவர் செய்த அவதானத்தால் அறியலாகும். இவ்வகையான அவ

(65-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாவலரின் தமிழ்த் தொண்டு....

மலிவுப் பதிப்பாக வெளிக்கொணரும் முயற்சியை பாவலர் மன்றத்தார் உடனே மேற்கொள்வார்களாக!

பாவலர் புகழ் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிலைத்து வாழ்க.

★

செஞ்சொற் புலவன் சிறந்த கவிவலவன்
நஞ்சைப் பதிவந்த நாவலன்—விஞ்சுபுகழ்
செய்குதம்பிப் பாவலன்செய் தீந்தமிழின் தொண்டுக்கு
வையகமென் ஆற்றும் வகுத்து

என் ஆற்றும் = என்ன கைம்மாறு புரியும்?

ரது வாழ்வின் உயர்ச்சியில் எல்லாம் தன் முயற்சியே பேரடிக் கல்லாக விருக்கும். எனவே இவர் உழைப்பாலுயர்ந்த ஒருவர்; நினைப்பால் நிறைந்த நிறைகுடம் என்று பலரும் பாராட்டும் பான்மையில் அமைந்தது பாவலர் வாழ்வு. அச்சுப் பிழைதிருத்தும் நிலையில் அமைந்தும் அறிவடையும் அவாவுடன் வந்த நூலையெல்லாம் தாமே கற்றுத் தம் கலையை வளர்த்தார். சிறு வயதிலேயே யாருமே துணையின்றிச் சிறந்த சீருப்புராணத்திற்கு உரையெழுதும் சிறப்பினையும் பெற்றார்.

ஓர் நாள் முன் பயிற்சியில்லாது முதன் முறையாக ஒருவர் இவரிடம் கண்டபத்திரிகை யிட்டுச் சோதனை செய்யவே பிறர் வியக்குமாறு தனிநின்று விடையிறுத்தார். அன்று தொட்டு அவதானப் பயிற்சியும் தன் முயற்சியாலேயே பிறர் துணையின்றி நடந்து வந்தது. முதலில் நாகர்கோவிலில் சோடசாவதானம் நன்முறையில் நடந்து வெற்றி பெறவே, சென்னையிலும் அதனை நடத்த முற்பட்டுப் பலர் வேண்டுகோளால் அத்தகைய பதினறு அவதானம் செய்ய உடன்பட்ட காலத்தில், அறிக்கையிட அச்சுக் கோர்க்குங் காலத்தில், அன்பர் பலர் வற்புறுத்தப் பதினறு அவதானம் திடீரென நூறவதானம் என ஆக்கப்பட்டது. முன் முயற்சியின்றித் தன் முயற்சியிலேயே இத்தகைய நூறும் விடையளித்து, நாடும் வியக்குமாறு, ஆறும் வல்லவரானார்.

இவர் ஐம்புலத்தோடு ஆறிலும் வல்லவர்; ஐந்தின் வகை தெரியும் ஆறில் பேரறிஞர் என்பதனை இந்நூறு அவதானமே எடுத்து விளக்கியது. அவதானத்தில் அவரது ஐம்பொறி நுண்மையும் ஆராயப்பட்டது; அவற்றோடு அவரது மனவாற்றலும் ஆராயப்பட்டது.

நாவின் நலமறிய வேண்டிப் பல்வேறு சிறிது வேற்றுமையுடைய கிணற்று நீர் கொணரப்பட்டு முதலில் அவர் நாவால் சுவையறியப்பட்டு இன்னின்ன கிணற்று நீர் எனப் பெயரும் அறிவிக்கப்படுகின்றன. பின் பலவகைச் சிக்கலுக்கிடையே அவ்வவ்வகைக் கிணற்று நீர் பல்வகையில் மாற்றிக் கொணரப்பட்டும் பாவலரால் சுவையறியப்பட்டு இன்ன கிணற்று நீர் இது எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு அவரது நாவின் வகை தெரியும் ஆற்றல் நன்குணரப்பட்டது.

பின் அவர் உற்றறியும் உணர்வின் ஆற்றலை உணர்ந்தறியப் புறப்பட்டுப் புறமுதுகில் சில கற்களையும், நெற்களையும் கணக்கின்றிக் குழம்புமாறு இடைவிட்டுப் பல்கால் எறிந்துகொண்டே யிருந்தனர். இறுதியில் கல், நெல் எத்தனை எறியப்பட்டன என அவற்றைக் காணாதே தன் உற்றறியும் உணர்வால் பிறர் உளங்கொளக் கூறி முடித்தார். இவ்வாறு, அவரது உற்றறியும் உணர்வின் உயர்ச்சி உணர்ந்தறியப்பட்டது.

பின் அவர் செவியுணர்வின் செம்மையைச் சிறக்க அறிய எண்ணிச் சிறிதளவே நிறையில், ஒலியில் வேற்றுமையுடைய பல்வேறு செம்பு முதலிய கலன்கள் கொண்டு வரப்பட்டு ஒலித்துக் காட்டப்பட்டன. பின் பல சிக்கலுக்கிடையே ஒவ்வோர் கலனும் மறைவில் வைத்து ஒலி செய்து காட்டப்பட்டபோது இன்ன எடையுடைய இன்ன கலன் என்று ஒலி நுட்பத்தால் அவரால் கூறப்பட்டது. இவ்வாறு அவரது செவியுணர்வின் செம்மை காணப்பட்டது.

இடையிடையே அவரது மனவாற்றலை யறிவதற்குப் பற்பல வினாக்கள் பற்பல வகையில் வினவப்பட்டன. இலக்கிய வினாக்கள் பல; இலக்கண வினாக்கள் பல; சோதிட வினாக்கள் பல; கணித வினாக்கள் பல. யாவற்றிற்கும் தயங்காது விடையளித்தார் நம் பாவலர். இவ்வாற்றால் அவரது மனவாற்றலின் மாண்பும் கணித்தறியப்பட்டது.

இத்தகைய ஐம்புலத்தால், மனத்தாலமைந்த நுண்மையும், வன்மையும் இயல்பாக மாந்தர்க்கு அமைவன வல்ல. இயற்கையாக மனிதர் ஓர் உணவில் உப்புக் கூடுதலா குறைவா என்று சரியாகக் கூறவியலார். முதுகில் சிறு கல் முதலிய பொருள் வீழினும் என்னவென்று குறிப்பிட்டுக் கூறவியலார். நேற்றுள்ள உணவின் வகைகளை இன்னவின்ன என்று கூற வியலார். ஆயின் நம் பாவலர், ஐந்தறிவோடு, ஆறுவ

ஞாபகச் சின்னம் வேண்டும்

(நாரண. துரைக்கண்ணன், *ஆசிரியர்: பிரசண்ட விகடன், சென்னை.*)

"பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே!"

இத்தாரக மந்திரத்தைத் தமிழ் மக்களுக்குப் புகட்டித் தலை நிமிர்ந்து நிற்கச்செய்தவர் **மகாகவி பாரதியார்.** இவரைப் போலவே, பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் பேணிக்காத்துப் பெருமையுறச் செய்த பெரும் புலவர் மகாமதி, சதாவதானி, அல்லாமா கா. ப. செய்குதம்பிப் பாவலர் ஆவர். 'தமிழ்ப் பண்டிதர்களுக்கும் புலவர்களுக்கும் நாட்டுவளப்பம் தெரியாது; நாட்டு வளப்பத்தை நாடவும் மாட்டார்கள். தாங்கள் உண்டு; தங்கள் தமிழ் உண்டு; பாடஞ் சொல்லும் பணி உண்டு, என்ற அளவில் தான் நிற்பார்கள். கிணற்றுத் தவளைகள்' என்று ஆங்கிலம் படித்தவர்களாலும் பிறராலும் ஏளனமாகப் பேசப்பட்டுவந்த காலத்தில், நம் நாட்டு வளப்பத்துக்காக - நம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட முன்வந்த பெரியார் சதாவதானி பாவலர் அவர்கள். இவர் தாய்மொழிப் பற்று மட்டும் கொள்ளாமல் தாய்நாட்டுப் பற்றுங்கொண்டு, நம் பாரதத்தைப் பிணித்திருந்த அடிமைத் தளையை அறுத்தெறிய அரும் பாடுபட்ட தேசீய வீரர்களில் தன்னிகரற்ற ஒருவராய்த் திகழ்ந்தார். வட இந்தியாவில் மௌலானா முகம்மதலி, மௌலானா ஷௌகத் அலி, டாக்டர் அன்சாரி, மௌலானா அபுல் கலாம் ஆஸாத், கான் அப்துல்கபார்கான், டாக்டர் கான்சாகிப், ஆஸப் அலி முதலியவர்களைப்போல், தென்னிந்தியாவில் அதிலும் தமிழகத்தில் மௌலானா சாஹிப், ஜனாப் யாகூப்ஹஸன், அப்துல் ஹமீத்கான், பஷீர் அகமத் ஸையத் முதலியவர்களோடு அவர்களில் பலருக்கு வழிகாட்டியாகத் தேச மகாசபையாகிய காங்கிரஸ் ஸ்தாபனத்தில் சேர்ந்து தேசத்தொண்டு புரிந்தவர் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் என்பது இன்றைய தலைமுறையினர்க்கு - தேசபக்தர்களுக்குக்கூடத் தெரியாது. இவர் தமிழ்ப் பெரும் புலவர்; பாவல்லார்; பன்னூல் ஆசிரியர்; பழைய பெரிய நூல்களின் உரையாசிரியர்; பல நூல்களை அழகுபடப் பதிப்பித்த பதிப்பாசிரியர்; தம்மை நாடிவந்து

தனையும் யாவரினும் மேம்பாடாக, யாவரும் வியக்குமாறு பெற்று ஐந்தையும் நுட்பமாக வகை தெரியும் ஆற்றல் பெற்றிருந்தாராதலின் ஐந்தின் வகை தெரியும் அறிவின் திருவுருவாயினர். இதுவரையும் கூறிய யாவும் அவரது இயற்கையறிவின், தன் முயற்சியின் மேமபாட்டையே காட்டுகின்றன.

இத்தகைய பெரியாரது இலக்கண அறிவே தனி வகையுடையது. நாஞ்சில் நாட்டில் இவர்போல் இலக்கண நுட்பமுடையாரும் இல்லை; இவர்போல் சொற்பொழிவாற்றுவாரும் இல்லை. இவர்போல் குறள், கம்பராமாயணம், சீறப்புராணம் முதலியவற்றிற்கு உரை கூறுவாரும் இல்லை; நினைவாற்றல் படைத்தாரும் இல்லை. இன்னோரன்ன யாவும் இவரது இயற்கையறிவின் மேம்பாட்டினையே காட்டுகின்றன. இத்தகைய பெரியாரது பின் அவர் பெயர் கூறச் சில நூற்களும், எண்ணிறந்த மாணவரும் உளர். ஆய்ந்துபார்க்கின் நாஞ்சில் நாட்டின் தமிழறிஞர் யாவரும் மாணவர் பின் மாணவராக அவர் அறிவின் வழி வந்தோரேயாவர் எனல் மிகையாகாது. இத்தகைய யாவை ஏற்றத்திற்கும் காரணம் மேலே கூறியவாறு இயற்கையாயமைந்த ஐந்தின் வகை தெரியும் அறிவின் திறமேயாகும். ஆகவேதான், அவர் ஐந்தின் வகை தெரியும் அறிவின் திருவுரு என்னப் பட்டாராவர்.

★

விரும்பிக் கேட்போருக்கெல்லாம் முறையாகத் தமிழ் இலக்கியங்களை மனங்கொள்ளப் பாடஞ்சொல்லிப் புலமையாளராக்கிய போதகாசிரியர்; கேட்பாரை முற்றுங் கவரக்கூடிய வகையில் சோனாமாரியாகச் சொற்பொழிவாற்றும் பெருஞ் சொற்கொண்டல்; அறிஞர் அவையில் தங்குதடையின்றி அவதானம் பலசெய்த சதாவதானி என்பனவெல்லாம்கூடப் பலருக்குத் தெரியும். ஆனால் அப்பெரியார் புரிந்த மகத்தான சேவை எப்படியோ தெரியாமல் போய்விட்டது. அத்தியாக வாழ்வைத் தேசத் தலைவர்கள்கூட எப்படியோ மறந்துவிட்டார்கள்.

அந்நாளில் நாஞ்சில் நாட்டில் சுதந்திரப் போராட்டம் குறித்து அவர் பேசாத கூட்டங் கிடையாது. அவருடைய சொற்பொழிவு கேட்காத சிற்றூர் கிடையாது அந்த அரசியல் கூட்டங்களில் அவர் பேச்சில் கம்பன் பாடல்கள், புகழேந்தி பாடல்கள், அதிவீரராம பாண்டியன் பாடல்கள், உமறுப்புலவர் பாடல்கள், இராமலிங்க சுவாமி பாடல்கள் அடிக்கொருமுறை வந்து விழுந்துகொண்டேயிருக்கும். தேன்போல் இனிக்கும் அவருடைய தீந்தமிழப் பேச்சைக் கேட்டு மக்கள் பரவசமுறுவார்கள். பாவலர் அவர்களின் கவிதை நடைப் பேச்சு நாகர்கோவில், கோட்டாறு, சுசீந்திரம் முதலிய கன்னியாகுமரிப் பகுதி முழுதும் எதிரொலித்தது.

அடுத்து, பாவலர் அவர்கள் கலந்துகொண்ட இயக்கம் அருட்பா - மருட்பாப் போர். பாவலர் ஐயா அவர்கள் எங்கள் பேராசிரியர் மறைமலையடிகளாருடன் நின்று, இராமலிங்க வள்ளலார் பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் அருட்பாக்களே என்று தக்க ஆதாரங்களுடன் பேசி அருட்பாக் கட்சிக்கு வெற்றி தேடித்தந்தார்கள். அவருடைய பேச்சில் தர்க்கவாதத் திறமை நிறைந்திருந்ததாக அக்கால அறிஞர்கள் வியந்து பாராட்டியதை நான் பலமுறைக் கேட்டிருக்கிறேன். 'அருட்பா அல்ல; மருட்பா தான்" என வல்லடி வழக்கு ஆடிய யாழ்ப்பாணம் நா. கதிரைவேல் பிள்ளையுடன் சேர்ந்திருந்த **பானுகவி**க்கு எதிராகத் தம்மைக் **கேதுகவி** என்று பாவலர் அவர்கள் சொல்லிக்கொண்டு நையாண்டி செய்தாராம். இவ்விவாதத்தின்போது, சதாவதானி பாவலரவர்கள் சென்னை மாநகரில் வதிந்திருந்தார்கள். 'அருட்பா' கட்சியில் வெற்றி கண்ட அவர் எங்கு சென்றாலும் மக்கள் குதூகலத்துடன் வரவேற்று மரியாதை செய்வார்களாம். எதிர்ப்படும் அன்பர்கள் செய்யும் வணக்கங்களுக்குப் பிரதி மரியாதை செய்யப் பாவலரவர்கள் இரு கரங்களையும் தூக்கிக் குவித்துக்கொண்டே போக வேண்டியிருக்குமாம்.

பாவலரவர்கள் வாழ்க்கையில் புரிந்த அரிய செயல்களில் முதன்மையானது **சதாவதானம்** ஆகும். சென்னையில் விக்டோரியா பப்ளிக ஹாலில் அவர் அறிஞர் பெருமக்கள் அவை நடுவே பல விஷயங்கள் பற்றியும் பலரும், ஏக காலத்தில் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் தக்க விடைகளை அளித்து **"சதாவதானி"** என்ற சிறப்புப் பெயரையும் பட்டத்தையும் பெற்றது பொன்னெழுத்துக்களில பொறிக்கத்தக்க நிகழ்ச்சியாகும்

இத்தகைய பேரறிஞருக்குச் சிறந்த ஞாபகச் சின்னமொன்று, சென்னை மாநகரிலோ, நாஞ்சில்நாட்டிலோ ஏற்படுத்த அறிஞர்களும் வள்ளல்களும் முயலவேண்டும் என்பது அடியேனின் பணிவான விண்ணப்பம். அன்பர்கள் கவனிப்பார்களாக.

★

உள்ளுணர்வு போக்கியந்தோ வுன்மத்த நாய்போலும்
வள்ளுணர்வு தேக்கியுயிர் வாதையொடு போதைதரும்
கள்ளுணர்வு கொள்ளகிலீர் கத்தனுரை யீதென்னத்
தெள்ளுணர்வு தந்துவந்த செம்மைநிலை யேதேயோ
செல்வநபி நாயகமே செம்மைநிலை யேதேயோ.

கேடுவருந் தொல்லைமிகுங் கேண்மையறும் பண்பொழியும்
பாடுவருங் கைப்பொருளும் பாழாகும் பல்குமனச்
சூடுவரும் கொள்ளற்க சூதாட்ட மென்றமறைப்
பீடுவரும் வாய்மைசொற்ற பின்னேயு முன்னேமோ
பெட்புநபி நாயகமே பின்னேயு முன்னேமோ.

(பாவலர் அவர்களின் **'நபிநாயக மான்மிய மஞ்சரி'** யிலிருந்து.)

நம் பாவலர்

(பண்டித ந. பிச்சைக்கண்ணு)

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்ற வள்ளுவப் பெருந்தகையாரின் வான் குறளுக்கு எடுத்துக்காட்டாய்த் தமிழகம் வியக்க-கேட்டார் அதிசயிக்க-கண்டார் புகழ ஒரு நூறு அவதானம் செய்து நாற்றிசையும் போற்றிசைப்ப வாழ்ந்த பெரியார் செய்குதம்பிப் பாவலர் ஒருவரே ஆவர். இத்தகைய ஆற்றல்பெற்றோர் முன்னுமில்லை; பின்னுமில்லை.

நம் பாவலர் அவர்கள் இலக்கண இலக்கியத்தில் ஈடும் எடுப்புமின்றி இணையிலாப் புகழ்பெற்று விளங்கிய காலையிலும் தம் ஆசிரியரை மறவாது, அவரது பெருமையை எடுத்துச் சொல்லுதலைத் தனது பெருமையாகக் கொண்டொழுகியது அவரது தலையாய பண்பைக் காட்டும். நம் பாவலர் அவர்களின் ஆசிரியராய் அமைந்தவர் சங்கரநாராயண அண்ணாவி என்னும் பெருந்தகையார் ஆவர். இப்பெருந்தகையார் கோட்டாறு, பட்டாரியர் சமுதாயத்தில் பிறந்தவர். ஆடம்பரம் சிறிதுமில்லாது வாழ்ந்தவர். தான் ஒரு புலவன் என்பதை வெளிக்காட்ட வேண்டுமென்ற எண்ணம் சிறிதுமே இல்லாத பண்பாளர். இவரது காலத்தில் வாழ்ந்த கணபதி ஆசாரி என்னும் புலவர் நாஞ்சில் நாட்டில் தம்மைவிடப் புலமையுடையோர் வேறு இல்லை என்ற எண்ணத்தால் சங்கரநாராயண அண்ணாவியின் புலமையைப் பற்றிப் பல இடங்களிலும் குறைகூறும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார். கணபதி ஆசாரியின் இச்செயல் கண்டு அண்ணாவி அவர்கள் சிறிது மன வருத்தம் அடைந்தபோதிலும் அவரோடு பகைமை கொள்ளவோ தன் புலமையை அவருக்கு வெளிக்காட்டவோ முன்வரவில்லை. ஆசிரியரது இம்மனவருத்தம் மாணவராகிய பாவலரைப் பெரிதும் வருத்தியதோடு கணபதி ஆசாரியின் புலமையின்மையைப் பிறர்க்கு எடுத்துக்காட்ட வேண்டுமென்ற உறுதியையும் உள்ளத்தில் உண்டு பண்ணியது.

சவேரியார் கோவிலின் சமீபம் இருந்த புத்தக சாலையில் கணபதி ஆசாரி அவர்கள் தினமும் வந்திருப்பதுண்டு. அப் புத்தகச் சாலைக்குத் தினமும் சென்றுவரும் இடலாக்குடியில் வாழும் ஒருவர் ஒருநாள் கணபதி ஆசாரி அவர்களிடம் சங்கரநாராயண அண்ணாவியிடம் படித்த புலவர் ஒருவர் எங்கள் ஊரில் இருக்கிறார் என்று சொன்னதும், "சங்கரநாராயணனிடம் படித்தவனா? அவனை ஒருநாள் இங்கு கூட்டிக்கொண்டு வாருங்கள்; மாற்றுப் பார்த்துவிடுகிறேன்" என்று கூறினார்கள். நம பாவலர் அவர்கள் இச்செய்தியை அறிந்ததும் அவரது மனம் படபடத்தது. எண்ணம் எத்தகைய செயலையும் செய்ய மறுத்தது. மறுநாள் தன்னிடம் இச்செய்தியைக் கூறியவரையும் உடனழைத்துக்கொண்டு நேரே புத்தகச் சாலைக்குச் சென்று கணபதி ஆசாரியின் வரவை எதிர்பார்த்து இருந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பின் அவர்களும் வந்தார்கள். நம் பாவலரையும் இன்னாரென்று அறிந்து கொண்டார்கள். தன்னிடமிருந்த புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச்சொன்னார்கள். நம் பாவலர் அவர்களோ சிறிது நேரம் வரை அதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு, "என்போன்ற பழுத்தப் புலவர்கள் எழுதிய பாடலைத் தற்காலத்தில் புலவர் என்று வருபவர்களுக்கு எப்படிப் படிக்க முடியும்? நான் படித்துக் காட்டுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு அதை வாங்கிப் படித்தார்கள். ஒரு பாடலைப் படித்ததும் நம் பாவலர் அவர்கள் இப்பாடல் தாங்கள் எழுதியது தானே? என்றதற்கு

நுமக்கு இதில் ஏன் சந்தேகம் என்றார்கள். இப்பாடலை நான் முன்பே படித்திருக்கிறேனே என்று மீண்டும் கூறியபோது நான் எழுதிய இப்பாடலை நீவிர் எப்படிப் படித்திருக்கமுடியும் என்றதும், "இல்லை; இல்லை. இப்பாடல் திருவிளையாடற் புராணத்தில் வரும் பாடலல்லவா? அதை நீங்கள் உங்கள் பாடல் என்று கூறுகின்றீர்களே. உங்கள் பாடல் அத்தனையும் இப்படித்தான் இருக்குமோ'' என்று சொல்லி திருவிளையாடற் புராணத்தையும் எடுத்து வருவதற்கு ஆளை அனுப்பினார்கள். இனியும் இங்கு இருந்தால் நமது புலமை புலப்பட்டுவிடும் என்றுணர்ந்த கணபதி ஆசாரி அவர்கள் "எனக்கு நீர்க்குற்றம் (நீரிழிவு) உண்டு; வீட்டிற்குச் சென்று வருகிறேன்" என்று சொல்லி எழுந்தார்கள். நம் பாவலரோ "எனது அண்ணாவிக்குத் தெரியாததை உங்களிடமிருந்து படித்துப் போகலாம் என்ற எண்ணத்தோடல்லவா வந்தேன்; நீங்கள் போகின்றீர்களே? இருங்கள்; போகலாம்'' என்றார். அவரோ வெளியே போகும்போது வெளியில் நின்றவர்களிடம 'இவன் கோட்டாற்றில் இருந்தவனா? இருந்தவனா!' எனக் கேட்டுக்கொண்டே போய்விட்டார். பின் அங்கு வரவேயில்லை. பாவலர் அவர்களோ வெகு நேரம் வரை அங்கே இருந்து தம் அண்ணாவியின் புலமைத் திறத்தைப் பாராட்டி வெற்றியோடு திரும்பி வந்தார்கள்.

1938-ஆம் ஆண்டு கோட்டாறு, பட்டாரியர் நெடுந்தெருவில் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் சொற்பொழிவாற்றிய கூட்டத்தில், தலைமை வகித்துப் பேசிய தலைமையுரையில், "என்னை இந்நிலைக்கு ஆளாக்கிய எனது குரு சங்கரநாராயண அண்ணாவி அவர்கள் வாழ்ந்த இதே தெருவில் நடக்கும் கூட்டத்தில் தலைவராக இருக்கும் பாக்கியம் கிடைத்தது எனது நல்வினையே'' என்று மனமகிழ்ந்து ஆர்வத்தோடு கூறினார்கள். என்னே இவரது குருபக்தி.

"நூலா சிரியர் கருத்தினை நோக்கா
தொருசூத் திரத்திற் கொவ்வொரா சிரிய
ரொவ்வொரு பதமா யுரையுரைக் குவரே
யவ்வுரை யதனு ளெடுத்தவா சகங்கட்
கவர்கருத தறியா தவரவர் கருத்தினுட்
கொண்ட பொருள்படப் பொருள்கூ றுவரே"

என்று கூறிச்சென்ற இலக்கணக் கொத்து நூலாசிரியர் சுவாமிநாத தேசிகரின் கூற்றுப்படி இன்று தமிழகத்தில் உரைகள் மலிந்து காணப்படுகின்றன.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்" இக்குறள் ஒரு உயிரையும் கொல்லாதவனாய் இருப்பதோடு, புலாலையும் உண்ணாது இருப்பவனை இவ்வுலகிலுள்ள எல்லாவுயிரும் கைகுவித்து வணங்கும் என்ற பொருளைத் தருவது. இதில் கொல்லான் என்பதை வினைத் தொகையாகக் கொண்டு கொல் ஆன் எனப் பிரித்தும் (கொன்ற பசு) மறுத்தானை என்பதை மல்+துத்தான்+ஐ (மிகுதியாக உண்பவனை) எனப் பிரித்தும் கொன்ற பசுவின் மாமிசத்தை மிகுதியாக உண்பவனை இவ்வுலகிலுள்ள எல்லாவுயிரும் கைகுவித்து வணங்கும் எனப் பொருள்கூறி எல்லோரையும் வியப்பிற்குள்ளாக்கினார்கள். இங்ஙனம் பொருள் கொள்ளும் விதத்திலும் திருக்குறள் அமைந்துள்ளது. இவ்விதம் பொருள் கொள்ளுமிடத்து எத்தகைய இலக்கணக் குற்றமும் இல்லை. ஆனால் இப்பொருள் ஏற்றுக்கொள்ளத் தகுதி உடையது அன்று. ஏனெனில் புலால் உண்ணுதல் ஏற்புடையது ஆகாது. அதை அறவே விட்டொழிக்க வேண்டும் என்று சொல்லி வருகின்ற பத்துக் குறளில் ஒன்றாக இதுவும் இருப்பதால் ஆசிரியர் கருத்திற்கு முற்றிலும் மாறுபாடானது. பாடலுக்குப் பொருள் கொள்ளுமிடத்து ஆசிரியர் கருத்தையும், அவர் காலத்தையும் மனதினுட் கொண்டு பொருள் கொள்ளுதல் தான் அறிவுடைமை என்றார்கள். இத்தகைய குறிக்கோளை உடையவராகத் திகழ்ந்ததினால்தான் வடலூர் வள்ளலாரின் அருட்பாவை மருட்பாவென ஒருவர் பல கூட்டங்களிலும் பேசி இராமலிங்க அடிகளாருக்கு இழுக்கு உண்டாக்கிய காலையில் அருட்பா அருட்பாவே என எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி வீர முழக்கமிட்டு வெற்றி முரசு கொட்டினார்கள். என்னே இவரது நுண்மாண் நுழைபுலன்!

தமிழ் நாட்டின் பல இடங்களிலும் இன்று தமிழ்த் துறையில் பெரும்பணி ஆற்றிப் பெரும்புகழ் கொண்டு விளங்கும் சான்றோர் பலர், நாஞ்சில் நாட்டில் தோன்று

எந்த நாள் காண்போம்!

(பேராசிரியர் சி. நயினர் முகம்மது, M. A.)

'தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை; தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ' என்ருர் புதுவை தந்த புதுமைக் கவிஞர்.

'தேடிச் சோறுநிதந் தின்று—பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக உழன்று—பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி—கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்—பல
வேடிக்கை மனிதரைப்போலே—நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

என்ருர் பாட்டுத் திறத்தாலே உலகைப் பாலித்திட விழைந்த பாரதியாரும்.

முயன்று நிறுவிய மாடமாளிகைகள் மறைந்துவிட்டன. மாநகர்கள் அழிந்துவிட்டன. மலைகள், மாகடல்கள் அழிந்துவிட்டன. ஆனல், இன்ப நிலையங்களாக உள்ள இலக்கியங்கள் இலங்கிக்கொண்டே இருக்கின்றன. இனிய இலக்கியங்களைத் தந்த அரிய புலவர்களும் இறவாது இருந்து கொண்டே இருக்கின்றனர். இவ்வாறு இறவாத புகழுடைய பெருநூல் செய்து என்றும் வாழ்ந்துவரும் பெரும் புலவர் பரம்பரையிலே செயற்கரிய செய்த செய்குத்தம்பிப் பாவலரும் ஒருவர்.

'மூச்சு விடும் முன்னே முந்நூறும் நானூறும்' பாடும் கவிஞர் கன்னித் தமிழுக்கு உண்டு - ஏன் - 'இம்மென்ருல் எழுநூறும் எண்ணூறும், அம்மென்ருல் ஆயிரம் பாட்டாகாதோ' என்று கூறி மாசிலா ஆசு கவிகள் பொழிந்து தேசு கொண்ட பாவலர் உண்டு பைந்தமிழுக்கு. பல்லாண்டுகட்கு முன்னர் தமிழ்க் கவிஞர் வேண்டும்போது வேண்டியாங்கு கவிபாடிக் களித்தார்கள். ஆனல், இன்று கவிபாடும் கவிஞர்க்கு 'மூடு' வேண்டும என்பர். 'உள்ளத்தே உணர்ச்சி பெற்றபோதே கவிதை வெளிப்படும்; சூழ்நிலை சேர்ந்தபோதே கவிதை உருவெடுக்கும்; இது மேனட்டார் தரும் விளக்கம் என்பது மட்டுமல்ல; உண்மையுங்கூட. பொதுவாகக் கவிஞரின் இயல்பு இதுவே தான். ஆனல், பிறப்பிலே சிறப்பமைந்தவர்கள் -கருவில் திரு உடையவர்கள்-விந்தைக் கவிஞர்கள் உண்ணும்போதும் உறங்கும் போதும் கவிபாடும் இயல்பினைக் கொண்

வதற்கு முழுமுதற் காரணமாய், நாஞ்சில் நாட்டில் தமிழ்ப் பயிரை நட்டு வளர்த்த பெருமை நம் பாவலர் அவர்கட்கே உரியது. அன்னியராட்சி அகன்று நாடு விடுதலை அடையவேண்டும்; நாட்டு மக்கள் வறுமை நீங்கி இன்பமாய் வாழவேண்டும் என்றெழுந்த சுதந்திர உணர்ச்சியைப் பாரதத்தின் தென்னெல்லையாகும் குமரி முனையிலே வாழும் மக்கள் உள்ளத்திலும் ஊட்டி, உணர்ச்சியைத் தட்டி எழுப்பி, விடுதலைப் போராட்ட வீரர் பலரை இங்கு தோற்றுவித்த பெருமையும் நம் பாவலர் அவர்கட்கே உரியது என்ருல் அது மிகைப்படக் கூறலாகாது.

நாஞ்சில் நாட்டின் நற்றவப் புதல்வராய்த் தோன்றிய நம் பாவலர் அவர்கள் சொற்சுவையும், பொருட்சுவையும் மலிந்து கற்போர்க்கு இன்பம் பயக்கும் பாடல்களும் நூற்களும் பல இயற்றியுள்ளார்கள். அவைகள் யாவும் இலைமறைகாய்கள் போன்று மறைந்து கிடக்கின்றன. அவைகளையெல லாம் வெளிக்கொணர்ந்து தமிழகத்திற்கு அளிக்கும் பணியையும் பாவலர் மன்றத்தார் மேற்கொள்ள வேண்டுகின்றேன்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்ருமை நன்று.

★

டிருப்பர். கவிதைக்குரிய உணர்ச்சி எப்போதும் அவர்களைப் பற்றியே நிற்கும். கங்கையைப் போல் காவிரிபோல் கவிதைகள் பெருக்கெடுத்துக்கொண்டே இருக்கும்

பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து கவிமாரி பொழிந்திட்ட தண்டமிழ்க் கொண்டல் கம்பர் இரவிற்கு எழுநூற்றைம்பது பாடல் வீதம் பாடி முடித்தார் இராம காதையை என்றதொரு மரபுச் செய்தி உண்டு. பிற்காலத்தில் கவிதை மண்டலத்தே கதிரவனாக ஒளிவீசிய திருசிரபுரத்து மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சோதிக்க வந்த மாணவன் எழுதும் கை சோர்ந்து கடுக்கும் அளவிற்குப் பாடிக் குவித்தார் என்பது தமிழ் வரலாறு தரும் குறிப்பாகும். இடியும் மழையுமாக கவிதை பொழிந்த காளமேகத்தை அறியாத தமிழர் இரார். இவர்கள் போன்றே பாவலரும் வேண்டியபோதெல்லாம் இன்பக் கவிகள் பாடிக் களிப்பில் ஆழ்த்தும் அருந்தமிழ்ப் புலவராவார்.

நாஞ்சில் நாட்டில் கோட்டாறு எனும் பதியை அடுத்துள்ள இளங்கடை என்னும் சிற்றூரில் நம தீஞ்சொல் பாவலர் தோன்றினார். இவர்தம் தந்தையார் பக்கீர் மீரான் என்பார். இவர் ஐந்தாண்டுகள் எய்தியதும் அரபிப் பள்ளியில் சேர்ந்து திருக்குர்ஆன் பயின்றார். எட்டாண்டுகள் எய்தியதும் தமிழ்ப் பள்ளியில் பயின்றார். தந்தையாரின் பொருளாதாரம் இடந்தராமையால் பள்ளிப் படிப்பிற்குப் புள்ளி வைத்துவிட்டு நெய்தற்றொழிலில் தந்தைக்குத் துணையாக அமைந்தார். எனினும் கல்வியில் கரை கடந்த காதல் கொண்டார். சங்கர நாராயணன் என்னும் செந்தமிழ் வாணரிடம் இருவென இருந்து சொல்லெனச் சொல்லி இலக்கிய இலக்கணங்களை முறையாகத் துறைபோகப் பயின்றார். இவரிடம் அமைந்த அறிவு நுட்பமும் கல்வியில் இருந்த தீராத வேட்கையும் அடங்காத ஆர்வமும் அறிவுப் பசியும் கண்ட ஆசிரியர் அகமகிழ்ந்து புலவர் மணிக்குப் பட்டை தீட்டினார். பாவலரும் பேரொளி வீசித் திகழ்ந்தார்.

'ஒன்றே செய்தல் வேண்டும்' (One thing at a time) என்பர். பலவற்றில் ஈடுபட்டு ஒன்றையும் செவ்வையாகச் செய்யாது பரிதாப நிலையிலிருப்பது கூடாது என்பதை உணர்த்தவே இப்பழமொழி தோன்றியுளது. ஒன்றைத் தொடங்கி அதனையும் நன்றாகச் செய்யாத மாந்தரும் பலருண்டு. ஆனால், அறிவு மேதைகள் - வியத்தகு செய்திடும் விந்தை மனிதர்கள் பல செயல்களை ஒரே காலத்தில் சிறக்கச் செய்துவிடுவர். இவ்வாறு ஒரே காலத்தில் பல துறைகளில் முறையாகப் பல செயல்களைச் செய்து காட்டுவதனை அவதானம் என்பர். நினைவாற்றல், ஊன்றிய கவனம், மேன்மைச் செயல் எனும் பல பொருள்களைக் கொண்டுள்ளது 'அவதானம்' எனும் சொல். அவதானியாரிடம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலனும் அருமையாகச் செயல்படுகின்றன. அறிவு, அகில இருளை அகற்றும் கதிரவனாக ஒளிவீசும். இவ்வாறு எத்தனை செயல்களைச் செய்யக்கூடுமோ அவற்றிற்கேற்றவாறு அவதானம் அமையும். எட்டுச் செயல்களை ஒரே காலத்தில் செய்வது அட்டாவதானமாகும்; பத்துச் செயல்களைச் செய்வது தசாவதானமாகும்; பதினாறு செயல்களைச் செய்வது சோடசாவதானமாகும்; நூறு செயல்களைச் செய்வது சதாவதானமாகும. அவதானம் செய்வது அருமையாகும். அதனினும் சதாவதானம் செய்வது மிகவும் அருமையாகும். இன்பத் தமிழிலே இதுகாறும் சதாவதானம் செய்தவர் மூவரே. நூறு செய்த மூவருள் நம் பாவலர் மிகச் சிறந்தவராவர்.

1907-ஆம் ஆண்டு மார்ச் 10-ஆம் நாள் சென்னை விக்டோரியா பொதுமன்றத்தே மாகடலைப்போன்ற மக்கள் கூட்டம்! புலவரும் பேரறிஞரும் திரண்டனர். புதுமையான சதாவதானத்தைக் கண்டு களித்திடும், கேட்டு இன்புறும் ஆவல் அலைகள் மோதின. மேடையிலே தூய வெள்ளாடை உடுத்திய பாவலர் தோன்றினர். கைகள் இலாடச் சங்கிலியைப் பின்னிக் கழற்றும் செயலில் ஈடுபட்டன. செந்நாப்போது 'மெஞ்ஞான நாதா! மெஞ்ஞான நாதா!' எனும் ஒலியை மாறாது ஒலித்துக்கொண்டே இருந்தது. இதனைக் கேட்டதும் கூட்டத்தில் கூடியிருந்தோர் வியப்புக் கொண்டனர். ஒரே தொடரை இரண்டாக அடுக்கிப் பொருந்தும் வகையில் பிரித்து ஒலிக்கும்போது இரு

வகையான பொருளைத் தந்து இன்புறுத்து கின்றது.

அவதானம் தொடங்கியது. சிலேடைக் கவிகள் பாடச் செய்தனர். ஈற்றடி கொடுத்துப் புதிய பாடல் புனையும்படி கேட்டனர். இலக்கியப் புலமையைச் சோதித்தனர். இலக்கண அறிவை எடை போட்டனர். கணிதக் கேள்விக் கணைகளை விடுத்தனர். ஆயிரம் ஆண்டுகட்கு அப்பாற்பட்ட தேதியின் கிழமையைக் கூறிடக் கேட்டனர். கண்டபத்திரிகை வாசிக்கக் கேட்டனர், சுவை ஓசையினைச் சோதித்தனர். பொது அறிவைச் சோதிக்கப் பல விஞக்களை விடுத்தனர். கேட்டார் பிணிக்கும் வகையில் விஞக்களுக்கு விடையிறுத்த பாவலர் இருபது வகையான நூறு செயற்கருஞ் செயல்களைச் செய்து காட்டினர்.

எண்ணும் போதெல்லாம் இன்புறுத்தும் இலக்கிய நிகழ்ச்சிகளில் சிலவற்றைப் பார்ப்போம். 'விராடனையே பெண்ணென லாமே' என்பதனை ஈற்றடியாகக் கொண்டு ஒரு பாடல் பாடவேண்டுமென்று ஒருவர் கேட்டார். 'விராடனையே பெண்ணென லாமே' எனும் தொடர் பொருள்முரண் கொண்டதாகும். கூடியிருந்தோர் 'பாவலரின் புலமையைப் பார்க்க வேண்டும்' என ஐயமும் ஆவலும் கொண்ட காலத்தே ஈற்றடியின் இறுதியிலே 'சொற்ற' எனும் சீரினைக் கொண்டு 'சொற்ற விராடனையே பெண்ணெனலாமே, என அமைத்து 'உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் ஒன்றை எண்ணும் பொழுதும் நெருப்பு சாட்சியாகத் தன் கரம் பற்றிய வரஞகிய ஆடவனையே (கணவனையே) தெய்வமெனக் கொண்டு அவன் சொல் தவிராள் தனையே பெண்ணெனக் கூறலாமே' எனும் பொருள் கொண்ட பாடல் தேனைச் சிந்தியது அவதானம் பல செய்திடும் அரும் பாவலரின் செந்நாப் போது சுவைக்க வேண்டுமா? இதோ அப் பாடல் தேன்:

உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுது மொன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்னய்—மண்ணில்
வராடனையே தெய்வம் மன்னெனும் சொற்ற
விராடனையே பெண்ணென லாமே.

(திருச்சிராப்பள்ளி ஜமால் முஹம்மது கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவரான சி. நயினர் முகம்மது அவர்கள் எழுதிய இக்கட்டுரை, முஸ்லிம் முரசு 12-ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்பு மலரில் வெளிவந்தது. பாவலர் நினைவு மலரில் வெளியிட ஒப்புதல் தந்த முஸ்லிம் முரசுக்கு எங்கள் நன்றி.)

வியந்து மகிழ்ந்த கூட்டத்தே இன்னொரு புலவர் எழுந்திருந்து 'கண் கெட்ட பின் என்றும் காணுத காட்சியைக் கண்டனரே' என்பதனை ஈற்றடியாகக் கொண்டு ஒரு கட்டளைக் கலித்துறை பாடுக என்ருர். அறிஞர் சிந்தனையில் ஆழ்ந்தனர். இதென்ன கண்ணுல்தானே ஒன்றைக் காணக்கூடும். கண்கெட்ட பின்னர் எவ்வாறு காட்சியை-அதுவும் என்றும் காணுத காட்சியைக் காணக்கூடும்? எனும் கேள்வி அலை எழுந்தது. ஆனுல், நுண்மான் நுழை புலம் வாய்ந்த பாவலரின் மதி பளிச்சென ஒளி வீசியது பகலவனின் கதிரெனப் பாய்ந்திடும் பாவலரின் புலமை கவிதைக் கதிரை வீசியது.

நுண்ணறிவு வாய்க்கப்பெற்ற பாவலரின் நூலறிவு விரைந்து செயல்பட்டது. திருத்தொண்டர் புராணம் நினைவுக் கருவிக்கு வந்தது. கண்ணப்பரின் காட்சி உள்ளத் திரையிலே தோன்றியது: திண்ணனுரின திண்ணிய அன்பை வெளிப்படுத்த விரும்பிய காளத்தியப்பர் தம் வலது கண்ணில் இரத்தம் சொரியச் செய்தார். நெஞ்சங் கவர்ந்த தெய்வத்தின் நிலைகண்ட திண்ணனுர் நெஞ்சம் பதைத்தார். வழிபடு தெய்வத்தின் விழியில் வழியும் குருதியை நிறுத்தத் துடித்தார். ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்ப்பது எனும் பழமொழியை நினைவில் கொண்டு கண்ணுக்குக் கண்ணே பொருந்திய மருந்து எனக் கண்டு தம் வலது கண்ணை அம்பினுல் தோண்டி காளத்திநாதரின் குருதி கொட்டும் கண்ணில் அப்பினர். புண்ணும் மாறியது. ஆனுல் இடது கண்ணிலிருந்தும் குருதி கொட்டத் தொடங்கியது. தமது இடது கண்ணையும் பெயர்த்தெடுக்க முயன்றபோது அடியவரின் அன்பு கண்டு அகமகிழ்ந்த காளத்தியப்பர், 'நில்லு

கண்ணப்ப, நில்லு கண்ணப்ப' என மும்முறை கூறி ஒப்புயர்வற்ற கண்ணப்ப நீ என் வலப்பக்கம் நீங்காது நிற்பாயாக, எனக் கூறிக் காட்சி தந்தார். என்றுங் காணாத காட்சியினைக் கண்டு இணையற்ற இன்பங்கொண்டார் ஈடில்லாத் திருத்தொண்டர். இப்புராணச் செய்தியைக் கருத்தாகக் கொண்டு,

விண்தொட் டசையும் தருமலி கானில்
மிகுதிண்ணனார்
பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் போற்றும்
பரமன்விழி
புண்பட்ட தென்றுதன் கண்ணைப் பெயர்த்துப்
பொருத்தியிரு
கண்கெட்ட பின்னென்றுங் காணாத காட்சியைக்
கண்டனரே

எனும் கவிபொன்று பாடி முடித்தார் பாவலர். கண்கெட்ட பின் கண்ணப்பர் கண்ட காணாத காட்சி பற்றிப் பாவலரின் கேளாத பாடலைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போயினர். கையொலி செய்து களிப்பினை வெளிப்படுத்தினர்.

இவ்வாறு கண்டோர் வியக்க அவதானம் நூறு செய்துமுடித்தார் பாவலர். கடலெனக் கூடிய மக்கள் கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது. பாவலரின் மதிச்சிறப்பறிந்து வியந்த கூட்டத் தலைவர் 'மகாமதி' 'சதாவதானி' எனும் பட்டத்தைத் தந்து பாராட்டினர் இலக்கிய அன்பர்கள் தங்கத் தோடாக்கள் தரித்தனர். பொன்னுடை போர்த்தினர்; போற்றிப் பாராட்டினர்.

மதிநுட்பம் வாய்ந்த புலவர்களின் புலமைச் சுவை கவிகளில் மட்டுமல்ல, அவர்தம் உரையாடலிலும் ஒளி வீசித் திகழும். அறிவு நிரம்பிய அறிஞர்தம் உரையாடலிலும் சுவை பயகரும் பிறிதொன்றுமில்லை. எனவேதான் விண்ணகத்தே துறக்க இன்பங் கிடைப்பதாயிருப்பினும் மண்ணகத்தே அறிஞர்தம் உரையாடலிலே மின்னும் சுவையே விரும்பப்படுவது என்று கூறுகிறது ஒரு நாலடிப் பாடல். நுண்ணறிவும் நூலறிவும் கைவரப்பெற்ற பாவலரின் உரையாடலும் உவகை பயப்பதாகும்.

ஒரு நாள் பாவலரின் நண்பர் மகன் வந்தார். இவரும் புலமை வாய்ந்தவர். பாவலரின் புலமைத் திறத்தைச் சோதிக்க விரும்பினர். நண்பரின் மகனை நல்விருந்தாகக் கொண்டார் பாவலர். தம் தந்தை பாவலரிடம் நூறு ரூபாய் வாங்கிக்கொள்ளச் சொன்னதாகக் கூறினர். நண்பரின் விருப்பத்தை நிறைவேற்ற முற்பட்ட பாவலர் 'அதற்கென்ன நூறு ரூபாய் தருகிறேன்' என்று கூறினர். பாவலரைச் சோதிக்க முனைந்த வந்தவர், 'அதிகச் செலவுளது; ஆதலின் இருநூறு ரூபாய் தந்தால் பேருதவியாகும்' என்றார். பாவலரும் பளிச்சென 'இரு நூறு ரூபாய் தருகிறேன்' என்று இருநூறு என் பதனைப் பிரித்துக் கூறினர். பாவலரின் சிலேடையைப் புரிந்துகொண்ட வந்தவர் முந்நூறு ரூபாய் தந்தால் நல்லது' எனக் கேட்டார். பாவலரும் தயங்காமல்'முன்னூறு ரூபாய் தருகிலேன்' என்றார். முன்பு கூறிய நூறு ரூபாய் தருகிறேன் என்னும் பாவலரின் குறிப்பை அறிந்த வந்தவர், 'நானூறு ரூபாய் தந்தால் நலமாகும்' என்றார். பாவலரும் பரிவோடு 'நான் நூறு ரூபாய் தருகிறேன்' என்று கூறினர். பொருளைப் புரிந்துகொண்ட வந்தவர் 'ஐந்நூறு ரூபாய் தாருங்கள், எனக் கேட்டார். வியப்புக் குறிப்பை முகத்தில் காட்டி விந்தை உணர்ச்சி வெளிப்பட 'ஐ! நூறு தருகிறேன்' என்றார் பாவலர். சிந்தை மகிழ்ந்த வந்தவர் 'அறுநூறு ரூபாய் தாருங்கள்' எனக் கேட்டார். 'நீட்டாது பேச்சை அறு' எனும் பொருளில் 'அறு நூறு ரூபாய் தருகிறேன்' என்றார் பாவலர். பெரும் மகிழ்வு எய்திய வந்தவர் 'எழுநூறு ரூபாய் வேண்டும்' என்றார். பாவலரும கையசைத்து 'நூறு பெற்று எழுந்து செல்' எனும் பொருள்பட 'எழுநூறு ரூபாய் தருகிறேன்' என்றார். வந்த புலவர் தொடர்ந்து 'எண்ணூறு ரூபாய் வேண்டும்' என்றார். பணப்பையோடு வந்த பாவலர் 'இதோ எண்ணு நூறு ரூபாய் இருக்கின்றது' எனும் குறிப்பில் 'எண் நூறு ரூபாய்' எனக் கூறிப் பணத்தைக் கொடுத்துப் பேச்சை முடித்தார். பாவலரின் மதி நுட்பத்தையும் உரைத் திட்பத்தையும் கண்டு வியந்து மகிழ்ந்தார் சோதிக்க வந்தவர். இதுபோன்று மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள் பலவுண்டு பாவலர் வாழ்விலே.

இவர் இணையற்ற நினைவுத் திறன் மிக்கவர். எளிதில் ஈர்க்கும் அறிவுத்திறன் படைத்தவர். சதாவதானம் எனும் புகழ்ப் பெயருக்கேற்ப 'சதா அவதானம்' செய்து கொண்டே இருக்கும் ஆற்றல் வாய்ந்தவர்.

பாவலரின் பெருமை பைந்தமிழ் நாடெங்கும் பரவியது. பாடல் செய்யும் புலவர்கள் பாவலரின் சாற்றுக் கவியினால் பெருமை பெற்றிட விரும்பி வந்தவண்ணம் இருப்பர். ஒருநாள் புலவர் தாம் பாடிய நூலுக்குப் பாவலரிடம் சாற்றுக்கவி வாங்கும் பொருட்டு வந்தார். அப்பொழுது பாவலர் தம் துணைவியாரோடு பூசல் கொண்டிருந்தார். வெளித்திண்ணையில் வீற்றிருந்த பாவலரின் மாணுக்கர் சரவண ஆசாரி என்பார் புலவரின் வருகை பற்றிக் கேட்டார். புலவரும் வந்த நோக்கத்தைக் கூறினர். புலவரை இருக்கையில் அமரச்செய்து இயற்றிவந்த பாடல்களில் சிலவற்றைப் படிக்குமாறு கேட்டார். புலவரும் பாடிக் காட்டினர். பின்னர் நாளைக்கு வந்தால் பாவலர் படிக்கக் கேட்டு சாற்றுக்கவி தருவார் எனக் கூறி அனுப்பிவைத்தார். மறுநாள் காலையில் புலவர் வந்தார். பாவலரும் வரவேற்று அமரச் செய்து வந்த நோக்கத்தைக் கேட்டார். புலவரும் விருப்பத்தைக் கூறினர். பனுவலைப் படிக்கும்படி பாவலர் கேட்டார். புலவரும் படிக்கத் தொடங்கி முதலடியைப் பாடியதும் பாவலர் கடல்மடை திறந்ததுபோல் கட கட வெனப் பிற அடிகளையும், முந்திய நாள் மாணுக்கரிடம் பாடிக் காண்பித்த பாடல்களையும் பாடி முடித்தார். இப்புதுமை கண்டு வியந்த புலவர் பாவலரைப் பணிந்து சாற்றுக்கவி பெற்றுச் சென்றார்.

பாவலர் நாவன்மை மிக்க பெரும் நாவலராவர். அருட்பா-மருட்பாப் பூசலிலே கலந்து பெருங் கூட்டத்திலே இவர் நிகழ்த்திய உரைப் பெருக்கு அருட்பா இயக்கத்திற்குப் பெருந்துணை செய்தது. 'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்' எனும் பட்டமும் வழங்கப் பெற்றார். இவர் தம் பேருரை கேட்டு மகிழ்ந்த மக்கள் 'கலைக்கடல்' எனும் பட்டம் வழங்கிப் பாராட்டினர்.

ஏட்டுச் சுவடியிலே அமைந்து நாட்டுக்குதவாத நல்ல நூல்களைப் பதிப்பித்து வழங்கிய பாவலர் சிறந்த நூலாசிரியராகத் திகழ்ந்தார். ஷம்சுத்தாசீம் கோவை, நாகைக் கோவை, அழகப்பக் கோவை, திருநாகூர்த் திரிபந்தாதி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ், நீதிவெண்பா, கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, நாயக மான்மிய மஞ்சரி முதலிய பல நூல்கள் செய்துள்ளார். இவர் உயர்ந்த உரையாசிரியருமாவார். சீறாப் புராணத்திற்குச் சிறந்ததொரு உரை செய்துள்ளார் பத்திரிகை ஆசிரியராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

நாஞ்சில் தந்த நற்றமிழ்த் தென்றல், இலக்கியக் கருவூலம், நாவீறு கொண்ட நாவலர், பனுவல் பலசெய்த பைந்தமிழ்ப் பாவலர் 74 ஆண்டுகள் வாழ்ந்து 1950-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாளில் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு விட்டார். உறவினர் கண்ணீர் பெருக்கினர். தமிழ்ப் பெருமக்கள் பாவலரின் பிரிவைத் தாங்காது பெரிதும் வருந்தினர். புலவர் புலம்பினர். இனிய பாடல் செய்திடும் அரிய கவிமணி கசிந்துருகிச் சிந்திய கண்ணீர்,

> "ஒரும் அவதானம் ஒருநூறு செய்திக்குப்
> பாரில் புகழ்படைத்த பண்டிதனைச்—சீரிய
> செந்தமிழ்ச் செல்வனைச் செய்குத்தம்பிப்
> பாவலனை
> எந்தநாள் காண்போம் இனி."

எனும் கவியாக வடிவெடுத்தது. ஆம்! நூறு செய்த பாவலரை, பேரொளி வீசிய மகாமதியை, அமுத மழையெனச் சொற்பெருக் காற்றிய தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியத்தை, கலையலை வீசிய கலைக்கடலை, புலமையின் பேரினபப் பெருநிலையை நாம் எந்த நாள் காண்போம் இனி!

★

எக்கலையுந் தேர்ந்துயர்ந்தோ னென்றறிஞர் போற்றிடவே
மிக்கபுக ழுற்றுளிர்ந்த மேலவனை — திக்கெல்லாம்
செந்தமிழின் சீர்பொலிந்த செய்குதம்பிப் பாவலனை
எந்தநாள் காண்போம் இனி

பாவுக் கரசனெனப் பார்துதிக்க வந்தவனை
மேவுபுகழ் பெற்றுயர்ந்த வித்தகனை — ஆவலுடன்
நாவலரும் வாழ்த்திநின்ற நற்றமிழ்தேர் செய்குதம்பிப்
பாவலனைக் கண்டிடுமோ பார்.

— செ. ப. ஜமால் முகம்மது

போன் நிர். 78 தந்தி "RELIANCE"

சு. ச. த. அ. சரவணைப் பணிக்கர்

வியாபாரம்,

கோட்டார், நாகர்கோவில்.

எம். வி. எம். முள்ளெலித் தைலம் பால சஞ்சீவி

குழந்தைகளின் நீர்த்தோஷம், இருமல், இளைப்பு (Asthma) கபசுரம், கபமாந்த சன்னி, வலிப்பு முதலிய நோய் அபாயங்களினின்றும் துரித நிவாரணம் பெற

எம். வி. எம். முள்ளெலித் தைலம், பாலசஞ்சீவி உபயோகியுங்கள்.

உங்கள் வீட்டிலும் இம்மருந்துகள் இல்லையென்றால் இப்பொழுதே வாங்கி பத்திரப்படுத்துங்கள்.

ஏனென்றால் இவைகள் எப்போது உங்களுக்குத் தேவைப்படுமென்பது முன் கூட்டியே நிர்ணயிக்க முடியாது.

பரிபூரண நம்பிக்கையான இம்மருந்துகளை உபயோகித்து சிரமத்தையும் வைத்தியச் செலவையும் லாபப்படுத்துங்கள்.

டிரேட் மார்க்

Manufactured by:

M. V. M. Siddha Pharmaceuticals,
NAGERCOIL, (Kanyakumari Dist.)

சிவகாமி காபி அவுஸ்

பாலமோர் ரோடு, நாகர்கோவில்.

SIVAKAMI COFFEE HOUSE

BALAMORE ROAD, NAGERCOIL.

நாவிற்குச் சுவையான உணவு:

நறுமணமுள்ள காபி, டீ;

மலர்ந்த முகத்துடன் உபசரிப்பு

இவைகளுக்குச் சிறந்த இடம்

முருகன் கபே

கேப் ரோடு, நாகர்கோவில்.

N. B. விசேஷ வைபவங்களுக்கு ஆர்டர்படி குறிப்பிட்ட நேரத்தில் சிறந்த முறையில் தயார்செய்து கொடுக்கப்படும்.

★ 5 பூ பீடி கம்பெனி ★

பொதுமக்கள் எங்கள்

5 பூ மார்க் பீடிகளை வாங்கி

எங்களை

ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உரிமையாளர்: **V. T. S. A. H.**
மேலப்பாளையம்.

கிரீன் லேண்ட்

பிராமணாள் ஓட்டல்

(வேப்பமூடு சந்திப்பு)

கேப் ரோடு ★ நாகர்கோவில்

ருசி மிக்க பலகாரங்கள்! அறுசுவை உணவு!!

இவை உண்ண

கிரீன் லேண்ட் ஓட்டலுக்கு

விஜயம் செய்யுங்கள்,

With best compliments of:-

J.M.ELECTRICALS

DEALERS IN

Electric Accessories & Lamps

Cape Road, KOTTAR,

NAGERCOIL.

பாவலனை மறந்ததேனோ?

(செ. பசுலு முகியிதீன்)

1. காவிலுயர் தமிழ்நாட்டின் கனியா யுள்ள
கவின்பெறுசீர் நாஞ்சிலதன் கோடை தன்னில்
காவலர்க்கும் பூவுலகின் வாழ்வு ளோர்க்கும்
கடைநின்றும் விடையளித்தே உறுதி நல்கும்
மாவலராம் சொல்லுழவர் ஓங்கு சீர்த்தி
மதியொடுநாத் திறங்கூறும் தேனாய் ஊறும்
பாவினிலே வல்லவர்க்கும் பாடஞ் சொல்லும்
பாவலன்மா மதியினையும் மறந்த தேனோ?

2 பாவல்ல நம்செய்குத் தம்பி கண்டே
பைந்தமிழும் பாருலகும் மகிழ்ந்த தன்றே
பாவல்ல பாவலனின் இனிய பேச்சும்
பகைத்திறத்தோர் தமையுமிக ஈர்த்த தொன்றோ?
பாவலனின் பலவாய பொருள்கோள் தன்மை
பல்கலைஞர் தமைக்கூட மாட்டு மன்றோ?
பாவலனை மாமதியை உரைக்கு வேந்தைப்
பாவியர்நாம் பெற்றிருந்தும் விடுத்த தேனோ?

3. தேன்சொட்டும் சொற்பயனும் தெவிட்டா நிற்கும்
தெள்ளியநற் பாகனைய கவிதைப் போக்கும்
வானகமுஞ் செவிமடுக்கும் அமுதம் போன்ற
வண்டமிழில் உரையாடும் தன்மை தானும்
கானமயில் நடனமிடும் எழிலே என்னக்
கல்லார்க்கும் விருந்தாகும் கருத்துப் போக்கும்
தானமென உறைநாவன் தமிழைக் காத்தோன்
தனைப்பெற்றோம் தாரணியில் இழந்தோம் ஏனோ?

5. தமிழ்வாழ இசுலாமும் தந்த நல்ல
தனிப்பெருநூல் சீறுவின் சுவைய னைத்தும்
தமிழறிந்தோர் அறியாத நிலையை மாற்றத்
தந்திறனைக் காட்டியதன் பொருளைக் கூட்டித்
தமிழ்ச்சுவையுந் தஞ்சுவையுஞ் சேர நல்ல
தகுநூலாய் உரையிட்டுச் செய்த தொண்டைத்
தமிழினத்தார் யாவருமித் தரணி தன்னில்
தமிழ்வருந்த மறந்திடலும் தக்க தாமோ?

5. இமிழ்கடலின் புகழ்மாய்க்கும் சீர்த்தி மிக்க
இனிமைத்தெள் ளமுதமென நிற்கும் வண்ணத்
தமிழ்மொழியைக் கற்றதனல் வந்த பேறோ
தம்மவரும் புறக்கணித்த நிலைக்கு வித்து?
தமிழ்ப்புலவர் யாவர்க்கும் இதுதான் ஊறோ?
தாரணியில் தமிழ்ப்பெரியோர்க் குயர்வி ராதோ?
இமைகொட்டும் கணப்பொழுதில் அழியும் மாயும்
இழிவுடைய மொழிவந்தும் உறக்கம் ஏனோ?

செந்தமிழுக்கொரு செய்குதம்பி

"சோமலெ"

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் தமிழ்மொழிக்கு அரும்பணியாற்றிய அறிஞர்களில் தலைசிறந்தவர் ஆவார். சிறந்த கவிஞராகவும், கம்பராமாயணத்தில் புலமையும் பற்றுதலும் உள்ள இஸ்லாமியப் பெருமகனாராகவும் இருந்த சிறப்பும் பாவலரின் பான்மையையும் பண்பையும் வெளிப்படுத்துகிறது.

தேசீய இயக்கத்துக்குச் செய்குதம்பிப் பாவலர் பெரிதும் ஆதரவாக இருந்து நாஞ்சில் நாட்டு வாழ்நர் அனைவர்க்கும் உணர்ச்சியூட்டி இருப்பதும் அன்னாருடைய தொண்டுகளில் குறிப்பிடத்தக்கதாகும்.

உடல் நலங் குன்றியிருந்தும் அதை மறந்து பல நூறு செயல்களில் ஒரு நேரத்திலேயே ஈடுபட்டிருக்கும் பேராற்றல் பாவலர் அவர்களிடம் அமைந்திருந்ததை எவ்வளவு போற்றினும் தகும்.

தமிழ் நாட்டில் மத வேறுபாடின்றி எல்லாச் சமயத்தினரும் தமிழ் மொழியின் வாழ்வுக்கும் வளத்துக்கும் ஏற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருகின்றனர். ஒருகாலத்தில் சமண வைணவ இலக்கியங்கள் தமிழுக்குப் பெருமை தந்தன. பிறிதொருகால் சமணரும் பௌத்தரும் காப்பியங்கள் கண்டனர். பின்னர், கிறித்தவப் பெருமக்கள் அச்சகம் வைத்தும் அகராதிகளை ஆக்கியும் அரிய பணியாற்றினர். இவ்வாறே இஸ்லாமிய சமயத்தினர் பலர் இன்று நல்ல தமிழில் எழுதியும் பேசியும், சாதி சமய வேறுபாடின்றிப் பிற சமயத்து நூல்களைப் படித்தும் பதிப்பித்தும் தாய்மொழித் தொண்டில் தலைசிறந்து விளங்கிவருகின்றனர். பஞ்சாபு மாநிலத்திலுள்ள மக்கள் பஞ்சாபி, இந்தி மொழிப் போரை, உருதுமொழியில் நடத்தி வருவதை ஒருகணம் நினைவு கூர்ந்து ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டின் உயர்நிலை தெளிவாகத் தெரியும்.

நாட்டுக்கும் மொழிக்கும் நாளெல்லாம் பாடுபட்ட பாவலர் அவர்களின் மைந்தன் **கா. ப. செ. அமீது** என்னும் **செந்தாமரைக்** கவிஞர், தந்தைவழி நின்று கவிதை புனைந்தும் வானொலி வாயிலாகத் தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரப்பியும் வருவது மிகப் பொருத்தமாகும். இதுபோன்ற துறைகளில் குமரி மாவட்டத்தினர் பலரை ஈடுபடுத்திவரும் **"சதாவதானி பாவலர் மன்றம்"** பாவலர் புகழைப் பரப்பிப் பைந்தமிழை வளர்ப்பதாக.

★

ஒப்பற்ற பாவலர்.

(சைவப்புலவர், பண்டித அ. சிவசுப்பிரமணிய பிள்ளை)

பாரிலிலே ஒப்பற்ற பாவலரே! வானுறையும்
சீரிலிய வாழ்வினிலே சேர்ந்தீரோ—மாரியைப்போல்
பாட்டைப் பொழிகின்ற பண்புடையார் யாருளரோ
தேட்டமுடன் கூறத் தெளிந்து.

பாவலரும் நாடிப் பணிகின்ற செய்குதம்பிப்
பாவல ரென்கின்ற பாவாணு — மேவுபுகழ்
வண்டமிழால் கோவையை வையத்தார்க் கீந்ததினுல்
கொண்டலென் போமன்பு கூர்ந்து.

அருந்தமிழில் நன்ருய் அவதானம் செய்தும்
அருட்பா மறுப்பினுக்கு அன்பாய் — திருந்திய
நன்மொழியால் மற்றவர்க்கு நல்லுரைசெய் பாவலரை
இன்மொழியால் ஏத்தினுர் இங்கு.

பாவலரும் வள்ளலாரும்

(அரசு. ஆறுமுகம், M. A.)

எட்டாம் நூற்றுண்டிலும் பதின்மூன்ரும் நூற்றுண்டிலும் எகிப்து மன்னர்களின் கொடுங்கோன்மைக்கு அஞ்சித் தஞ்சம் புகுந்த முஸ்லிம் மக்களைப் பாண்டிய மன்னர்கள் அன்புடன் வரவேற்று, அவர்களுக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்தார்கள் என்று முஸ்லிம் தமிழுலகம் கூறும். இஃது இருதிறத்தாரும் கொண்டுள்ள அன்புணர்ச்சியை விளக்குகின்றது. இன்னும் தமிழகத்தில் முஸ்லிம்களும், இந்துக்களும் ஒரு தாய்வயிற்று மக்களைப்போல் அன்புரிமை பூண்டு வாழ்ந்து வருகின்ருர்கள். காலம் அவர்கள் அன்புரிமையை வளர்க்கவேண்டுமேயொழிய, அழிக்கக்கூடாது என்பதே என் பணிவான வேண்டுகோள்.

தமிழன்னைக்கு யாவரும் அன்பு மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர். மக்கள் இந்துக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும், கிறித்தவர்கள் என்றும், சமணர்கள் என்றும், பௌத்தர்கள் என்றும், சைவர்கள் என்றும், வைணவர்கள் என்றும், இவர்களையெல்லாம் ஒருசேர நோக்கும் சமரசவாதிகள் என்றும் பிரிந்திருந்தாலும் அவர்களையெல்லாம் தமிழன்னை தன் வயிற்றுப் பிள்ளைகளாகவே பேணி வந்திருக்கிருள். இப்பண்பு ஆங்கில மொழியிடத்தும் இல்லையென்று துணிந்து கூறலாம்.

செய்குதம்பிப் பாவலர் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர்; கோட்டாறு என்னும் ஊரைச் சார்ந்தவர். எனினும், அவர்தம் புலமையாலும், பிற அருங்கலைகளாலும் தமிழுலகம் அவரை அறிந்து போற்றுமளவுக்கு உயர்ந்தார். அவரது உயர்வு அத்துடன் அமையவில்லை. அதற்கு மேலும் சென்றது.

இருபதாம் நூற்றுண்டில் தமிழுலகம் போற்றுமளவுக்குத் திருவள்ளுவர் கூறும் மனத்துறவு வழி நின்ற துறவிகள் வெகு சிலரே. அச்சிலரிலும் இராமலிங்க வள்ளலாரைப் போன்று சிறந்த அடிகளாக வாழ்ந்தவர்கள் இதுவரையிலும் இல்லை. சமயங்கள் பலவாகப் பெருகியதாலோ, பல சமயத்தவரும் தம் தெய்வம் சிறந்தது என்று சிறு பிள்ளைகளைப் போல் வாழ்ந்ததாலோ, தாம் சைவ சமயத்தவராயினும் சித்தாந்தம் கூறும் சிவனின் பரம்பொருள் தன்மையை விளக்குவதைப் போலக் கடவுளின் பொதுவான அருள் தன்மைகளையும் பாடி வந்தார். பல சமயத்தவரும் உண்மைப் பரம்பொருளின் தன்மையை உணராமல் சாத்திரச் சண்டைகளிலும், சமயச் சண்டைகளிலும் ஈடுபடுவதை அவர் வெறுத்தார். மக்கள் எல்லோரும் கடவுளின் புதல்வர்களாக இருக்க, அவர்களில் ஒருசிலர் கடவுளின் தன்மையையே அறியாதவாறு தடுக்கப்படுவதை அவர் உணர்ந்தார். இவ்வாறு உணர்ந்தும், அறிந்தும் அவர் தாழ்த்தப்பட்டோரை உயர்த்துவதிலும், சர்வ சமய சமரச சன்மார்க்க நெறியை வகுப்பதிலும் முனைந்தார். காலத்திற்கு ஏற்ற இச் சீர்திருத்தப் போக்கு சில சைவ சமயப் பெருமக்களுக்குப் பிடிக்கவில்லை.

சித்தாந்தம் சொல்லும் சைவசமய நெறியையே இராமலிங்க வள்ளலார் புதுமுறையில் கூறி வருகின்ருர்; செயற்படுத்தி வருகின்ருர் என்று அவர்கள் உணரவில்லை. அவர்கள், "இராமலிங்கர் சிவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் கொண்டு பாடிய பாடல்களில் சில ஆபாசக் களஞ்சியங்கள்" என்றும், "அவர்கள் தம் அருட்பா மருட்பா" என்றும் சொற்பொழிவாற்றி வந்தார்கள். இதனை இராமலிங்கர் கேட்டு வருந்தினர். இதை அவர் "கடைவிரித்தோம் கொள்வாரில்லை" என்று வருந்திக் கூறியதால் அறிய

லாம். அவர் மறைந்த பிறகும் அவர் இயக்கம் வளர்ந்து வந்தது; அவர் தம் நற்போக்கை எதிர்க்கும் இயக்கமும் வளர்ந்து வந்தது எனலாம்.

யாழ்ப்பாணத்தில் **கதிரைவேற் பிள்ளை** என்றொரு செந்தமிழ்ப் புலவருண்டு. அவர் ஆழ்ந்த சைவப் பற்றுடையவர். அவர் இராமலிங்கரின் பெருமையை இழித்துக் கூறி வந்தார். அதனால் மனமுடைந்த இராமலிங்கரின் சீடர்கள் தொழுவூர் வேலாயுதம் பிள்ளை முதலியோர்கள் கதிரைவேற் பிள்ளையின் சொற்பொழிவுகளை மறுத்துச் சொற்பொழிவுகளைச் செய்யத் தொடங்கினர். செய்குதம்பிப் பாவலர் அப்போது சென்னையில் இருந்தார். அவர் இராமலிங்க வள்ளலார்தம் பாடல்களில் பெரிதும் ஈடுபாடுடையவர். நல்ல சொற்பொழிவாற்றல் மிக்கவராய் அவர் விளங்கியதால் '**சொல்லின் செல்வர்**' என்று புலவர் பாராட்டும் புகழும் பெற்றிருந்தார்.

"இராமலிங்க வள்ளலாரின் அருட்பாவை மருட்பா என்பவர் யார்?'' என்றார் அவர். மேலும், கதிரைவேற் பிள்ளை போன்ற பெருமக்கள் இராமலிங்க வள்ளலாரின் பெருமையை இழித்துக் கூறும் சொற்பெருக்குகளை அவர் கேட்டார்; அவற்றை எதிர்த்துச் சொற்பெருக்காற்றினர்.

அவர் தமது புலமையைக் கொண்டு, இராமலிங்க வள்ளலாரை எதிர்த்து அவர்கள் எழுதிய நூல்களின் தலைப்புகளை எள்ளி நகையாடினர்.

"இராமலிங்க சுவாமிகள் பாடலாபாச தருப்பணம் அல்லது மருட்பா மறுப்பு" என்றொரு நூலைக் கதிரைவேற் பிள்ளை எழுதி வெளியிட்டார். "இராமலிங்க சுவாமிகள் பாடலா?" என்று வியப்புக்குறியுடன் வினவிவிட்டு, அது "பாச தருப்பணம்" (பாச நீக்கம்) என்றல்லவோ நூலின் தலைப்புக் காணப்படுகின்றது? மேலும், மருட்பா மறுப்பு என்ற சொல் மருட்பாவை மறுப்பது இராமலிங்கர்தம் அருட்பாவே என்று ஏற்றுக் கொள்கின்றதே,'' என்றெல்லாம் அவர் மேடைகளில் கூறிவந்தார். அவர் மேடைகளிற் கூறிவந்த கருத்துக்களைத் திரு. வி. க. அவர்கள் குறித்துக்கொண்டு திரு நா. கதிரைவேற் பிள்ளை அவர்களிடம் காட்டுவார். இவ்வாருகப் பாவலரிடம் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் பற்றுக் கொண்டார்கள். அவர்கள் பற்று நாளடைவில் வளர்ந்தது. பாவலரைப் பற்றி அவர்கள் தமது குறிப்பில் எழுதிவைக்கவும் அது தூண்டியது.

"பழைய முறையில் கம்பராமாயணத்தைச் சொற்பொழிவு செய்யக்கூடியவர் பாவலர் ஒருவரே'' என்றார் திரு. வி. க. அவர்கள். மேலும், "பாவலர் என் குரு ஸ்தானத்தில் இருக்கிறார். என் குரு கதிரைவேற் பிள்ளை இராமலிங்க சுவாமிகளின் பாடல்களை மருட்பா என்றபொழுது அவருக்கு எதிராகப் பாவலர் அவை அருட்பாதாம் என்று சொற்பெருக்காற்றினர். அவருடைய சொற்பெருக்கை நான் குறிப்பு எழுதிக் கொண்டுபோய் என் குருவிடம் காட்டுவேன். இப்பொழுது என் குரு இறந்துவிட்டதால் தமிழ் மரபுப்படி அவருடைய எதிரியாகிய பாவலர்தாம் என் குருவாகின்றார்.'' என்றும் கூறியுள்ளார்.

"இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவை ஆதரித்துப் பாவலர் பேசவேண்டுமென்ற நியதி இல்லை. ஏனெனில் இருவரும் வெவ்வேறு சமயத்தவர்'' என்று பிறர் கூறினலும் அதில் வியப்பில்லை. எனினும், காலம் அழிந்தாலும் தான் அழியாது என்று காட்டிவரும் தமிழ்ப் பண்பு—பொதுமைப் பண்பு பாவலர் தம் உள்ளத்திலும் ஊறியிருந்தது. பொதுமைப் பண்பு நீங்காத பாவலருக்கு அஞ்சலி செலுத்துவோம். அவர் உள்ளம் நமது உள்ளம் என்று கொண்டாடுவோம். "நீங்காது அவர் புகழ் வளர்க'' என்று பண் பாடுவோம். பாவலர் எந்தத் தமிழுணர்ச்சிக்காகப் பாடுபட்டாரோ அந்தத் தமிழுணர்ச்சியை வளர்த்து வருவோம்.

★

உற்றவர்க்கும் வேலை யுதமுதலி யார்க்குமனம்
பற்றுமெம தாசிரியர் பாலினுக்கு — மற்றவர்க்கு
மெத்தமெத்த வேண்டி விருப்பமுள்ள வந்தனத்தை
நித்தநித்த முஞ்செலுத்தி னேம்.

பாவலர் அவர்கள் தன் நண்பருக்கெழுதிய கடிதத்தில் ஒரு வெண்பா.

மக்கள் வாழ்வில் எங்கள் முப்பணி!

புருகா லாட்ஜ்

பிரயாணிகளின் நெஞ்சில் நிறைந்து நிற்கும் இனிய பெயர்.

சொந்த வீட்டில் உறவினர், நண்பர்களிடையே தங்கி இருப்பதுபோன்ற உணர்ச்சியைத் தந்து, உங்கள் சௌகரியங்களை விசேஷமாக கவனிப்பதன்னியில், உங்கள் சாமான்களுக்கும் நல்ல பாதுகாப்பளிக்கிறோம்.

★★★

அப்துல்காதர் டிராவல் சர்வீஸ்

விமானம், கப்பல்களுக்கு டிக்கட் புக்செய்ய அரசாங்கத்தாரல் அனுமதிக்கப்பட்ட நம்பிக்கைக்குரிய ஸ்தாபனம்.

மலாயா, பர்மா, இந்தோ சீனா, இலங்கை மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லும் பிரயாணிகளுக்குப் பாஸ்போர்ட் மற்றும் இதர வசதிகள் அனைத்தும் செய்துகொடுத்து, உங்கள் யாத்திரைக் கஷ்டங்கள் அனைத்தையும் தீர்த்துவைக்கிறோம்.

★★

புருகா ஸ்டோர்ஸ்

உங்களுக்குத் தேவையான எல்லாவித நாகரிக பொருட்களும் நயமான விலையில் விற்பனை செய்கிறோம்

தேவைக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

★

எங்கள் முகவரி:

81, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை-1.

ஸ்தாபகர்:
எம். எஸ். அப்துல் காதர்
(மர்ஹூம்)

நிர்வாகி:
எம். எஸ். முஹம்மதுஇப்ராஹீம்

க்யூன் மிட்டாய் கம்பெனி

(QUEEN CONFECTIONERY)

விக்டோரியா பிரஸ் ரோடு. நாகர்கோவில்.

எங்களிடம்:

எல்லாவிதமான உயர்ந்த ரக மிட்டாய் தினுசுகள்
எப்பொழுதும் கிடைக்கும்.

★ தயாரிப்பாளர்: ★

K. S. காதர் முகைதீன்,

விக்டோரியா பிரஸ் ரோடு :: நாகர்கோவில்.



உயர் ரக கைக்கடியாரங்களும், சுவர் கடியாரங்களும் வாங்குவற்கு
உத்தரவாதமுள்ள ஒரே ஸ்தாபனம்

கிருஷ்ணன் நாயர் & சன்ஸ்

நாகர்கோவில்.

"SINGER" Introduces MERRITT Sewing Machines.

Available with:-

S. K. MANOHARAN,

Dealer in Singer Machines & Parts,
Balamore Road. NAGERCOIL.

ருசியான உணவு! சுவையான சிற்றுண்டி!

ஹோட்டல் டி. ஆலங்கீர்

காலேஜ் ரோடு :: நாகர்கோவில்.

எமது ஹோட்டலில்
நாவிற்கு ருசியாக சுகாதார முறையில்
பிரியாணி, கொத்துப் புரோட்டா,
கோழி குறுமா, கட்லட், ஈரல், சாப்ஸ்,
ஆட்டிறச்சி சூப்பு வகைகளும்
காப்பி, டீ, கூல்டிறிங்ஸ், சாப்பாடு
முதலியவைகளும்
எப்பொழுதும் தயாரித்துக் கொடுக்கப்படும்.

குடும்பத்துடன் உணவருந்த தனி இடவசதி உண்டு.

பிரயாணிகளுக்குத் தங்குவதற்கு
வசதியான ரூம்கள் உண்டு.

ஆதரவை விரும்பும்:

S.M. செய்துமுகம்மதுக்கண்ணு & பிரதர்,

நாகர்கோவில்.

தமிழ்ப் பரம்பரையின் தந்தை

(வித்துவான் எஸ். ஆறுமுகம், M. A., B. T.)

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று" என்றார் வான்புகழ் வள்ளுவர். அவர்தம் கொள்கைக்கிணங்க வான்புகழ் கொண்டு வாழ்ந்த தமிழறிஞர் வரிசையுள் வைத்தெண்ணப்படுபவர் கோட்டாற்றுப் புலவர், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள். அன்னார் பல நூற்றாண்டுகட்கு ஒருமுறை எங்கோ அரிதிற் றோன்றுகின்ற மேதைகளுள் ஒருவர். தமிழ்நாட்டிலே முஸ்லிம் மதத்தவராகப் பிறந்தமைக்கு மாறாக அவர்கள் ஆங்கில நாட்டிலே தோன்றி ஓர் ஆங்கிலப் புலவராய் மிளிர்ந்திருப்பின் அவர்கள்பால் இருந்த அரிய பேராற்றல் அவர்கட்கு உலகப் புகழையும் நோபல் பரிசையும் பெற்றுத் தந்திருக்கும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை

வரையாது வழங்கிய வள்ளல்:

இப்பெரியாரை என் இளமைப் பருவத்திலிருந்தே நான் நன்கறிவேன் இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன் எங்கள் குடும்பம் சுசீந்திரத்தில் வாழ்ந்த காலம். நான் என் தந்தையாருடன் சுசீந்திரத்திலிருந்து கோட்டாற்றிலுள்ள என் மாமனார் வீட்டிற்கு அடிக்கடி செல்வது வழக்கம். அப்போதெல்லாம் என் தந்தையார் கோட்டாறு வந்ததும பாவலர் ஐயா அவர்களை அவர்கள் நூற்கடையிலே கண்டு வணக்கம் செலுத்திவருவார்கள். அது காலை எப்போதும் மாணவர் குழாம் ஒன்று பாவலர் அவர்களைச் சூழ்ந்திருந்து பாடங்கேட்டுக் கொண்டிருப்பது இப்பொழுதும் என் கண்முன் நிற்கிறது. தான் பெற்ற அரிய செல்வத்தை அவர்கள் தன்னை அண்மிய யாவர்க்கும் வரையாது வழங்கிவந்த காட்சி அது. அன்பும், நிறைவும், அமைதியும் ததும்பும் இன்முகத்தோடு இரவும், பகலும்

எழுதியவர்

இடைவிடாது அவர்கள் தமிழ்த் தொண்டு செய்துவந்தார்கள். எந்த நேரத்திலும் எந்த இடத்தும் எவர் எந்த ஐயத்தைக் கொணரினும் அதனைத் தடையின்றித் தக்க சான்றுகள் தந்து தெளிவுபடுத்த அவர்கள் தயங்குவதேயில்லை. இதனால ஐயமறுப்போரும், அறிவு பெறுவோரும், ஆற்றல் கண்டு மகிழ்வோருமாகப் புலவர் குழாமொன்று அவர்களை எப்போதும் சூழ்ந்து கொண்டிருக்கும்.

தமிழ்ப்பற்று:

அப்போது அவர்களுக்கு வயது ஐம்பதிற்கு மேலிருக்கலாம். அவர்கள் வாழ்ந்த காலம் இப்போது போலத் தமிழ்க் கல்வி போற்றப்படாத காலம். தமிழ் கற்ற புலவருக்கு அரிய வாய்ப்புகள் எவையும் இருக்கவில்லை. ஆங்கில அரசாங்கம் ஆங்கிலம் கற்றோருக்கே ஆக்கமும் ஊக்கமும் நல்கி அரிய பதவிகளையும் வாய்ப்புகளையும் அளித்துவந்தது. இந்நிலையில் தமிழ்மீது கொண்ட பற்றுதலும் தமிழ் நூல்களில் தாம் கண்ட சுவையின்பமுமே அவர்களைத் தமிழைப் போற்றிக் கற்கவும் அதனைப் பிறர்க்குக் கற்பித்து மகிழவும் செய்திருத்தல் வேண்டும். இது போலவே அவர்கள்பால் தமிழ் கற்ற பலரும் இன்பப் பொழுதுபோக்கொன்றையே பயனாகக் கருதிக் கற்றனரேயன்றி தமிழ்க் கல்வி தம் வாழ்க்கைக்கான பொருள் சேர்க்கத் துணை நிற்கும் என்ற கருத்தோடு கற்றார் சிலரென்றே கூறலாம். தமிழ்ப்பேரறிஞராக இருந்தும் பாவலர் அவர்கள் தம் வாழ்க்கைச் செலவிற்கு நூல் வியாபாரத்தையே நம்பியிருந்தார்கள் என்றால் மற்றையோர் நிலை என்னும்?

பழுத்த தேசீயவாதி:

இற்றை நாளில் போல அக்காலத்து நாட்டில் பல

தேசியக் கட்சிகள் இல்லை. தேசியக் காங்கிரஸ் ஒன்றே இந்தியாவின் விடுதலை இயக்கமாக விளங்கிற்று அதில் பாவலர் அவர்கள் பெரும் பங்கு கொண்டு உழைத்தார்கள். எப்போதும் அவர்கள் தூய கதருடையே அணிந்திருப்பார்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும்போதெல்லாம் தூய வெண்மையான கதர்க்குல்லாய் அவர்கள் தலையை அணி செய்யும். உடலிலே முழுக்கையுடைய நீண்ட கதர்ச் சட்டையும் வேட்டியும் தோளிலே கதர்த் துண்டும் காணப்படும். முகம் சற்று வயது முதிர்ச்சியினைக் காட்டினும் அவர்கள் நல்ல கட்டான வளவிய உடலைப் பெற்றிருந்தார்கள். உடலை ஒப்பவே அவர்கள் உள்ளமும் நல்ல உரனுடையதாக இருந்தது. ஆங்கில ஆட்சியை எதிர்த்துக் கடுமையான தாக்குதல்களைக் கேட்டோர் கொதித்தெழுமாறு வாரி வழங்குவதில் அவர்கள் சற்றும் அஞ்சியதில்லை. இயற்கையின் தண்மாரி கண்டும் காலிகளின் கல்மாரி கண்டும் கலங்காது சொல்மாரி பெய்யும் கொண்டலாக அவர்கள் துலங்கிய நாட்கள் பல.

தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்:

"கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்று பொதுமறை வகுத்த இலக்கணத்திற்கு ஒத்த இலக்கியமாக விளங்கிற்று அவர்கள் பேச்சு. எப்போதும் அவர்களுடைய பேச்சு இனிய எளிய நடையிலேயே இருக்கும். தொடங்குங்கால் மெதுவாகவும் தணிந்த குரலிலேயும் தோன்றி வரவர விரைவும் விறுவிறுப்பும் படிப்படியாக ஏறி இறுதியில் உணர்ச்சியின் உச்சநிலையிலே இன்னும் பேசமாட்டாரா என எல்லோரும் எதிர்பார்க்கும்போது முடிவடையும். அவர்கள் பேசுகின்ற குரலின் இனிமையும் சொற்களை எடுத்தும், படுத்தும், நலிந்தும், வலிந்தும், இடத்திற்கேற்ற வகையில் பயன்படுத்தும் பண்பும் யாவரையும் எளிதில் கவர்ந்துவிடும். கருத்துக்களைக் காரண காரியத் தொடர்புபடுத்தி அவர்கள் கூறுங்கால் சிறந்த நியாயவாதிகளகூட எதிர்வழக்காட வகையறியாது ஏக்கற்று நிற்பர். இத்தகைய தனியாற்றலும் எதனையும் ஆழ்ந்து சிந்திக்கும் நுண்மாண் நுழைபுலனுமே அருட்பா மருட்பா வழக்கின்போது பாவலர் அவர்களுக்கு அரிய புகழையும் 'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்' எனும் பெரிய பட்டத்தையும் பெற்றுத் தந்தன. அதுகாலை அவர்கள் செய்த அரிய சொற்பொழிவுகளின் நயங்களை காலஞ்சென்ற தசாவதானி ஆறுமுகம் பிள்ளை அவர்களும் என்னருந் தமிழாசிரியர், முதுபெரும் புலவர் தா. சாத்தாங்குடிப் பிள்ளையவர்களும் கூறக் கேட்டிருக்கின்றேன்.

வாலியின் பலம்:

இராமாயணத்தில் வாலி தன்னை எதிர்ப்போரின் பலத்தில் பாதியைப் பெறும் வரம் பெற்றிருந்தான் பாவலர் அவர்களும் அத்தகைய வரம் பெற்றிருந்தார்கள் என்னலாம். எதிர்ப்பு மிகுந்தோறும் அவர்களது ஆற்றலும் மிகுந்து பெருகுதலை அவர்களது சொற்போர்களின்கண் காணலாம்.

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஓர் கோடை விடுமுறையின்போது கோட்டாறு பட்டாரியர் பெருந்தெருவிலே ஒரு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதியார், எம். ஏ, பி எல். அவர்கள் திருவள்ளுவரைப்பற்றிப் பேசவிருந்தார் முன் ஏற்பாட்டின்படி தலைமை தாங்குவதற்கு ஒப்புக்கொண்டிருந்த வழக்கறிஞர் பி. சிதம்பரம் பிள்ளையவர்கள் ஏதோ காரணத்தால் வர இயலவில்லை ஆகவே கூட்டத்திற்கு வந்திருந்த பாவலர் அவர்கள் தலைமைதாங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். தமது சொற்பொழிவின்போது பாரதியார் பரிமேலழகரையும் அவரது உரையையும் வன்மையாகத் தாக்கி அவருரைக்குத் தாம் செய்துள்ள திருத்தங்கள் சிலவற்றை எடுத்துரைத்து வந்தார் "உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே கல்லாதவர்" என்ற குறளுக்குப் பரிமேலழகர் உரையை மறுத்து அது பிழை என்றார் இக்குறளுக்குப் பொருள் கொள்ளுங்கால் "முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் உடையார்" "கல்லாதவர் கடையர்" என்று இருமுற்றுச் சொற்றொடர்களாக உரைநடைப்படுத்துப் பொருள் கொள்ளலே ஏற்புடைத்து என்றும் குறளில் உள்ளவாறு "உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்" என நிறுத்திப் பொருள் கொள்ளின் 'கற்றார்' என்னும் எழுவாய் எவ்விதப் பயனிலையையும் பெறாது வறிதே நின்று வாக்கியம் பிழைபடும் என்றும் வாதித்தார். அவருரை முடிந்தது. பாவலர் அவர்கள் முடிவுரை கூற எழுந்தார்கள். "ஐயா நான் ஒரு முஸ்லிம்; இஸ்லாமியக் கண்ணோடு திருக்குறளைப் பார்ப்பவன். என் கண்ணிலே திருக்குறள் ஓர் இஸ்

லாமிய நூலாகப்படுகிறது. எனவே திருக்குற ளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை பல இடங் களில் பிழைபட்டது என்று நானும் கூறுகிறேன். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டு சொல்கிறேன். நீங்கள் என் திருத்தத்தை ஏற்றுக்கொள்வீர் களோ மாட்டீர்களோ என அஞ்சுகிறேன். எனினும் கேளுங்கள்" என்று தொடங்கினார்கள்.

"இஸ்லாம் மதத்தினருக்கு பசு மாமிசம் தின்பது மறுப்பல்ல. ஆனால் இஸ்லாமியர் செத்த பசுவைப் புசிப்பதில்லை. எங்கள் வேதப் படி மந்திரம் சொல்லிக் கொன்ற பசுவினைச்சி யையே உண்பது முறை. இதனை வள்ளுவர் தம் குறளிலே கூறுகின்றார். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொ ழும்" என்பது அக்குறள் இதற்குப் பரிமே லழகர் கொண்ட பொருளை விடுத்து நான் புதி தாகப் பொருள் சொல்கிறேன் கொல்லான் – கொல்லப்பட்ட பசுவினது. புலாலை – மாமிசத் தை, மறுத்தானை - மிகுதியாகத் தின்பவனை, எல்லா உயிரும் கைகூப்பித் தொழும் – உயிர்கள் எல்லாம் கைகுவித்து வணங்கும் இப்பொருளை ஏற்றுக்கொள்வீர்களென்றால் பாரதியாரது புதுப் பொருளையும் ஏற்றுக்கொள்ளலாம். இந்த ஒரு குறளுக்கு மட்டுமல்ல. இதுபோல எத்தனை யோ குறளுக்குப் புதுப்பொருள் கூறலாம். ஆயின் அது பல நூறு ஆண்டுகள் தமிழுலகிலே பயின்றுவரும் பரிமேலழகரின் உரையை மறுத்த தாகாது

பாரதியார் தாம் எடுத்துக்கொண்ட குற ளிலே ஒரு வாக்கியம் பயனிலை இன்றி நிற்கிறது அது பிழை என்கிறார்கள் தமிழிலக்கியத்திலே இவ்வாறு எழுவாய், பயனிலை பொருந்து நிற்பதும் அப்பயனிலை அவாய் நிலையாற் பெறப்படுவதும் இயல்பு என்று கூறி பல சான்றுகள் காட்டினார் கள். அவற்றுள் ஒன்று என்நினைவுக்குவருகிறது. "கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம் மெய்மயக்கு உடனிலை ரழ ஒழித்து ஈரெட்டாகும்" என்ற நன்னூல் சூத்திரத்தில் உடனிலை மயக்கத்திற்கு மட்டும் பெயர் குறித்து வேற்றுநிலை மயக்கத்தை கூறாது விட்டாராயினும் உடனிலையைக் குறித்த மையால் மற்றது வேற்றுநிலை என்பது தானே பெறப்படுதல்போல "கல்லாதவர் கடையர்" என்ற மாத்திரத்திலேயே கற்றவர் தலையாயவர் என்பது தானே பெறப்படும். இதற்காக ஒரு பயனிலையை வலிந்து காணவேண்டிய தேவையே இல்லை" என்று சொல்லி மேலும் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் பெருமழை வந்துவிட்டது. ஆகவே கூட்டம் அடுத்தநாள் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அடுத்தநாள் பாவலர் அவர் கள் வந்தார்கள் ஆனால் பாரதியார் கூட்டத் திற்கு வராமலேயே போய்விட்டார்கள்.

சிறு பொழுதுபோக்கு:

ஒரு நாள் சரவண ஆசாரி கடையில் ஐயா இருந்தார்கள். அவர்களுக்குப் பொழுதுபோக் குவதற்கு ஏற்ற ஆட்கள் யாரும் கடையில் இல்லை. அப்பொழுது அந்த வழியாக வந்த நான் ஐயா வுக்கு வணக்கம் செலுத்தினேன். அவர்கள் என்னைக் கூப்பிட்டு உட்காரச் சொன்னார்கள். நான் கடையில் ஓர் ஓரத்தில் உட்கார்ந்தேன். இலக்கணப் பாடத்தைப் பற்றிப் பேச்சைத் தொடங்கி மெதுவாக "நன்னூலில் நீ எதுவரை படித்திருக்கிறாய்?" என்று கேட்டார்கள். நான் பொதுவியல் மட்டும் படித்திருக்கிறேன் என்று சொன்னதாக நினைவு "நான் நல்லவன்" "நீ கெட்டவன்" இந்த இரு வாக்கியங்களையும் கூறி இவை சரிதானா? சொல" என்றார்கள். அப் போது என்ன விடை சொல்வது என்று எனக் குத் தெரியவில்லை சற்றுத் தயங்கியபின் சரி தான் என்று துணிந்து சொன்னேன் அப்பால் அவர்கள் தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை வினை முற்று விகுதிகளை என்னைச் சொல்லச் செய்து நன்னூல் முறைப்படி அவ்வாக்கியங்கள் பிழையாமாற்றை விளக்கி நன்னூலைப் படிப்பது மட்டும் போதாது அதை இலக்கியங்களிலும் பேச்சு வழக்கிலும் ஒட்டிப்பார்த்துப் பயன் பெற வேண்டும் என்று அறிவுரை சொல்லி அனுப்பினார்கள். இதுபோலத் தமிழ் கற்கும் மாணவர்களை சோதனைசெய்து திறை வைத்துப் பின் வழி காட்டுவது அவர்களுக்கு ஓர் சிறு பொழுதுபோக்கு

கதிர்வேல்பிள்ளைக்கு எதிவேல்பிள்ளை:

(இது தற்போது செங்கற்பட்டு மாவட்டத் தில் Life Insurance Co., Field officer வேலை பார்க்கும் இ. சிவம் அவர்கள் சொன்னது)

கதிர்வேல்பிள்ளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந் தவர்கள் ஓர் சிறந்த தமிழ் அறிஞர் யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களின் மாணவர் இவர் இராமலிங்கசுவாமிகளது நூல் அருட்பாவன்று மருட்பா என்று சென்னையில பல இடங்களில் பேசி வந்தார் அக்காலத்தில் நமது பாவலர் அவர்கள் சென்னையில உள்ள ரிப்பன் அச்சகத்தில பிழை திருத்தும் வேலை பார்த்து வந்தார்கள். அவர்கள் பார்த்த வேலை அச்சடிக்கும் நூல்களில் ஏற்படும் அச்சுப் பிழை

களைத் திருத்துவதாக இருந்தாலும் பாவலர் அவர்கள் தம் கூர்த்த மதியால் அந்நூல்களையெல்லாம் நன்கு கற்றுப் புலமை நிறைந்திருந்தார். இந்துமதப் புராணங்களிலும் சமய நூற்களிலும் அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடும் அறிவும் இருந்தது. இராமலிங்க சுவாமிகள் அருட்பாவைப் பாடுங்கால் அதில் முழுவதும் ஈடுபட்டுக் கண்ணீர் சொரிந்து நிற்பது அவர்கள் இயல்பு இந்நிலையில் கதிர்வேல் பிள்ளையவர்களின் பிரசங்கங்களுள் ஒன்றைக் கேட்கப் பாவலர் அவர்கள் சென்றிருந்தார்கள். கதிர்வேல் பிள்ளை அக்கூட்டத்தில் "நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே அங்கு நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே" என்ற இராமலிங்க சுவாமிகளின் பாடலைப் பழித்துப் பேசினார். சாதாரணமாக பக்தர்கள் ஆண்டவனது பாதாரவிந்தங்களையே அடைய விழைவர்; அதுவே முறையுமாகும். ஆனால் இங்கு இராமலிங்க சுவாமிகள் அம்மரபையே மாற்றி ஆண்டவனது முடிமீது சென்றமர விழைகிறார். இது முற்றிலும் அடாத ஆசை. இத்தகைய செருக்கமைந்த பாடல்களைக் கொண்ட நூலை அருட்பா என்பதும் அடாது. ஆகவே அதை மருட்பா என்றே கொள்ளல் வேண்டும் என அவர் பேசினார் பாவலர் அவர்களால் இதைப் பொறுக்குக்கொண்டிருக்க இயலவில்லை கூட்டத்திலிருந்து எழுந்து மேடைக்குப் போனார்கள். தாமும் ஏதோ பேச விழைவதாகச் சொல்லி தலைவரின் அனுமதி பெற்றார்கள். கதிர்வேல் பிள்ளை அவர்களின் புலமையையும் சொல்லாற்றலையும் சிறிது புகழ்ந்து பாராட்டினார் பின் அவர்கள் கருத்துடன் தாம் சற்று மாறுபடுவதாகவும் அவர்கள் கூறிய பாடல் அடிகளில் "நாதர்முடி" என்பதற்குப் பதில் "நாதமுடி" என்றே இராமலிங்க அடிகள் பாடியிருக்கவேண்டும் என்றும் கூறி நாதர் என்பது அச்சுப்பிழையாக இருக்கலாம் என்றார். அப்பால் நாதம் என்ற பிரணவத்திற்கு விளக்கம் கூறி அதற்கு மேலிருக்கும் சந்திர மண்டலத்திலே சென்றிருக்க தாம் விழைவதாக சுவாமிகள் பேசுகிறார். அதில் பிழை எதுவும் இல்லையென நிலைநாட்டினர். கூட்டம் முடிந்ததும் பாவலரது சொல்லாற்றலிலும் வாதத் திறமையிலும் கட்டுண்டு மகிழ்ந்த இராமலிங்க சுவாமிகளின் பக்தர்கள் இவர் ஓர் முஸ்லிம் என்பதையும் மறந்து விரைந்து வந்து அவரைத் தழுவித் தூக்கி எடுத்து "கதிர்வேல் பிள்ளைக்கு எதிர்வேல் பிள்ளை" என்ற குரலெழுப்பி ஆரவாரஞ்செய்தனர். அன்றுமுதல் கதிர்வேல் பிள்ளை எங்கேனும் அருட்பாவை எதிர்த்துப் பேசுவதாயின் அதற்கடுத்து அவர்தம் கூற்றை மறுத்துப் பேசுவது பாவலர் அவர்களின் வேலையாயிற்று. இதனால இவர்களது புகழ் சென்னை நகரத்திலும் பிற இடங்களிலும் விரைந்து பரந்து பெருகிற்று என்பர்.

நாஞ்சில் நாட்டில் தற்போதுள்ள தமிழ்ப் பரம்பரையின் தந்தை:

பாவலர் அவர்களைத் தற்போது நாஞ்சில் நாட்டில் உள்ள தமிழறிஞர் பரம்பரையின் தந்தை என்று கூறினால் அதில் உயர்வு நவிற்சி சிறிதும் இல்லை. அவர்களிடத்தில் கற்ற மாணவர்கள் எண்ணற்றவர். தம்மைப் பாவலர் அவர்களது மாணவர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைகொள்வோர் பலர். பாவலர் அவர்களின் மாணவர்களுள் முதன்மையானவர் முதுபெரும் புலவர் சாத்தான்குட்டிப்பிள்ளையவர்கள். இவர்கள்பால் கற்றுத் தேர்ந்தோர் பலர் இன்று தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தமிழாசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர். அடுத்த ஓர் சிறந்த மாணவர் காலஞ்சென்ற தசாவதானி ஆறுமுகம்பிள்ளை பின் பறக்கைக் கவிஞர், வித்துவான் மாணிக்கவாசகம் பிள்ளை. பாவலர் அவர்கள்பால் சிலகாலம் பாடம் கேட்டோர் பலர். திருவாளர்கள் ஏசுவடியான், பீ ஏ, எல்.டி., பிச்சை வாத்தியார், பிராஸ்பர், கிருஷ்ணசாமிப் பிள்ளை, சுந்தர ஆசாரி, இ. சிவம், இராமசுவாமிப் பணிக்கர் இவர்கள் இன்னும் வாழ்ந்துவரும் மாணவர்களுட் சிலர். சரவண ஆசாரி, அரங்கநாத ஐயர், மாணிக்கம் செட்டியார் ஆகியோர் அவர்கள் மாணவர்களுள் இறந்துபோன சிலர். இங்ஙனம் நோக்கில தற்போது நாஞ்சில் நாட்டைச் சார்ந்த தமிழறிஞர்களில பெரும்பாலோரும் ஏதேனும் ஒருவகையில் பாவலர் அவர்கள் பரம்பரையில் வந்தவர்களாகவே காணப்படுவர்.

இத்தகைய பிறவி மேதையைப் பெற்ற நாஞ்சில்நாடு அவர்களது புலமையைச் சரியாகப் பயன்படுத்தாமலும் அவர்களைச் சரியாகப் பாதுகாக்காமலும் ஓரளவு புறக்கணித்துவிட்டமை வருந்தத்தக்கதே. அந்நிலை மாற பாவலர் அவர்கள் செய்த பைந்தமிழ் நூற்களை வெளிக்கொணர உதவுமுகத்தான் அவர்கள் புலமையைப் பயன்படுத்தவும் அவர்கள் புகழைப் பாதுகாக்கவும் தமிழர்கள் முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

வாழ்க பாவலர் திருப்பெயர்!
ஓங்குக அவர்தம் பெரும்புகழ்!!

★

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் பெருமான்

புகழ்ப் பாமாலை

(*பன்மொழிப் புலவர்* **கா. அப்பாத்துரை,** *எம். ஏ., எல். டி., விசாரத்.*
துணை ஆசிரியர்: ஆங்கிலத் தமிழ் அகர வரிசை,
சென்னைப் பல்கலைக் கழகம்)

1. வீறூர்ந்த சந்தத் தமிழ்ப்பா வலர்களின் மெய்ம்மரபில்
நூறூர்ந்த வண்கைக் கலைவந்த பெம்மான், நுணங்குகல்விப்
பேறூர்ந்த செல்வன் பிறங்கு**செய் குதம்பிப் பாவலன்**றன்
ஆறூர்ந்த வண்ணப் புகழ்வான் கொடிஅலை ஆடுகவே!

2. வாழுந் தமிழ்மொழி வைகுங் குமரி மலையிழிந்து
தாழுங் குமரித் தமிழாற்றின் கோட்டில் தவழ்ந்துகலை
சூழுந் திருத்தலம் கோட்டாறு தோன்றிய முத்தமிழின்
வேழங் குலவும் *இடலைப் பதிபுகழ் வீறுகவே!

3. ஒன்றே குலம்படைத் தாண்டான் ஒருவன் உடையநெறி
நன்றே நபிநா யகம்திரு வள்ளுவர் நாட்டும்மெய்ம்மை
என்றே உலகுக் கெடுத்தியம் பும்பெரு மான்,இசையின்
குன்றே எனும்தமிழ்க் கோமான் குடிச்சீர் குலவுகவே!

4. விடலை படத்தெறி தேம்பழம் என்றிட வீதியெலாம்
இடலை படத்தமிழ் இன்னமு தாக்கி இருங்கலையின்
கடலை மடுத்தெணில் ஆயிரம் சீடர் கருத்தினிலே
படலை படத்திரு ஓங்கிய பண்பிசை நீடுகவே!

5. முத்தமிழ்க் கோநல் இளங்கோவின் முப்பழச் சேறளைந்து
நித்தமுப் பாலின் நெறிவித்தி நேரார் களைகளைந்து
புத்தெழிற் கம்பன் பொலிவிற் பொலிந்துசீ றுப்புராணத்து
ஒத்த கதிர்த்திரு ஓங்கல்கண் டான்புகழ் ஓங்குகவே!

*இடலை = இடலாக்குடி

'சரித்திரம் கண்டறியா சதாவதானி'

[என். ஷாகுல்ஹமீது சாஹிப், முன்னாள் நகர மன்றத் தலைவர், தக்கலை.]

அவதானம் புரிந்த அருமையான தமிழ்ப் புலவர்களைக் குறித்துக் கேள்வியுற்றிருக்கிறோம். அவர்கள் ஒரே நேரத்தில் எட்டு அவதானமோ, அல்லது பத்து அவதானமோ புரிந்து 'அஷ்டாவதானி', 'தசாவதானி' என்பன போன்ற பெயர்களைப் பெறுதல் இயல்பு. இந்நிலையில் ஒருவர் ஒரே நேரத்தில் நூறு அவதானத்தைப் புரிய முற்படுகின்றாரென்றால் அச்செயல் செயற்கரிய செயலாகவே கருதப்படும் என்பது உறுதி. இச்சிறந்த செயலுக்குத் தம்மை உரிமையாக்கிக்கொண்டவர் என்னருமை நண்பர் கலைக்கடல் கா.ப செய்குதம்பிப் பாவலர் ஆவார்கள். அவர்களது அரிய செயல் சரித்திரப் போக்கிலே ஒரு புதுமையை ஏற்படுத்தியதால் அவரைச் 'சரித்திரம் கண்டறியா சதாவதானி' என்று தமிழகம் போற்றிப் புகழ்கின்றது. பெருமைக்குரிய இப்பெரியாரோடு எனக்கிருந்த தொடர்பை விளக்கி எழுதுமாறு கூறி வாய்ப்பளித்த கோட்டாறு 'பாவலர் மன்றத்தார்க்கு' எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

சதாவதானம் என்ற சாதனை சாதாரணமானதல்ல என்பதைப் பலரும் கூறக் கேட்டிருக்கிறேன். அது குறித்து அறிஞர் பலரும் கூறும் விளக்கங்களினின்றும் நன்கு தெரிந்துகொள்ளலாம். இத்தகைய அரிய பேற்றினை எனது உள்ளத்தோடு உறவாடிய நண்பரொருவர் பெற்றாரென்றால் எனது மகிழ்ச்சியின் அளவைக் குறிப்பிடவும் வேண்டுமா? அன்றாட வாழ்வில் நடைபெறும் ஒரு சில நிகழ்ச்சிகளையே நினைவில் நிறுத்தத் தவறுகின்ற நமக்கு நூறு அவதானத்தினையும் ஒரே நேரத்தில் செய்து காட்டிய பாவலரின் செயல் வியப்பைத் தருகிறது.

அன்றைய திருவிதாங்கூர்ப் பகுதியில் பாவலருக்கு நிகரான தமிழறிஞர் யாருமேயில்லை. செந்தமிழ்ப் புலமையும், சீரிய அறிவும், கூரிய நாவன்மையும், குறைவில்லாப் பாவன்மையும் பெற்றிருந்ததால் அன்றைய தமிழகம் பாவலரைப் போற்றிப் புகழ்ந்தது. பாவலரின் பண்பட்ட சொற்பொழிவு சிறந்த சொல்விருந்திற்கோர் முன்னோடியாகத் திகழ்ந்தது. அவரது பேச்சினூடே பல அறிஞர்களின் கருத்துரைகளும் ஒளிர்விட்டுக்கொண்டிருக்கும். பாவலரின் சொற்பொழிவின்போது பழகு தமிழ்ச் சொற்கள் போட்டி போட்டுக்கொண்டு வெளிவரும். அவரது குரல் இடத்திற்கேற்ற வண்ணம் உயர்ந்தும் தாழ்ந்தும் அமைந்திருக்கும். இஸ்லாமிய சமயப் பேச்சாயினும் சரி, அல்லது இன்றமிழ் மொழியின் இலக்கிய விமர்சனப் பேச்சாயினும் சரி, பாவலரின் உரையிலே முழுமைத் தன்மை நீங்காது நிறைவு பெற்றிருக்கும்.



எழுதியவர்

அன்று திருவிதாங்கூரிலும், தமிழகத்திலும் முஸ்லிம்களும் பிற மதத்தினரும் நடத்தும் விழாக்களில் பாவலர் பங்குகொள்ளாத விழா இருந்திருக்காது என்றே எண்ணுகிறேன். எங்கள் ஊராகிய தக்கலையில் நடைபெற்ற மாபெரும் நபிதின விழாவொன்றில் அவர் ஆற்றிய அருமையான சொற்பொழிவு பற்றி இன்று

னைத்தாலும் எனது உள்ளம் நிறைவு பெற்றுவிடுகிறது. அச் சொற்பொழிவினால் முஸ்லிம்கள் தெளிவுபெற்றதோடு மட்டுமின்றி, பிற மதத்தினர் இஸ்லாமியக் கொள்கைகளில் பற்றுக் கொள்ளவும் வாய்ப் பேற்பட்டது.

பாவலரோடு நான் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் பழகியிருக்கிறேன். அப்போதெல்லாம் அவரது குணாதிசயங்களும், ஆழ்ந்த அறிவும், தேர்ந்த ஞானமும் இறையன்பும் என்னை மிகமிகக் கவர்ந்தன. எனினும் எச்செயலை முடிப்பதிலும் பாவலர் கண்டிப்பானவராகவும், பிடிவாத குணமுடையவராகவும், விட்டுக்கொடுக்காதவராகவும் இருந்தமையையும் நான் உணருகிறேன். கவிஞர்கள் உணர்ச்சி மிகுந்தவர்கள் என்பதை அவரின் மிகைப்பட்ட உணர்ச்சிகளிலிருந்து தெரிந்துகொண்டேன். பாவலர் வாழ்த்துரை வழங்காத திருமணங்கள் அன்று நம் பகுதிகளிலே நடைபெற்றதில்லை. நான்கூடப் பல திருமணங்களுக்கு அவரிடம் வாழ்த்துரை பெற்று வாழ்த்தியது இப்போது எனது நினைவுக்கு வருகிறது.

பாவலர் சிறப்புப்பெற்ற நற்கவிஞராகவும் விளங்கினார். அவரது உயர்ந்த தமிழ்ப் புலமைக்கு அவரியற்றிய ஷம்சுத்தாசீன் கோவை, ஸர். சி. பி இராமசாமி ஐயர் கோவை, அழகப்பக் கோவை, கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, திருநாகூர்த் திரிபந்தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ், நபிநாயக மான்மிய மஞ்சரி முதலிய பாமாலைகள் சிறந்த சான்று பகருகின்றன. உமறுப் புலவர் இயற்றிய சிறுப் புராணத்திற்குப் பாவலர் எழுதிய உரை எளிமையும் தெளிவும் வாய்ந்ததாகும்.

நமது தேச விடுதலைக்காக அரிய பணிகளாற்றிய நல்லோர்கள் நடுவிலும் பாவலருக்கு நல்லதோர் இடமுண்டு. முன்பெல்லாம் தேச விடுதலைக்காகக் கைராட்டை ஏந்தித் தெருத்தெருவாகப் பஜனை நடக்கும். அப்போது பாவலர் அவர்களும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் உண்டு. 'திலக் சுவராஜ்ய நிதி' போன்றவற்றிற்கு நிதி திரட்டுவதிலும் பாவலர் அவர்கள் மிகுந்த முயற்சி யெடுத்திருந்தார்கள். நாட்டு விடுதலைக்காகத் தீவிரமாகத் தொண்டாற்றிய நாஞ்சில் நாட்டுப் பெருமக்களுள் டாக்டர் எம். இ. நாயுடு அவர்களும் பாவலர் அவர்களும் முக்கியமானவர்கள். நாயுடு அவர்கள் தன்னுடைய செயலாலும், பாவலர் அவர்கள் தன்னுடைய சொல்லாலும் மக்களுக்கு நாட்டுணர்ச்சியை நன்கு ஊட்டிவந்தனர். நாகர்கோயில் நகர்மன்றத் திடலில் பாவலர் சொற்பொழிவுகள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டே யிருக்கும்.

சுருங்கச் சொன்னால் பாவலர் தேர்ந்த பேச்சாளர்; அருந்தமிழ்க் கவிஞர்; பழகுதற்கு இனிமையானவர்; எல்லோரிடமும் அன்போடு உரையாடும் பண்பினர்; தன் சொல்லால் கண்டவரைக் கவர்ந்திடும் திறமையாளர்; நூறு வகை அவதானம் புரிந்த 'சரித்திரம் கண்டறியா சதாவதானி.' இஸ்லாத்திற்கும், தமிழுக்கும் அருந்தொண்டாற்றி நாவீறு கொண்ட நாவலர்; கலைக் கடல்; பனுவல் பலசெய்த பைந்தமிழ்ப் பாவலர் என்று பட்டங்கள் பல பெற்று எல்லா மக்களாலும் போற்றப்பட்ட பாவலரின்' இல்லப்பிரச்சினை நிறைவேற என்னாலும் அன்று உதவ முடிந்தது என்று இன்று எண்ணும்போது நான் பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன்.

தமிழகத்தில் எத்தனையோ பெரியார்கள் தோன்றியுள்ளனர். அவர்கள் எழுதிய அறிவுக் கருவூலங்களும், அவர்களின் புகழும் என்றும் துலங்கிட அதனை மக்கள் அனைவருக்கும் எடுத்தியம்ப முயலும் உங்களுககு இறையருள் உண்டாகப் பிரார்த்திக்கின்றேன். உங்கள் மன்றம் வழியாகப் பாவலரின் நூற்கள் பதிப்பிக்கப்பட்டு எல்லோரும் பயன்பெற வேண்டுமென்பது எனது பேராவல். உங்கள் முயற்சி வெற்றி பெறுக. அத்துடன் பாவலர் போன்ற அறிஞர் பெருமக்கள் பலர் நம்மிடையே தோன்றி நாட்டுக்கும் மக்களுக்கும் நற்பணியாற்ற இறைவன் அருள் புரிவானாக.

—★—

"துட்டென்றால் வாயைத் திறந்து துடிததெழுந்து
கொட்டென்று கேடடுநிற்குங் கோளர்கட்கோ—இட்டென்றும்
வற்றாத் தனம்படைத்த வள்ளல்சீ தக்காதி
பொற்று மரைக்கோ புகழ்.
—பாவலர்

மங்கல வாழ்த்து

(சதாவதானி பாவலர்.)

நேரிசை வெண்பா

பிரமாதீ சச்சித்திரை பேசிருபத் தொன்பான்
வருமாதி வாரமிது வங்காண்—திரமா
ரருமணங்கொள் சாரதையை யண்ணல்கன்னி யப்பன்
திருமணமு டித்த தினம்.

அறுசீர் விருத்தம்

துய்ய மகவும் பெரும்புகழுந் தொலையாச் சுகமு மிருந்தனமு
மெய்தப் பெற்றே சாரதைநல் லெழில்சேர் கன்னி யப்பனொடு
மெய்யு முயிருங் கைலைமலை மேவு மரனு முமையுமென
வைய மதனிற் பல்லாண்டு வாழி வாழி வாழியவே.

குணமுங் குறையாக் குணநலனுங் குலவு மருளுந் தெருளுமுயர்
பணமும் வாய்ப்பச் சாரதைசம் பன்னன் கன்னி யப்பனொடு
மணமு மலரும் பாற்கடல்சேர் மாலுங் கமல மாதெனவெவ்
வணமுஞ் சுகமாப் பல்லாண்டு வாழி வாழி வாழியவே.

பண்ணிற் கினிய மொழிமடவார் பரிந்து பரவிப் பணிந்துநிற்கும்
பெண்ணிற் சிறந்த சாரதைசீர் பெட்பார் கன்னி யப்பனொடு
கண்ணி லிமையே செந்தில்வளர் கந்தன் வள்ளி யம்மையென
மண்ணிற் பொலிந்து பல்லாண்டு வாழி வாழி வாழியவே.

அணியுந் துளவ மாலையனை யகத்தி லிருத்தி யனுதினமும்
பணியுங் குணமார் சாரதைதன் பதியாங் கன்னி யப்பனொடு
மணியு மொளியு மைங்கணைகொள் மதனும் ரதியும் போலநல
பணியும் பொலியப் பல்லாண்டு வாழி வாழி வாழியவே.

அரும்பும் பொறையு நிறையறிவும் அருளா ரொழுக்க மமைநிலையும்
விரும்புஞ் சுகுண சாரதைதன் மேலோன் கன்னி யப்பனொடு
கரும்புஞ் சுவையு மமராவதிக் காவ லிறையுஞ் சசியுமென
வரும்புத் திரபௌத் திரர்மலிய வாழி வாழி வாழியவே.

(கன்னியப்பன்–சாரதை இவர்களின் திருமணத்தின்போது
வேண்டுதலுக்கிணங்கிய பாவலர் பாடிய திருமண வாழ்த்து.)

பாவலரா, நாவலரா?

[கவிராச பண்டித, இராம. சுப்பிரமணிய நாவலர்]

உலகில் கல்விப்பேறும் செல்வப்பேறும் பெறுவதற்கு அருமையானவை. அவற்றுள்ளும் கல்விப்பேறு அரிதினும் அரிது. கல்வியொடு சொல்வன்மையும் கவினுற வாய்க்கப்பெறுதல் பொன்மலர் நறுமணம் உடைத்தாதல் போல வியக்கத்தக்கது ஒன்றாம். குமரிநிலம் செந்தமிழ்த் திருமணம் செறிந்து வீசப்பெற்று, அறிவின் செழுமை அமைந்து இலங்கி, இன்ப விளையுள் ஈனும் எழில்நிலம் ஆகிச் சான்றோரால் யாண்டும் கருதப்படுமாறு, அந்நிலத்தின் கண்ணே தோற்றஞ்செய்த பெருந்தகையர் ஆவர், அத்தகைய வியப்புக்கு உரிய உயர்திருவாளர் செய்குதம்பிப் பாவலர் அவர்கள்.

எனது இளமைப் பருவத்தில் அன்னாரை ஓர் அவதானி என்று மட்டுமே நான் அறிந்திருந்தேன். அவதானம் நினைவாற்றலின் பயனாய் விளங்குதலாலும். அதன் பொருட்டு முற்றக்கற்ற நற்றகவுடைமை வேண்டப்படும என்பது ஒருதலையன்று ஆகலானும், அவதானத்தின்மீது எனக்கு மிகு மதிப்பு இல்லாதிருந்தது. (அவதானம் என்பது உள்ளத்தில் பதியவைத்தல். சாவதானம் என்பது ச அவதானம் (ஸ + அவதானம்) எனப் பிரிக்கப்பட்டு 'உள்ளக் கருத்துடன்' என்னும் பொருள் தரும்.) பாண்டி நாட்டிலும் சோழ நாட்டிலும் அவதானிகள் சிலரை எதிர்ப்பட்டுள்ளேன். அவர்கள் யான் விடுத்த வினாக்களுக்கு மாற்றம் தராது மயங்கினமை கண்ட எனக்கு அவதானிகளிடத்து நினைவாற்றல் பற்றிய மதிப்பு உண்டாயினும் மாசறு கல்வி பற்றிய மதிப்பு இல்லாதிருந்தது. நான் விடுத்த வினாக்களிற் சில கீழ்வருவன:—

கைகோள், புலனெறி வழக்கம் என்பவற்றுக்குப் பொருள் என்னை?

வழக்கு, நாடக வழக்கு என்பவற்றுக்குத் தம்முள் வேற்றுமை யாது?

களவு வெளிப்படுவது இருவகை ஒழுக்கத்தினுள் எதனைச் சாரும்?

'ஆன, மேன' என்னும் தொல்காப்பியச் சூத்திரச் சொற்கள் எந்நெறியான் அமைந்தன?

தொல்காப்பியர் வினைவெழுத்து மூன்று என்றார். ஏனையவை வழக்கிலிருந்தும் அவர் ஏன் கூறிற்றிலர்?

இவன, துறைவன், மாயிருஞாலம், ஆயிடை என்பவற்றுக்குரிய புணர்ச்சி விதிகள் யா?

இன்னோன்ன வினாக்களைச் செவிமடுத்துப் புலன்மடித்த அவதானிகள் பலர். எனினும், பாவலர் பண்பட்ட புலவர் எனச் சிலர் வாய்க்கேட்ட பின்னர், அவரைக் கண்டு உசாவ வேண்டும் என்னும் அவா என்னைத் தூண்டிற்று அப்போது எனக்கு அகவை பதினேழு. புலவர் காவலர் ஆகிய பாவலரை ஆவலுறக் கண்டுபேச வாய்த்தது ஓர் நன்னாள். அது வாழ்வில் மறக்க இயலாததொரு பொன்னாள். பாவலரை அவர் கடையில் கண்டேன். 'யார்?' என்றார். 'மகாராணி வாழ்த்து அனுப்பினவன்' என்றேன். அவர் இதழ்களில் புன்னகை விளையாடியது. 'தக்கலையா' 'நாவலரா' என்று வினவினர். நான் குறுநகையால் உடன்பாட்டு விடையிறுத்தேன் 'இருங்கள்' என்றார் பாவலர். நானும் அவர் முன்னர்ச் சிறிது நீங்கி இருக்கலானேன். இருந்த பின்னர், 'பாடல் நன்றாயிருக்கிறது; தங்கட்குப் பத்து நாற்பது வயதிருக்கலாம் என்று எண்ணியிருந்தேன்; தோற்றத்தில் சிறுவராக இருக்கிறீர்கள்; வயதென்ன?' என்றார் பாவலர். 'பதினேழு' என்றேன் நான். 'இல்லை, தங்கள் கல்விக்கு வயது நாற்பது; தங்களைப் பற்றித் திருவனந்தபுரத்தில் உள்ள நண்பர் சிலர் வாயிலாகக் கேட்டிருக்கிறேன்' என்றார் பாவலர். அவ்வாறு கூறிமுடித்த உடனே மீண்டும் அவர், 'என்னால் ஆக வேண்டுவது யாதேனும் உண்டோ?' என்று கேட்டார். அக்கேள்வி என் உட்கருத்தை முடிப்பதற்குச் சிறந்த வாய்ப்பு அளித்தது. அவதானிகள் சிலரிடம் நான் முன்னர் வின

விய வினுக்களைப் பாவலரிடமும் வினவினேன். ஒவ்வொரு கேள்விக்கும் ஆற்றொழுக்குப் போலத் தொடர்ச்சியாகவும் விரைவாகவும் மகிழ்ச்சியுடன் விடையளித்தார் அப்புலவர் பெருந்தகை. அவர் உடல் வருந்துவதுநோக்கி நான் இடை விலக்கிப், 'போதும்' 'நான் தங்களைத் தவருகக் கருதிவிட்டேன்' என்று வருந்திக் கூறினேன். 'என்னைச் சோதிக்க விடுத்த வினுக்களே இவை, அல்லவா?, என்று மீட்டு வினவிய பாவலர் கோமானுக்கு என்ன கூறுவேன், நான். வாளா இருந்தேன். அவர் விடுத்த விடைகள் கரிசறக் கசடறக் கழுமலறக் கற்ருரிடத்தன்றி மற்ருரிடத்து எதிர்பார்க்கலாகாதவை. அவ்விடைகளை எனக்கு என்றே பாவலர் அவர்கள் ஒருக்கஞ்செய்து வைத்திருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அத்துணைக்குத் தெளிவான விடைகள். அவற்றைக் கேட்டபின், 'நிரம்பாத கல்வி உடையார்க்கே சிறப்பளிக்கும் போலும் இவ்வுலகம்! உலகம் குருடோ? இன்னேரன்ன நல்லிசைப் புலமையாளரைக் கண்டு களிக்கும் ஆற்றல் உலகிற்கு இல்லையோ' என்று நான் பெரிதும் கவன்றேன். கவற்சியை வெளிப்படுத்தாதிருக்க இயலவில்லை. ஆகவே, நான் பாவலர் அவர்களை நோக்கி, 'தாங்கள் பாவலரும் நாவலருமாக விளங்குகிறீர்கள். உலகம் விழிகளை மூடிக்கொண்டிருக்கிறது சாமிநாத ஐயர் அவர்களையும், நாராயண அய்யங்கார் அவர்களையும், இராகவையங்கார் அவர்களையும் எல்லோரும் இன்னும் அறியவில்லை, என்று தாழ்ந்த குரலில் கூறினேன். அது கேட்ட பாவலர் அவர்கள், விசும்பைக் குடத்துள் அடக்கிக்காட்டுவது போல, என் கருத்துக்கு விடையாகக், "கூத்தாடியை யாவரும் அறிவார், கொற்றவனை யார் அறிவார்? அறிவார் சிலரே" என்ருர். கற்ருரோடு உரையாடல் நனிமகிழ்வு தரவற்ருயினும், பிறருடைய தலையீடு ஏதுவாக, விரைவில் நான் அவரிடம் விடைபெற்றுக்கொண்டேன். பின்னர் இருமுறை, பாவிலும் நாவிலும் வல்ல அப் பண்புடையாரை என் வீட்டிலேயே எதிர்ப்படும் பேறுபெற்றேன். நாங்கள் எதிர்ப்படும்போது பெரும்பாலும் மொழி பற்றிய ஆராய்ச்சிகளே நிகழ்வன ஆயின. வழியிடையேயும் பன்முறை நாங்கள் எதிர்ப்பட்டதுண்டு. எதிர்ப்படும் போதெல்லாம் தமது கல்விப் பெருமையையும், வயதின் மிகுதியையும் பொருள் செய்யாமல் நான் தொழு முன்னரே அவர் 'சலாம்' இடுவார். **கல்விக் கழகு சான்ருண்மை, பண்பிற் கழகு பணிவுடைமை** என்னும் சீரிய உண்மைகளைப் பாவலர் அவர்கள் முற்றிலும் கடைப்பிடித்து ஒழுகினுர்.

ஒருநாள் ஒருவர், 'புலவர்' எனத் தம்மைக் கூறிக்கொண்டு ஒரு சுவடியுடன் என்னைக் காணவந்தார். அவரை உபசரித்து இருத்தியபின், 'அடைந்தது என் கருதி' என்று கேட்டேன். அவர், 'இது நான் இயற்றிய பாடல்கள்கொண்டது. இதைத் திருத்தி ஒரு சாற்றுக்கவி தரவேண்டும்' என்று என்னை வேண்டிக்கொண்டார். நான் பாடல்களைப் படித்தபோது அவற்றுள் பல இலக்கண வழுக்கள் இருப்பன தெரிந்தன. பல இடங்களில் குற்றியலுகரம் உயிர் முன்னிற்கவும் கெடுக்கப்படாதிருந்தது. "கெடுக்க வேண்டுமிடத்துக் குற்றியலுகரம் கெடுக்கப் படவில்லையே. புணர்ச்சி நிகழின், வழுவிய யாப்பு மேலும் வழுவாமே" என்று நான் அவரைக் கேட்டேன். நான் கூறியது அவர்க்குப் புலனுகவில்லை. யாப்பிலக்கணம் உணராமலே, செய்யுள் ஓசையை அறிந்தவாறு பின்பற்றிச் செய்யப்பட்டவை அப் 'பாடல்கள்' ஆகவே, நான் அவரிடம், 'இவற்றைப் பாவலரிடம் காட்டிச் சாற்றுக்கவி பெற்றுவாருங்கள். அவர் ஒப்புக்கொண்டால் போதும்' என்று கூறிப் பாவலர் அவர்களிடம் அவரை வழிப்படுத்தினேன். பின்னர் அவர் இதுவரை என்னை மீட்டும் எய்தினுர் அல்லர். சில நாட்கள் சென்றபிறகு நான் பாவலர் அவர்களை எதிர்ப்பட நேர்ந்தது. அப்பொழுது அப் 'புலவரைப்' பற்றி அவரிடம் வினவினேன். அதுகேட்ட அவர், 'உழாமலே விளைவு பெற முயல்பவர்கள் பலர்; அவரும் ஒருவர். அவர் தங்களிடம் வந்ததும் தாங்கள் என்னிடம் அவரை அனுப்பியதும் தெரிந்துகொண்டேன். 'சரக்கு அறுதி செருக்கு மிகுதி' ஆயினும் கட்டாயப்படுத்தினமையால் அவரது அறியாமை விளங்கும்படி ஒரு சிலேடைக்கவி பாடிக்கொடுத்திருக்கிறேன், என்று நகைத்துக்கொண்டே கூறினுர்.

பல சொற்களில் பிறர் கூறும் விடைகளைச் சில சொற்களில் அமைத்து ஆழ்ந்த

பொருள் விளங்கக் கூறுந் திறப்பாடு பாவலர் பெருந்தகையிடத்து இயல்பாகவே மிளிர்ந்தது.

'அவை வந்தது, அது எல்லாம்' என்றுற்போல வழுப்பட எழுதிவிட்டு, 'ஒருமை பன்மை மயக்கம்' என்று சிலர் விடைகூறுகின்றனரே! தங்கள் கருத்து என்ன? என்று ஒருபோது பாவலர் அவர்களிடம் நான் கேட்டேன். அவர் கூறிய விடை இன்றும் காதில் ஒலிக்கின்றது. அவர் கூறினுர், காமத்தால் மயங்கலாம்; மகிழ்ச்சியால் மயங்கலாம்; கோபத்தால் மயங்கலாம்; எப்பொழுதும் மயங்குவது மரணம்தானே. வழுக்கிச் சேற்றில் வீழ்ந்தால் கழுவிக்கொள்ளவேண்டாமா? என்று. இவ்வாறு பிறிதுமொழிதல் அணிவகையால் மிக வாய்ப்புற்ற விடை வழங்குவது பாவலர் அவர்களுடைய தனிச் சிறப்புக்களில் ஒன்று. பாவலர் அவர்கள் கருத்தாவது— 'காமம், உவகை, சினம் முதலியவற்ருல் திணைபால் இடங்கள் மயங்கிவரலாகும். யாண்டும் இவ்வாறு (ஏதுவின்றி) மயங்கின், முற்றிலும் வழுவாய் எடுத்துக் கொண்ட இலக்கியம் கெடும். மயக்கம் எங்கும் ஆகும் எனில் அவன் வந்தாள், அவள் வந்தான் என்பதும் ஒக்கும். சேற்றில் விழுந்தவன் கழுவிக்கொள்வதுபோலச் சொற்கள் சிலவிடத்து மயங்கினுல் கருத்தினிமை யாப்பழகு வழுப்படா நல்லியல்புகள் முதலியவற்றின் சிறப்பினுல் அம்மயக்கம் கருதப்படாவாறு அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்' என்பதாம்.

திருக்குறள் முதலிய இலக்கியங்களிலும் பாவலர் அவர்களுக்குப் பண்பட்ட பயிற்சி உண்டு. அவருடைய புலமையாற்றல், பொருள் செயற்றிறன் முதலியவற்றை எழுதப்புகின், மிக விரிந்தொழுகுமாதலால், சிலவற்றை மட்டும் கூறிவிடுப்பல்.

> *'இணரெரி தோய்வன்ன இன்னு செயினும்*
> *புணரின் வெகுளாமை நன்று.'*

என்னும் குறட்பாவுக்குப் பரிமேலழகர் "பல சுடரை உடைத்தாய பேரெரிவந்து தோய்ந்தால் ஒத்த இன்னுதவற்றை ஒருவன் செய்தானுயினும் அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று" என்று உரை கூறினுர். பாவலர் அவர்கள் "பல...... செய்தானுயினும் அவ்வாறு செய்தவன் மீண்டும் வந்து நட்புக் கொள்வானுயின், அவனை வெகுளாமை நன்று எனவும் ஒரு பொருள் உரைக்கலாகும் என்பர். பரிமேலழகர், 'வெகுளாமை புணரின்' என மொழிமாற்றி உரைத்தார். இவ்வாறே திருக்குறட் பாக்கள் பலவற்றுக்கும் ஓவரும் சிறப்பிற் பாவலர் ஏந்தல் பலவுரை பகர்ந்து பயின்ருரை மகிழ்விக்கும் பண்பின் மேம்பட்டவராவர்.

பாவலர் அவர்களுடைய கருத்துக்கள் பொருள் பொருந்தியவை. மொழி நடையைப் பற்றிக் கூறுகையில், "எளியநடை வேண்டுவதே ஆயினும், மக்களறிவிற்குத் தக்கவாறு மொழிநடையைத் தாழ்க்கலாகாது, மொழி நிலைக்குத் தக்கவாறு மக்கள் அறிவு உயரவேண்டும். இழிந்த நடை யாவர்க்கும் எளிது. உயர்ந்த நடை அரிது. உலகொழுக்கு இறந்த நடை பயன்படாது" என்பர். நடைக்கு மொழி நடையும் ஒழுக்கமும் பொருளாம் என்க. இவ்வுரையில் மறைந்து கிடக்கும் அரும்பொருளை ஆராய்ந்து காண்க.

கற்ருரைப் பற்றிக் கூறுகையில், "வள்ளுவனையும், கீரனையும், இளங்கோவையும் சிலரே அறிவார். ஊர்ப்பாடியை யார் அறியார்" என்பர் பாவலர் அவர்கள்.

பாவலர் அவர்கள் யாப்பின்வழி ஒழுகும் பாடல்களையே பெரிதும் விரும்புபவர். இக்காலத்து நிகழும் இசைப்பாடல்களில் விருப்பமின்மையைக் குறிப்பாகக் காட்டுவர். பிற்காலத்துக் கவிஞராகப் பலரால் கருதப் படுவோருட் பலரும் பாவலரவர்களது நெஞ்சகத்துக் கவிஞராக இடம் பெறுபவர் அல்லர். இலக்கணப் புலமை சிறப்ப வாய்த்திராதவர்களைப் புலவர்கள் எனப் பலர் வழங்கினும் பாவலரவர்கள் அவர்களுக்குத் தம் உள்ளத்தில் பிறிதிடமே அமைப்பர். 'இவர் போதிய கல்வி இல்லாதவர்' என்று தெரிந்திருந்தும் அவரை ஊக்குவதன்றி இகழார்.

பாவலர் மிகுந்த சொல்லாற்றல் உடையவராதலால் நாவலருமாய் விளங்கினர். வாய்வந்த பேச வல்லார் நாவலர் ஆகார். இலக்கண இலக்கிய நூல் வல்லவரும், பாடுதலில் வல்லவருமே நாவலர் ஆவார். இவ்

ஷம்சுத்தாசின் கோவை

(வித்துவான் ந. அபூபக்கர், B. A.)

முன்னுரை:

நீராருங் கடலுடுத்த நிலமடந்தையாம் இப்பூவுலகு நாடாகவோ, காடாகவோ, அன்றி மேடாகவோ, பள்ளமாகவோ இருக்கலாம். இதுவைத்து நாட்டின் சிறப்பு அளக்கப்படுவதில்லை. 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்ற ஔவை மொழிக்கேற்ப மக்களைப் பொறுத்தே மாறுபடுகின்றது இம்மாநிலம். இதனாலன்றோ தெய்வப் புலவராம் திருவள்ளுவனாரும்

'பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல் மண்புக்கு மாய்வது மன்.'

என்று கூறினர். இவ்விரு நல்லார் மொழிக்கேற்ப, பண்புடைமை பெற்று வாழ்ந்த சீரியர்கள் பலர். அவர்களுள் இவ்வுலகின் புறவிருளை அகற்றும் ஞாயிற்றைப்போல், மக்கள்தம் மனவிருளை அகற்றி மாசு துடைத்து, மாண்பை ஏற்றிப் பண்புடன் விளங்கச்செய்த பாவலர்கள் சிலர். அவர்கள் தம் அறிவுரைகளே இன்றைய நம்மிலக்கியங்களாம்.

பிரபந்தங்களுள் கோவை:

கசடறக் கற்ற கவிவல்லோர்கள், திறனறிந்து, கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிந்த இலக்கியங்கள் எண்ணற்றவை இவைகளுள் சிலவற்றை 96 வகைப் பிரபந்தங்களுள் அடக்குவர் என்பதைப் 'பிள்ளைக் கவிமுதற் புராணம் ஈருத் தொண்ணூற்றாறெனும் தொகையதாம்......' என்னும் பிரபந்த மரபியலும், 'தொண்ணூற்றாறு கோலப்ரபந்தங்கள் கொண்டபிரான்' எனச் சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவும் அறிவிக்கின்றன இவைகளுள் ஒன்றே, 'தெள்ளிய பாற்கடல் கடைந்து தேவர் பொருட்டால் அமுதம்திரட்டுமாபோல் ஒள்ளிய தீந்தமிழ்க் கடலின் உயர்வுபெறும் அகப்பொருளில் ஓதும் அன்பின் உள்ளிய ஐந்திணைக்கோவை' என்பர், **கல்வி வள்ளல், முதுபெரும் புலவர் சாத்தாங்குட்டிப் பிள்ளையவர்கள்**. அகப்பொருள் இலக்கணத்திற்கு இலககியமாக அமைந்த இந்நூல் செய்யுட்களைக் கிளவிகளாக வகுத்து, துறைகளாக விரித்து, வரலாற்றுத் தொடர்ச்சியமையக் கோத்துப் பாடப்படுவதாதலின் இப்பெயர் பெற்றது என்பர்.

இக்கோவைகள் கடவுளர்களையோ, அரசர்களையோ, குறுநில மன்னர்களையோ, வள்ளல்களையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அத் தலைவர்களின் ஆட்சிமுறைக்குட்பட்ட நாட்டில் இக்காதலர் நிகழ்ச்சி நிகழ்வதாகத் துறைகொண்டு அமைந்து செல்லும். இவற்றுள் கடவுளையே பாட்டுடைத் தலைவனைக் கொண்டு பாடப்பட்டவைகளே திருக்கோவையாரும், திருவெங்கோவையுமாம். பாண்டிய அரசன் நெடு

வியல்புகள் பாவலர் கோமானிடம் நன்கு அமைந்து கிடந்தன. பாவலர் கோமான், நாவலர் பெருமான், இலக்கண வேந்தன், இலக்கியச் செம்மல் என்று நான் அவர்களைப் பல பெயர்களால் அழைப்பினும், அவர்களது உட்செறிந்த மாண்புக்கு ஈடாகாது.

பாவலர் வாழுங்காலத்து அவர்க்குச் சிறப்பளிக்க முற்பட்டவர் மிக அரியவர் ஆவர். அவர் புகழ் வாழும் இக்காலத்தும் நம்மனோர் நம் கடப்பாட்டைச் செய்ய முன்னிடாமை மிக வருந்தற்பாலது. தம் பாடல முதால் உலகினை ஊட்டும் கவிஞர்க்கு அவர் உயிர் வாழும் பொழுதே உயர்வளித்து மகிழ்விக்கமாட்டாத உலகம் நன்றிகெட்டது என்றே நவிலவேண்டும். இனியேனும், பொறாமை, தன்னலம் பேணல், வெறுப்பு, பகைமை, வகுப்பு வேற்றுமை முதலியவைகளை அறவே நீக்கி நம் பாவலர் பெருந்தகையைப் பாராட்ட முற்படுவோமாக.

வெண்பா.

பொருள்சேர் அகமும் புறமுமறிந் துள்ளம்
தெருள்சேர் வகையில் சிறந்தோன்—திருவாளர்
செப்புமவ தானியெனுஞ் செய்குதம் பிக்குநிகர்
ஒப்புவரு பாவலனுண் டோ.

★

மாறனைப் பாட்டுடைத் தலைவனாய்க் கொண்டு பாடப்பட்ட கோவையே பாண்டிக் கோவையாம். மற்று, தஞ்சைவாணன் கோவை போன்றவையெல்லாம் புலவர் பெருமக்களைப் புரக்கும் புரவலராய் - வந்தார்க்கு வாரிவழங்கும் வள்ளல்களாய் விளங்கியோர்களையே பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாடப்பட்டவைகளாகும். இவ்வினத்தில் ஈடும் எடுப்புமில்லாச் சிறப்புடனே இலங்கும் ஒன்றே **ஷம்சுத்தாசீன் கோவை.**

ஷம்சுத்தாசீன் கோவையும் அதன் பெருமையும்:

கோவைகளுள் கோமேதகம் எனக் கொள்ளப்படுவது மாணிக்கவாசகப் பெருமானரின் திருச்சிற்றம்பலக் கோவையாம் திருக்கோவையே யாயினும், அகப்பொருள் இலக்கணத்தை வகைப்படுத்திக் கூறும் நம்பி அகப்பொருள் விளக்கத்திற்கு ஏற்ற இலக்கியமாய்த் திகழ்வது தஞ்சை வாணன் கோவையொனறுதான். பொய்யா மொழிப் புலவரின் கோவையைப் படித்துப் படித்துப் பரவசமுற்றுர், ஷம்சுத்தாசீன் கோவையைப் படிப்பாராயின் பரவசமுறுவதோடு நில்லாது பாரில் இதற்கு நிகரேது என்றும் பகர்வர் என்பதில் சிறிதும் ஐயமில்லை

பாடியோரும், பாடப்பட்டோரும்:

ஷம்சுத்தாசீன் கோவை என்னும் இந்நூல் 425 செய்யுட்களைத் தன்னகத்தே கொண்டு, சொல்லணி, பொருளணி முதலிய அணிகள் பல அமைந்து, கற்றோர் வியக்கும் வண்ணம் விளங்குகின்றது. இக்கோவையை அழகுபடக் கோத்தளித்த பெருமை,

'உன்னரிய புலவரெனும் உடுக்களிடை மாமதி
யாய் ஒளிரும் மேலோன்
மன்னரிய கலனுடையான் ஷெய்குதம்பிப்
பாவலனு மதிவல் லோனையே'

சாரும்.

இந்நூல்,

'சீரேறு கலையுடையான் செய்யதிருக் குண
முடையான் சேனு லாவுங்
காரேறு காதலத்தான் காட்சிமிகு ஹாமிமெ
னக் கழறு மூரான்
பாரேறு புகழுடையான் பரம்பொருளை யுள
நிறுத்தும் பான்மை யுள்ளான்
தாரேறு செழுமார்பன் ஷம்சுத்தா சீன்பெயர்
கொள் தக்கோன் மீதே'

அகப்பொருள் துறைகள் பலவும் அமைய 1915-ல் பாடப்பட்டதாகும்.

இயற்கை அழகும் இளமையழகும்:

தலைவன் தலைவியை முதன்முதற் கண்ட காட்சி என்னும் துறைக்குத் தலைவன் தலைவியின் உருவ அழகை வியந்து கூறுங்கால்,

'மாவே தழைத்து வனசமுங் கோங்கு மருவி
யல்லிப்
பூவே புணர்ந்து புதுமற வேற்றளி பூண்டுபுகழ்க்
கோவே யெனவரு வோன்ஷம்சுத் தாசீன்
குளிர்சிலம்பின்
காவே சிறப்ப நடுவிலோர் பூங்கொடி
காண்கின்றதே'

என்று கூறுவதின் மூலம் தலைவியின் இளமையழகை இயற்கையழகோடு ஒப்பிட்டு அழகுருவில் கூற எண்ணிய சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள், மேனியழகை மாந்தளிர் என்றும், முகத்தை வனசமென்றும், கொங்கைகளை கோங்கரும்புகளென்றும் வாயை அல்லிமலரென்றும் கண்களை வண்டினமென்றும்; இவைகளையெல்லாம் ஒருங்கே தாங்கித் தளர்ந்து மெலிந்து சிறுத்திருக்கும இடையைப் பூங்கொடியென்றும் அமைத்து, அவள் உறுப்பு நலத்தைப் பாராட்டி, இவைகளையெல்லாம் ஒரு பூங்கொடியிடத்துக் கண்டு என் கண்களிகொண்டதெனத் தலைவன் கூற்ருகக் காட்டியிருக்கும் திறப்பாடு எண்ணி இன்புறுதற்குரியதேயாம்.

மாந்தளிரும் கோங்கரும்பும், வனச மலரும், அல்லிப் போதும் வண்டினமும் ஒருங்கே ஒரே கொடியில் சார்ந்திருப்பதைக் கண்படைத்தோர் கண்டால் அகறலும் உண்டோ.....? பேடியரன்றே பெற்றியின் நின்றிடின் ....! ஆகவே இக்காட்சியைக் கண்ட தலைவன் கண்களால் களிபேருவகையுடன் பருகினுன் என்பதோடு நின்றிருக்கலாம் ஆனுல் காவியம் யாவையும் கற்றுக் கோவையையும் ஆக்கிய பாவலப் பெருந்தகையார் இத்துடனே நில்லாது அன்பின் ஐந்திணைக்கு நிலமும், கருப்பொருளும் அமைத்துக் காட்டும் திறன் மறக்கற்பால

தன்று. 'மாலே தழைத்து' என்று கூறிய மையால் குறிஞ்சியையும், 'கோங்கு மருவி' என்று சொல்லியமையால் பாலையையும், 'வனசமும்.....அல்லிப்பூவே புணர்ந்து' என்றமையால் நெய்தலையும், 'நடுவிலோர் பூங்கொடி' என்று குறிப்பிட்டமையால் முல்லையையும் காட்டி அவைகளுக்கேற்பப் புணர்தல், பிரிதல், ஊடல், இரங்கல், இருத்தல் ஆகிய ஒழுக்கங்களையும் காட்டியுள்ளதோடு, தலைவியின் ஒவ்வோர் உறுப்பையும், மலர்களின் இயற்கையழகோடு பொருத்திக்காட்டி, மங்கை நல்லாளின் மலரினும் மென்மையான பண்பையும் பெறவைத்துள்ளமை உன்னி நோக்குதற்குரியதேயாம்.

ஐயத்திலும் புதுமை:

இவ்வாறு கண்டவர் காமுறும் பொலிவுடனே காட்சியளிக்கும் பூங்கொடியைக் கண்ட தலைவன் இவள் எவ்வுலகத்தவளோ என ஐயுறுகின்றான் இந்த ஐயப்பாட்டை அறிவுறுத்தும் துறையே 'ஐயம்'. இத்தலைப்பிலே தலைவன் ஒருவனின் ஐயத்தை அறிவுறுத்த,

'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு'

என்று வள்ளுவத்திலும்,

'பாரணங் கோதிருப் பாற்கடல் ஈன்றபசுங் கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங் கோஉயர் பாவலர்க்கு
வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன்தென் மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யேஇங்கு நின்றவரே'

என்று தஞ்சைவாணன் கோவையிலும்,

'திருவோ வரையுறை தெய்வங்கொ லோதெண் திரையமுதின்
உருவோ வளர்கொல்லி யோவிய மோவுயர் வானிடையில்
வருவோர் சிலவிஞ் சையர்மக ளோவன்றி மானிடமோ
தருவோடு வல்லி தழுவுந்தண் சாரலிற் றாழ்குழலே.'

என்று அம்பிகாவதிக் கோவையிலும் முறையே வள்ளுவரும், பொய்யாமொழிப் புலவரும், அம்பிகாவதியாரும் கூறுகின்றனர். இவர்கள் எல்லாம் தலைவன் வழி தலைவியைக் கண்டு, உற்று நோக்கி, இவள் எவ்வுலகத்துப் பெண்ணோ என்று எண்ணி அத்துடனே தங்கள் ஐயத்தை முடித்துக்கொள்கின்றனர். ஆனால் இவைகளையெல்லாம் பருகிப் பருகிப் பழகிப்போன பைந்தமிழ் மக்களுக்கு இப்பாணியிலே செய்குதம்பிப் பாவலர் கூற நினைந்தாரல்லர். இத்துறையிலே புதுமையைப் புகுத்த எண்ணிய அவர் நெஞ்சம், தலைவன் நெஞ்சத்தோடு இரண்டறக் கலந்து ஐயமாய் வெளிப்படும் பொழுது, முன்னேயுள்ளவைகளையெல்லாம் மிஞ்சிவிடுவதோடு நில்லாது, வென்றும் விடுகிறது. இத்தலைவியாம் பூங்கொடி இங்கே நிற்கின்றமையால் இப்பூவுலகு, விண்ணாய் - மண்ணாய் - மாமலையாய் - திருப்பாற்கடலாய்-சந்திர சூரிய மண்டலங்களாய் தாமரை மலரின் தனியாசனமாய்க் காட்சியளித்தது என்று கூறுகிறார் என்றால் பாவலர் அவர்களின் கற்பனைச் சிறப்பை என்னென்று எடுத்துரைப்பது! இதோ அப்பாடல்!

'வானோ புவியோ மலையோ கடலோ மதியிரவி
தானோ வனசத் தனித்தவி சோவுற்ற தண்டமிழ்க்கோர்
கோனோ வெனவருள் வோன்ஷம்சுத் தாசீன் குளிர்சிலம்பின்
கானோ டொளிதரு வாளிரு டந்தவக் காவகமே'

முடிவுரை:

இங்ஙனம் இனித்திடும் அமுதம் போன்று காட்சியளிக்கின்ற இக்கோவையை விரித்துரைப்பதாயின் விரியுமென்றஞ்சி இத்துடன் நிறுத்துகின்றேனாயினும் இந்நூல் முழுவதையும் படித்து இன்புறவோ, அன்றிப் படிக்கப் பக்கம் நின்று கேட்டு இன்புறவோ செய்கிறவர்கள் இதில் காணப்படுகின்ற கருத்து நயங்களையும், பொருட் செறிவுகளையும், சொற்றொடர்களையும், பன்னூற் கருத்தமைப்புகளையும் முறையொடு கண்டு இன்புறுவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கோவையை மறக்கினும், கோவையில் உள்ள யாவையும் தான் மறந்துவிடினும், தலைவியை இரந்து பின்னிற்றற்கு எண்ணுகின்ற தலைவன் கூறும் கூற்றாக பாவலர் கூறுகின்ற,

'கோடித் தனமுள ரோன்றிரண் டிகுவர் கூடுநர்க்கே' என்பதை மறப்பரோ. ★

வி. ஐ. சுப்பிரமணியம், M. A. Ph. D. (Ind. U.S.A.)
திருவனந்தபுரம்.

★ வாழ்த்துகிறேன் ★

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் நாஞ்சில்நாடு அளித்த முஸ்லிம் தமிழ்ப் பெருமகன். ஆழ்ந்த படிப்பும், தேர்ந்த வாத வன்மையும் உடையவர். மாணவர் பலருக்குத் தமிழ் கற்பித்துப் பெரு மதிப்புப் பெற்றவர்.

1937-ஆம் ஆண்டில் என நினைக்கிறேன்; பாவலர் அவர்கள் நாகர்கோவில் நகராண்மைக் கழகத் திடலில், காங்கிரஸ் பிரசாரம் செய்தார்கள். நல்ல தமிழில் விடுதலையின் மேன்மையைக் குறிப்பிட்டு, காந்தியடிகளின் பெருமையை விளக்கினார்கள். அவர் அன்று செய்த வீர முழக்கத்தால் எழுச்சியுற்ற சிறுவர்களில் நானும் ஒருவன்.

ஏறத்தாழ ஆறுண்டு கழித்து, தமிழ்க்கலை மகாநாடொன்று ஒழுகினசேரி சரசுவதி படக்காட்சி நிலையத்தில் நடைபெற்றது. தொலை தூரத்தில் இருந்து பல அறிஞர்கள் வந்திருந்தார்கள். ஒருநாள் மகாநாட்டிற்குப் பாவலர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திருக்குறளின் முதற்பாவை சுமார் ஒன்றரை மணி நேரம் வரை விளக்கினார்கள். இடையிடையே தமது அனுபவ நிகழ்ச்சிகளும், மேற்கோள்களும் அவர்கள் பேச்சை எழிலுறச் செய்தன. அவர்களுடைய நினைவாற்றலையும் வாத வன்மையையும் எல்லோரும் பாராட்டினர். அகல நின்று அவர்களை வியந்து பாராட்டிய இளைஞர்களுள் நானும் ஒருவன். அவர்களுடன் நெருங்கிப் பழகும் பேறு எனக்கில்லை. அவர்களுடைய மாணுக்கர்கள் பலரையும் அவர்கள் மகன் திரு ஹமீதையும் நன்கறிவேன். பாவலர் அவர்களின் தமிழ்த் தொண்டினை அறிய அவர்கள் பெரிதும் துணை செய்தனர்

பாவலர் அவர்களின் பெருமையை நினைவூட்டுவதற்கென மலரும் இந்த மலரைப் படித்து இளைஞர் பலர் எழுச்சியுற வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,
வி. ஐ. சுப்பிரமணியம்.

போற்றாத நாவும் உண்டோ?

(திருவை கா. முகம்மது பாரூக்)

1 சென்னை நகர் மக்களெலாம் சேர்ந்திருக்க,
சிறப்பளிக்கும் அறிஞரெலாம் சூழ்ந்திருக்க,
என்னையிது எனப்பலரும் வியப்பில் மூழ்க,
எல்லாரும் அதிசயித்துப் பார்த்திருக்க,
தன்னையொரு சோர்வில்லாக் கருவியாக்கி,
தகைமையுடை அவதானம் நூறு செய்து
மின்னுபுகழ் சேர்த்திட்ட மேதை தன்னை
மேன்மையுடன் போற்றாத நாவும் உண்டோ?

2 கல்லாதார், கற்றவர்கள், காளையர்கள்,
காரிகையர், தொழிலாளர், சிறுவர், முதியோர்
எல்லாரும் ஒருசேர இன்பங் காணும்
எழிலாரும் சொல்விருந்தை என்றும் தந்து,
பல்லாண்டு போற்றிவரும் மரபுக் கொப்பப்
பைந்தமிழில் பாமாலை பலவும் கண்ட
நல்லாராம் பாவலரின் நிறைவுச் செயலை
நினைந்துருகிப் போற்றாத நாவும் உண்டோ?

3 சீறாவின் உரையாளர்; சிறப்புக் கவிஞர்;
செந்தமிழில் கைதேர்ந்த செம்மல்; ஆசான்;
வீறான நாநலத்தில் வேந்தர்; நாட்டின்
விடுதலைக்காய் உழைத்திட்ட வீரர்; என்றும்
மாறாத குணக்குன்று; மாண்பின் சின்னம்;
மாபெரியோன் அருள்விழையும் மக்கள் திலகம்;
பேறாகத் தமிழ்நிலத்தார் பெற்ற கோமான்
பெருமையினைப் போற்றாத நாவும் உண்டோ?

மாடர்ன் காப்பி

மகத்தான தயாரிப்பு
மாடர்ன் காப்பி அன் காப்பி வில்லைகள்!
மக்களின் விருப்பத்திற்குரியது
மாடர்ன் காப்பி அன் காப்பி வில்லைகள்!
ஹோட்டல்காரர்கள் நாட்டமுடன்
தினமும் வாங்கி மகிழ்வது
மாடர்ன் காப்பி அன் காப்பி வில்லைகள்!
வீடுதோறும் தேடி வாங்குவது
மாடர்ன் காப்பி அன் காப்பி வில்லைகள்!

விஜயம் செய்யுங்கள்:
★ மாடர்ன் காப்பி ஹவுஸ், ★
கேப் ரோடு, கோட்டாறு, நாகர்கோவில்.

Sri.
Reghu Vilas Hotel
Meenakshipuram, Nagercoil.

★

BOARDING
&
LODGING

தங்கம், பவுன், வெள்ளி
நகைகளுக்குச் சிறந்த இடம்:
அலி ஜுவல்லர்ஸ்
மீனாட்சிபுரம் :: நாகர்கோவில்

நியூ டில்லி ஹோட்டல்
மணிக்கூண்டு—நாகர்கோவில்.
எங்களது ஹோட்டலில் நாவிற்கு
★ ருசியான ★
உணவு வகைகள் எப்பொழுதும்
கிடைக்கும்

காப்பி, டீ, சாப்பாடு இவைகளுக்குச்
சிறந்த இடம்
பீப்பிள்ஸ் ஹோட்டல்
போஸ்டாபீஸ் ஜங்ஷன், நாகர்கோவில்.

கலைமகள்
கல்வி நிலையம்
கம்போளம் பஜார், கோட்டாறு.

ஆபீஸ், ஹோட்டல், வீடுகள் முதலியவற்றிற்கு

தென்னிந்தியாவிலேயே முதன்மை ஸ்தானம்

பெற்றது

சிங்கம் மார்க்

இரும்பு பர்னிச்சர்களே!



சிறு தொழில்

பதிவு செய்யப்பட்டவை.

எல்லா ஜில்லாக்களுக்கும்

விநியோகஸ்தர்கள் தேவை.

விபரங்களுக்கு:

A. R. வெல்டிங் ஒர்க்ஸ்,

25, சங்கிலித்தோப்பு, மதுரை-1.

தற்காலத் தமிழ் - ஆக்கப்பெயர்கள்

முத்துச்சண்முகன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1. முன்னுரை
2. சந்தி விதிகள்
3. சுட்டுவினா இவற்றின் அடியாகப் பிறக்கும் பெயர்கள்
4. பெயரடையின் அடியாகப் பிறக்கும் பெயர்கள்
5. பெயரடியாகப் பிறக்கும் பெயர்கள்
6. வினையடியாகப் பிறக்கும் பெயர்கள்
7. பெயராகக உருபுகளின் வகை
8. வினையாகவும் பெயராகவும் வரும் சொற்கள்
9. பெயரடையாகவும் பெயராகவும் வரும் சொற்கள்

1. தற்காலத் தமிழில் வழங்கும் பெயர்களின் ஆக்க முறையை ஆராய்கின்றது இக்கட்டுரை. இதில் காட்டப்படுகின்ற உதாரணங்களெல்லாம் எழுதுந் தமிழில் இடம் பெறுபவை; சிற்சில பேச்சில் வழங்குவன.

உருபு என்பதைப் பகுதி, விகுதி, இடைநிலை அனைத்திற்கும் பொதுவாக வழங்குகின்றேன். இது நமது இலக்கண ஆசிரியர் வழக்கினின்றும் மாறுபட்டது.

2.0 சந்தி விதிகள்

இங்கு கொடுக்கும் சந்தி விதிகள் உதாரணங்களில் கொடுக்கப்படுகின்ற அடிச்சொற்களில் காணப்படுகின்ற வேறுபாடுகளை விளக்கும். பெரும்பான்மை முடிவுகள் நன்னூல் சூத்திரங்களோடு ஒத்து வருவன. ஆனால் இதில் காணப்படும் வேறுபாடுகள் அனைத்தையும் ஒன்றாய்த் திரட்டிக்காணும் நோக்கத்தோடு இங்கு சந்திவிதிகள் வகுக்கப்படுகின்றன.

வினையாலணையும் பெயராக்கத்தின் போது (6.2) ஏற்படுகின்ற அடிச்சொல் வேறுபாடுகளையெல்லாம் இவ்விதிகளில் அடக்க முயலவில்லை. அவற்றைக் காலங் காட்டும் உருபுகளை வினை அடிகள் பெறும் முறையை விளக்கும்பொழுது தான் விளக்கவேண்டும்.

திரிபுகளை விளக்க ஒன்றற்கு மேற்பட்ட விதிகள் வேண்டுமாயின், அவைகளை நாம் கொடுத்திருக்கின்ற முறைப்படி பொருத்திக் காணுதல் வேண்டும்.

2.1 அகர இகரச் சுட்டும், எகர வினாவும் பால் காட்டும் உருபினை ஏற்கும்பொழுது அவ்–, இவ்–, எவ்–என மாறும்.

அ + அன் > அவன்
இ + அன் > இவன்
எ + அன் > எவன்

2.2 உயிரின் முன் நிலைமொழி உகரம் கெடும்.

சூது + ஆடி > சூதாடி
கரவு + அடம் > கரவடம்
விருப்பு + அம் > விருப்பம்
குரங்கு + ஆட்டி > குரங்காட்டி
பேச்சு + ஆளி > பேச்சாளி

2.3 உயிரின் முன் நிலைமொழி இகர ஐகாரம் யகர உடம்படு மெய் பெறும்.

வண்டி + ஓட்டி > வண்டியோட்டி
பனை + ஏறி > பனையேறி

2.4 அகரத்தின் முன் நிலைமொழி அகரம் கெடும்.

அழகான + அவன் > அழகானவன்
கெட்ட + அவன் > கெட்டவன்

2.5 இகரம், அன் இவற்றின் முன் நிலைமொழி அம் கெடும்.

கஞ்சம் + அன் > கஞ்சன்
கள்ளம் + அன் > கள்ளன்
பாவம் + இ > பாவி
வாதம் + இ > வாதி
உபகாரம் + இ > உபகாரி
லோபம் + இ > லோபி

2.6 தகரம், ககரம் (வல்லினம்) இவற்றின் முன் நிலைமொழி மகரம் கெடும்.

கிராமம் + த்தான் > கிராமத்தான்
பட்டினம் + த்தான் > பட்டினத்தான்
நகரம் + த்தான் > நகரத்தான்
பணம் + க்காரன் > பணக்காரன்
நாடகம் + க்காரி > நாடகக்காரி

2.7 தகரத்தின் முன் நிலைமொழி மகரம் இனமெல்லெழுத்தாக மாறும்.
பிணம் + தின்னி > பிணந்தின்னி
பழம் + தின்னி > பழந்தின்னி
2.8 ககரத்தின் முன் நிலைமொழி னகரம் இனமெல்லெழுத்தாக மாறும்.
பயந்தான்+கொள்ளி > பயந்தாங் கொள்ளி
தோற்றான்+கொள்ளி> தோற்றாங் கொள்ளி
2.9 அகரத்தின் முன் நிலைமொழி லகரம் ற்ற் என மாறும்.
கல் + அல் > கற்றல்
வில் + அல் > விற்றல்
நில் + அல் > நிற்றல்
2.10 பகரத்தின் முன் நிலைமொழி லகரம் றகரமாக மாறும்.
கல் + பது > கற்பது
வில் + பது > விற்பது
நில் + பது > நிற்பது
2.11 'அம்' முன், நிலைமொழி ஈற்று வல்லினத்தின் முன் நின்ற இனமெல்லெழுத்து ஒத்த வல்லினமாக மாறும்.
தூங்கு + அம் > தூக்கம்
உறங்கு+ அம் > உறக்கம்
விரும்பு + அம் > விருப்பம்
2.12 கீழே காண்பவை மேலே காட்டிய விதிகளில் அடங்காது தனித்து வருகின்றமாற்றுருபுகள். பககத்தில் அவை வரும் பகுதியின் எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நட்பு	நண்ப்–	(5.1)
சினேகம்	சினேகித்-	(5.1)
பலம்	பலவ்–	(5.1)
சோம்பல்	சோம்ப்–	(5.3)
செல்வம்	செல்–	(5.17)
சீவு	சீ–	(6.15)
வா	வரு–	(6.18, 6.23, 6.27)
காண்	காட்–	(6.22)
கூவு	கூ–	(6.23)
நம்பு	நம்பி–	(6.25)

3.0 சுட்டு வினை அடி
3.1 பால்காட்டும் உருபுகள்.
அ–> அவன், அவள், அவர், அது, அவை
இ–> இவன், இவள், இவர், இது, இவை
எ –> எவன், எவள், எவர், எது, எவை
4.0 பெயரடை அடி
4.1 செய்மைச் சுட்டுப் பெயர்கள்

அழகான> அழகானவன், அழகானவள், அழகானவர், அழகானது, அழகானவை.
கெட்ட > கெட்டவன், கெட்டவள், கெட்டவர், கெட்டது, கெட்டவை.
நல்ல, சின்ன, சிறிய, பெரிய முதலிய பெயரடைச் சொற்களையும் இவ்வாறே ஒட்டிக் காண்க.
4.2 உருபு -த்தனம்
கள்ள> கள்ளத்தனம்; கஞ்ச> கஞ்சத்தனம்;
முரட்டு> முரட்டுத்தனம்; அசட்டு> அசட்டுத்தனம் முதலியன.
இப்பெயர்களெல்லாம் அவ்வத் தன்மையைக் குறிக்கின்றன.
4.3 உருபு - மை
பெரு (ம்) > பெருமை; சிறு> சிறுமை; கரு (ம்) > கருமை; வெண் > வெண்மை.
5.0 பெயரடி.
5.1 பால்காட்டும் உருபுகள்.
கள்ளம்> கள்ளன், கள்ளி; கஞ்சம்> கஞ்சன்; ஊழியம் > ஊழியன்; நட்பு > நண்பன்; சினேகம்> சினேகிதம், சினேகிதி; பலம்> பலவான்.
5.2 உருபு -இ
பாவம்> பாவி; வாதம்> வாதி; உபகாரம > உபகாரி; லோபம் > லோபி. இவ்வடிகள் அம் விகுதியில் முடிந்த வடமொழிச் சொற்கள்.
5.3 உருபு -ஏறி
சோம்பல்> சோம்பேறி, மரம் > மரமேறி, பனை> பனையேறி.
5.4 உருபு -அடம்
கரவு > கரவடம்
5.5 உருபு -அம்
விருப்பு > விருப்பம்
5.6 உருபு -ஆடி
வாய் > வாயாடி; பேய் > பேயாடி; சூது> சூதாடி; கூத்து> கூத்தாடி; நாடகம்> நாடகமாடி.
5.7 உருபு -ஆட்டி
குரங்கு > குரங்காட்டி
5.8 உருபு -ஆளி
ஊர்> ஊராளி; பேச்சு> பேச்சாளி; நோய்> நோயாளி; முதல் > முதலாளி.

5.9 உருபு -ஆளன்

செயல் ▷ செயலாளன்; பொருள் ▷ பொருளாளன்.

5.10 உருபு —ஓட்டி

வண்டி ▷ வண்டியோட்டி; தேர் ▷ தேரோட்டி; கார் ▷ காரோட்டி.

5.11 உருபு—தின்னி

பிணம் ▷ பிணந்தின்னி; பழம் ▷ பழந்தின்னி.

5.12 உருபு —த்தனம்

சீமை ▷ சீமைத்தனம்; சண்டி ▷ சண்டித்தனம்; உதாரி ▷ உதாரித்தனம்; பொறுக்கி▷ பொறுக்கித்தனம்; பேடி ▷ பேடித்தனம்; கருமி ▷ கருமித்தனம்; வம்பு ▷ வம்புத்தனம்; வாலு ▷ வாலுத்தனம்.

5.13 உருபு —த்தான்

கிராமம் ▷ கிராமத்தான்; பட்டினம் ▷ பட்டினத்தான்; நகரம் ▷ நகரத்தான்.

5.14 உருபு —காரன் (ஆண்பால்) -காரி (பெண்பால்). உயிர், ரகரம், லகரம் இவற்றின் பின் —க்காரன், —க்காரி என இரட்டிக்கும்.

தயிர் ▷ தயிர்க்காரி; தயிர்க்காரன்; பால்▷ பால்க்காரன்; சீக்கு ▷ சீக்குக்காரன்; சீக்குக்காரி; காய்கறி ▷ காய்கறிக்காரன்; காய்கறிக்காரி; மீன் ▷ மீன்காரி, மீன்காரன்; வண்டி ▷ வண்டிக்காரன்.

5.15 உருபு —மான்

நீதி ▷ நீதிமான், புத்தி ▷ புத்திமான், இவை இகரவீற்று வடமொழிச் சொற்கள்.

5.16 உருபு —மை

பகை ▷ பகைமை

5.17 உருபு —வந்தன்

தனம் ▷ தனவந்தன்; செல்வம் ▷ செல்வந்தன்.

5.18 உருபு —வி

மனை ▷ மனைவி; துணை ▷ துணைவி

6.0 வினையடி

6.1 பால்காட்டும் உருபுகள்

தட்டு ▷ தட்டான், தட்டாத்தி; திருடு ▷ திருடன், திருடி, திருடர்கள்.

6.2. செய்மைச் சுட்டுப்பெயர். (பெயரெச்சமும் செய்மைச் சுட்டும் இணைந்து வினையாலணையும் பெயராகும்)

வந்த ▷ வந்தவன், வந்தவள், வந்தவர், வந்தது, வந்தன; வருகிற ▷ வருகிறவன், வருகிறவள், வருகிறவர், வருகிறது, வருகின்றவை; வரும் ▷ வருபவன், வருபவள், வருபவர், வருவது, வருபவை.

6.3 உருபு —இ

தூங்கு ▷ தூங்கி, பொறுக்கு ▷ பொறுக்கி; தடுக்கு ▷ தடுக்கி (புல் தடுக்கி); சுத்து ▷ சுத்தி (வார் சுத்தி); கொத்து ▷ கொத்தி; தின்னு ▷ தின்னி; பெருக்கு ▷ பெருக்கி (ஒலி பெருக்கி)

6.4 உருபு —ஏறி

வந்து ▷ வந்தேறி

6.5 உருபு —ஐ

கொல் ▷ கொலை; வில் ▷ விலை; நில் ▷ நிலை; தடு ▷ தடை; எடு ▷ எடை; நிறு ▷ நிறை

6.6 உருபு —அடம்

கட்டு ▷ கட்டடம்

6.7 உருபு —அம்

திருப்பு ▷ திருப்பம்; வருத்து ▷ வருத்தம்; அழுத்து ▷ அழுத்தம்; கூட்டு ▷ கூட்டம்; ஆட்டு ▷ ஆட்டம; வாட்டு ▷ வாட்டம்; ஓட்டு▷ ஓட்டம்; சுருக்கு ▷ சுருக்கம்; பெருக்கு ▷ பெருக்கம்; நெருக்கு ▷ நெருக்கம்; எறக்கு ▷ எறக்கம்; உருக்கு ▷ உருக்கம்; நீக்கு ▷ நீக்கம்; அடக்கு ▷ அடக்கம்; கலக்கு ▷ கலக்கம்; ஏமாற்று ▷ ஏமாற்றம்; ஏற்று ▷ ஏற்றம்; அஞ்சு ▷ அச்சம்; தூங்கு▷ தூக்கம்; உறங்கு▷ உறக்கம். இவ்வடிச் சொற்கள் வல்லினம் இரட்டித்தோ வல்லினம் அதற்கினமாய மெல்லினத்தை அடுத்தோ முடிந்த சொற்கள்.

6.8 உருபு —அணம்

கட்டு ▷ கட்டணம்

6.9 உருபு —அல்

கீறு ▷ கீறல்

6.10 உருபு —ஆளி

பீச்சு ▷ பீச்சாளி

6-11 உருபு —கொள்ளி

பயந்தான் ▷ பயந்தாங்கொள்ளி; தோற்றுன ▷ தோற்றாங்கொள்ளி; வெடித்தான் ▷ வெடிததாங்கொள்ளி; (பீச்சான்?) பீச்சாங்கொள்ளி.

6.12 ஈற்றயல் இகரம் ஆகாரமாக மாறுதல்

சாப்பிடு ▷ சாப்பாடு; கூப்பிடு ▷ கூப்பாடு

6.13 ஈற்றயல் உயிர் நீளல்

படு ▷ பாடு; புறப்படு ▷ புறப்பாடு; ஏற்படு ▷ ஏற்பாடு; தடு ▷ தாடு; சுடு ▷ சூடு; கெடு ▷ கேடு; விடு ▷ வீடு.

6.14 உருபு —பது (உயிரின் முன் —ப்பது என இரட்டிக்கும்)

எடு ▷ எடுபபது; கொடு ▷ கொடுப்பது; உடு ▷ உடுப்பது; பொறு ▷ பொறுப்பது; அடி ▷ அடிப்பது; கற ▷ கறப்பது; அடை ▷ அடைப்பது; கல் ▷ கற்பது; வில் ▷ விற்பது;

உண் > உண்பது; காண் > காண்பது; தின் > தின்பது; இவை அவ்வத் தொழிலைக் குறிக்கின்றன.

6.15 உருபு —ப்பு

பகு > பகுப்பு; கல > கலப்பு; அள > அளப்பு; தொகு > தொகுப்பு; சிரி > சிரிப்பு; சீவு > சீப்பு; குறி > குறிப்பு; வகு > வகுப்பு; விரி > விரிப்பு; காய் > காய்ப்பு; வார் > வார்ப்பு.

6.16 உருபு —தி

ஊர் > ஊர்தி; பகு > பகுதி; தொகு > தொகுதி; மற > மறதி; மிகு > மிகுதி.

6.17 உருபு —த்தி

அடர் > அடர்த்தி; வளர் > வளர்த்தி.

6.18 உருபு —தல்

அறி > அறிதல்; போ > போதல்; விடு > விடுதல்; வா > வருதல்; வாழ் > வாழ்தல்; இவை அவ்வத் தொழிலைக் குறிக்கின்றன.

6.19 உருபு —த்தல் —அல்; —த்தல் உயிரின் பின்னும், ரகரத்தின் பின்னும் வரும். -அல் வேறிடங்களில் வரும்.

அரி > அரித்தல்; அடி > அடித்தல்; பார் > பார்த்தல்; கடி > கடித்தல்; எடு > எடுத்தல்; கல் > கற்றல்; கட்டு > கட்டல்; வில் > விற்றல்; நில் > நிற்றல்; தோண்டு > தோண்டல்; கிண்டு > கிண்டல்; தூண்டு > தூண்டல்; இவைகளும் அவ்வத் தொழிலைக் குறிக்கின்றன.

6.9-ல் வரும் -அல் (கீறு கீறல்) தொழிலையும் குறிக்கும், அதனால் ஏற்பட்ட வெடிப்பையும் குறிக்கும். 6.9-ல் வருகின்ற அல் உருபையும் இங்கு வருகின்ற அல் உருபையும் சேர்த்து ஒரு தொகையாகக் கூறினும் பொருந்தும்

6.20 உருபு —த்தை

நட > நடத்தை

6.21 உருபு —டு ல -து ல -த்து; -டு டகரத்தின் பின்னும், -து தகரத்தின் பின்னும் -த்து மற்ற இடங்களிலும் வரும்.

திருடு > திருட்டு; பாடு > பாட்டு; எழுது > எழுத்து; செய் > செய்த்து; வா > வரத்து.

6.22 உருபு -சு ல -சி ல -ச்சி; -சு சகரத்தின் பின்பும், -சி டகரத்தின் பின்பும், -ச்சி பிற இடங்களிலும் வரும்.

ஏசு > ஏச்சு; பேசு > பேச்சு; வீசு > வீச்சு; காண் > காட்சி; உணர் > உணர்ச்சி; தேர் > தேர்ச்சி; வீழ் > வீழ்ச்சி.

6.23 உருபு —கை

அழு > அழுகை; வா > வருகை

6.24 உருபு —ச்சல்

கூவு > கூச்சல்; ஒழி > ஒழிச்சல்; காய் > காய்ச்சல்; துணி > துணிச்சல்.

6.25 உருபு —க்கை

இரு > இருக்கை; எச்சரி > எச்சரிக்கை; படு > படுக்கை; கிட > கிடக்கை; நம்பு > நம்பிக்கை; வாழ் > வாழ்க்கை.

6.26. உருபு —க்கு

போ > போக்கு.

6.27 உருபு —மானம்

தீர் > தீர்மானம்; தேய் > தேய்மானம்; வா > வருமானம்.

6.28 உருபு —மை

வறு > வறுமை.

6.29 உருபு —வது

போ > போவது; வா > வருவது; அறி > அறிவது; எறி > எறிவது; விழு > விழுவது; ஓடு > ஓடுவது; எண்ணு > எண்ணுவது; பாடு > பாடுவது; இதுவும் தொழிலைக் குறிக்கும்

6.30 உருபு —வி

கல் > கல்வி; கேள் > கேள்வி; (தோல்) > தோல்வி.

6.31 உருபு —வை

கற > கறவை; பற > பறவை; பார் > பார்வை.

6.32 உருபு —வு

பணி > பணிவு; துணி > துணிவு; தேய் > தேய்வு; அறி > அறிவு; தாழ் > தாழ்வு; வாழ் > வாழ்வு; உயர் > உயர்வு; குறை > குறைவு.

7.0 உருபுகளின் வகை

7.1 சுட்டு, வினா, பெயரடை, பெயர், வினை ஆகிய எல்லாவற்றோடும் வரும் உருபுகள்.

பால்காட்டும் உருபுகள் 3.1, 4.1, 5.1, 6.1.

7.2 பெயரடை, பெயர், வினை இவற்றோடு வரும் உருபுகள்.

—மை 4.3, 5.16, 6.28.

7.3 பெயரடை, பெயர் இவற்றோடு வரும் உருபுகள்.

—த்தனம் 4.2, 5.12.

7.4 பெயர் வினை இவற்றோடு வரும் உருபுகள்.

—இ 5.2, 6.3 —அம் 5.5, 6.7,
—எறி 5.3, 6.4 —ஆளி 5.8, 6.10,
—அடம் 5.4, 6.6, —வி 5.18, 6.30,

பாவலரின் வருங்கால உணர்வு!

[அவ்வை தி. க. ஷண்முகம்]

1925-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திருவனந்தபுரம் ஆரியசாலை நாடக அரங்கில் எங்கள் சொந்த நாடகக் குழுவைத் துவக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. அரங்கின் சுற்றுப்புறத்திலேயே சில வீடுகள் இருந்தன. அவற்றில் ஒரு மாடி வீட்டில் நாங்கள் குடியிருந்தோம்.

எங்கள் தாய் மாமனுர் திரு செல்லம் பிள்ளை நாகர்கோவிலில் இருந்து நான்கு பையன்களைக் கூட்டிவந்திருந்தார். அவர்களில் ஒரு பையனுடைய குரல் மகரக்கட்டு வந்து தேறிய குரலைப்போல் கனமாகவும் கம்பீரமாகவும் இருந்தது. புதிதாய் வந்தவர்களுக்குப் பாட்டுகளைச் சொல்லிவைக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பெற்றது நான் புதியவர்கள் நால்வரையும் மாடியில் உட்கார வைத்து, "மூலமந்திர மோன நற்பொருளே" என்று தொடங்கும் சங்கரதாஸ் சுவாமிகளின் பாடலைச் சொல்லிக்கொடுத்தேன். சில நிமிடங்களுக்குப்பின் தண்ணீர் குடிப்பதற்காகக் கீழே சென்றேன். மறுபடியும் நான் மாடிக்கு வந்தபோது புதியவர்களில் கனமான சாரீர முடையவர் மற்ற மூன்று பேருக்கும் அந்தப் பாடலைச் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. "இந்தப் பாட்டு உனக்கு ஏற்கனவே தெரியுமா?" என்று அவரைக் கேட்டேன். ''நாகர்கோவிலில் உங்கள் நாடகங்கள் நடைபெற்றபோது நான் அடிக்கடி வந்து பார்த்திருக்கிறேன் நாடகாரம்பத்தில் தோத்திரப் பாடல்களைப் பாடவரும் சிறுவர்கள் இந்தப் பாடலைத் தினமும் பாடுவதைக் கேட்டிருக்கிறேன்.'' என்று பதில் கிடைத்தது. எனக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. ''சரி, நீயே சொல்லிக்கொடு'' என்று சொல்லிவிட்டு நான் வேறு வேலையைக் கவனிக்கச் சென்றேன்.

பாட்டுச் சொல்லிக் கொடுத்த முதல் நாளே ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அந்த இளைஞர் யார் தெரியுமா? அவர்தாம் **கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.**

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பார்கள். என். எஸ். கிருஷ்ணன் எதிர்காலத்தில் மகோன்னதமாக விளங்கப் போகிருரென்பதை அவரது இளம் பருவச் செயல்களே காட்டின. ஓய்வு நேரங்களில் நாங்கள் பலீன் சடுகுடு, நொண்டி, கிளித்தட்டு, பிள்ளையார் பந்து முதலிய பலவிதமான விளையாட்டுகளில் ஈடுபடுவோம். கட்சி பிரிக்

7.5 பெயரோடு மட்டும் வரும் உருபுகள்

—ஆடி 5.6, —ஆட்டி 5.7, —ஆளன் 5.9, —ஓட்டி 5.10, —தின்னி 5.11, —த்தான் 5.13, —க்காரன், —க்காரி, —காரன், —காரி 5.14, வந்தன் 5.17.

7.6 வினையொடு மட்டும் வரும் உருபுகள்.

வினையாலணையும் பெயர் உருபு 6.2, —ஐ 6.5, —அணம் 6.8, —அல் 6.9, —கொள்ளி 6.11, ஈற்றயல் இகரம் ஆகாரமாதல் 6.12, ஈற்றயல் உயிர் நீளல் 6.13, —ப்பது —பது 6.14, —ப்பு 6.15, —தி 6.16, —த்தி 6.17, —த்தல் —அல் 6.19, —த்தை 6.20, —டு —து —த்து 6.21, —சு —சி —ச்சி 6.22, —ச்சல் 6.24, —கை 6.23, —க்கை 6.25, —க்கு 6.26, —மானம் 6.27, —வது 6.29, —வை 6.31, —வு 6.32,

8.0 பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள்

கள்ளு, திருப்பு, சாவு, மெல்லு, நீட்டு, அடி, இடி, பிடி, முதலியன.

9.0 பெயராகவும் பெயரடையாகவும் வரும் சொற்கள்.

பெரும்பாலும் எல்லாப் பெயர்களும் இவ்வாறு வருகின்றன.

கல் — கற்றூண், பல் — பற்பொடி, மண் — மண்குதிரை, பொன் — பொற்காப்பு, பொன் காப்பு, வெள்ளி — வெள்ளித்திரை, தீ — தீப்புகை, மீன் — மீன் வலை, பட்டு — பட்டுப் புடவை, நீர் — நீர்த்திவலை முதலியன.

★

கும்போது ஒவ்வொருவரும் என். எஸ். கிருஷ்ணன் எந்த கட்சியில் இருக்கிறாரோ அதிலேயே சேர விரும்புவோம். ஏன் தெரியுமா? என். எஸ். கிருஷ்ணன் இருக்கும் கட்சி கண்டிப்பாக வெற்றி பெறும்.

விளையாட்டுகளில் இவ்வாறு முதன்மைபெற்றிருந்தாலும் நாடகங்களில் சிறிய பாத்திரங்களையே அவர் தாங்கி வந்தார். கோவலனில் பாண்டியன்; சாவித்திரியில் சத்தியவானின் தந்தை துயுமத்சேனன்; மனோகரனில் மந்திரி பௌத்தாயனன்; இவைதான் என். எஸ். கிருஷ்ணனுக்கு துவக்கத்தில் கிடைத்த வேடங்கள்.

1925 மார்ச்சு 31-ஆம் நாள் திருவனந்தபுரம் ஆரியசாலை அரங்கில் எங்கள் முதல் நாடகமாக "கோவலன்" அரங்கேறியது. மொத்தம் ஆறு நாடகங்களை நடித்துவிட்டு அடுத்தபடியாக நாகர்கோவிலுக்கு வந்தோம். நாகர்கோவில் ஒழுகினசேரி சரஸ்வதி ஹாலில் நாடகங்கள் நடைபெற்றன. கோவலன் நாடகத்தன்று ஒழுகினசேரியிலுள்ள சில நண்பர்கள் உள்ளூர்க்காரர் என்ற அபிமானத்தோடு பாண்டியனாக நடித்த என். எஸ். கிருஷ்ணனுக்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசளிக்க விரும்பினார்கள். மேடையில் அதைக் கொடுப்பதற்குத் தக்க பெரியார் ஒருவரையும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

(எழுதியவர்)

பாண்டியன் காட்சி முடிந்தது. வாழ்த்துரை கூறிப் பரிசைக் கொடுக்க வந்திருந்த பெரியார் மேடையில் வந்து கம்பீரமாக நின்றார். அவர் பெரும் புலமை வாய்ந்தவர் என்று உள்ளே சிலர் பேசியது என் காதில் விழுந்தது. பெரியவர் பேசத் தொடங்கினார். தங்குதடையில்லாமல் சொற்பொழிவு செய்தார். ஐம்பெருங் காப்பியங்களில் தலைசிறந்த "சிலப்பதிகாரம்" இவ்வாறு கோவலன் நாடகமாக கொலை செய்யப்படுகிறதே என்று குமுறினார். சிறிது நேரம் பேசிவிட்டு இறுதியாக என். எஸ். கிருஷ்ணனுக்கு வாழ்த்துக் கூறினார்.

"நம் நாஞ்சில் நாட்டு இளஞ்சிறுவன் கிருஷ்ணன் வருங்காலத்தில் மகா மேதையாக விளங்கப்போகிறான். இவனுடைய பெரும் புகழால் நம் நாஞ்சில் நாடு மட்டுமல்ல, தமிழ் நாடே பெருமையடையப் போகிறது" என அப்பெரும் புலவர் வாழ்த்திப் பரிசளித்தபோது சபையோர் அனைவரும் கைதட்டி அதை ஆமோதித்து வரவேற்றனர்.

அப்பெரியாரின் தீர்க்க தரிசனத்தை யெண்ணிப் பிற்காலத்தில் நான் அளவற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்திருக்கிறேன். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இதை எத்தனையோ முறை பெருமையோடு சொல்லி மகிழ்ந்திருக்கிறார். இவ்வாறு தீர்க்கதரிசனமாக வாழ்த்துக் கூறிய பெரியார்தாம் நமது பெரும் புலவர் **சதாவதானி செய்குதம்பிப் பாவலர்** அவர்கள்.

1935-ஆம் ஆண்டில் நாங்கள் சில மாதங்கள் நாகர்கோவிலில் ஓய்வு பெற்றிருந்தோம். அந்த நாட்களில் பாவலர் அவர்களின் அருமையான சொற்பொழிவுகளைக் கேட்க எனக்கு வாய்ப்புகள் ஏற்பட்டன. திரு சிவதாணு பிள்ளை அவர்கள் நாகர்கோவில் நகரசபைத் தலைவராகத் தேர்வு பெற்றதைப் பாராட்ட மீனாட்சிபுரத்தில் ஒரு கூட்டம் நடந்தது. பாவலர் அவர்கள் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள். அன்றையப் பேச்சாளர்களிலே நானும் ஒருவனாக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றேன்.

என் நாடகாசிரியர்களில் ஒருவரான திரு கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்கள் தசாவதானம் செய்வதை நான் பார்த்திருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் சதாவதானி பாவலர் அவர்களின் மாணாக்கர்களில் ஒருவரான திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்களின் தசாவதானத்தை நானும் கலை

வாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் முன்னின்று சென்னையில் நடத்தினோம். அன்று எங்களுக்கு ஏற்பட்ட வியப்புக்கு அளவேயில்லை. பத்து அவதானம் செய்வதே வியப்புக்குரியதென்றால், நூறு அவதானங்கள் செய்து பெரும் புகழெய்திய நம் பாவலர் அவர்களின் செயற்கருஞ் செயலை எப்படி விரித்துரைப்பது?

அவதானத்தின் இலக்கணத்தைப் பற்றி சரவணப் பெருமாள் கவிராயர் ஒரு பாடலிலே குறிப்பிடுகிறார். அந்தப் பாடலின் ஒரு பகுதியை இங்கே கூறுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

"மாறுமல் வாய்வேலு மயிலுமென வேசொல்ல
வாசகம் கைகள் எழுத,
வருகணக் கொருபுறம் தீரமற் றொருபுறம்
வரைந்திடும் இலக்க மாற,
வளைதிரைக் குட்சிறிது கல்லணி வகுக்கின்ற
வன்கணக் கினிது பகர,
மருவுசொக் கட்டானுப விளையாட, மறைவாக
வைத்த சதுரங்க மாட, .."

இப்படியே இன்னும் பலவகையான அற்புதச் செயல்களையெல்லாம் நினைவாற்றலோடு செய்யவேண்டும். அவதானம் செய்வோர் சபைக்குத் தக்கவாறு தம் செயல்களை மாற்றிக்கொள்வது உண்டு. இது ஓர் அபூர்வமான கலை. அபாரமான திறமை, புலமை, நினைவாற்றல், இவற்றோடு இறைவனின் திருவருளும் இருந்தால்தான் இக்கலையில் வெற்றிபெற இயலும் என்பது என் நம்பிக்கை. அத்தகைய அருளாற்றலைப் பெற்றவர் நம் பாவலர் அவர்கள். அப்பெரியாரின் நினைவு நம் உள்ளத்தில் என்றும் பசுமையாக இருக்கவேண்டும் என்பதே என் பிரார்த்தனை.

★

"கன்றெடுத்துக் கனியுகுத்துக் கருதுமுல
கோரடியிற் கவினச் சேர்த்துக்
குன்றெடுத்துப் பசுநிரைகாத் தாயர்குலக்
கோபியர்கள் கொண்ட கூறைச்
சென்றெடுத்துத் தூதுரைத்து வெண்ணெயொடு
தயிர்நெய்பால் சேர ஒன்றாய்
அன்றெடுத்துத் தின்றதகை யாதவனை
மாதவனென் றகத்துள் வைப்பாம்"

(நண்பரொருவரின் அன்பு வேண்டுகோளுக் கிணங்கிய பாவலர், கிருஷ்ணன் பேரில் பாடியது.)

திருக்கோட்டாற்றுப் ★ ★ பதிற்றுப் பத்தந்தாதி

வடிகொண்ட மூன்று தமிழா லலங்கல்
வகைகோடி பாடி யனல்வாய்
அடிகொண்ட செம்பி னொருகாசு மின்றி
யறலோபர் வாய லலைந்து
மிடிகொண்ட வென்ற னிழிநோ யகற்றி
மிகவாழ்வு தந்த ருளுவீர்
வெடிகொண்ட சோலை புடையோங்கு
கோடை
விதிராச போச பரமே.

பரமாத ரன்பு மிகவே மலிந்து
படியூட மர்ந்த பலவா
முரமான துன்ப மதிலேய மிழ்ந்தி
யொருசிறு மற்ற தறிவீர்
திரமான வின்ப மினியேனு மீந்து
திருவாரு முந்த மிருதாள்
தரமான வேழை முடிமீ தளித்திர்
தகையோங்கு கோடை யிறையே.

இறையேனு நந்த மடியார்க ளெண்ண
மிதயத்தி லூற்ற மறியாக்
கறையே மிகுதத கொடியேனை யாண்டு
கனிவாயி னின்ப மருள்வீர்
மறையேவு மந்த முறைகாட்டி யன்பர்
மனதா யுறைந்த வள்ளால்
நிறையே மலிந்த பொறையோங்கு
கோடை
நிமலாதி வேத முதலே.

பாவலர் அவர்கள் இயற்றிய நூறு செய்யுட்களடங்கிய ***'திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி'*** என்னும் நூலில் இருந்து எடுக்கப்பெற்றவை.)

★ பாவலர் நாயகம்! ★

'சோமு'

சதாவதானம் செய்குதம்பிப் பாவலர் என்ருல், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரே சிம்ம சொப்பனந்தான்! நான் முதன் முதல் இந்தச் சிம்ம சொப்பனத்தைப் பற்றிக் கேள்விப்பட்டது, டி. கே. சி. அவர்களின் வீட்டில் நடந்த 'வட்டத் தொட்டி'க் கூட்டத்திலே! அங்கு கூடியிருந்த தமிழறிஞர்கள் எல்லாரும் அப்பொழுது நாஞ்சில் நாட்டில் நடைபெற்ற ஓர் இலக்கியத் திருவிழாவுக்குச் சென்று திரும்பியிருந்தார்கள். அந்த விழாவில் பாவலர் அவர்கள் பொழிந்த சொன்மாரியைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள் அத்தனை பேரும்!

சில ஆண்டுகள் கழித்துத் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் நான் பணியாற்றிவந்தபோது, ஒருநாட் காலையில் பாவலர் அவர்களின் புதல்வர் கே. பி. எஸ். ஹமீது அவர்கள் எங்கள் அலுவலகத்தில் பணிபுரிய வந்துசேர்ந்தார். அதிலிருந்து அடிக்கடி பாவலர் அவர்களின் சிறப்புக்களைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

பாவலர் அவர்களைச் சந்திக்கும் பேறு எனக்குக் கிட்டியதில்லை. என்ருலும், அவர்களோடு நெருங்கி உறவாடியவர்களின் பேச்சுக்களிலிருந்து பாவலரின் ஓவியம் எனக்கு நன்கு அறிமுகமாயிற்று என்றே சொல்லுவேன்.

இந்தக் காலத்தில் தமிழ் மொழியைப் பயின்று ஒரு தமிழ்ப் புலவராகி வளைய வருவதில் ஆபத்துக்கள் கிடையாது! ஆனல் முப்பது ஆண்டுகளுக்கு முந்திய நிலைமை வேறு! தமிழிலே பண்டிதன் எனப் பெயர் வாங்கவேண்டும என்ருல் வெறும் பல்கலைக் கழகப் பட்டம் போதாது! எத்தனையோ சொற் போர்களாகிய மற்போர்களைச் செய்து வாகை சூடியிருக்கவேண்டும்! அந்தக் காலத்துப் படிப்பு அப்படி! பட்டம் பதவிகளை வைத்து மனிதர்களை ஏமாற்றிவிட முடியாத காலம் அது! இலக்கண இலக்கியங்களை எழுத்தெண்ணிப் படித்தாலன்றி உலகம் யாரையும் எளிதில் ஒப்புக்கொள்ளாது. மற்போர்கள் செய்து வாகை சூடி வெளியே வந்துவிட்டால் மட்டும் போதாது; எந்த நேரத்திலும் மீண்டும் "கோதாவில்" இறங்குவதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும்! அப்படிப்பட்ட பயங்கரமான நாட்களில் தம்மைக் கண்டு எல்லாரும் நடுநடுங்கும்படியாக ஒருவர் விளங்கினர் என்ருல் அவருடைய கல்வியைப் பற்றி என்னென்று சொல்வது!

இலக்கண இலக்கியங்களில் அந்தக் காலத்துப் படிப்புக்கு ஓர் உரை கல்லாகத் திகழ்ந்தார் சதாவதானி செய்குதம்பிப் பாவலர். அவருடைய பாராட்டைப் பெறுவதில் புலவர்கள் எலலாரும் குறியாக இருந்தார்கள். அதைப் போலவே அவருடைய கண்டனத்துக்கும் குலை பதறினர்கள்!

பழைமையான புலமையோடு, யாரும் மலைத்துப்போகும் வண்ணம், அவதானம் செய்யக்கூடிய ஆற்றல் பாவலரிடம் குடி புகுந்தது. எனவே, அறிஞர்கள் எல்லாரும் அவரை "மேல் வருக!" என்று பணிந்து வரவேற்ருர்கள்!

பாவலர் அவர்கள் எழுதி வைத்துள்ள நூல்கள் பல. அவர் பயிற்றிச் சென்ற மாணவர்கள் பலர். அவர் விட்டுச் சென்றுள்ள நினைவுகளோ பற்பல.

மொழியின் பெயராலும் புதுமையின் பெயராலும் ஏதேதோ விபரீதப் படைப்புக்களைச் செய்ய முனைகிற இத்தப் புரட்சி யுகத்திலே பாவலரைப் போன்ற புலவர்கள் இல்லை. 'தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்று ஒரு வசனம் உண்டு. குட்டுதற்கும் தட்டுதற்கும் கையிருந்தால் மட்டும் போதுமா? பாவலருடைய படிப்பு வேண்டாமா?

பெருகி ஓடும் தமிழ் வெள்ளத்திற்குக் கரை கட்டி நெறி வகுக்கவேண்டும் என்ருல், அந்தப் பணிக்குப் பாவலர் இவர்களின் நினைவு துணை செய்ய வல்லது. அந்த மரபைப் பேணுவதே சதாவதானி அவர்களின் நினைவுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் நாம் செய்யக்கூடிய பெரிய சேவையாகும்.

★

நாகரிக ஜவுளி தினுசுகள்
அனைத்திற்கும்
சிறந்த இடம்

இந்தியன் கிளாத் டிபோ,
143, கீழ மாசி வீதி, மதுரை.

INDIAN CLOTH DEPOT,
143, EAST MASI STREET - MADURAI.

A
Leading House for most modern Varieties of both cotton and art silk Goods

GRAMS: "INDINCLOTH"

PHONE: Shop: 2111 & 2112
Res: 3516.

சுவையான உணவு வகைகள் உண்ணவும்
காப்பி, டீ அருந்தவும்
★ சிறந்த இடம் ★

தேவி விலாஸ் ஹோட்டல்

கம்போளம் — கோட்டாறு.

உங்களுக்கு மதுரையில்,
சுவை மிக்க உணவுக்குப் பெயரும் புகழும் பெற்ற இடம்.

"சுல்தானியா ஹோட்டல்"

கோழி பிரியானி, மட்டன் பிரியானி, முட்டை பிரியானி, புரோட்டா, குருமா,
வறுவல், ரோஸ்ட், மட்டன், ஈரல், சாப்ஸ், சாப்பாடு
இவைகள் ருசி மிக்கவை. டீ & காப்பி பெயர் பெற்றவை.

உரிமையாளர்:

M. காதர்முகைதீன் & ஸன்ஸ்,
சுல்தானியா ஹோட்டல்,
81, டவுண்ஹால் ரோடு, மதுரை.

குறிப்பு: மதுரைக்குச் சுற்றுலா வரும் பள்ளி மாணவர்களுக்குச் சாப்பாடு வசதி செய்து கொடுக்கப்படும்.
ரயில் & பஸ் நிலையம் சமீபம்.

For Novel Designs of Jewels
— PLEASE VISIT —

P. N. S. MAHAL

61, South Avanimoola Street,
MADURAI.
PHONE: 2459. TEL: 'PENESMAHAL'

★ ★ ★

விஜயம் செய்யுங்கள்
நவீன டிசைன்களில் தங்க நகைகள்,
கமல நகைகளுக்கு சிறந்த இடம்:

பி. என். எஸ். மஹால்,

61, தெற்காவணிமூல வீதி,
மதுரை.
போன்: 2459. தந்தி: 'PENESMAHAL'

FOR
B. S. C. Shoes, Gupta Shoes, Hans
Kanpur Chappals
VISIT

S. P. A. LEATHER MART,

Cape Road, NAGERCOIL.

Prop: S. P. ARUMUGOM.

போன்: 86. தந்தி: 'FACTORY'

செய்யது பீடி

சிந்துபூந்துறை, திருநெல்வேலி.

நானறிந்த பாவலர்

(திருமதி நமச்சிவாயம் அம்மாள்.)

நாஞ்சில் தந்த தமிழ்மணி, சதாவதானி செய்குதம்பிப் பாவலரவர்களை அறியாத தமிழர் இரார். அப்பெரியார் நம்மிடையே பிறந்து, நம்மிடையே வாழ்ந்து, தமிழ் அன்னைக்கும் பாரதத் தாய்க்கும் அரிய தொண்டாற்றி, அண்மையில் நம்மைவிட்டு விண்ணுலகடைந்தவர். பெண்ணினத்தின் சார்பில் அப்பெருமானுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலே இக் கட்டுரையை வரைகின்றேன்.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் தமிழன்னை ஈன்ற அரும் புதல்வர்களில் ஒருவர். 1907-ஆம் ஆண்டு சென்னை மாநகரில் விக்டோரியா மண்டபத்தில் முதுபெரும் புலவர்கள் பலர் முன்னிலையில் சதாவதானம் என்னும் செயற்கருஞ் செயலைச் செய்து, அன்னாரது தெய்வப் புலமையையும், அமைதியின் அளவையும், அறிவின் கூர்மையையும் நன்கு விளக்கியுள்ளார். அவற்றையெல்லாம் விரித்துக் கூறி உங்கள் பொழுதைக் கவர விரும்பவில்லை. அன்னார் வாழ்க்கையில் காணப்பட்ட சில அரிய குணங்களையும் அவை வெளிப்பட்ட நிகழ்ச்சிகளையும் பற்றிக் கூற விரும்புகிறேன்.

அன்னாரது கலைத்திறனைப் பொதுவாகக் கூறுமிடத்து.

“நடையழ கோர்புறம்; கற்பனை
நயத்தழ கோர்புறம்; சொற்றொடர்
கடலலை போல்வரும் காட்சியில்
கலையழ கோர்புறம்; தமிழ்மொழி
தடையறக் குழைந்திடும் தன்மையின்
தனியழ கோர்புறம்; இத்தகு
படையலைத் தருபவன் பாவளர்
பாவலனும்” செய்கு தம்பியே – என்பது

மிகப் பொருந்தும்

பாவலர் அவர்கள் வாழ்ந்திருந்தது இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில். அதிலும் அவர் ஊக்கி உழைத்த காலம் 1920-க்கும் 1930-க்கும் இடையே அமைந்தது. அப்பொழுது பாரத நாடெங்கும் அரசியல் கொந்தளிப்பு—சுதந்திரப் போராட்டம் உருவாகி அனல் போல் நாடெங்கும் பரவியது. காந்தியடிகளின் தலைமையில் ஒத்துழையாமை இயக்கமும், கதர், தீண்டாமை ஒழிப்பு ஆகிய ஆக்க வேலைகளும் ஓங்கி வளர்ந்தன. இயற்கையிலேயே தேசப் பற்றுக் கொண்டு விடுதலைப் போராட்டத்திற்காக உழைக்க முன்வந்த முஸ்லிமகள பலருக்கு “கிலாபத் இயக்கம்” புத்துயிர் ஊட்டியது. ஆகவே, ஜனாப் முகமது அலி, சௌகத் அலி, டாக்டர் அன்சாரி போன்ற முஸ்லிம் தலைவர்கள் பலர், எல்லாம் துறந்து அறப்போர் புரிய முன் வந்தனர். அங்ஙனம் சுதந்திரப் போராட்டத்திற்கு இழுக்கப்பட்ட ஓர் தலைவர் நம பாவலர் அவர்கள். நாஞ்சில் நாட்டில் தேசியப் போராட்டத்திற்கு வித்திட்ட ஒரு சில தலைவர்களுள் பாவலர் அவர்கள் சிறந்த இடம் பெறுகின்றனர். அரும் பெரும் தேசத் தலைவர் டாக்டர் எம். இ. நாயுடு அவர்களின் சாத்வீகத்தோடு பாவலர் அவர்களின் சொல் வன்மையும் விறுவிறுப்பும் ஒன்றுபட்டு குமரி எல்லையில் விடுதலைப் போராட்டம் அரசாங்கத்தை நடுநடுங்கச் செய்யும் அளவிற்கு ஓங்கி வளர்ந்தது. கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம், நடமாடும் சுதந்திரம ஆகிய பலவகைப்பட்ட உரிமைகளுடன் சுகவாழ்வு நடத்துவதற்கேற்ற காலமல்ல அது. இப்பொழுது எல்லோரும தலைவர்கள்; எதுவும பேசலாம்; சிறையில உரிய மரியாதைகள் வழங்கப்படும். ஆனால் அன்றோ, அன்னியரின் அடக்குமுறையில் எல்லா வகை உரிமைகளும பறிமுதல் செய்யப்பட்டிருந்த காலம். அப்பொழுது ஆவேசத்துடன் போராட்டத்தில குதித்தது, தமது அருமையான சொற்பொழிவுகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து, அவர்களையும் நாட்டிற்காகத் தியாகம் செய்யத் தூண்டிய பெருமை நம் பாவலருக்கே உரியது. பாவலர் நாமம் கேட்டால் கூடுகின்றவர்கள் பல்லாயிரவர். அனைவரும் அன்னாரது சொற்பெருக்கில் மூழ்கி அவர் வகுத்த வழியே செல்ல முன்வருவது அன்றைய வழக்கம். அளவற்ற தேசப் பற்றுடன் நாட்டின்

விடுதலைக்காக உழைத்து அந்த அரும் பேற்றை அனுபவிக்கும் பாக்கியமும் அவர் பெற்றார்.

பண்டைக்காலத் தமிழ்ப் புலவர்களுக்கு இயற்கையாகவே அமைந்த அருங் குணங்கள் சுதந்திரம், அஞ்சாமை முதலியன. பெரியோர்களின் புகழ் பாடிப் பரிசில் பெறும் வழக்கம் ஒரு சிலரிடத்தில் மட்டிலுமே அமைந்திருந்தது. கம்பன் போன்ற சிறந்த புலவர்கள், "மன்னவனும் நீயோ? — வளநாடு முன்னதோ" என்று பாடி மன்னர்களின் இறுமாப்பை அடக்கினர். "நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்" என்று பாடியவர்களும் தமிழ்ப் புலவர்களே. ஆதலின் அப்பரம்பரையில் பிறந்த நம் பாவலரிடத்தும் அஞ்சாமை அளவற்ற முறையில் அமைந்திருந்தது. ஆகவே அதிகாரிகளின் பயமுறுத்தலுக்கும் அடக்குமுறைக்கும் அஞ்சாது தாம் பெற்ற சொல்வன்மை என்னும் மலர்களால் சுதந்திரத் தாய்க்கு அஞ்சலி செய்தார். அவ்வன்னை பூரித்தாள்; மக்களும் பூரித்தனர். பாரத நாட்டின் வேறெந்தப் பகுதியையும் விடச் சற்றும் குறைவில்லாத அளவில் நாமும் தேசப் போராட்டத்தில் பங்கு கொண்டோம்; தியாகங்களும் பல செய்தோம்.

நமது பெருமைக்குரிய பாவலர் அவர்களிடத்தில் காணப்பட்ட இன்னுமோர் அரிய குணம் சமரச மனப்பான்மையாகும். அன்னாரது தாய்மொழியாகிய தமிழ்மொழி சைவத்தில் முளைத்து, வைணவத்தில் கவர் விட்டது. அதிலமைந்துள்ள பாடல்கள் பெரும்பாலும் சமயச் சார்புடையவை. இடைக்காலத்தில் மட்டிலும் ஒரு சில முஸ்லிம் தமிழ்ப் புலவர்களும், ஒரு சில கிறித்தவத் தமிழ்ப் புலவர்களும் தோன்றினர். அவர்களுள் ஒருவராக இடம் பெறும் செய்குதம்பிப் பாவலர் அவர்கள் சமரச மனப்பான்மையுடன் தமிழ் நூற்களையெல்லாம் பாடஞ் செய்து, அவைகளை ஆராய்ச்சிக்குள்ளாக்கி, அவற்றின் சிறப்புகளையும் வெளியிடலாயினர். அன்னாரின் அவதானத்தின் போது அவரிடம் கேட்கப்பட்ட வினாக்களும் அவர் பகர்ந்த விடைகளும், சைவத்திலும்-வைணவத்திலும் அவர் அடைந்திருந்த அளவற்ற அறிவிற்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

ஆழ்ந்த அறிவும், அளவிறந்த ஆற்றலும் அன்னாரிடம் அமைந்திருந்ததுபோல் அவரது உள்ளத்தில் பேரன்பும் இடம் பெற்றிருந்தது. அன்பர்களுக்கு அவர் வரையும் கடிதங்கள் பல காலும் பாடலாகவே அமைந்திருந்தன. அன்னாரின் நண்பரான பாக்கியம பண்டாரத்திற்கு வழக்கம்போல் உடல் நலம் விசாரித்து அவர் எழுதிய கடிதத்திலிருந்து அவரது எளிய நடையும் ஆழ்ந்த கருத்துக்களும் பேரன்பும் விளங்குவதைக் காணலாம்.

"பாக்கியமே யோருருவாய்ப் பாரிடத்து வந்த
திருப்
பாக்கியமே நின் சமுகம் பல்கோடி-யாக்கியவெம்
வந்தனமெ லாமேற்று வாழுமுன்சே மத்தினையு
வந்தனமெ லாமெழுது வாய்."

"ஆகஞ் சுகமா அடுத்தவர்கள் சேமமா
மேகம் வழங்கியதா மேலுமிந்தப்-போகம்
விளையுமா இன்னுமழை வேண்டுமா செல்வம்
விளையுமா ஊர்செழிக்கு மா."

"திருவிளையா டற்படித்துத் தீர்ந்ததா வேறுன்
திருவிளையா டற்கென்ன செய்தாய்-செரு
விளையாட்
டுற்ற பெருங்காந்த மோதிவரக் கொள்ளாதே
சற்று மறுதாமி தம்"

இது போன்ற பகுதிகளைப் படிக்கும் போது வெண்பாக்களின் இனிமையுடன் நண்பர்கள் நேருக்கு நேரிருந்து உரையாடுவது போன்றதோர் இயல்பினையும் உணருகின்றோம்.

பெரியார் பாவலரிடத்தில் தமிழ்ப் பாடம் கற்றோர் பலர்; பயன் பெற்றோரும் பலரே. ஆனால் அதைத் தமிழன்னைக்குச் செய்யும் தொண்டாகவே அவர் கருதினாரே தவிர பொருள் தேடுவதற்குள்ள வழியாகக் கருதினாரில்லை. இன்று நாஞ்சில் நாட்டில் திகழும் தமிழ்ப் பண்டிதர் பலரும் அவரிடம் அளவற்ற மதிப்புக் கொண்டிருந்தார்கள். எந்தச் சிக்கலான ஐயப்பாடும் அவரைக் காணுமளவில் கதிரவனைக் கண்ட பனி போல மறைந்துவிடும்.

நானறிந்த பாவலர் ஓர் தேசபக்தர்; தமிழ்க் களஞ்சியம்; அறிவுக் கருவூலம்!

வாழ்க பாவலர் நாமம்! ஓங்குக அவர் புகழ்!!

★

அவதான அரசர் செய்குதம்பி

பனைக்குளம் மு. அப்துல் மஜீது

புலமை என்பது புலனின் உள் நிறைவு என்று பொருள்படும். மனிதர் கொள்ளும் இத்தகைய உள் நிறைவுக்கு அவரவரது புல நுட்பமே காரணமாகக் கூடும். இதுபற்றித்தான் புல நுட்பமில்லாதாரிடம் புலமை இடம்பெறுதிருத்தலைக் காண்கின்றோம்.

தமிழ்ப் புலமையிலே பல தன்மைகளைக் கண்டறியலாம். சுருங்கக் கூறின் அத்தன்மைகளை முதுபெரும் புலமை, திறனாய்வுப் புலமை, பெயர்ப் புலமை என மூன்றனுள் அடக்கிவிடலாம். இதில் முதுபெரும் புலமை கம்பன் போன்ற பெருங்காப்பிய ஆசிரியர்களைக் குறித்து நிற்கிறதாகும். திறனாய்வுப் புலமை ஆராய்ச்சிப் பெருக்கால் பல அருஞ்செயல் புரிகிறவர்களைக் குறிக்கிறதாகும். பெயர்ப் புலமை பலகலை கற்றுத் தேர்ந்தும் ஏதேனும் ஒன்றைச் செயல்படுத்த முடியாமையைக் குறிக்கிறதாகும்.

இதில் இரண்டாவதான திறனாய்வுப் புலமையின் ஒரு பகுதிதான் அவதானப் புலமையாயுள்ளது. நுண்ணிய ஆராய்ச்சியும் மருட்சியுறுத மனவுணர்வும் உடையவர்களே அவதானப் புலவர்களாக இலங்குவர். அவர்கள் மன வெளியிலே கலையுலகக் காட்சிகள் ஒப்பனை செய்துகொண்டே இருக்கும்.

பின் அவதானப் புலவர்களையும் பல இயல்பினர்களாகப் பிரிக்கலாம். எட்டுப் பேர் கேள்விக்குத் தட்டாமல் பதில் கூறுகிறவரை 'அட்டாவதானி' என்று கூறுவர். இவ்வாறே பத்துப்பேர் கேள்விக்குப் பதில் கூறுகிறவரைத் 'தசாவதானி' என்று கூறுவர். பதினாறுபேர் கேள்விக்குப் பதில் கூறுகிறவரை 'சோடசாவதானி' என்றும், ஒரு நூறுபேர் கேள்விக்குப் பதில் கூறுகிறவரை 'சதாவதானி' என்றும் கூறுவது வழக்கம்.

சதாவதானியே இவர்களில் தலையாய அவதானியாகக்கூடும். இவர் ஒரு நூறு பேர் கேள்விக்கு ஒத்த பதிலும், உட்கோளும் விளக்கி அரங்கினை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறவர். இதனால் மற்ற அவதானிகள் சிறப்பிழந்தவர்கள் என்பது கருத்தல்ல. பொதுவாக அவதானிகள் எல்லாருமே புலமையில் ஒரு தனி இயல்பான எல்லையை எய்தியவராவர்.

ஆ! எவ்வளவு அருமைப்பாடு இந்த அவதானச்செயல்! இஃதெல்லாம் மனித இயல்பிலே செயல்படுத்துகிறதா என்று கூட எண்ணிவிடுவார் மதிநுட்பமுடையோர். இதில் அவதானம் புரியும் ஒரு தனி நிலை உலகில் தமிழ்ப் புலமைக்கு மட்டும் உரித்தாய் இருந்துவருகிறதென்று அறிஞர் பலர் கூறுகின்றனர்.

தமிழ்நாடு காலங்கள் தோறும் புலவர் குழாத்திலே அவதானிகளைப் பெற்றுத் தருவதில் பின்னடையவில்லை. இன்னும் அது தமிழ்ப் புலமை பெற்ற முஸ்லிம் அவதானிகளையும் பெற்றுத் தருவதில் பின்னடையவில்லை. பழங்காலத்தில் எவ்வளவு சிறப்பு வாய்ந்த அவதானிகளை உருவாக்கித் தந்ததோ அவர்களிலெல்லாம் சிறப்பு மிக்கவரான மாபெரும் அவதானியையும் அது நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டிலே உருவாக்கித் தந்திருக்கிறது.

அந்த அவதானி யார் என்று கேட்பீர்களோ நீங்கள்! அவர்தான் அவதான உலகிலே அரச பதவியை அடைந்திருந்தவர். அருந்தமிழ் இலக்கிய இருங்கடல் போன்றவர். இலக்கணக் கலைக்கு மருத்துவராய் விளங்கியவர். நாவாமிர்தம் துளிக்கும் தேவாமிர்தப் பிரசங்கி. நாஞ்சில் நாட்டு நற்றமிழ் வேந்தர். மகாமதி செய்குதம்பிப் பாவலர்.

பாவலரும் நாவலர்களும்:

பாவலர் வேளாவேளைகளில் மதுரை மூதூர் வந்து போவார். சில வேளைகளில்

மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கும் வந்து இங்குள்ள புலவர் பெருமக்களிடம் உரையாடிவிட்டுப் போவார். மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனர் சேதுபதி வழித் தோன்றல் பொ. பாண்டித்துரைத் தேவருக்கும் பாவலர்க்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே சோழ வந்தான் நாவலர் அரசன் சண்முகனர், நாவலர், சைவ நூல் பரிசோதகர் சுப்பிரமணியர், இலக்கணப் பேராசிரியர் திரு. நாராயணையங்கார், மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவர் பொ. பாண்டித்துரை ஆகியவர்கள் உரையாடிக் கொண்டிருந்த போழ்து எதிர்பாரா வண்ணமாய்ச் செய்குதம்பிப் பாவலரும் இங்கு வந்துவிட்டார்.

செய்குதம்பிப் பாவலருடைய கலைத் திறனும் அவதானம் புரியும் ஆற்றலும் அவர்களுக்கு நன்கு விளங்கி இருந்தும் அன்று பாவலரிடம் வாய்விட்டுப் பார்த்துப் பாவின்பம் துய்க்கலாமென்று எண்ணினுர் போலும் நாவலர் அரசன் சண்முகனர்.

அவர் இங்குப் பாவலரைக் கண்டதும் "வருக, வருக" என்று வரவேற்று மகிழ்ந்தவர் சற்று நேரம் சென்றதும், "உங்களுக்கு இராமலிங்கர் அருட்பாவிலே எத்தனை பாடல் நினைவிலிருக்கும்" என்று கேட்டார். அதற்குப் பாவலர், "ஓரளவு நினைவிலிருக்கும்" என்று பதிலிறுத்தார். பாவலரைச் சோதிக்க வேண்டுமென்றோ என்னவோ இராமலிங்கர் மஹாதேவ மாலையில் 76-ஆவது பாடலைச் சொல்வீர்களா வென்று கேட்டார் சண்முகனர்.

பாவலர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்துவிட்டு "உய்குவித்து மெய்யடியார் தம்மை எல்லாம்........." என்று அந்தப் பாடலைப் பாடிக் காட்டிவிட்டார். பாவலரின் மனவுணர்வைக் கண்டு சண்முகனர் ஆச்சரியத்தில் ஆழ்கிறபோது இலக்கணப் பேராசிரியர் திரு நாராயணையங்கார் அந்தப் பாடலிலே 'கு' எப்படி வந்தது என்று பாவலரிடம் கேட்டார். அதற்கு, கு-சாரியை பெற்று வந்ததென்று பதிலிறுத்தார் பாவலர்.

பின்னர் கந்தசாமிக் கவிராயர் பாவலரிடம், "அகப்பொருள் பாடல் ஒன்றிலே இரண்டு இடத்தில் கலாம் என்று வந்திருத்தல் வேண்டும் அப்படியொரு பழம் பாடலைக் கூறுங்கள்" என்று கேட்டார். இதிலும் பாவலர் முன்போலவே சற்று யோசனைக்குப் பின்,

"வருக குடநாடன் வஞ்சிக்கோ மானேன்
றருகல ரெல்லாம் அறிய – ஒரு **கலாம்**
உண்டா யிருக்கவவ் வொண்டொடியாள் மற்றவனைக்
கண்டா ளொழிந்தாள் **கலாம்**"

(முத்தொள்ளாயிரம்)

என்ற பாடலைப் பாடிக் காட்டினுர்.

பின் நாவலர் சுப்பிரமணியர், "ஏதேனும் ஒரு புராண நூலிலே இரண்டனுருபிலே ஏழு முறை நோக்கு என்ற சொல் இணைந்து வந்துள்ள பாடல் ஒன்றினைக் கூறுங்கள்" என்று பாவலரிடம் கேட்டார். அதற்கும் நம் பாவலர்,

"கரத்தை நோக்குவர் வாளினை நோக்குவர் கடுப்பின்
எருத்தை நோக்குவர் வீரத்தை நோக்குவர் எதிரத்
தரத்தை நோக்குவர் அவையினில் அபூஜகில் உடனே
உரைத்த வார்த்தையை நோக்குவர் நோக்குவர்
உளத்தை"

என்ற சீருப்புராணப் பாடலைப் பாடிக் காட்டினுர்.

பின்னும் அவர்கள் பாவலரிடம் பற்பல கேள்விகளைக் கேட்டார்கள். அதற்கெல்லாம் பாவலர் தங்குதடையில்லாமல் பதில் கூறிக்கொண்டு வந்தார். முடிவிலே பாண்டித்துரைத் தேவர் பாவலரை விளித்து நீங்கள் "தமிழின் தாயகம்; அவதானிகளின் அரசர்" என்று புகழ்ந்து பேசியவர் வாய்ப்பு இருக்குமானுல் மதுரையில் உங்களை அவதானம் பண்ணச் செய்வேன் என்றுர்.

காலப் போக்கு, பாண்டித்துரைத் தேவர் விரும்பியதை நிறைவேற்ற விடவில்லை. திடீரென்று பாண்டித்துரைத் தேவருக்கு உடல் நலன் குன்றிவிட்டதே இதற்குக் காரணமானது.

செய்குதம்பிப் பாவலர் ஓர் அற்புத மனிதராவார். அவர் வாய் எந்த நூலிலே

வளவிய புலமைப் பாவலன்

(பேராசிரியர், ஔவை சு. துரைசாமி, தியாகராசர் கல்லூரி, மதுரை.)

மொழித்துறையில் சிறப்புப்பெறுகிற வர்களில் சிலர் பேச்சுத் துறையில் மேம் படுவர்; சிலர் எழுத்து வகையில் ஏற்றம் எய்துவர்; சிலர் பாப்புனைவதில் பண்புறு வர். பேச்சாளரை நாவலர் எனவும், எழுத் தாளரைப் புலவர் எனவும், பாவல்லுநரைப் பாவலர் எனவும் தமிழர் குறிப்பது மரபு. நாவலரின் நற்பணியில் கற்றவர் கல்லாத வர் என்ற இருதிற மக்களின் செவியுணர்வு பெருகிச் சிறப்புறும். புலவர்களின் எழுத் துக்கள் கற்றவர் உள்ளத்துக்குக் கவினிய கருத்து நல்கி மனக்கண்ணைப் பரக்கத் திறக் கும் பாங்கினவாகும். பாவலரின் பாப்புனைவு கள் பயிலும் உள்ளத்திற்குக் கிளர்ச்சியும், படிக்கும் நாவுக்கு நல்லிசையும், கேட்கும் செவிக்கு இனபத்தையும நல்குகின்றன. இவ்வாற்றால் பாவலர், மக்களிடையே நன் மதிப்புப் பெற்று விளக்கம் பெறுகின்றனர்.

இவ்வகையில் திரு. செய்குதம்பிப் பாவ லர் அவர்கள் இனிய பாப்புனைவதும், அவ தானம் செய்வதும் ஆகிய இரண்டிலும் இனிய புகழ் பெற்றவர். அவர் தமது பாடு புகழைத் தாமே எடுத்துரைக்க வேண்டிய சூழ்நிலை தோன்றியபோது,

"கலனெடுத்துக் கடல்கடத்திக் கனநிதியக்
தேடுனரும் கதிக்கச் செம்பொன்
குலனெடுத்துக் குணனெடுத்த குறியினரும்
கோன்மைபெறு கொற்றோர் தாமும்
பலனெடுத்த பெருந்தவத்தின் பணியெடுத்துப்
பதமடைந்த பான்மை யோரும்
வலனெடுத்த அரியகவி வளனெடுத்து
மதித்திடுபா வல்லோன் யானே!"

—என்று வெளியிட்டுள்ளார்.

பாவலரவர்கள் தென்குமரி நாட்டு நாகர்கோவிலுக்கும், சுசீந்திரத்திற்கும் இடையிலுள்ள இடலாக்குடி எனுமூரில் 1874-ல் மாண்புடைய முகமதியர் குடியில் பிறந்தார். இடலாக்குடி என்பது இடரிலாக் குடியின் மரூஉப் போலும்! அவர் தந்தை பக்கீர் மீரான். இளமையிலேயே வளவிய தமிழறிவு பெற்று இனிய பாக்கள் புனையும் எழில் பெற்றார். அக்காலத்தில் கற்றோர் சூழ லில் பெருமதிப்புப் பெற்று விளங்கிய அவ தானக் கலையில் நம் பாவலர்க்கு ஆர்வம் பெருகவே அதனை முற்றக் கற்று 1907-ஆம் ஆண்டில் சென்னையில் பாவலரும், நாவல ரும், புலவரும் கூடிய நல்லவையில் அவ தானம் ஒருநூறு செய்து அவர்கள் உவந் தளித்த சதாவதானப் பட்டம் பெற்றார். அவ்வவையில் ஒருவர் "விராடனையே பெண் ணெனலா மே" என்று ஈற்றடி கொடுத்துப் பாடுமாறு கேட்டார். பாவலர் ஒரு சிறு தயக்கமுமின்றி,

"உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுது
மொன்னற
எண்ணும் பொழுதும் எரிமுன்னு—மண்ணில்
வராடனையே தெய்வம் மன்எனுஞ் சொற்ற
விராடனையே பெண்ணெனலா மே!" — என்று

பாடினார். கேட்டவர் வெள்கிய முகத்துடன் வியந்து மகிழ்ந்தார்.

எந்தப் பாடலை வாவென்று அழைக்கிறதோ அந்தப் பாடல் அப்பொழுதே அவர் நாவிலே வந்து சுழன்றுவிடும். பாவலர் பெருமையைப் பேச இயலாது. முஸ்லிம் களைவிட முஸ்லிமல்லாத தமிழரிடையே பாவலருக்குப் பெருமதிப்பு இருந்துவந்தது.

இப்படி எல்லாம் இல்லாமலா நாஞ்சில் நாட்டு நல்லிசைப் புலவர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாவலர் உயிர் நீத்தார் என்ற திடுக்குறும் செய்தியைக் கேட்டு,

"ஒரும் அவதானம் ஒருநூறு செய்திந்தப்
பாரில் புகழ்படைத்த பண்டிதனைச் - சீரிய
செந்தமிழ்ச் செல்வனைச் செய்குதம்பிப் பாவலனை
எந்தநாள் காண்போம் இனி"

என்று அரற்றி அவலமுற்றார்?

★

மறந்தும் புறந்தொழா மாண்புடையது முகமதியரின் இசுலாமிய சமயம். அதனை உருவாக்கிய முகமது நபியின்பால் நம் பாவலர் பேரன்புடையார். அவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டும், அவர் வழங்கிய அறங்களிற் சிலவற்றைப் பொருளாகக் கொண்டும் "நபிகள் நாயகமான்மிய மஞ்சரி" என்றொரு நூலை அவர் செய்துள்ளார். அது நான்கடியின் மிக்கு ஐந்தடியால் அமைந்த கொச்சகப் பாட்டுக்கள் நூற்றிரண்டுடையது. கள், சூது முதலியவற்றை அறவே விலக்கவேண்டுமென நபிகள் நாயகம் வற்புறுத்தியதை முறையே நம்பாவலர்.

கேடுவருந் தொல்லைமிகுங் கேண்மையறும்
பண்பொழியும்
பாடுவரும் கைப்பொருளும் பாழாகும்
பல்குமனச்
சூடுவரும் கொள்ளற்க சூதாட்ட மென்றமறைப்
பீடுவரும் வாய்மைசொற்ற பின்னேயு
முன்னேமோ
பெட்புகழ் நாயகமே பின்னேயு
முன்னேமோ!

உள்ளுணர்வு போக்கியங்கோ உன்மத்த
காய்போலும்
வல்லுணர்வு தேக்கியுயிர் வாதையோடு
போதைதரும்
கள்ளுணர்வு கொள்ளகிலீர்! கத்தனுரை
ஈதென்னத்
தெள்ளுணர்வு தந்துவந்த செம்மைநிலை
ஏதேயோ..
இட்பகழ் நாயகமே செம்மைநிலை ஏதேயோ!

—என்று பாடுகின்றார்.

நபிகள் நாயகம் வழங்கிய ஞான உரையைக் காண்பார் அவற்றை எக்கல்லூரியில் எந்தப்பெரு ஞானிபால் பயின்றுணர்ந்தாரென மயங்குவதியல்பு. அவர்தான் வரலாற்றிலேயே உயர்ந்த படிக்காத மேதை. அதனை வியந்து கண்ட நம் செய்குதம்பிப் பாவலர்,

பள்ளியிடைப் போந்ததில்லை, பாகலைக்
கற்றதில்லை;
தெள்ளியவிஞ் ஞானவியல் சேர்ந்திருந்து
தேர்ந்ததில்லை

ஒள்ளியமெய்ப் போதகலம் உற்றதந்த
வத்தொகுதி
அள்ளியநும் ஆய்வுடைமைக் காரே வியவாதார்
ஆகிர்நபி நாயகமே ஆரே வியவாதார்!

—என்று அழகொழுகப் பாடுகின்றார்.

நம் பாவலர் செந்தமிழ்ச் செய்யுள் உலகில் திரிந்ததனால் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புலமை ஒழுக்கமே நிறைந்திருந்தாரேனும் நாட்டுப்பற்று அவரை விடவேயில்லை. கோல்டு சுமித்து என்னும் ஆங்கிலப் புலவன்,

"Where ever I roam whatever realms to see
My heart untravelled fondly turns to thee
Still to my brother turns with ceaseless pain
And drags at each remove a lengthening chain"

என்று கூறியதைப்போல அவர் எத்துணை நெடுந்தொலைவு செல்லினும் அவருள்ளம் அவர் நாட்டோடு பிணிப்புண்டேயிருந்தது. அவர் தமது கோட்டாற்று நாட்டை நினைந்து பாடிய பாட்டொன்றில், வானளாவ உயர்ந்து வளம் பெருகி நிற்கும் பொழில்களில் மந்தியொன்று,

... ... அகலிரு விசும்பில்
ஓங்கி வளர்ந்த ஒருநெடுந் தெங்கின்
பாங்கிழ குதிப்பப் பச்சிளங் காய்கள்
சிதறிப் பழுத்த செழுமாங் கனியில்
கதலிக் குலையில் கவினபடு பலவின்
முழவிற் பொலியு முட்புறக் கனியில்
விழவுந் தகர்ந்து வெளிப்படு நறவம்
ஊற்றிற் பெருக்கெடுத் தொள்ளிய குளக்காற்
சேற்றிற் பாயச் சென்றிடும் பணைகள்
புயங்க மணியில் பொலிதரு செந்நெல்
வயங்க வளர்த்து மகிமைகொள் கோடை!

—என்று இறும்பூது பயக்கப் பாடுகிறார்.

கவிச் செல்வராகிய நம் பாவலர்க்குப் புவிச்செல்வர் பலர் நண்பர்களாயினர். நெல்வேலி நகர்க்கண்மையிலுள்ள மேலப்பாளையத்தில் வாழ்ந்த செல்வர் சம்சுத்தாசீன என்பவர் பாவலர் உள்ளங்கவர்ந்த அன்பர். அவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஒரு கோவை பாடினார் நம் கோட்டாற்றுப் பாவலர். கோட்டாறு, இடலாக்குடி, சுசீந்திரம் ஆகிய வனைத்தும் நாகர்கோவில் பகுதியின் கூறுகளே!

தலைவனுக்குந் தலைவிக்குமுண்டான காதலுறவை அத்தலைவியின் தோழி செவிலிக் குரைக்கவேண்டிய சூழ்நிலையில் ஒரு நாள் தலைவி பூக்கொய்யச் சென்றபோது, தலைவன் அங்கு வந்து ஒரு தாமரை மலரைக் கையிலேந்தி நிற்கிறான். அதன்பால் தலைவியின் கட்பார்வை ஆர்வமுடன் பாய்கிறது. அது கண்ட அவன் "அரிவையே! வா தருகிறேன்" என்றலும் அவள் அருகே சென்றாள், பூக்கொண்டாள்; அவனும் அது தந்து தன் மார்பில் அவளைத் தழுவிக் கொண்டான். இருவர் கண்களும் ஒத்த நோக்கத்தால் ஒன்றுபட்டன என்ற கருத்துப்பட,

வரத்தா லுயர்ந்தபு மான்சம்சுத் தாசின்
வரைக்கொருவன்
கரத்தா மரையில் விழித்தா மரைகள்
கவியநின்ற
தரத்தா லரிவாய் வருவாய் பெறுதி தருதுமென
உரத்தா லளப்ப நயனமொத் தேற்றங்
குவந்தனளே!

—எனப் பாடுகிறார்.

அவர் காளைப் பருவத்திலிருக்கும் போது தமிழ் நாட்டில் சைவ சமயத்தவரிடையே சிவநெறியின் பெருமைக்குச் சிறுமை தேடும் வகையில் விரிவிலா அறிவிஞர் சிலர் அருட்பா மருட்பா என்ற சொற்பூசலைத் தொடுத்தனர் அந்நாளில் பூசல் தொடுத்தவர் இனத்தில் முன்னணியில் நின்ற திரு நா. கதிரைவேல் பிள்ளையை எதிர்த்து அருட்பா வழி நின்று சொல் மறவராக நம் பாவலர் போராடினர். திரு பிள்ளையவர்கள் "அருட்பா ஆபாச தருப்பணம்" என நூல் ஒன்று வெளியிட, அதனைக்கண்ட பாவலர், "அருட்பாவா ஆபாச தருப்பணம்?" எனப் பொங்கி "அருட்பா! ஆ! பாசதருப்பணம்" எனப் பிரித்துப் பொருள் சொல்லி மருட்பா என்றோரை மருட்டி ஓட்டினராம். பாவலர் உலக வாழ்வை நீத்தபோது கையறவுற்ற அன்பரொருவர்,

கதிர்வேல் திறத்தானைக் கண்டஞ்சி நில்லாமல்
எதிர்வேலன் நானெனவந்து ஏற்றமிக
வுற்றனையே!"

—என்று பாடியிருப்பது மேலே குறித்த சேதியை வற்புறுத்துகின்றது.

திரு கதிரைவேற் பிள்ளையிடத்தே திரு வி. க. அவர்கட்கு மிக்க ஈடுபாடு. ஆயினும் பிள்ளையவர்கட்கு மாறுபட்டு நின்ற நம் பாவலரிடத்தும் ஒத்த நன்மதிப்புண்டு. திரு வி. க. அவர்கள் தமக்கும் பாவலருக்கும் உண்டான தொடர்பை ஏகலைவனுக்கும் துரோணருக்கும் இருந்த தொடர்பென்று கூறினர்.

ஒரு கால் திருநெல்வேலியில் திரு. வி. க. சைவர் கூட்டம் ஒன்றில் சொற்பொழிவாற்ற வந்திருக்க, அப்போது அங்கே சென்றிருந்த திரு. பாவலரவர்களைக் கூட்டத்தினிடையே கண்டு உடனே மேடைக்கு அவர்களைக் கொண்டுபோய்த் தம்மோடு உடனிருத்தினர். அதுகண்டதும் சிலர் உள்ளத்தே சமய வேற்றுமை உணர்வு தலைகாட்டிற்று. அதனையறிந்த திரு. வி. க. அவர்கள் "பாவலர்க்கிங்கே இடமில்லை எனில் எனக்கும் இடமில்லை" என வெகுண்டார். இந்நிகழ்ச்சியின் விளைவாகத் திரு. பாவலரவர்கள் "சைவம் வளர்த்த தமிழ்" என்ற தலைப்பில் மூன்று நாள் சொற்பொழிவாற்றிச் சைவர் பாராட்டுஞ் சால்பெய்தினர் என்றறிஞர் கூறுவர்.

திரு. பாவலரவர்கட்குச் சைவ நூல்களோடு வைணவ நூலான இராமாயணத்திலும் மிகச்சிறந்த பற்றும் புலமையும் உண்டு. அவரது இராமாயண விரிவுரை "சர்க்கரைப் பந்தரில் தேன்மழை பொழிந்தாற் போலும்" என்று அறிஞர் பாராட்டிக் கூற நான் நேரில் கேட்டிருக்கிறேன். நான் 1941-ல் நாகர்கோவில் சென்றிருந்த போது, சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் போரசிரியராயிருந்து, காலஞ்சென்ற திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்களும், திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களும் தம்மையடைந்து கம்பராமாயணத்தில் தோன்றிய ஐயங்களைத் தெளிந்து செல்வது உண்டு என்று கூறினர்.

திரு. பாவலர் அவர்கள் 1950-ல் நமது 76-ஆவது வயதில் காலமானார். இதற்கிடையே அவர் பாடிய பாட்டுக்கள் பல. அப்பாட்டுக்களின் அமைப்பும் எளிமையும் சிறிது கற்றோரையும் மிகவும் இன்புறுத்தும் இயல்பின. பாக்கியம் என்ற நண்பர் ஒரு

வருக்கு அவர் எழுதிய முடங்கற் கவியைக் கண்டேன். அதன் முதற்கவி இன்று நாம் கடிதம் எழுதுமுறையில் அமைந்து, நலம் அறியும் பொருளில் உளது. அப் பாடலாவது,

"பாக்கியமே ஒருருவாய்ப் பாரிடத்து வந்ததிருப்
பாக்கியமே நின்சமுகம் பல்கோடி—ஆக்கியவெம்
வந்தனமே லாமேற்று வாழுமுன்சே மத்தினையு
வந்தனமே லமெழுது வாய்" —என்பதாகும்.

பாவலரவர்களுக்குத் தம் ஆசிரியர்பால் பெருமதிப்புண்டு. திரு. பாக்கியம் என்ற தம் நண்பருக்கு, தமது ஆசிரியரை என்றும் அருகே வைத்துப் பேணுமாறும், எப்போதும் அவருடனேயே இருக்கவேண்டும் என்பதனை வற்புறுத்துமாறும்,

"உள்ளபடி பல்கலையும் ஓகையுடன் என்றனக்குக்
கள்ளமற ஓதுவித்த கண்மணியை—எள்ளளவும்
நீங்காமல் நேசம் நெகிழாமல் பக்கம்விட்டு
வாங்காமல் நீயிருத்தி வை!"

"உற்றவர்க்கும் வேலா யுதமுதலி யார்க்குமுளம்
பற்றுமெம தாசிரியர் பாலினுக்கும்—மற்ற
வர்க்கும்
மெத்தமெத்த வேண்டி விருப்பமுள்ள
வந்தனத்தை
நித்தநித்த முஞ்செலுத்தி னேம்" — என்று எழுதியிருப்பது நெஞ்சை உருக்குவதாகும்

சித்திரைத்திருநாள் என்ற திருவாங்கூர் மன்னரின் மருகன் அவிட்டந்திருநாள் இளவயதிலேயே இறந்தமைக்குக் கேரள நாடு முழுதுமே வருந்திற்று. அப்போது பாவலரவர்கள்,

"கண்ணிருந்து மந்தகன்யான்; காண்மினென்றே
காலா! நீ
மண்ணிருந்த மாந்தர் மனமறுக!-விண்ணிருந்த
சீரான் அவிட்டந் திருநா ளிளமையெலாம்
பாரா துயிர்கவர்ந்தாய் பாயந்து" —என்றும்

"எங்கள் குணவரசை ராமவர்ம பூபதியைத்
திங்களோ ரொன்பான் திகையுமுனே—பங்கமுறக்
கொன்றனையே பாவிக் கொடுங்கூற்றே,
நீதருமன்
என்றபே ரேற்ற தெதற்கு"—என்றும் பாடியன எத்தனை உருக்கமும் உண்மையுங் கலந்துளன, காண்மின்!

இவ்வாறே 'கணபதி' என்ற தமிழ்ப் பெரியார் மறைந்தபோது,

"முன்னொருபோழ் தெமையழைத்து முன்னி
ருத்திப்
பலவினவி மொழிந்த மாற்றம்
தன்னையறிந் தடுத்திருந்த தப்பாளர்
தமைநோக்கித் தக்கோய்! மிக்கோய்
என்னையிவன் கோட்டாற்றி லிருந்தவனு
யிருந்தவனு என்று கேட்ட
பன்னரிய வாயுமினிப் பார்த்திடுங்கா
லுண்டுகொலோ பாவி யேமே!"

என்று பாடிய பாட்டு, படிக்கும் உள்ளத்தைக் கரைத்து விடுகிறது. கோட்டாற்றின் இருந்தவனு? இருந்தவனு? என்ற சொற்கள் தாமே 'இரும். தவனு?' 'இருந்த அவனு' எனப் பிரிந்து பொருள் உணர்த்துமாறு பாட்டமைப்பது எல்லாப் பாவலர்க்கும் எளிதில் அமைவது அரிது. இவருடைய பாட்டுக்கள் பலவும் திரிகூடராசப்பக் கவிராயர் பாட்டுக்களை நினைப்பிக்கின்றன.

இறுதியாக ஒன்று கூறி இக்கட்டுரையை முடிக்கிறேன். வள்ளல் திரு, அழகப்பர் அவர்கள் திருவாங்கூர் பல்கலைக்கழகத்துத் தமிழ், சமஸ்கிருதம் என்ற மொழிகளின் ஆராய்ச்சித் தொகுதிக்கெனப் பொருள் வழங்கிய சேதி நம் பாவலரைப் பரவசத்திலாழ்த்தியது. அவர் உள்ளம் "கரைசெய்ய வரியதொரு பேருவகைக் கடல் மூழ்கிக்" கவிப்பெருக்கை தோற்றுவித்தது. மணல் கீளக்க நீர் ஊறுவதுபோலக் கருத்துக்களும் கவின் மலிந்த சொற்களும் ஒன்றினொன்று முந்துகின்ற செயலை அப்பாட்டுக்களிற் காணலாம். அழகப்பரின் வள்ளன்மைக்கு நிகர் காண எண்ணியபோது பொன், மலை, கடல், முகில், முதலியவற்றை அவரது நெஞ்சம் எடுத்துரைக்கலுற்றது. அவை ஒவ்வொன்றையும் நன்கு மறுத்து ஒப்புயர்வின்றி விளங்கும் வள்ளல் அழகப்பரின்புகழைத் தமது வளவிய பாட்டுக்களால் நம் பாவலர் நிலைபெற நாட்டுவது நவில்தொறும் நயம் பயந்து மகிழ்விக்கின்றது.

வள்ளல் அழகப்பரின் வண்மைக்குப் பொன்னை நிகர் கூறலாமென்ற நெஞ்சுக்கு,

பொன்னையே சிறந்த பொருளென்ப ரதனைப்
புகுஞ்சுடும் புலர்வரு முருகும்
பின்னையே பலபேர் பெறுமுரு மாறும்
பெருவிலைக் கடைபடும் பெண்பால்
தன்னையே நாடுஞ் சரண்புகும் மேலும்
தாடலை வீழ்தரு மதனால்
என்னையே நினக்கு மிணையெனப் புகல்வேன்
இயம்புதி அழகப்ப துரையே! —என்றும்;

முழுமதியை நிகரென்ற நெஞ்சுக்கு,

வான்றரு மதியோ வதிவயி னின்றி
மலைதரும் அலைதரும் ஆகங்
கூன்றருந் தலைகீழ் குறைதருங் கலைகள்
குலைதருந் தொலைதருங் குயிலா
மான்றருங் களங்க மலிதருஞ் சின்னாள்
மறைதருங் குறைதரும் அதனால்
ஏன்றரு நினக்கோ ரிணைஎனு நிலைதான்
இயம்புதி அழகப்ப துரையே! — என்றும்,

மேகத்தை உவமையாய் மொழிக என்ற நெஞ்சினை நோக்கி,

மண்ணக மளிக்கும மழைமுகில் முன்னீர்
மடுபபடும் பயங்கொளுங் கறுக்கும்
விண்ணக மடங்கும் விழிக்குமிக் கலறும்
மெய்யெலாம் வியர்த்தலர் தூற்றும்
தண்ணகன் ஞாலம் காண்கலா துருவும்
கரக்கும்பின் வெளுப்புறும் அதனால்
எண்ணகத் துனக்கோர் இணையென லாமோ
இயம்புதி அழகப்ப துரையே! — என்றும்

வரும் பாட்டுக்கள் படிக்குந்தொறும் இன்பம் பெருக்குவதைக் காணலாம்.

இவ்வாறு வளவிய புலமையும் நலம்மலி பாவன்மையுஞ் சிறந்த நம் செய்குதம்பிப் பாவலர் அவர்கள் 1950-இல் தாம் விரும்பிய விண்ணுலக வாழ்வு நோக்கி மறைந்த காலை, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் மனம் கரைந்து கையறவு எய்தி,

"ஒரும் அவதானம் ஒருநூறு செய்திந்தப்
பாரில் புகழ்படைத்த பண்டிதனைச் — சீரிய
செந்தமிழ்ச் செல்வனைச் செய்குதம்பிப் பாவலனை
எந்தநாள் காண்போம் இனி"

என்று பாடிப் புலம்பினர் எனின், நாம் வேறு கூறுவது மிகை.

★

உவமை விலக்கு

கடல்

ஓங்கருங் கடலோ வூன்வெறி காட்டி
யுவர்கெழ வுலைந்துலைந் தலறும்
வீங்கருங் கரைவாய் வெடிபட வாலை
விசித்தெழுந் தோடிப்பின் மீளும்
வாங்கரு நாவாய் மடிதர நுரைகண்
மலிதர வலைதரு மதனால்
ஈங்கரு நினக்கோ ரிணையென லாமோ
இயம்புதி அழகப்ப துரையே.

சோலை

தண்ணிய செழிய பசும்பொழிற் பயத்தாற்
றழைதருங் கிளையொடு நடுங்கும்
நண்ணிய வலர்தந் துறுகணீர் நல்கும்
நாற்றமு மாற்றமு நயக்கும்
பண்ணிய விருடகே பழுப்பொடு பசப்பும்
படர்தரு மடர்தரு மதனால்
எண்ணிய நினக்கோ ரிணையென லாமோ
இயம்புதி அழகப்ப துரையே.

கண்

கண்ணென வியந்து கவலுவ ரவைதாம்
கருமையும் வெண்மையுங் கலக்கும்
துண்ணெனச் சிவக்குந் துகள்படக் கலங்கும்
சுழல்தரு முழல்தருந் துடிக்கும்
தண்ணெனப் பூழை சலத்தொடு சரித்துத்
தயக்குறுங் கயக்குறு மதனால்
அண்ணென விணையா யறைகுதற் குளவோ
அறைகுதி அழகப்ப துரையே.

மாணிக்கம்

காழ்தரு மணியோ கறைதரும் வடுவுங்
கனிதருங் கடைதருங் கல்லில்
வீழ்தரு முராயு மெலிதருந் தேயும்
வெடிதரும் பொடிதரு முள்ளம்
போழ்தரு மிழையுட் புகுதரு மாதர்
புனைதர முனைதரு மதனால்
வாழ்தரு மிணையா வருங்கொலோ நினக்கும்
வழுத்துதி அழகப்ப துரையே.

—★—

(வள்ளல் திரு. அழகப்பர் திருவாங்கூர் பல்கலைக் கழகத்துத் தமிழ், சமஸ்கிருதம் என்ற மொழிகளின் ஆராய்ச்சித் தொகுதிக்குப் பொருள் வழங்கியதறிந்த பாவலர் பாடிய பாக்களுள் சில.)

பாவலர் வாழ்க; பைந்தமிழ் வாழ்க!

"அறிவுதாசன்"

நஞ்சை செழித்தது நாஞ்சில் நாடாம்;
நற்றமிழ்த் தேன்மணம் நாறிடும் வீடாம்;
அங்கு பிறந்தனர் அருந்தமிழ்க் காவலர்;
அவரொடு பிறந்தனர் அரியபற் பாவலர்.
அமிழ்து வளர்ந்தது; அறிவு வளர்ந்தது;
அவையொடு மாங்கே அறமும் வளர்ந்தது;
கவிஞர் வாழ்ந்தனர்; கலைஞர் வாழ்ந்தனர்;
காலம் முழுதும் கலைகள் வாழ்ந்தன.
இத்தனைச் சிறப்பும் இலங்கிடு நாஞ்சிலிற்
கெழில்தரு கோட்டா றெனுநற் பதியில்,
பத்தியும் முத்தியும் படைத்தொளிர் குடியில்,
பக்கீர் மீரான் பண்பினர் குடிலில்,
ஆண்மைக் குருவாய், அறிவுக் குருவாய்,
அஞ்சா நெஞ்சாய், அழகுகொள் பிஞ்சாய்,
கன்னித் தமிழாய்க் கவிபொழி முகிலாய்,
காண்பவ ரெல்லாம் களித்திடும் சிசுவாய்
பைந்தமிழ் பிறந்தது; பாவலர் பிறந்தார்.
பண்பிற் சிறந்தவர் படியில் பிறந்தார்.
பிறந்தவர் வளர்ந்தார்; பெருந்தமிழ் கற்றூர்.
பெற்றதும் கற்றதும் பிறர்க்கெடுத் துரைத்தார்.
கன்னித் தமிழில் கவிபல யாத்தார்.
கம்பனின் கவியைக் கவின்பட உரைத்தார்.
நுண்ணிய அறிவு நூல்பல செய்தார்.
நூறவ தானம் வீறுடன் செய்தார்.
பாவலர் வாழ்க; பைந்தமிழ் வாழ்க!
பாவலர் மன்றமும் பாரினில் வாழ்க!

என் நினைவுகள் ★

டாக்டர் எஸ். முத்துக்கறுப்ப பிள்ளை, M.B., B.S.

சதாவதானி, செய்குதம்பிப் பாவலர் அவர்களை நான் பள்ளி மாணவனாக இருக்கும்போது-சுமார் 40 வருடங்களுக்கு முன்னரிருந்தே அறிவேன். அக்காலத்தில் அவரைத் தெரியாதார் நம்பக்கத்தில் இலர். அவர் சதாவதானம் செய்து பெயர் பெற்றிருக்கும் காலம் அது. அந்த அரிய சாதனையை வேறு ஒருவரும் செய்து காட்டியதில்லை. பிற்காலங்களில் அஷ்டாவதானம் செய்தவர்களையே காண்பது அரிது. அதைச் செய்பவர்களுக்கே மிகுந்த பெருமை உண்டு என்றால் சதாவதானம் செய்வதைப்பற்றிக் கேட்கவா வேண்டும்.

பாவலர் தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்தார். அப்பொழுது நமது நாட்டில் தமிழில் புலமை கிட்டவேண்டுமென்றால், அவர்களை அணுகித்தான் தமிழ் கற்கவேண்டும். அவர் மிகவும் சிறந்த தமிழ்ப் பேராசிரியருங்கூட. நமது நாட்டிலுள்ள தமிழ்ப் புலவர்களில் பலர் அவரிடம் சென்று பாடம் கேட்டவர்கள்தாம். அவர்களில் எனக்குத் தெரிந்தவர்களுள் பறக்கை, காலம் சென்ற மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள் ஒருவர். எனது ஆரம்பக் கல்வி குருவாக இருந்து, பிறகு தமிழ் வித்துவானாகி, தமிழ் ஆசிரியர்களுள் சிறந்து விளங்கி, இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கும் தேரூர், திரு. உ. சிதம்பரதாணுபிள்ளை அவர்கள் மற்றொருவர்.

ஆனால் பாவலர் அவர்களை நான் நேரில் சந்தித்தது மேற்கூறிய காரியங்களினால் அல்ல. 1920-ம் ஆண்டை அடுத்து நாஞ்சில்நாட்டில் காங்கிரஸ் இயக்கம் ஆரம்பித்த பொழுது அந்த இயக்கத்தில் நடுநாயகமாக விளங்கிய நமது காலஞ்சென்ற தேசத் தொண்டர் டாக்டர் எம். இ. நாயுடு அவர்களின் தோழராக அவர் விளங்கினார். அன்று காங்கிரஸ் இயக்கத்தில் சேருவது என்றால் அஞ்சாநெஞ்சம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். எனது தந்தையாரும் இயக்கத்தில் பெரும் பங்கு எடுத்ததால் பாவலர் அவர்களை எனக்கு அடிக்கடி சந்திக்க வாய்ப்புக்கள் ஏற்பட்டன. நாகர்கோவிலில், இடலாக்குடியில், முகம்மதியப் பாடசாலையின் பின் பக்கமுள்ள தெருவில் அவர்களது பழைய வீட்டிற்குச் சென்ற ஞாபகம் இருக்கிறது. மிகவும் அடக்கமான எளிய வாழ்க்கை நடத்திவந்தார்கள். அப்பொழுதே உடல் நலங்குன்றியிருந்தார்கள் எனினும் தேசீயக் காங்கிரஸ் இயக்கத்தில் அவர்கள் ஊக்கம் குறையவில்லை. காங்கிரஸ் பிரசாரக் கூட்டங்கள் அடிக்கடி நடக்கும். முக்கியமாக பாவலர் அவர்கள் தான் தலைமை தாங்குவார்கள். சிறந்த பேச்சாளர். கதை சொல்வதுபோல் இருக்கும். அவர்கள் கருத்தை ஆணித்தரமாக மனதில் பதிய வைப்பார்கள். அவர்கள் பேச்சைக் கேட்கப் பல இடங்களிலிருந்தும் ஜனங்கள் வருவார்கள். தென் இந்தியாவில் மற்ற மாவட்டங்களைவிட நாஞ்சில் நாட்டில் காங்கிரஸ் இயக்கம் அன்று வலுவுற்று இருந்தது என்றால் அதற்கு அவர்கள் பேச்சு ஒரு முக்கிய காரணம் எனலாம் கதர்ப் பிரசாரமும் அது போலவே. அவர்கள் வாயிலாகத்தான் டாக்கா மஸ்லினை ஒரு மோதிரத்தினுள் கூட உருவி எடுக்கலாம் என்பன போன்ற பழைய இந்தியாவின் சாதனைகளின் பெருமைகளை முதலாவதாகக் கேட்டிருக்கிறேன். பேச்சில் ஒரு தனி இனிமை உண்டு. பெரிய தமிழ்ப் புலவரானாலும் எளிய நடையில் யாருக்கும் புரியும் விதத்தில் பேசுவார்கள். பேச்சைக் கேட்கக் கேட்க இன்னும் கேட்க வேண்டும் என்று தோன்றும்

சிறந்த தேச பக்தர். காங்கிரஸ் கூட்டங்கள் கூடுவதற்கு முன்னர் கைராட்டை ஏந்தித் தெருத்தெருவாக பஜனைகள் நடக்கும் திலக் சுவராஜ் நிதி போன்றவைகளுக்கு பண வசூல் செய்வோம். மனம் கோணாமல் மற்ற தலைவர்களுடன் அவர்களும் அவைகளில் கலந்துகொள்வார்கள். அவர்கள் ஆர்வத்தை என்ன என்று சொல்வது? இன்று நமது தாய்நாடு சுதந்திரமடைந்து நாம் முன்னேறிக் கொண்டு இருக்கும் சமயத்தில் அவர்கள் அன்று செய்த சிறந்த தேச சேவையை நினைவு படுத்துவது நமது நன்றியுள்ள கடமை யாகும். ★

திருநாகூர்த் திரிபந்தாதி.

காப்பு.

நேரிசை வெண்பா.

வித்தகா சிற்பரா மேதகா யாவுஞ்செய்
வித்தகா சிற்பரா மேதகா — சித்தமுறத்
தாதிக் கருமஞ்சி தம்புரிநா கைத்திரிபந்
தாதிக் கருமஞ்சி தம்.

கட்டளைக் கலித்துறை.

சாற்றவந் தாதி கலம்பகங் கோவை தமிழ்ப்படித்தூர்
தூற்றவந் தாதி னகரவென் றற்பரைச் சொல்லிலென்று
மேற்றவந் தாதி லகுர்வன நாகையி லெவ்வுலகும்
போற்றவந் தாதி பதிசர ணேத்திற் புகழ்வருமே.

வருவா ரணம்பரி வையம்ப தாதியின் மன்னர்வந்து
திருவா ரணைமுறைத் தேத்துநன் றுகையர் சீர்படித்தால்
தருவா ரணங்க முறவருஞ் சாதகந் தாரணியிற்
கருவா ரணங்கற வீடருள் வாய்க்கவெக் காலத்துமே.

காலத் தனத்தை வெளிதனிற் காட்டிக் கதிக்குமலை
போலத் தனத்தைப் பறிக்கின்ற மங்கையர் பூசற்கெழுஞ்
சீலத் தனத்தைச் சிதைத்தும தாளெனச் சேர்த்தருள்வீர்
கோலத் தனத்தைக் கொளுந்தட நாகைக் குருமணியே.

மணிக்கந் தரத்தை மருவுபுன் மாதர் மயலெனுமா
பிணிக்கந் தரத்தைப் பெறவும தேர்பதப் பீதமலர்
எணிக்கந் தரத்தை வியமற வந்தருள் வீர்புலங்கொள்
கணிக்கந் தரத்தைக் கதிக்குநன் றுகைக் கதிநிதியே.

நிதியங் கவரு நினைவெடுத் தோடி நிதமுந்துயர்
கதியங் கவரும் படிகொணஞ் சேசமன் காய்ந்தவய
விதியங் கவரும் பொழுதெனை நாகை விமலரடி
துதியங் கவரு தவுமருள் போலிலை சொல்லுதற்கே.

(பாவலர் அவர்கள் இயற்றிய திருநாகூர்த் திரிபந்தாதி எனும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றவை.)

ENTERTAINED

AZAD HOTEL

TOWER JN. NAGERCOIL.

H. O. TRIVANDRUM.
PHONE No, 2784.
RESIDENT 4054.

B. O. QUILON.
PHONE No. 578.

Prop: **M. P. AZAD**

விஜயம் செய்யுங்கள்

ஆஸாத் ஹோட்டல்

அழகப்பா பில்டிங்,

மணிக்கூண்டு - நாகர்கோவில்.

H. O. திருவனந்தபுரம்.
போன் No. **2784.**

B. O. கொல்லம்.
போன் No. **578.**

உரிமையாளர்: **M. P. ஆஸாத்.**

A STATE AIDED INDUSTRY

RELIABLE HOUSE
FOR
ELECTRICAL TEAK WOOD PRODUCTS

We serve the Electrical Wiring Trades of South India with our quality Teak wood

CASING & CAPPING,
BATTENS, ROUND BLOCKS, METER BOARDS,
ETC., ETC.

Buy
VAREED
ELECTRICLAS
for
Quality Wiring

Ask for our FREE Price lists

VAREED SAW MILL WORKS,
CAPE ROAD,
NAGERCOIL.

"கன்னியாகுமரி"

ஆசிரியர்: பி. எஸ். மணி.

குமரி மாவட்டத்தின் செய்திகளை, பிரச்னைகளை உலகில் தமிழர்கள்
உள்ள இடங்களிலெல்லாம் பரவச் செய்யும்,
அதிகமதிகம் சந்தாதாரர்களையுடைய தமிழ் வாரப் பத்திரிகை
"கன்னியாகுமரி" ஒன்றே.

தனிப்பிரதி காசு 16 :: வருடம் ரூ. 8-25.

ஆயுட்சந்தா ரூ. 100.

விபரங்கட்கு:

நிர்வாகி:
"கன்னியாகுமரி" அலுவலகம்,
நாகர்கோவில்.

புலி மார்க்கு கலப்பு உரம்

நெல், மிளகு, புகையிலை மற்றும் பயிர்களிலிருந்து நல்ல மகசூல் கிடைப்பதற்கு
சிறந்த உரம் "புலி மார்க்கு கலப்பு உரம்"
இன்றே வாங்கி உங்கள் பயிர்களுக்குப் போட்டு அதிக மகசூலைப் பெறுங்கள்.

★ ★

பார்த்து வாங்குங்கள்! போலிகளைக் கண்டு ஏமாறாதீர்!!

காரம், குணம், மணம் நிறைந்த அ. ப. அ. ப.

442 மங்கள சுந்தரி வாசனைப் புகையிலையை

உபயோகியுங்கள்!

அ. ப. அ. மஸ்தான் அன் ஸன்ஸ்,
கடையநல்லூர்.

★ உற்சாகமூட்டுவது! ★

★ ராஜா பட்டணம் பொடி ★

இன்றே உபயோகியுங்கள்.

ஏஜெண்ட்: S. கந்தசாமி நாடார்,
வியாபாரம், கோட்டாறு.

Telegram: 'BALVENCO'
Post Box: No: 8.

Phone: RES: 22 / OFF: 29

BALVEN & COMPANY,

10/353, CAPE ROAD, NAGERCOIL.

"EXCELSIOR SEWING MACHINES" Sole Disrtibutors for Kanyakumari (Madras State) and Trivandrum (Kerala State)

"RUSTON" OIL ENGINES. Approved Dealers for Tirunelveli and Kanyakumari Districts.

"IMANI" OIL ENGINES. Stokists and distributors for Kanyakumari District.

"RALLIS" FERTILISERS. Distributors for Kanyakumari District.

"MMM" ELECTRIC MOTORS, Agents for Kanyakumari District.

Dealers in:— All kinds of Electrical wiring materials. Sanitarywares, pipes and pipe-fittings and hoses, Rice Mills and parts, Electric fans of all sizes, Electric motors, Pumpsets, Etc, Etc.

Makers oj:— "BALVEN" Carbon papers, Type-writer Ribbons Etc.

PHONE: **2125**. GRAMS: "SARATHI"

SARATHI

HANDLOOM TEXTILES - DYE HOUSE

POST BOX NO. 45

MADURAI

MADRAS STATE

வெல்பேர் கம்பெனி

உயர்தர

மிட்டாய் & பிஸ்கட் பாக்டரி

நாகர்கோவில்

உரிமையாளர்:
எம். பி. அய்யாவு.

எங்களிடம் எல்லாவிதமான உயர்ந்த ரக மிட்டாய் & பிஸ்கட் தினுசுகள் கிடைக்கும்.

குமரிமாவட்டத்தின் தலைசிறந்த மிட்டாய் & பிஸ்கட் உற்பத்தியாளர்:

WELFARE COMPANY

CONFECTIONERY & BISCUITS

NAGERCOIL

murphy radio

Authorised Dealers for K. K. District:-

PREMIER RADIO HOUSE

BALAMORE ROAD

NAGERCOIL

ஏராம் ரேடியோஸ்

ரேடியோ & சினி இஞ்சினியர்ஸ்

மீனாட்சிபுரம், நாகர்கோவில்.

எங்களிடம்

"கிரப்ட்", "டோன்பங்க்", "ஆர்வி"

முதலிய ஜெர்மன் ரேடியோக்களும்

"மர்க்குரி எலக்ட்ரானிக்"

ரேடியோக்களும் கிடைக்கும்.

மாதத் தவணைகளில் ரேடியோக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒலிபெருக்கி அமைப்பாளர்களுக்குத்

தேவையான

40, 50 மற்றும் 60, 75 வாட்ஸ்

ஆம்பிளிபயர்கள்

நாங்கள் தயாரிக்கிறோம்.

ராணி கம்பெனி,

கன்பக்ஷனரி,

தோப்புத்தெரு, மீனாட்சிபுரம், நாகர்கோவில்.

எங்களிடம்

எல்லாவிதமான உயர்ந்தரக மிட்டாய் தினுசுகள்

எப்பொழுதும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:

K. S. Y. & Sons.

NAGERCOIL.

எமது வாடிக்கைக்காரர்களுக்கும், பொதுமக்களுக்கும்

எங்கள் உளங்கனிந்த நல் வாழ்த்துக்கள்

பொதுமக்கள் எங்களை மேன்மேலும் ஆதரிக்குமாறு

பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

★ எங்களிடம் கிடைக்கும் ரேடியோக்கள்: ★

BUSH, METZ (Germany), SAHARA (Hallond), ESBE,

USHA, RESA, GIFT, ATOM, KENZLE Etc.,

N. B:— ரேடியோக்கள் உறுதியுடனும் உத்திரவாதத்துடனும், குறித்த சமயத்தில் பழுது பார்க்கவும், ரேடியோ சம்பந்தப்பட்ட சகலவிதமான சாமான்களுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

பாத்திமா ரேடியோ சேல்ஸ் & சர்வீஸ்,

போலீஸ் ஸ்டேஷன் சமீபம்,

கேப் ரோடு, கோட்டாறு, நாகர்கோவில்.

தினமலர்

(தமிழ் தினசரி.)

திருநெல்வேலி.

தமிழ்நாட்டின் தலைசிறந்த பத்திரிகை!

நடுநிலையான செய்திகள்; தலைசிறந்த தலையங்கங்கள்.

தமிழ்நாட்டுச் செய்திகளுக்கு முதலிடம்.

சினிமாச் செய்தி; கேள்வி பதில்! ஜோஸ்யப் பகுதி

மற்றும் பல முக்கிய அம்சங்களைத் தாங்கி
நெல்லையினின்றும் வெளிவரும்

சிறந்த பத்திரிகை

தினமலர்.

நிர்வாக ஆசிரியர்:

டி. வி. ராமசுப்பையர்.

செய்குதம்பிப் பாவலர், சிலேடை நயம்

★★

வித்துவான் கோ. வே. பெருமாள், B. A.

"ஒரும் அவதானம் ஒருநூறு செய்(து)இந்தப்
பாரில் புகழ்படைத்த பண்டிதனைச் — சீரிய
செந்தமிழ்ச் செல்வனைச் செய்குதம்பிப் பாவலனை
எந்தநாள் காண்போம் இனி?

—கவிமணி தேசிகவிநாயகம்.

செந்தமிழ் நாட்டின் சிறப்பு வாய்ந்த ஒரு பகுதி, நாஞ்சில் நாடு. இதனைத், தமிழகத்தின் நெஞ்சகம் எனலாம்; நானிலத்தின் நாகரிக முன்னோடி எனலாம். இங்கே அமைந்துள்ள இயற்கைவளம், ஆன்றோர், அறிஞர், பாவலர், நாவலர், உழைப்பாளர், நல்லோர் எல்லோரையும் தோற்றுவிக்கின்றது; வினையின் நீங்கி விளங்கிய அறிவின் விழுமிய முனைவர் (Pioneer)-களை உருவாக்குகின்றது. அத்தகைய முனைவரில் ஒருவரே, நமது பாவலர் என்றால் மிகையாகாது.

அமரர் செய்குதம்பிப் பாவலர் அவர்கள் சென்ற நூற்றாண்டில் கி. பி. 1874-ல் கோட்டாற்றை அடுத்த இளங்கடை என்ற சிற்றூரில் பிறந்தார்; 'பக்கிறு மீரான்' என்ற பண்பாளரின் ஐந்தாவது புதல்வர் ஆவார். அவர் எட்டு வயதிற்குள் அரபி மொழியையும், அரிய 'குர்ஆன்' நூலையும் ஆசறக் கற்றார்; அடுத்த இரண்டு ஆண்டிற்குள், தமிழ்ப் பள்ளியின் ஐந்தாம் வகுப்புத் தேர்விலே சிறந்த வெற்றி பெற்றார்; பெற்றோரின் வறிய நிலையால், பத்து வயதிற்கு மேல் பள்ளிப் படிப்பிற்குப் புள்ளி வைக்க நேர்ந்தது. தந்தையோடு நெய்தல் தொழிலில் ஈடுபட்டார்; தன் முயற்சியால், வேலை ஓய்ந்த நேரங்களில், தனியே கற்றார்; தனது ஊக்கம் ஒன்றாலேயே தலைமையான ஆக்கம் உற்றார்; தன் ஊரிலேயே தனியே மாணவர் பலருக்குப் பாடஞ் சொல்லிவந்த புலவர் சங்கர நாராயணரின் தமிழ் மாணவர் ஆனார். அவரிடம், ஐயந்திரிபற அருமையான தமிழ் இலக்கண இலக்கிய நூற்கள் பலவற்றைக் கற்றார்: நன்னூல், இலக்கண விளக்கம், வீரசோழியம், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், நம்பி அகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, இறையனார்க் களவியல் உரை, தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், திருமுருகாற்றுப்படை முதலிய பத்துப் பாட்டு நூற்கள், நற்றிணை முதலிய எட்டுத் தொகை நூற்கள், நாலடியார் முதலிய பதினெண்கீழ்க் கணக்கு நூற்கள், சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெருங் காப்பியங்கள், தேவாரம் முதலிய திருமுறை நூற்கள், ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தம், பெரிய புராணம், கம்பராமாயணம், புராணங்கள், பிரபந்தங்கள், தனிப் பாடல் திரட்டு, பட்டினத்தார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், திருவருட்பா ஆகிய தமிழ் இலக்கிய நூற்களையும், விளக்கமாக விரிவாக ஆழ்ந்து கற்றார்; சிறந்த தமிழ்ப் புலமை உற்றார்.

பின்னர், பாவலர் தன் பாட்டனார் 'ஞானியார் அப்பா' எழுதிய 'மெய்ஞ்ஞானப் பாடல் திரட்டு' என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிடுவதற்காகச் சென்னை மாநகர் சென்றார்; அங்கே, அவருக்கு, இட்டா - பார்த்தசாரதி நாயுடு அவர்களின் நட்புக் கிடைத்தது; ஆதலின் அன்னாரின் அச்சகத்தில் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் தமிழ்ப் பணியை ஏற்றார்; சீறாப் புராணத்திற்குத் தீந்தமிழில் உரையொன்று எழுதினார்; அதனால், முசுலிம் வட்டாரங்களில், முதன்மையான புகழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் இலக்கானார்; 'யதார்த்த வாதி,' 'இசுலாமிய மித்திரன்' ஆகிய செய்தித் தாட்களை நடத்தினார்; அருட்பா — மருட்பாப் பூசலில் ஈடுபட்டு, அருட்பாவுக்கு வெற்றிக்கொடி ஏற்றினார். அட்டாவதானி முதுகுளத்தூர் கலியாணசுந்தரம் பிள்ளை அவர்களின் தொடர்பு பெற்றார்; அதனால் அவதானப் பயிற்சி பெற்றார்; ஒரே நேரத்தில், எட்டு அலுவல்களில் ஈடுபடும் அட்டாவதானம், பதினாறு அலுவல்களில் ஈடுபடும் சோடசாவதானம், நூறு அலுவல்களில் ஈடுபடும் சதாவதானம் செய்து அறிஞர் பெருமக்களின் வியப்பிற்கும், புகழ்ச்சிக்கும் உரியவரானார். கி. பி. 1907—இல் சென்னையில் இவர் செய்து காட்டிய

'சதாவதானம்' மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதனால் உள நூற் கருத்து மரபையே பொய்த்துக் காட்டிய பெருமை இவருக்குக் கிடைத்தது. அன்றுமுதல் இவர், 'சதாவதானி செய்குதம்பிப் பாவலர்' ஆனார்.

அதன்பின், நமது பாவலர் தாயகம் (கோட்டாறு) திரும்பினார்; திருமணப் புதுவாழ்விலே புகுந்தார்; நூற்கடை வாணிபம் செய்தார்; ஒழிவு நேரங்களில், தனது பொழுதை மாணவர்க்குத் தமிழ் கற்பிப்பதிலே களித்தார்; காவியங்கள் இயற்றுவதிலே மகிழ்ந்தார்; உரைகள் எழுதுவதிலே உவந்தார்; ஏட்டுச் சுவடிகளை அச்சிட்டு வெளியிடுவதில் அகநிறைவு கொண்டார். இவர் மாணவர்களிலே பலர், இன்று தமிழ் அறிஞர்களாகவும், அவதானிகளாகவும் விளங்குகின்றனர். தமிழகத்தின் பல நகர்களிலும் இவரது சொற்பொழிவுகள் நிகழ்ந்துள்ளன. திருவிதாங்கோடு, கீழக்கரை, தொண்டி, சென்னை, தஞ்சாவூர் முதலிய இடங்களில் இவரது விரிவுரைகளைக் கேட்டு விம்மிதம் எய்தியோர் பலராவர். பிறர் பாடிய செய்யுளை, இவர் ஒருமுறை கேட்டாலும், அதனை அப்படியே ஒப்பித்துவிடும் நினைவு ஆற்றல் மிக்கவர். இவர் வள்ளல் அழகப்பர் அவர்களின் வள்ளன்மையைப் பாராட்டி, "அழகப்பக் கோவை" ஆக்கினார்; பரிசில் பெற்றார்; மேலப்பாளையம் பெரு வணிகர், வள்ளல் திரு. சம்சுத்தாசிம் அவர்கள்மீதும் கோவை பாடிப் பரிசில் பெற்றார். இவர், திருநாகூர்த் திரிபந்தாதி, கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி, பிள்ளைத் தமிழ், நீதி வெண்பா, நாகைக்கோவை, கீழக்கரை கலவத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, நாயக மான்மிய மஞ்சரி முதலிய செய்யுள் நூற்களைச் செய்துள்ளார்; வேதாந்த விகாரப் பழிக்குற்ற வழக்கு (Criminal Case), தேவலோகப் பழிக் குற்ற வழக்கு ஆகிய வழக்கு நூல்களையும் வழங்கியுள்ளார். இத்தகைய நமது பாவலர் அவர்கள், தம் 76-ஆம் அகவையில்–13-2-1950-இல் அறிஞர்கள் அகம் வருந்த, உற்றார்கள் உளம் நோவ-உறவினர்கள் கண் கலங்க-தமிழகத்தார் எல்லோருமே தயக்கங்கொள்ள-இறைபேறு உற்றார்கள்; இனிய அமரர் ஆனார்கள்.

இன்னாரின் உரைகள் மக்களுக்கு உயர்ந்த கலை உணர்வை ஊட்டின; செய்யுட்கள் சிந்தைக்கு விருந்தாயின; சிலர் திருந்துவதற்கு உரிய அரிய மருந்தும் ஆயின. அவற்றில், அறிவுக் கருத்துக்கள் அணிகளோடு மிளிர்ந்தன. அவற்றுள், இரட்டுற மொழியும் சிலேடைகள் எண்ணிறந்தன. ஆங்கில அறிஞர்களும் அங்கதப் பேச்சிலே (Satire) அகமகிழ்ந்துள்ளனர்; சிலேடை (Pun)-யிலே சிந்தை மகிழ்ந்துள்ளனர். "ஒரு சொல்லின் ஒலி ஒத்திருக்கும்; ஆனால், பொருள் வேறுபடும். அதுவே சிலேடையாகும். பொதுவாக, அது நகைச் சுவைக்கும், இகழ்தற்கும் பயன்படுத்தப்படும்." சிலேடைக்கு இவ்வாறு இலக்கணம் வகுத்துள்ளனர், ஆங்கிலேயர். தமிழிலே, தண்டியலங்கார ஆசிரியர் சிலேடையைச் செம்மொழி, பிரிமொழி என இரண்டாகம் பிரித்துள்ளார்; ஒருவினை, பலவினை, முரணவினை, நிச்சயம், நிச்சய விலக்கு, ஒற்றுமை, வேறுபாடு என ஏழு ஆக வகுத்துள்ளார். ஆங்கில வழக்கு, தமிழ் வழக்கு ஆகிய இருமுறைகளுக்கும் புறம்போகாத வகையிலே, நமது பாவலர் சிலேடைகள் அமைந்து, மகிழ்ச்சியூட்டுகின்றன. அச்சிலேடைகள் பாவலரின்-பேச்சிலே, பின்னிக்கிடந்தன; உரையாடல்களிலே, ஊடுருவின; செய்யுட்களிலே, செறிந்து சிறந்தன. அச்சிலேடைகள் சிலவற்றின் நயத்தினை ஈண்டுக் காண்போம்:

ஒருமுறை பாவலர் நீதிமன்றத்திலே நிற்க நேர்ந்தது! அப்போது, எதிர்கட்சி வழக்குரைஞர் பாவலரிடம், 'தங்கள் பெயர் என்ன?' என்றார். அதற்கு, அவர், 'என்னை-எனது தந்தையார் 'செய்கு' என்பார்; தாயார், 'தம்பி' என்பார்; பாரோர் 'பாவலர்' என்று பகர்வார்' என்றார். இந்தச் சிலேடை விடையைக் கேட்ட மன்றத்தார் மருண்டனர்; பார்வையாளர் வியந்தனர்; நீதிமன்ற நடுவரோ, நேர்மையாகப் புகழ்ந்தார்; நீண்ட மரியாதை கொடுத்து, இருக்கை நல்கினார். 'இனி, இவரிடம் கேள்வி கேட்க வேண்டாம் என்று' வழக்குரைஞரை வேண்டினார். இதனால், செய்குதம்பிப் பாவலர் என்ற தன் பெயரையே சிலேடையாகச் சொல்லிய திறத்தை நாம் உணரலாம்.

திருவிதாங்கோட்டிலே, 'சீறாப்புராண விரிவுரை' நிகழ்ந்தது. அப்பொழுது, அண்ணல் நபி நாயகம் அவர்களின் விதவை மணக் கொள்கையைப் பற்றி விளக்க நேர்ந்தது! இசுலாம் மதத்தினர் அல்லாத இந்து மதத்தினர், கணவனை இழந்த இளம் பெண் மறுமணம் செய்துகொடுக்கப்படுவதை வெறுத்தனர். அந்த வெறுப்பு நேர்மையற்றது என்பதை உணர்த்த விரும்பினார்.

அதற்கு ஒரு வேளாண்மைப் பழமொழியை எடுத்துக்காட்டி விளக்கினர். அப் பழமொழி, 'அறுத்தால் கட்டு; அல்லது அழியும்' என்பதே. 'நெற்கதிர்களை அறுத்தால், அவற்றை உடனே கட்டிவைக்க வேண்டும்; அன்றேல், அவை அழிந்துபடும்' என்பதே அதன் பொருளாகும். அதனை, பாவலர் அவர்கள், 'ஓர் இளம் பெண் தாலியறுத்தால் (விதவை ஆகிவிடின்), அவளை வேறு ஒருவனுக்குக் கட்டிக்கொடு (மறுமணஞ் செய்துவை) க்க வேண்டும்; இல்லையேல், அவள் அழிந்துவிடுவாள்' என்று சிலேடைப் பொருள் சொல்லிச் சிந்திக்கச் செய்தார். இதனால், விதவையரின் வெந்துயர் போக்கப், பாவலர் கொண்டிருந்த விழைவு வெளிப்படுகின்றது; சீர்திருத்தக் கொள்கையின் சீர்மை புலப்படுகின்றது.

திருக்குறள் பாக்கள் சிலவற்றிற்குச் சிலர் புத்துரை ஆராய்கின்றனர். அவை பல இடங்களில் பண்டை உரையாசிரியர் - சிறப்பாகப், பரிமேலழகர் - உரையோடு பெரிதும் முரண்படுகின்றன. அம்மாறுபட்ட உரைகள் தற்காலக் குடியரசுக் கொள்கை, பொதுவுடைமைக் கோட்பாடு, இணைவாழ்வுக் குறிக்கோள் ஆகிய அரசியல் கொள்கைகளுக்கு ஆக்கம் கொடுக்கும் வகையிலே அமைந்துள்ளன. வேறு சிலர், தத்தம் மனம்போனவாறு வெற்றுரை பகர்கின்றனர். பாவலர் ஒரு கூட்டத்திற்குத் தலைமை தாங்கியிருந்தார். அக்கூட்டத்தில, ஒரு தமிழ் அறிஞர் குறட்பா ஒன்றிற்கு விரும்பத்தகாத முறையிலே வெற்றுரை ஒன்றைப் புத்துரையாக விரிவுரை செய்தார். அதனைப் பொறுக்காத பாவலர், வேறொரு காட்டுக் கொடுத்து மறுக்க விரும்பினர், எனவே, வேறு ஒரு திருக்குறளுக்கு, இதுவரை யாரும் கருதாத - கருத முடியாத - கருதக்கூடாத ஓர் உரை சொன்னர்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

—குறள்-260

இக்குறட் பாவிற்கு, "கொல் ஆன் புலாலை (கொல்லப்பட்ட பசுவினது ஊனை) மறுத்தானை (மல் + துத்தானை = மிகுதியும் உண்டவனை) எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்!" என்று, ஏன் புத்துரை புகலக்கூடாது? என்றார். 'புலால் மறுத்தல்' என்ற அதிகாரத்தின இறுதிக் குறட்கு இவ்வாறு பொருள் கூறுவது பொருந்துமா? சிந்தியுங்கள். எனவே, 'ஓர் உயிரையும் கொல்லாமல், புலால் உண்ணமல் வாழ்கின்றவனை, உலகத்தில் வாழும் எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்' என்ற பொருளே ஏற்புடையது ஆகும். வேண்டுமாயின், வெறும் "புலால், மறுத்தல்" என்பதற்கு, 'பிறிது ஊன் துறத்தல்' என்பதோடு, 'பிறர் உடல் உழைப்பு வெறுத்தல்' என்று கொண்டு, "பலர் உழைப்பை ஒருவர் உறிஞ்சி வாழும் நிலைமையை மறுத்தல்" என்றும் கொள்ளலாம். இதனால் பாவலர் அவர்கள் சிலேடைப் பொருள் கொண்டு சிறந்த உண்மைகளை நிலைநாட்டினர் என்பது விளங்கும்.

இதுவரை பாவலரது பேச்சிலே பின்னிக் கிடந்த சில சிலேடைகளின் நயங்கண்டு மகிழ்ந்தோம். இனி, அவரது உரையாடல்களில் விளையாடிய சில சிலேடை நயங்களைக் காண்போம்:

பாவலர் அவர்கள் அவதானம் செய்த காலங்களில், அவர் நா யாதேனும் ஒரு தொடரை உச்சரித்துக் கொண்டிருக்குமாம்; ஒரு முறை, "மெய்ஞ்ஞான நாதா, மெய்ஞ்ஞான நாதா" என்று உச்சரித்ததாம். அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் ஒருவர், மற்றொருவரைப் பார்த்துக், "கூறியது கூறல் குற்றம் அல்லவா? என்றார். அதற்கு வேறு ஒருவர். "கூறியது கூறினும், குற்றம இல்லை, வேறு ஒரு பொருளை விளக்குமாயின்" என்றார். அதற்கு இன்னொருவர், 'அப்படி வேறு பொருள இத்தொடரில் என்ன இருக்கின்றது?' என்றார். 'மெய்ஞ்ஞான நாதா (தலைவா)! மெய்ஞ்ஞான நா தா (நாக்கைத் தா) என்பது புரியவில்லையா?' என்றார், அண்மையில் நின்ற அடுதத ஒருவர். இதனால், அறிஞர் பெருமக்கள், 'பாவலரின் பேச்செலலாம் மூச்செல்லாம் சிலேடைகள் வந்து அணிசெய்யும்' என்பதை நன்கு உணர்ந்திருந்தனர் என்று தெரிகின்றது.

ஒருமுறை, நண்பர் ஒருவரின் திருமணத்திற்குப் பாவலரால் செல்ல இயலவில்லை! மறுமுறை இவர் அந்த நண்பரைச் சந்தித்தார். அப்பொழுது திருமணத்திற்கு வர இயலாமற்போனதற்கு வருத்தம் தெரிவித்தார். 'முகத்திலே ஒரு பரு; வருந்தினேன; ஆதலின் வர இயலவில்லை' என்பதைக் கூற விரும்பினர்; பருவரலால் பருவரல் (துயரம்) உற்றேன்" என்றார். மற்றொரு முறை, பெருமை நாயகம் புகையிலைச் சுருட்டு அடிக்கடி அணைந்துகொண்டிருந்தது. 'அஃது என்ன?' என்று ஒரு நண்பர் கேட்டார். அவருக்கு நமது பாவலர், பெருமை நாயகம் புகையிலை, பெருந்தீ வைத்தும் ஊதியும் 'புகை

இலை' என்று பதில் கூறினர். இவற்றால் பாவலரின் உரையாடல்களிலே சிலேடைகள் முயற்சி இன்றி மிக எளிதாக உலவின என்பதை உணரலாம்.

இனி, செய்யுட்களிலே வெளிவந்த அவரது சிலேடையணிகள் சிலவற்றைக் காண்போம். புலவர், செல்வர், நாவலர், அறிஞர் புடைசூழ, பாவலர் அவர்கள் 'அவதானம்' செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது, கூட்டத்தினர் விடுக்கும் வினாக்களுக்கு விடை கொடுத்துக் கொண்டிருந்தார். ஒருவர் ஐந்து 'ற்'கர ஒற்றுவந்த திருக்குறள் ஒன்று கூறுங்கள் என்றார். அதற்கு விடையாக பாவலர் அவர்கள் ஒரு குறட்பாவே கூறினர். அவரது குறட்பா:

''அஞ்சிற்கோள் வாசகம்ஒன்(று) உண்டே அருமறையில்
நெஞ்சிற்கோள் வீரஃ தறிந்து''

இக்குறட்பாவில் அமைந்துள்ள இனிய சிலேடையைப் பாருங்கள். எளிமை வாய்ந்ததுதான்; ஆனால் அருமை உடையது. 'அரிய மறை நூலில் ஐந்திலே கொள்ளவேண்டிய மொழி ஒன்று உண்டு அல்லவா? அதனை நினைந்து மனத்துட் கொள்வீர். இதுதான் அவரது குறட்பாவின் பொருள். இதில், (1) 'அருமறை' என்பது அரிய தமிழ்மறை ஆகிய 'திருக்குறளை'க் குறிக்கும். அதற்கு ஏற்ப (2) 'அஞ்சிற்கோள் வாசகம்' என்பது ஐந்து வயதிலே கொள்ளவேண்டிய மொழி—'கல்வி' என்பதாம். எனவே, அவர் நுட்பமாக நுவன்ற திருக்குறள், கற்றவர் யாவரும் கசடற உணர்ந்த ஒன்றேயாம்: அஃதாவது:

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

—குறள் 391

என்பதாம்.

சதாவதான நேரத்தில் ஒருவர் கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று சிலேடை அமையக் கூறுங்கள் என்றார். அதற்குப் பாவலர் யாதொரு தடையுமின்றி, விரைவாக, ஆற்றொழுக்காகக் கூறினர்:

சிரமா றுடையான் செழுமா வடியைத்
திரமா நினைவார் சிரமே பணிவார்
பரமா தரவா பருகார் உருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்.

"இறைவனின் சிறந்த திருவடியை உறுதியாக நினைப்பவர் - தலைவணங்குபவர் - போது (விலை) மகளிர் புற அழகில் மனம் உருகி, அதனை ஆசையோடு பருக விரும்பாதவர் — ஆகிய தூய கடவுள் வழிபாட்டினர் சிறந்த மாதவப்பேறு உற்று மகிழ்ந்து விளங்குவார்." இப்பாடலில், இறைவனைக் குறிப்பிடும் 'சிரமாறுடையான்' (சிரம் = தலை; (ஆறு அல்லது மாறு) என்ற தொடரிலே சிலேடையணி செறிந்து விளங்குவதைக் காணலாம். நமது சிந்தனையிலே, ஐந்து சிலேடைகள் புலனாகின்றன:

(1) சிரம் ஆறு உடையான்—தலையிலே ஆறு முகங்களை உடைய முருகன்.

(2) சிரம் ஆறு உடையான்—தலையிலே ஆறு (கங்கை) தாங்கிய சிவன்.

(3) சிரம் ஆறு உடையான்—காவிரி, கொள்ளிடம் ஆறு பிரியும் தலையிடத்தில் (திருவரங்கத்தில்) அறிதுயில் உடைய திருமால்.

(4) சிர(ம்) மாறு உடையான் — மாறுபட்ட விலங்கு (யானை) த் தலை உடைய விநாயகர்.

(5) சிரம் ஆறு உடையான்—தலையாய நல்லாறு (நல்வழி–நெறி)களை உடைய அல்லா.

இவ்வாறு, 'சிரம் (தலை) ஆறு (எண், நதி, வழி) உடையான்' என்ற தொடரால், முருகன், சிவன், திருமால், விநாயகர், அல்லா - ஆகிய இறை நெறியாளர் குறிப்பிடும் பெயர்களையும் சிலேடையாக அமைத்து, நமது சிந்தைக்குப் பாவலர் நல்விருந்து படைத்துள்ளார்;

''ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றும் இல்லாற்(கு) ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ?''

என்ற மாணிக்கவாசகரின் திருவாசகத்தை நினைப்பூட்டுகின்றார்; 'உலகோர் யாவரும் ஒரே குலத்தினர்; அன்னார் வழிபடும் தெய்வமும், ஒன்றே' என்ற திருமூலரின், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருமந்திரத்தைச் சிந்திக்கச் செய்கின்றார். இதனால் பாவலரின் உலக மதப் பொதுமை உள்ளத்தை உணர்கிறோம். திருவள்ளுவர், மாணிக்கவாசகர், இராமலிங்க அடிகளார் வளர்த்த தமிழர் கடவுள் நெறியைக் காண்கின்றோம். இங்கே, பாவலரின் நாயக மான்மிய மஞ்சரிச் செய்யுள் ஒன்றை ஒப்பு நோக்கி மகிழலாம். அஃதாவது:

''ஒன்றுதெய்வம் ஒன்றுமதம் ஒன்றுமக்கள் சாதிஎன
நன்றுபெற ஓதியவை நாட்டிநவில் நான்மறையும்
குன்றுபெறு தீபமெனக் கோத்(து)அருளிக் காத்தஉங்கள்
துன்றும்உயர் மாபெருமை சொல்லற்(கு) எளிதேயோ?
சோதிநபி நாயகமே சொல்லற்(கு) எளிதேயோ?''

மகாமதியின் நினைவாற்றல்!

[சுசீந்திரம் எஸ். கே. சுவாமி]

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. காலை ஒன்பது மணி இருக்கும். காலஞ்சென்ற ரஸிகர், கோட்டாறு வேலாயுத முதலியாரும் ஒரு தமிழ்ப் புலவரும் சதாவதானி பாவலர் வீட்டுக்கு வந்தார்கள். அந்நேரம் பாவலர் அவர்கள் வீட்டுக்குள்ளே உணவருந்திக் கொண்டிருந்தார்கள். புலமையைப் பாராட்டி மகிழும் பண்பு படைத்த வேலாயுத முதலியாரைக் கண்டதும் பாவலர், உள்ளேயிருந்தபடியே. "வாருங்கள், வாருங்கள்.... சும்மா உள்ளேயே வாருங்கள்" என்று உற்சாகமாக அழைத்தார்; முதலியார் சென்றார்.

"என்ன விசேஷம்? கூட வந்திருப்பவர் தமிழ்ப்புலவர் தானே" என்றார் பாவலர்.

"ஆமாம், அவர்கள் ஒரு சதகம் பாடியிருக்கிறார்கள்; அதற்குத் தங்கள் சாற்றுக் கவி வேண்டும். வேலூரிலிருந்து வந்திருக்கிறார்" என்றார் முதலியார்.

"அப்படியா.... பாடல்களைப் படிக்கட்டும். கேட்டுவிட்டுப் பாராட்டுப் பாடல் எழுதி உடனேயே தருகிறேன்" என்றார் பாவலர். வந்த புலவர் உற்சாகத்துடன் தாம் எழுதிக் கொண்டுவந்த பாடல்களைப் படிக்கத் தொடங்கினார். இருபது பாடல்கள் படித்து முடிவதற்குள் பாவலர் எழுந்து, சிரித்துக் கொண்டே வெளியே வந்தார்.

"என்னாங்க ஐயா! சிரிக்கிறீங்க?" என்றார் வேலாயுத முதலியார்.

எனவே, இதுகாறும் சொல்லியவாற்றால் அமரர் செய்குதம்பிப் பாவலர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளையும், உயரிய நோக்கங்கள் ஒரு சிலவற்றையும் உணர்ந்தோம். எளிய குடும்பத்திலே தோன்றினார்; தன் உழைப்பால்-முயற்சியால் சிறந்த தமிழ்ப் புலமை பெற்றார்; சதாவதானி, கலைக்கடல் என்ற பட்டங்களைப் பெற்றார்; விரைந்து கவிபாடும் திறமை உற்றார்; விரிவுரை, சொற்பொழிவு ஆற்றும் வீறு சான்றார். அவர் பேச்சிலே - உரையாடலிலே - செய்யுட்களிலே பல அணிகள் வந்து அழகு ஊட்டின; அவற்றில் சிலேடை சிறப்பிடம் பெற்றிருந்தது. அவற்றால் அவரது கலையில் தெளிவைக் கண்டோம்; கட்டுரை வன்மையினை உண்டோம். 'உலக மக்கள் யாவரும் ஓரினத்தவர்; அவர் வழிபடும் நெறி வேறுபடினும், இறைவன் ஒருவனே' என்ற அவரது கடவுட் பொதுமை நெறியினை உணர்ந்தோம்; "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற பூங்குன்றனாரின் பொன்மொழிக்கு இலக்கியம் ஆனதை அறிந்தோம். அன்னார் திருப்பெயர் வாழ்க.

இறுதியாக, அவர் வள்ளுவர் கட்டளையை வாய்ப்பாக நிறைவேற்றிய வல்லுநர் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை! ஒரு புதல்வன் தன் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமை யாது என்பதை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். மகன் தன் தந்தைக்குச் செய்யத் தகுந்த கைம்மாறு, 'இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ?' என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல் ஆகும். இஃது உலகில் தோன்றும் ஒவ்வொரு புதல்வனுக்கும் வள்ளுவர் வழங்கியுள்ள வாழ்வுக் கட்டளை - அற ஆணை - ஆகும். இதனை உறுதியாக நிறைவேற்றியவர்களில், நமது செய்குதம்பிப் பாவலர் அவர்கள் சிறந்தோர் ஆவார். "இவருக்குத் தந்தை ஆவதற்கு, 'பக்கிறு மீறான்' என்ற பண்பாளர் எந்த மலையிலே, எந்த முறையிலே, தவம் செய்தாரோ?" என்றிவ்வாறு, ஒரு புலவர் வியந்து பாராட்டியுள்ளார். அது,

"எக்கிரியில் எம்முறையில் என்னதவம் செய்தானோ?
'பக்கிறுமீ ரான்'என்னும் பண்புடையோன்-மிக்கபுகழ்
செந்தமிழ்சேர் நாவலனை செய்குதம்பிப் பாவலனை
தந்ததந்தை ஆவதற்குத் தான்."

★

"இந்தப் பாடல்கள் எல்லாம் பழைய பாடல்கள். இந்தப் புலவர் எழுதினதாகச் சொல்வது வியப்பாக இருக்கின்றது" என்று சொல்லிவிட்டு, அந்தப் பாடல்கள் இருபதையும் பாவலர் அப்படியே சொல்லி விட்டார்.

வந்த புலவருக்கு வியப்பும் திகைப்பும் தாங்கமுடியவில்லை. உண்மையில் அவர் எழுதிய பாடல்கள். இப்போது தாம் முந்திப் படித்ததாகவும் அவை பழைய தமிழ்ப் பாடல்கள் என்றும் சொன்னதோடு நில்லாமல், அவைகளை ஒரு எழுத்து விடாமல் ஒப்புவித்துவிட்டார் எப்படி இதை மறுக்க முடியும் வந்த புலவருக்கு. தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு வந்த வழியே கிளம்பினார். புலவரின் வருந்திய நிலைகண்டு பாவலர் அவர்கள் புன்முறுவல் பூத்த நிலையில், "ஐயா! புலவரே வருந்தாதீர். உமது புலமை பாராட்டுதற்குரியது. இந்தப் பாடல்களை நான் இதுவரை கேட்டதேயில்லை. நீர் படித்ததைக் கேட்டு எனது நினைவாற்றலினால் திருப்பி அப்படியே ஒப்பித்துவிட்டேன். இந்தா எழுதிக்கொள்ளுங்கள் எனது மதிப்புரையை" என்று சொல்லி, புலவரைத் தேற்றி சாற்றுக்கவியும் பாடிக்கொடுத்து அனுப்பிவைத்தார்.

புலவர், மகாமதியின் அற்புதமான நினைவாற்றலைப் பற்றி என்ன சொல்லவேண்டுமென்று தெரியாமல் விழித்தார். ஆனந்தக் கண்ணீர் வடிய பாவலர் பெருமானின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அப்போது பாவலர், "பெரும் புலமைக்கு அறிகுறி இம்மாதிரியான நினைவாற்றல். மறதியுடையவன் மந்தப்புத்திக்காரன். அவன் எவ்வளவு படித்தாலும் பயனில்லை" என்று சொன்னார். எப்படியிருக்கிறது மகாமதியின் நினைவாற்றலின் அற்புத நிலை!

அவதானம் செய்வது அரிய செயல் என்பது நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை; நாடறிந்த உண்மை. பாவலரின் மாணாக்கர்களில் ஒருவரான சுசீந்திரம், தசாவதானி ஆறுமுகம் பிள்ளை அவதானம் செய்வதை நான் இரண்டு மூன்று முறைப் பார்த்திருக்கிறேன். சென்னையில் இவர் அவதானம் செய்வதற்குக் காரணமாகயிருந்தவர்களில் நானும் ஒருவன். பெரும் பண்டிதர்கள் வட்டம் போட்டு இருந்துகொண்டு சிக்கலான கேள்விகளைக் கேட்பார்கள். இலக்கியம், இலக்கணம், சோதிடம், கண்டப் பத்திரிகை, ஈற்றடி தந்து பா இயற்றல்.... இப்படி பத்துக் காரியங்கள். எல்லாம் சரிவரச் செய்யவேண்டும். கணித சோதனை எப்படித் தெரியுமா? '1932-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12-ஆம் தேதி என்னகிழமை; உடனே சொல்லவேண்டும் விடை. தப்பினால் எல்லாம் தோல்விதான். இலக்கணக் கேள்விகள் மிக இறுக்கமானவையாக இருக்கும். எப்படியாவது அவதானியைத் தோற்கடிக்க வேண்டும் என்றுதான் பரிசோதர்களான புலவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு வந்து இருப்பார்கள். தமிழ்ப் புலவர்கள்தாம் நக்கீரர் கூட்டமல்லவா? — விடுவார்களா?

தசாவதானமே இப்படியென்றால், சதாவதானம் எப்படி இருக்கும் என்று எண்ணிக் கூடப் பார்க்க இயலவில்லை. நமது மகாமதி பாவலர் அவர்கள் நூறு அவதானம் செய்த பெருமான். இப் பெரும் புலவரின் நினைவாற்றலைச் சொல்லவும் வேண்டுமா?

பாவலர் அவர்கள் தேவாமிர்தப் பிரசங்கியார இவருடைய சொற்பொழிவு கேட்கக் கேட்க இனிக்கும்; இலக்கியம் கொழிக்கும்; கற்பனை மிளிரும்; கதைகள் சுடர்விட்டுப் பிரகாசித்து இன்ப ஒளி தரும். ஒரு தடவை கன்னியாகுமரிக்கு அருகாமையிலுள்ள கல்லுவிளை என்ற ஊருக்கு ஒரு திருமணத்திற்காகப் பாவலர் அவர்களும் நானும சென்றிருந்தோம். அங்கே கூடியிருந்தவர்கள் பாவலர் அவர்களை ஒரு சொற்பொழிவு செய்யவேண்டும் என்று கேட்டார்கள். கம்பராமாயணத்தில், கல்யாணப் பெண்ணின் வரிசைகளைப் பற்றிய பாடல்களைச் சொல்லி விளக்கம் சொன்னார். அற்புதமான விளக்கம். இப்படிப்பட்ட நவமான கருத்துக்களை நான் இன்றுவரையிலும் எவரிடமும் கேட்டதில்லை.

அன்று நாகர்கோவிலுக்கு வந்து கொண்டிருக்கும்போது, கம்பர் பாடலொன்றில் ஒரு ஐயதததைப் பாவலரிடம் மெதுவாகக்

கேட்டுவைத்தேன். சிங்கத்தைத் தட்டி எழுப்பிவிட்டேன்; கர்ஜனை செய்ய ஆரம்பித்தது பாவலர் சிங்கம். நான் அன்று கேட்ட ஐயத்தைக் கேளுங்களேன்; கம்பராமாயணத்தில் குகப்படலத்தில் பிரசித்தமான பாடல்.

''வந்தெதிரே தொழுதானை வணங்கினுன் மலரிருந்த
அந்தணனும் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினும் களிகூரத் தழுவினுன் தகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்''

இந்தப் பாடலுக்கு விரிவாக அர்த்தம் சொல்வார்கள் புலவர்கள். நீங்களும் கேட்டிருப்பீர்கள். நான் கேட்டது, "மலரிருந்த அந்தணனை பிரம்மதேவன் வணங்கும் பரதன், என்றுரே கம்பர். எப்போது நான்முகன், பரதனை வணங்கினுன்? ஏன் வணங்கினுன்?" என்பது. உடனே பாவலர் என்னைப் பார்த்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பில், "இது சாதாரணப் பொருள்தானே?'' என்ற எண்ணம் பம்மியிருந்தது.

"தம்பி! நான்முகனுக்கு அப்பன் பரதன்; அப்பனை மகன் வணங்குவது ஆச்சரியமா? நான்முகன் நல்ல பிள்ளை. தந்தையான பரதனை வணங்கினுன். அதனுல் நான்முகன் வணங்கும் பரதன என்றுர் கம்பர்''

பாவலரின் விடை எனக்கு மேலும் வியப்பைத் தந்தது. பரதனு,பிரம்மதேவனின் தந்தை! எப்படி? என்று மூக்கின்மேல் விரலை வைத்து யோசித்தேன்.

'' தெரியவில்லையா தம்பி ... கேட்டுக் கொள். திருமாலின் தொப்புளில் முளைத்த தாமரையில் தோன்றியவன் நான்முகன்; ஆகவே நான்முகனுக்குத் தந்தை திருமால். பரதன், திருமாலின் அம்சம்; அதனுல் பரதனும் நான்முகனின் தந்தைதானே'' என்று பாவலர் சொன்னதும் என் ஐயமும் தீர்ந்தது; அற்புதமான விளக்கமும் கிடைத்தது.

இப்படி எந்தக் கேள்வி கேட்டாலும் இருந்த இருப்பிலேயே - நின்ற நிலையிலேயே பொருத்தமான விடை சொல்லும் ஆழமான புலமை படைத்தவர் பாவலர். அற்புதமான நினைவாற்றல் உடையவர். கற்பனை நயமும் கருத்து வளமும் கரும்புச் சுவையும் கலந்த தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம். நாஞ்சில்நாடு தந்த நற்றமிழ்ப் புலவர் கோமான். தமிழ் நாட்டுப் புலவர்களெல்லாம் பாவலர் பெயரைக் கேட்டால் பயபக்தியுடன் எழுந்து நிற்பார்கள்.

கடைசியாக ஒரு சொல்; இப்புலவர் பெருமானுக்குத் தக்க நினைவு நிலையம் நாஞ்சில் நாட்டார் இன்றுவரையிலும் நிறுவவில்லை. இது வருந்தத்தக்கது மட்டுமல்ல, வெட்கக்கேடானதும் ஆகும். தகரடப்பாப் புலவர்களையெல்லாம் ஏதோ சில தனிப்பட்ட காரணங்களால் புகழ்ந்தேத்துவோர் உண்மையிலேயே தமிழ் மொழியின் ஆழமும் அகலமும் அளந்து கண்ட மகாமதி செய்குதம்பிப் பாவலருக்குச் சிறப்பான முறையில் ஒரு நினைவு நிலையம் கட்ட வேண்டுவது நியாயமானதல்லவா?

★ ★ ★

அறுசீரடியாசிரிய விருத்தம்.

தம்பிப்பார் மந்திரமும் தம்பிக்கு
மமுதமெனுந் தமிழு ணர்ந்து
வெம்பிப்போர் தொடுப்போரை
யாதவன்முன்
பணியாக விரட்டும் வீரன்
நம்பிப்பா தம்பணிவோர்க் கருட்டமிழாம்
நிதியளிக்கும நமது செய்குத்
தம்பிப்பா வலன்போல மினியாரைக்
கண்டிடுவோம தரணி மீதே.

வெண்பா

கம்பன் புகழேந்தி காளமே கமபடிக்கா
சின்பக் கவிசொல விரட்டையர்கள் — என்
பவர்போல்
அம்புவியிற் கண்டதுகோட் டாறவதா னச்
செய்குத்
தம்பியொரு பாவலரைத தான்.

கவிரத்தினம கே.வி. உடையார் பிள்ளை
(ஐயப்பசுவாமி)

T. S. N. M. Shaik Ahamed Peer Mohamed Mustafa
Land-Lord & Managing Trustee
T. S. N. CHARITIES
MADURAI.

வேண்டுகோள்!

அஞ்ஞான மூட மனத்தையுஞ் சுட்டெரித்
தாக்க வருண்முறைக் கூக்கமிக
விஞ்ஞான சோதி வியனொளி வீசியே
மேன்மை விளைத்திட்ட வித்தகர்யார்.
(சதாவதானி பாவலர்)

ஸ்ரீ சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்களின் நினைவாக வெளியாகும் மலரின் வழி இதைத் தெரிவிக்கும் வாய்ப்புத் தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கே எல்லாப் புகழும் உரித்தாகுக.

இஸ்லாமிய வழி முறைப்படி கல்வியைப் பரப்ப பொருளாதாரம் மிகவும் தேவையான நேரத்தில், நாம் பிறந்த நாள் விழா, நாமகரணம் சூட்டுவிழா, சுன்னத் என்னும் மார்க்க கல்யாண விழா, திருமுடி இறக்கு விழா, காதணிவிழா, திருமணவிழா என்று பல விழாக்கள் கொண்டாடி ஏராளமான பணத்தை விரயம் செய்து மானம் இழந்து, மதி கெட்டு, பல்லோர் நகைப்புக்கும், ஏளனத்திற்கும் ஆளாகிவிடும் அவல நிலையை எம்மதமும் ஆதரிக்கவில்லை. குறிப்பாக இஸ்லாம் மதம் ஆடம்பரத்தை அறவே வெறுக்கிறது.

இஸ்லாமிய அடிப்படையில் பள்ளிவாசல்களில் “நிகாஹ்” வைத்து நடத்தியும், உலக ரக்ஷகர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் “மீலாத் விழா” முடிவில் நிகாஹ் நடத்தியும், விருந்துபசேதனம் செய்தும், அநாவசிய ஆடம்பரச் செலவைக் குறைத்து மிகுதியாகும் பணத்தை கல்விக்காகச் செலவிட்டால் அறியாமை என்னும் இருள் நீங்கி, அறிவுச்சுடர் பரிமளிக்கும் என்பது என் எண்ணம். இதற்கு ஒவ்வொரு ஊர் வாசிகளும் கங்கணம் கட்டிக்கொண்டு, ஊதாரிச் செலவைக் குறைத்து, கல்விச் சாலைகள் அமைக்கப் பாடுபட்டு எல்லாம் வல்ல இறைவனின் திருப்பொருத்தத்தை நாடி ரகுமத்தைப் பெறும்படி கேட்டுக்கொள்கிறேன். பள்ளிவாசலில் நிகாஹ் செய்தல், மீலாத் விழாக்களில் சுன்னத் செய்தல் முதலிய காரியங்களுக்கு ஏற்பாடு செய்து எனக்கு தகவல் தெரிவித்தாலும், நானும் என் அருமை அன்புசால் மௌலவிகளும், பெரியோர்களும், தோழர்களும் வந்திருந்து நடத்தித்தர தயாராகக் காத்திருக்கிறோம் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்த விஷயம் சிறப்பாக நடைபெற பொருள் படைத்தவர்கள் முன்வந்து எல்லோருக்கும் வழிகாட்டும்படி வேண்டிக் கொள்கிறேன்.

T. S. N. M. S. A. P. M. MUSTAFA.

வேண்டுகோள்!

அன்புடையீர்!

எதிர்பாராத ஒரு சில காரணங்களால் மலரைக் குறித்த நேரத்தில் வெளிக்கொணர இயலாமற் போனமைக்கு மிக மிக வருந்துகின்றோம்; மலருக்குக் கவிதை, கட்டுரை, வாழ்த்துரை, விளம்பரம், நன்கொடை ஆகியவை தந்து ஒத்துழைத்த யாவரிடமும் மன்னிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

சதாவதானி பாவலர் மன்றத்தார்.

போதிய இடமின்மையின் காரணமாக ஒரு சில கவிதை, கட்டுரைகள் மலரில் இடம் பெறுமற் போயினமைக்கு மிக மிக வருந்துவதோடு அவைகளை எழுதியனுப்பிய எழுத்தாளர்களிடம் மன்னிக்குமாறு வேண்டுகின்றோம்.

சதாவதானி பாவலர் மன்றத்தார்.

தமிழ்ப் பெருமக்களே!

நீங்கள் படித்து முடித்த நல்ல நூல்கள் உங்களிடமிருப்பின் எங்கள் நூலக வளர்ச்சிக்கு அன்பளிப்பாக அனுப்பித்தந்து பலவகையிலும் உதவுமாறு பணிவன்புடன் விழைந்து வேண்டுகின்றோம்.

முகவரி:

சதாவதானி பாவலர் மன்றம்,
இடலாக்குடி,
நாகர்கோவில்.
(தமிழ்நாடு)

★

★ உந்தீற்றுச் சொற்கள் ★

(மா. இளையபெருமாள், M. A., M. Litt.)

புறநானூற்றின் சில பாடல்களில் (24, 137, 339, 343, 352, 380, 386, 395, 396, 400) ஆகுந்து, ஒலிக்குந்து, கறக்குந்து, சேர்க்குந்து, தாங்குந்து, பூக்குந்து, மறுக்குந்து போன்ற உருவமுடைய சொற்கள் காணப் படுகின்றன. இவற்றை ஆராய்ந்த அறிஞர்கள் பலரும் இவற்றின் இலக்கணத்தைப் பலவிதமாகக் காண்கின்றனர்.

புறநானூற்றின் பழைய உரையாசிரியர் அதன் 24-ஆம் பாடலில் வரும் பாயுந்து, தூங்குந்து, தரூஉந்து ஆகியசொற்களுக்குப் பாயும், தூங்கும், தரும் என்று முறையே பெயர் கொண்டு அவை பெயரெச்சம் என்று குறிப்பிடுவதோடு, 'அவை உம் உந்தாய் நின்றன' என்று கூறி ஒரு தொல்காப்பியச் சூத்திரத்தையும் நினைவு படுத்துகின்றார்.

"உம் உந்து ஆகும் இடனுமாருண்டே"

என்று இடையியலில் வருகின்ற இச் சொல்லதிகாரச் சூத்திரத்திற்கு உரை காணும் இளம்பூரணர் "வினைசெய் மருங்கின் காலமொடுவந்தது" என்று முதலில் கூற, "இத்திரிபு பெயரெச்சத்திற்கீருய வழி என்பது கருதிப்போலும்" என்று சேனவரையர் எழுத; "இத்திரிபு பெயரெச்சத்திற்கே கொள்க" என்று நச்சினார்க்கினியர் முடித்தெழுதுகிறார். தெய்வச்சிலையார் உட்பட இவ்வுரையாசிரியர்கள் நால்வரும் பெயர்க்குந்து, பாயுந்து, தூங்குந்து, தரூஉந்து ஆகிய புறநானூற்றுச் சொற்களையே (24, 395, 400) சான்றுகளாகக் காட்டுகின்றனர். செய்யும் செய்த ஆகிய பெயரெச்சங்களைப் பகுதி விகுதியாகப் பிரிக்காது அவற்றின் முழு வடிவத்தையே வாய்பாடாகக் குறிப்பிடும் தொல்காப்பியர், செய்யும் என்னும் ஈற்றும்மையை எண்ணும்மையோடு தொடர்பு படுத்துகிறாரா? இல்லையாயின் உம் காலவெழுத்து என்று எண்ணுகிறாரா? பெயரெச்சத்திற்கும் அது கொண்டு முடியும் பெயர்க்கும் இடையில் பலவேறு சொற்கள் அமைந்த நீண்ட தொடர்கள் வருவதை வேறு இடங்களில் காணமுடியவில்லையே என்பன போன்ற கேள்விகள் நம் உள்ளத்தில் எழுகின்றன.

மலையாள மொழியில் நிகழ்கால வினை முற்றாகப் பயன்படும் பாயுந்நு, பறிக்குந்நு முதலிய சொற்களைப் போல இவைகளும் வினைமுற்றுக்கள் என கே. என். சிவராஜ பிள்ளை தமது ஆராய்ச்சி நூலில் கூறுகிறார். செய்யும் என்னும் சொல்லைக் குறிப்பிடற்குத் தொல்காப்பியர் ஆளும் 'நிகழூஉ நின்ற' என்ற அடைமொழி இதற்கு ஆதரவு தந்தாலும், அதன் பிற்பகுதியாகிய 'பலர்வரை கிளவி,'

தொழுவர்	... ...	பாயுந்து
பரதவர்	... ...	தூங்குந்து
மைந்தர்	... .	தரூஉந்து
கோவலர்	... ...	பறிக்குந்து
மகளிர்	... ...	குறூஉந்து

என வரும் சான்றுகட்கு இலக்கணமாக அமையவில்லை. உந்தீற்றுச் சொற்களை வினைமுற்றாகக் கொள்வதற்கு இன்னொரு தடையும் எழலாம். அவ்வினைமுற்றுக்களால் எழும் தனி வாக்கியங்கள் பாட்டின் முக்கிய வாக்கியத்தோடு ஒட்டாது நிற்கும் நிலை உண்டாகிறது. உதாரணமாக 24-ஆம் பாடல், "தொழுவர் பாய்வர்; பரதவர் தூங்குவர்; மைந்தர் தருவர்; மகளிர் பாயும் நல்லூர் கெழீஇய மிழலையொடு முத்தூறு தந்த செழிய! நின்று நிலைஇயர் நின் நாண்மீன்" என அமைந்து, பாய்வர், தூங்குவர் முதலிய வினைமுற்றுத் தொடர்கள் தனித்து நிற்பதைக் காண்கிறோம்.

பாயுந்து முதலிய சொற்களைப் பாய்+உம்+து எனப் பிரித்து அவை வினையாலணையும் பெயர்கள் என டாக்டர் மு. வரதராசனார் கொள்வதை அவரது 'மொழி

கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை

★ வித்துவான் செ. அய்தர் அலி, B. A. ★

முன்னுரை:

ஓர் இலக்கியத்தை உணர்ந்தும் அறிந்தும் கற்கும்போதுதான் அவ்விலக்கியத்தின் உண்மைச் சுவை தெரியவரும் என்பதும், இலக்கியக் கல்விக்கு இவ்விருவகை அறிவும் தேவை என்பதும் இலக்கியச்சுவைஞர் அனைவரும் அறிந்த செய்தியாகும். இவ்வகையில் இலக்கியத்தின் உள்ளீடாக நிற்கும் உணர்ச்சியை உயிர்க்கும், வடிவம் சொல்லமைப்பு இலக்கணவமைதி ஆகியவற்றை உடலுக்கும் ஒப்பிடலாம். உயிரும் உடலும் இணையும்போது இயங்கும் வன்மை எய்தல் போல உணர்ச்சி இலக்கணவமைதி முதலியன இணைந்து உயரிய கவிதையாகும். உயிரில்லாத உடல் சிறப்புப் பெருமை போல உணர்ச்சி இல்லாக் கவிதை மதிப்புப் பெறுவதில்லை. குறையுடல் இகழப்படுமாறு போல இலக்கணவமைதி, சொல்லமைப்பு ஆகியவற்றில் குறைபாடுடைய பாடல் பழிக்கப்படும். செய்யுளுக்கு இலக்கணம் வகுத்த ஆசிரியர் பவணந்தியார், "...... உணர்வினில், வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" என்று குறிக்கும்போது உணர்வு என்னும் சொல்லை உணர்ச்சி, அறிவு என்னும் இருபொருள் படும்படிப் பயன்படுத்திக் கவிதையின் உண்மையை விளக்குகிறார்.

ஓர் உயர்ந்த கவிஞனின் படைப்பு அறிவுக்கும், உணர்வுக்கும் ஒருசேர இன்பம் தந்து படிப்போரை மகிழ்விப்பதாகும். கவிதையின் கட்டுக்கோப்பு, இலக்கணவமைதி ஆகியவற்றை ஆய்வது அறிவின் தொழிலாகும். அது கவிதையின் வெளிநிலைப் பண்புகளை ஆராய்வது. மொழி மரபு, இலக்கிய மரபு, இலக்கண விதிகள் முதலியவற்றை அளவு கோலாகக் கொண்டு கவிதையின் உயர்வு மதிப்பிடப்படும். ஆனால், கவிதையின் முழுச் சிறப்பும் அதன் வெளிநிலைப் பண்புகளில் அடங்கிவிடவில்லை. கவிதைக்கு இன்றியமையாதன என

யியற் கட்டுரைகள்' என்ற நூலில் காண்கிறோம். இவ்வாறு கொள்வதால் தொடர்நிலையில் பொருள் பொருத்தமுற அமைந்தாலும், தனிநிலையில் வினைமுற்றுக்களுக்கும் வினையாலணையும் பெயர்களுக்கும் அமைப்பு வேறுபாடில்லை என்பது நினைத்தற்குரியது. இனி இவைகளுக்குப் பாய்வது, பறிப்பது என்ற அமைப்பைக் கொள்வதானால், இச்சொற்களைப் பாய்தல், பறித்தல் ஆகிய தொழில்களைக் குறிப்பதினின்றும் விலக்க முடியாது. ஆகவே இத்தொழிற் பெயர்கள் இங்கு தொழில் நிகழும் இடத்தைக் குறிக்கின்றன என்று கொள்ளவும் இடம் கொடுக்கும்.

இனி இச் சொற்களை வினையெச்சமாகக் கொள்வதனால் பொருட் பொருத்தம் சிறப்பாக அமைகிறது என்பதையும் குறிப்பிடாமலிருக்க முடியாது. இவ்வினைகள் வெவ்வேறு வினை முதல்களைக் கொள்வதால் செய என்னும் வாய்பாடு மிகப் பொருத்தமாக அமைகிறது. எனவே தொழுவர் பாய, பரதவர் தூங்க, மைந்தர் தர, மகளிர் பாயும் நல்லூர் எனப் பொருள்தொடர்நிலை நன்கு அமையக் காண்கிறோம். அன்றியும் வினையெச்சங்களுக்கும் அவை கொண்டு முடியும் வினை முற்றுக்கும் இடையில் வெவ்வேறு சொற்களைக் கொண்ட தொடர்நிலைகள் வருவதை நீண்ட பாடல்களில் பரக்கக் காண்கிறோம். ஆனால் செய்யும் என்னும் வாய்பாட்டு வினையெச்சம் இல்லை என்பதைப் போன்ற தடைகள் இங்கு எழுவது நியாயமே.

இவ்வாறு பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று, வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் என்றெல்லாம் எண்ணவும் மறுக்கவும் இடங்கொடுக்கும் இச்சொல்லமைப்பு விந்தையினும் விந்தையல்லவா?

—★—

மேற்குப் புலத்து அறிஞர்களால் குறிக்கப்படும் உணர்ச்சி, வடிவம், இசை ஆகியவற்றில் உணர்ச்சியில்வழி ஏனைய இரண்டும் சிறவா என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த ஒன்றாகும். எனவே, கவிதையின் சிறப்பமைந்த பண்பாகிய உணர்ச்சிதான் ஒரு கவிஞரின் உயர்வை எடுத்துக்காட்டும் உண்மைப் பண்பாகும் என்பதை மனத்தில் இருத்த வேண்டும். உணர்ச்சியும் அது பற்றிய செய்திகளும் தொல்காப்பியரால் மெய்ப்பாட்டியலில் தெளிவாக ஆராயப்படுகின்றன. இவ்வாராய்ச்சி தமிழரின் இலக்கியச் சிந்தனையின் உயர்வுக்கு அரியதொரு சான்றாகும்.

உணர்ச்சி நிலைகளைகப் பிறக்கும் கவிதைகள் அவ்வுணர்ச்சியின் பல்வேறு நிலைகளைப் படம்பிடிக்க முயலும். காதலியின் கன்னக் குழியின் கவர்ச்சியில் ஈடுபட்ட காதலன் மாங்கனியிலும், உரோசாமலர் இதழிலும் அக்குழியினைத் தேடிப் பார்த்துக் காணாமையின் வருந்தியதாக அமையும் பாட்டில் காதலனின் உள்ள உணர்ச்சி தேங்கி நின்று படிப்போரின் உணர்ச்சிக்கு இன்பம் தரும். காட்டிலும், மலையிலும் கடவுளைத் தேடி அலைந்தான் ஒருவன். எங்கும் காணாமையின் வருந்தி நாடு திரும்பும்போது, காலொடிந்த மான்குட்டியின் அருகு நின்று கண்ணீர் வடிக்கும் நாயொன்றின் உள்ளக் கனிவில் கடவுளைக் கண்டதாக அமையும் கவிதையில் படிப்போரை இன்பக் கடலில் ஆழ்த்தும் உணர்ச்சிப் பெருக்கினைக் காணலாம். இவ்வுணர்ச்சிகளை வடித்தெடுத்து, அவற்றிற்குச் சரியான வடிவமும், இசையும் கொடுத்துக் கவிதை யாக்குவது வல்ல புலவர்க்கே முடிவதாகும். அத்தோன்ற தோற்றித் துறைபல முடித்த புலவர் பெருங்குழுவில் பாவலரவர்களும் ஒருவராவார். இத்தகைய சிறப்பமைந்த–கவிதைக் கலை மற்றும் கைவரப் பெற்ற–பாவலரவர்களின் கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலையை ஓரளவிற்கு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழிலக்கியத்தில் மாலை:

பல தனிப்பாடல்கள் சேர்ந்து ஒரு கருத்தை விளக்கும் நூல் மாலை எனப்படும். பல மலர்களால் தொடுக்கப்பட்டு அமையும் மாலையைப்போலப் பல பாடல்களால் இயற்றப்பட்ட நூலாதலின் இப்பெயர் பெற்றது.

> "அறமுதல் நான்கினுங் குறைபா டுடையது
> காப்பிய மென்று கருதப் படுமே"

என்னும் தண்டியலங்கார நூற்பாவின் விளக்கவுரையில் அதன் உரையாசிரியர் உலா, மடல், பிள்ளைத் தமிழ், பரணி முதலிய சிற்றிலக்கியங்களைச் சிறு காப்பியங்கள் என்று எழுதியிருப்பதால் மாலையும் சிறு காப்பியமாகும்.

இம்மாலை ஓரினப் பாடல்களாலும், பலவினப் பாடல்களாலும் பாடப்பெறும். ஓரினப் பாடல்களால் பாடப் பெறும் மாலைகள் பொதுவாக, எண் சுட்டும் அடையின்றி மாலையென்றும், ஏனையன எண் சுட்டும் அடைபுணர்ந்தும் அழைக்கப்பெறும். இரட்டை மணிமாலை, மும்மணி மாலை, நான்மணி மாலை முதலியன காணத்தக்கன. கலிவெண்பாட்டால் செய்யப்பட்ட திருக்கைலாய ஞானவுலா, "உலா" என்னும் பெயரால் அழைக்கப்பெறவும், அது போன்று செய்யப்பட்ட ஆளுடைய பிள்ளையார் திருவுலா, "உலா மாலை" என்னும் பெயரால் அழைக்கப் பெறுவது ஈண்டு குறிக்கத்தக்கது. ஒருசார் மாலைகள் அந்தாதிகளாகவும் பாடப் பெறும். இனி, மாலை நூலில் இத்துணைப் பாடல்கள் இருக்க வேண்டுமென்ற திட்டமானதொரு வரையறை இல்லை. முப்பது, நாற்பது, நூறு என்று பாடல்கள் அமைந்த மாலைகள் உள. கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை கல்வத்து நாயகம் அவர்களின் மீது பாடப்பட்ட இனிய இசை பொருந்திய பாடல்களைக் கொண்ட மாலையாகும். இம்மாலை, காப்புச் செய்யுள் நீங்கலாக நூறு பாடல்களையுடையது. சுரிதகம் இல்லாத் தரவுக் கொச்சகக் கலிப்பாவான் இயன்றது.

கல்வத்து நாயகத்தின் வரலாறு:

தென்பாண்டி நாட்டுக் கீழக்கரையில் மாப்பிள்ளை ஆலிம் என்றொரு பண்பாளர் வாழ்ந்து வந்தார். இவர் தம் மனைவியார் பெயர் சாரா உம்மாள் என்பதாகும். இவர்களுக்கு இசுரி 1264-ஆம் ஆண்டு அருந்தவத்தின் பயனனைய ஆண்மகவு ஒன்று

பிறந்தது. பெற்றோர் தமதருமை மகவிற்குச் செய்யது அப்துல் காதிர் என்னும் பெயரிட்டுச் சிறப்புடன் வளர்த்தனர். அப்துல் காதிர் தமது இளம் பருவத்திலேயே படிக்க வேண்டிய நூற்களைப் படித்தார், அரபியும் தமிழும் கற்று வல்லமை பெற்றார். இறை நாட்டத்தில் ஈடுபடுவது அவர்க்குப் பொழுது போக்காய் அமைந்தது. அரபி மொழியில் திறமை பெற்ற இவர், இசுலாமியத் தத்துவத்தைப் பற்றி அரபி மொழியில் சில நூற்களை எழுதினர். இவர் சிறப்புக் காரணமாக 'கல்வத்து நாயகம்' என்று அழைக்கப்பட்டார். இவர் பற்றிய பிற செய்திகள் விரிப்பின் பெருகும்.

இசுலாமிய தத்துவ மாமேதையாகவும், இறைவனின் இனிய தொண்டராகவும் இலங்கிய இவரது வாழ்க்கையும், வாக்கும் இசுலாமிய அடியார்களின் சிந்தையைக் கவர்ந்ததில் வியப்பில்லை. கடலை நோக்கிச் செல்லும் ஆறுகள் போல இசுலாமிய நல் ஞானம் பெற விரும்பிய நல்லடியார்களின் திருக்கூட்டம் கீழக்கரையை நோக்கியே பாய்வதாயிற்று. கல்வத்து நாயகம் செய்யது அப்துல் காதிர் ஒரு ஒளி விளக்குப் போல் நின்று நம்பிக்கை இழந்தவர்க்கும், நல்லறிவு பெற விரும்பியவர்க்கும் வழி காட்டினர். இத்தகைய பேரறிஞரின் எண்ணமும் செயலும், பாவலர் அவர்களையும் கவர்ந்தன. தம்முடைய உள்ளத்தில் பொங்கி வரும் உணர்ச்சிகளைக் கல்வத்து நாயகத்தின் முன்னல் கொட்டித் தீர்த்துவிட அவர் துடிதுடித்தார். மனம், வாக்கு, காயம் பற்றிய அழுக்குகள் கல்வத்து நாயகத்தின் கண் பார்வை மூலம் கரைந்து போய்விடுமென்று அவர் கருதினர். நிலையாமை பற்றிய எண்ணங்கள் அவர் உள்ளத்தில் மாறி மாறி எழுந்து நிலையான வாழ்க்கை பெறத்தூண்டின. எனவே, அவர் கல்வத்து நாயகத்தைத் தம்முடைய காவலராகக் கருதினர். தம்முடைய குறைகளை அவரிடத்தில் எடுத்துக்கூறிக் கடைத்தேற விரும்பினர். அந்த எண்ணம் கல்வத்து நாயகம் வர்களின் மீது பாடப்பட்ட இன்னிசைப் பாமாலையாக உருவெடுத்தது.



எழுதியவர்

தொண்டர் வழிபாடு:

கல்வத்து நாயகத்தின் பெருமையைப் பற்றிப் பாடும் பாவலரவர்கள்,

"பேணுவது நும்மருளே பேசுவது நுந்நாமம்
பூணுவது நும்மலர்த்தாள் போற்றுவது
நும்புகழே
காணுவது நும்மறதி நண்ணுவது நுஞ்சமுகங்
காணுவது நுங்காட்சி கல்வத்து நாயகமே"

எனப் போற்றுகிறர். இசுலாமிய சமயத்தின் படி உயிர்களின் வணக்கத்திற்குரியவன் இறைவன் ஒருவனேயாகும். எத்தகைய வணக்கமும் அவனை நோக்கியே செய்யப்படவேண்டும்; எத்தகைய வேண்டுகோளும் அவனிடத்திலேயே கேட்கப்படவேண்டும். 'வணக்கத்திற்குரியவன் இறைவனைத் தவிர யாருமே இல்லை' என்னும் கொள்கை இசுலாத்தின் அடிப்படையாகும். எனவே, மேலே காட்டிய பாடலில் (இதைப் போன்ற கருத்தமைந்த பாடல்கள் நூலில் பல உள) பாவலரவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் இசுலாமிய சமயத்திற்குப் புறம்பானவை ஆகாவா? 'உம்முடைய பாதத்தையே பணிகிறேன்; உம்முடைய புகழையே போற்றுகிறேன்; உம்மை மறப்பதையே நாணுகிறேன்' எனப் பாவலரவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் இசுலாமிய சமயத்திற்கு முரணானவை ஆகாவா? உள்ளபடியே இது பெரியதொரு சிக்கலாகும். தமிழ் நாட்டுச் சைவ சமயம் தொண்டர் வழிபாட்டைப் போற்றுகிறது. அது குறிப்பிடும் மூவகை வழிபாடுகளில் தொண்டர் வழிபாடும் ஒன்றுகும். ஆனல் இசுலாம் இதற்கு முற்றிலும் மாறுனதாகும். அது உருவ வழிபாட்டைக் கண்டித்துத் தூய உள்ளத்

தோடு இறைவனை நோக்கிச் செய்யப்படும் வழிபாடு ஒன்றினையே உயர்வானதாக மதிப்பிட்டுள்ளது. எனவே, மேலே காட்டிய கொள்கை இசுலாமியக் கொள்கைக்குப் புறம்பானதாக வெளிப்பார்வைக்குக் காட்சியளிக்கிறது. ஆனல் பாவலரவர்கள் இப்படிக் கருதியதற்கு நல்ல காரணம் இருக்கவேண்டும். தொண்டர் வழிபாட்டிற்குச் சைவர் கூறும் காரணங்களைப் போலாது ஓர் இசுலாமிய நல்லடியானின் கண்ணோட்டத்தோடு அதனைக் கண்டறிய முயலவேண்டும். வாழ்க்கையில் நிலையாமை எண்ணங்களால் அலைக்கழிப்புண்ட அடியான் தூய தொண்டர் ஒருவரைக் காண்கிருன். தன்னுடைய குறைபாடுகளை அவரிடம் எடுத்துச் சொல்லுவதின் மூலம், தனது இதயத்தின் இருள்படிந்த பகுதிகளை அவருக்குத் திறந்து காட்டுவதின் மூலம் தன்னுடைய துன்பச் சுமை குறையும் என்று அவன் கருதுகிருன். அத் தூய்மையாளரைப் பற்றிய எண்ணங்கள் ஈனக் கவலைகளை எளிதில் மாற்றி வாழ்க்கையில் நம்பிக்கையும் உறுதியும் கொள்ளச் செய்கின்றன. பற்றிப் பிடிக்கும் பாச உணர்ச்சிகளை உதறித் தள்ளிவிட்டுச் செல்லுமிடம் நோக்கி விரைந்து நடக்க அவனுக்கு உதவுகின்றன. எனவே, ஒரு தூய்மையாளரின் சந்திப்பு, அவரைப் பற்றிய ஒழிவற்ற எண்ணம், அவர் புகழ் நினைக்கும் உறுதி ஆகியவை அவன் வாழ்க்கையில் ஒரு திருப்பு மையத்தை ஏற்படுத்துகின்றன. இந்தத் திருப்பு மையம் உண்மையில் அவனுடைய சமய வாழ்க்கையின் தொடக்கமாக அமைகிறது. ஆகவே, கல்வத்து நாயகத்தின் பெருமையில் பாவலரின் உள்ளம் படிந்த செயலும், அவர்தம் சிறப்பை ஓயாமல் போற்ற வேண்டுமென்ற எண்ணமும் குறையகற்றும் ஒரு பெரும் இறைவனின் பெருமையைப் பாவலரவர்களின் உள்ளத்தில் படியச் செய்து அந்தப் பாதை நோக்கி அவரை உந்தித் தள்ளுவதை ஆய்ந்தறியும் உள்ளங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

பக்திச்சுவை:

திருவாசகத்தை மதிப்பிட்ட அறிஞர் ஒருவர் 'இதற்கு உருகார், எதற்கும் உருகார்' என்றுர். கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலையை மற்றுமொரு திருவாசகம் எனலாம். தேர்ந்தெடுத்த எளிய இனிய சொற்களில் சிலேடை எமகம் திரிபுகள் அதிகம் கலவாது பாடல் இயற்றிப் படிப்போர் நெஞ்சை உருக்குவது மாணிக்கவாசகரின் பண்பாகும். இப்பண்பு பாவலரவர்களிடத்திலும் காணப்படுகிறது. கழிந்த காலச் செயல்களை எண்ணி எண்ணி வருந்தி,

"பொல்லாரைக் கூடியவர் போநெறிக்கே
போந்தலைந்து
நல்லாரைக் காணவுகான் நாணுகின்றேன்
நாய்க்குணத்தேன்
இல்லாரை யுள்ளார்போன் றெள்ளகிலீர்
ஏற்றருள்வீர்"

எனக் கதறும்போதும் சரி, மையலால் மாயச் சிற்றின்ப நிலை நச்சி வாழும் நிலைக்கிரங்கி,

"மைதுாக்கிச் சேலொதுக்கு மங்கைமட
மாதர்விழிக்
கைதூக்கி நெஞ்சமுங்கி யிடழிந்து
நின்றவெனைப்
பைதூக்கி யாடரவப் பாழ்நரகிற் புக்காமற்
கைதூக்கி ஆளும்"

என வேண்டிக் கொள்ளும்போதும் சரி, நெஞ்சை உருக்கும் சோகச் சுவையை வடித்தெடுத்துத்தரும் பாவலரின் ஆற்றலைக் காணலாம்.

உண்டுடுத்துறங்கி வாழும் வாழ்க்கை உயரிய வாழ்க்கையாகாது. இவைதாம் வாழ்க்கையில் பெறத்தக்க பேறுகள் எனின் விலங்கினத்திற்கும் மக்களினத்திற்கும் வேறுபாடு இல்லை. ஆனல், மனிதனுடைய வாழ்க்கை குறிக்கோள் உடையதாக அமைய வேண்டும். மண், பொன், பெண் ஆகியவற்றினல் பெறும் இன்பம் நிலையற்றது என்றுணரும் அறிவு பெற வேண்டும். நிலையற்ற இவற்றிற்காக ஓயாது போரிடுவதை அகற்றி நிலையான வாழ்க்கையைக் கண்டறிய முயலவேண்டும். கல்வியின் பயன் வாலறிவனைத் தொழுதல் என்பது வள்ளுவர் கருத்து. மன்னு வாழ்க்கையைக் கண்டறியாமல் 'சோறு கண்ட இடம் சொர்க்கம்' என்று வாழ்தல் நன்றன்று. இத்தகைய பொய் வாழ்க்கை இம் மண்ணுலகில் எவ்வளவு சிறப்புடையதாக அமையினும் அஃது ஊதியம் பெறும் வாழ்க்கையாகாது. இக்கருத்தைப் பாவலரவர்கள்,

"உண்ணுவதுந் தூங்குவது மோய்ந்தெழுந்து
மற்றையநாட்
டெண்ணுவதும் வேலையென வெண்ணுநர்க்கா
ளாகாமல்
பண்ணுவது நும்பூசை பாடுவது நுங்கீர்த்தி
அண்ணுவது நும்மருளாங் கல்வத்து நாயகமே"

எனத் தெளிவுபெற விளக்கியிருப்பது படித்தின்புறத் தக்கது.

உண்மையுணர்ந்து, பக்திச்சுவையில் தோய்ந்து நிற்கும் பக்தனின் உள்ளத்தை விடவும் சிறந்த பொருள் எதுவும் இல்லை. தன்னைக் கடைத்தேற்றினல் அந்த நெஞ்சையே காணிக்கையாகத் தந்துவிடுவதாக அடியான் தெரிவித்துக்கொண்டால் அது வியப்பிற்குரிய செயலல்லவா? கல்வத்து நாயகத்தின் அருள்பெற அத்தகைய செயல் செய்யவும் பாவலரவர்கள் தயாராகிருர்.

'மாணிக்கை யொத்தமொழி மங்கைநல்லார்
மாமோகம்
பேணிக்கை கொண்டலைக்க பித்தனையாட்
கொண்டாக்கால்
பூணிக்கை வைத்தெழுந்தும் பொன்னடிக்கென்
னேழைநெஞ்சைக்
காணிக்கை வையேனே கல்வத்து நாயகமே'

பாவலரின் உவமைகள்:

பாவலரவர்களின் பாடல்களில் காணப்பெறும் குறிப்பிடத்தக்கதொரு சிறப்பு அவர்தம் உவமைகளாகும். உளக் கருத்தைத் தெளிவுபெற விளக்க உவமை சிறந்த கருவியாகும் என்பர். அதிலும் சூழ்நிலைக்கேற்பச் சிறந்த உவமைகளைத் தேர்ந்தெடுத்து வழங்கின் இலக்கியத்தின் சுவை மேம்படும். பாவலரவர்கள் கருத்து விளக்கத்திற்குக் காட்டும் உவமைகள், 'உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்' (தொல். பொருள். உவமை-8) என்னும் விதிக்கு முற்றிலும் ஒத்து, படிப்போருக்குக் கழிபேருவகை நல்கும்.

தன்னைத் துன்பப் படுகுழியிலிருந்து கரையேற்றவேண்டும்; காலிலிடும் செருப்பாகவாவது பயன்படுத்தித் தன்னுடைய சிறுமையை நீக்கவேண்டும் என்று கல்வத்து நாயகத்தை வேண்டிக் கொள்ளும் பாடலில் பாவலரவர்கள் செய்துள்ள உவமைகள் நனிசிறந்தன.

"சுழலிலிடு பஞ்சென்னச் சூழ்கமரிற்
பாலென்னத்
தழலிலிடு நெய்யென்னத் தத்தளித்து
மாளாதுந்
நிழலிலிடு தூளென்ன நின்றுய்ய
நன்றுவந்தேன்
கழலிலிடு தோலாக்கீர் கல்வத்து நாயகமே"

கழலிலிடும் செருப்பாக என்னைத் தேய்ந்து மாய்ந்து போகவிட்டு விடாதீர்கள் என்னுமொரு கருத்தும் பாடலில் அமைந்துள்ளமை காண்க. புயல் காற்றில் அடிபட்ட பஞ்சைப் போலவும், கமரில் அகப்பட்ட பாலைப் போலவும், தழலில் அகப்பட்ட நெய்யைப் போலவும துன்பப்படும் என்னை உம் காலில் அணியும் செருப்பாகவேனும் ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதிலுள்ள நயத்தை அறிந்து இன்புறுக. வேறு எதற்கும் தான் பயனபடாது போய்விட்டாலும் செருப்பிற்காவது பயன் பட வேண்டும் என்றெழும் ஆசை கவிஞரின் பக்திப் பெருக்கைத் தெளிவாகக் காட்டுகிறது.

பொய் வாழ்க்கையை விரும்பி அலையும் மாக்களை 'வேட்டகத்தி லுண்ணவெகு வேட்கைகொளும்' வீணனுக்கு இவர் உவமிக்கிருர். வேட்டகத்தில் உண்டு வாழ்வான் எல்லாராலும் எள்ளப்பட்டு இறுதியில் கையறவுற்றுக் கருத்தழிதல் போல மாய வாழ்க்கையில் மனம் வைத்தான் இறுதியில் தன் பொல்லா வாழ்வை எண்ணி எண்ணி ஏங்கிச் செயலழிதல திண்ணம். எனவே, அத்தகைய பொய்வாழ்க்கையை மாற்றித் தனக்கு நல்வாழ்வைத் தந்தருள வேண்டுமென இவர் கல்வத்து நாயகத்திடம் வேண்டிக் கொள்கிருர்.

கல்வத்து நாயகத்தின் அருளைப்பெற விரும்பிய அடியார்கள் நாயகமவர்களின் அருளை மெத்த உண்டு பயனடைந்தபோது, கவிஞர் மட்டும் வெங்காம வெள்ளமுண்டு வருந்துகிருர். கல்வத்து நாயகத்தின் அருளை உண்டவர்களைத் துள்ளும் மறிகளாகவும், அருள் பெருத தன்னைக் கள்ளுண்ட நாயாகவும் கவிஞர் கூறுவது படித்து இன்புறத் தக்கது.

சொற்சுவை:

சொல்லாட்சி முற்றும் கைவரப்பெற்ற புலவர்களில் நம் பாவலரவர்களும் ஒருவ ராவர். இவ்வகையில் பாவலரைக் கம்ப னோடும் சேக்கிழாரோடும் ஒப்பிடலாம். பாவலரவர்கள் பெருங்காப்பியம் செய்திற் றிலர். பாவலரவர்கள் பெருங் காப்பியமும் செய்திருப்பின் இன்னொரு கம்பனாகவோ சேக்கிழாராகவோ திகழ்ந்திருப்பார்கள் என்பது முற்றிலும் உண்மையாகும். பாவ லரவர்கள் தமிழ் இலக்கியக் கடலை நிலை கண்டுணர்ந்தவராகையால் தேர்ந்தெடுத்த சொற்களால் பா இயற்றுவதில் வன்மை பெற்றிருந்தார். அவர்தம் சொல்லாட்சி, பண்டிதரையும், பாமரரையும் ஒரு சேர மகிழ்விப்பதாகும். சான்றாகச் சில காண் போம்:

‘வானாடும் பூநாடு மற்றனவுந் தானாட
நானாடு நும்மருட்டேன் நாயேனுண் டுய்யேனோ
ஊனாடு மாக்தரெலா முண்ணாட முன்னாடுங்
கானாடும் பூம்பதத்தீர் கல்வத்து நாயகமே’

நாடு என்னும் முதனிலைத் தொழிற் பெயர் இப்பாடலில் பாவலரால் ஆளப்பட்டு மாட்சிமிக்க சுவை பயப்பதும், சொல் பின் வரு நிலையணியாக அமைந்து இசைக்குப் புதியதொரு மெருகூட்டிச் சுவையூட்டு வதும் காணத்தக்கன. இதைப் போன்றே

‘மண்ணொளியும் பொன்னொளியும் வாய்ந்தபல
மாமணியின்
றண்ணொளியு நுங்கமலத் தாளொளிக்கோ
வொவ்வாவே
விண்ணொளியு முற்றபல வேற்றொளியு
மன்பருளக்
கண்ணொளியுங் காண்பருமெங் கல்வத்து
நாயகமே’

என்னும் பாடலில் அமைந்துள்ள சொல் லாட்சியும் ஓசை நயமும் கற்போர் உள்ளத் தைக் கனிவித்தல் கண்கூடு.

சிறந்த பாடல்கள் சில:

1. கொக்கிவிட்ட சங்கிலிபோற் கூண்டெழுந்து
நும்மடியார்
சொக்கிவிட்ட கல்லருட்கே தோய்ந்துநின்றா
ரையோநா
னுக்கிவிட்ட நெஞ்சினனா யுள்ளுடைந்து
மெய்ம்மடங்கிக்
கக்கிவிட்ட தம்பலொத்தேன் கல்வத்து
நாயகமே.

2. வேல்சேர வோடரிக்கண் மெல்லிநல்லார்
வேட்கையினம்
பால்சேர நின்றீர்த்த பாசவலைப் பட்டொரீஇ
மேல்சேரக் கைசேர மெய்சேர வாய்சேரக்
கால்சேர நின்றிளைத்தேன் கல்வத்து
நாயகமே.,

3. மானூருங் கோட்டூரும் வாய்ந்தகடைக்
காவூரும்
வேலூருங் கீழூரு மெல்லியர்பால்
வேட்பேனோ
சேலூரும் பண்ணைவாற் சென்றுடைத்த
முக்கனித்தேன்
காலூருஞ் செம்பிநகர் கல்வத்து நாயகமே.

முடிவுரை:

ஒரு பக்தன் அவன் ஆற்றாமையை முறையிட்டு நல்வழி பெறுகின்ற வகையில் எழுதப்பட்டதாகையால் பாவலரவர்களின் இன்னிசைப் பாமாலை ஒரு பக்தி நூலுக்கு வேண்டிய தகுதிகள் அனைத்தும் கொண்டி லங்குகிறது. பக்தன் தன் உள்ளத்தைத் திறந்து காட்டும் நெஞ்சை உருக்கும் பகுதி கள் சிலவற்றை இந்நூலெங்கும் பரக்கக் காணலாம். பாவலரவர்கள் சிற்றின்பத் தைப் பெரிதும் கடிந்துள்ளார்கள். பெண் களைச் சிற்றின்பக் கருவிகள் எனக் கருதிக் கடியும் குணம் பிற்காலத்ததாகும். பாவலர வர்களும் ‘சிற்றின்பக் கருவிகளாம்’ பெண் களைக் கடிவதில் சிறிதும் பின்வாங்கவில்லை. இக்கருத்து இந்நூலில் ஆழப் பதிந்துள் ளமை காலத்தின் சாயல் போலும். நூலெங் கும் நிலையாமை பற்றிய இசுலாமியக் கருத் துக்களும், தமிழ்க் கருததுக்களும் கைகோத் துக்கொண்டு காட்சி அளிப்பது இந்நூலின் தனித்ததொரு பெருமையாகும்.

பிறந்த நாட்டிற்குப் பெருமை தேடித் தந்த பாவலரவர்களின் இன்னிசைப் பாமாலை படிப்பார் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அரியதொரு நூலாகும். அதன் இலக்கணச் செறிவும், உவமை நயமும், ஓசைச் சிறப்பும் தமிழிலக்கியத்தில் காலத் தால் மறையாக் கவின்மிகு பெருமையை அதற்குப் பெற்றுத் தருகின்றன. **இன்னி சைப் பாமாலை**, பாவலரவர்களின் இலக் கியப் புலமைக்கும், இலக்கியத் தொண்டிற் கும் சரியான சான்று என்றால் அது மிகை படக் கூறியதாகாது.

★

பெண் மாட்சி

★★

(சதாவதானி பாவலர்)

பெண்ணே பெண்ணே பெண்மணியே
பெருமை நிறைந்த பெட்டகமே
பண்ணே நிகர்த்த மொழிமறவாப்
பைம்பொற் கிளியே பசுந்தேனே!

பூமா தேவி நீயானாய்
புகழின் செல்வி நீயானாய்
நாமா மகளும் நீயானாய்
நளினத் தலைவி நீயன்றோ?

நாவி லொருவன் இடத்தொருவன்
நறைசேர் மார்பி னடுவொருவன்
ஆவி யனைய வைத்ததுன்னை
அல்லால் யாரோ அறையாயே?

சிருட்டிக் காசா யெழுந்தனையே
ஜெகத்தின் வடிவாய்த் திகழ்ந்தனையே
இருட்டி மறைந்த வுலகினுக்கே
ஏற்றி வைத்த விளக்கானாய்

கொள்ளுங் கணவர்க் குயிரானாய்
கூறு மமைச்சுந் தானானாய்
அள்ளும் பிணிக்கோ ரமுதானாய்
அறத்திற் குகந்த துணையானாய்!

நல்லா ரெவர்க்கும் தொழும்பானாய்
நவைதீர் விருந்தி னடபானாய்
இல்லார்க் கிரங்கும் பொழிலானாய்
இயல்நாற் குணத்திற் கிருப்பானாய்!

சிற்றிற் சிதைக்கு மகவானாய்
சிறுவர்க் கூட்டுந் தாயானாய்
பற்றிற் காக்கும் பாட்டியெனப்
பரிவோ டுறவுந் தாங்கினையே!

கற்பிற் கிலக்காய் நின்றனையே
காய்தீக் குளித்துக் களித்தனையே
அற்பிற் கணவ னுயிர்கவர்ந்த
அந்த கன்கை மீட்டனையே!

உறுவ தோரா தொருமூவர்
உரைத்த மொழிக்கே உட்டுணுக்கிச்
சிறுவ ராக்கித் தொட்டிலிட்டுச்
சிறப்போ டாட்டி மகிழ்ந்தனையே!

உரிய உரிய அரையினிடை
ஓங்கி வளருந் துகில்காட்டி
அரிய மகிமை விளைத்தனையே!
அழியாப் புகழும் பெற்றனையே!

எல்லாம் நீயே இல்லையெனில்
எல்லா மில்லை யென்றுரைக்கும்
வல்லார் வாய்மைக் கொருசான்றாய்
வந்தா யிருந்தாய் வாழ்ந்தாயே!

வாய்ந்த வுன்றன் மாட்சியெலாம்
வவ்விப் பறித்த மாக்களினி
ஆய்ந்து தெளியுங் காலமிதோ?
அடுத்த தடுத்த தறிவாயே!

★

THE STUDENTS TUTORIAL INSTITUTE (Estd. 1947)

மாணவர் தனிக்கல்லூரி:- திருநெல்வேலி, நாகர்கோவில்.

புதிய கிளை:- மேட்டுக்கடை, தக்கலை.

S. S. L. C. பரீட்சை மார்ச் 1962 ★ அக்டோபர் 1962

1. இக் கல்லூரியின் கிளைகள் நெல்லையில் மூன்றும் நாகர்கோவிலில் ஒன்றும் உள்ளன. அவற்றில் இவ்வாண்டில் 1400 மாணவர்கள் S. S. L. C. பரீட்சைக்கும், 350 மாணவர்கள் P. U. C. பரீட்சைக்கும் படித்துப் பயன் பெற்றுள்ளார்கள்.

2. தக்கலை வட்டாரத்திலுள்ள மாணவ மாணவியரின் வசதிக்காக எங்கள் புதிய கிளையொன்றை 1962 ஜனவரி மாத முதல் தக்கலையில் திறவிப் பயிற்சியளித்து வருகிறோம். செலக்ஷன் கிடைக்காத மாணவர்கள் 1962 மார்ச் மாதம் முதல் சேரலாம்.

3. பட்டம் பெற்றவர்களும் நீண்டகால அனுபவமும் உடைய ஆசிரியர்கள் பாடங்கள் போதிப்பார்கள். அவர்களுள் சிலரது பெயர் பின் வருமாறு:-

1. N. வானமாமலை M. A. L. T. (பிரின்ஸ்பால்) 2. K. ஸ்ரீனிவாசன் B. Sc. (டைரக்டர்) 3. S. N. வேல்தாஸ் B. A. B. L. (கௌரவ ஆசிரியர்) 4. A. S. பிரான்சிஸ் B.Sc. B. L. (கௌரவ ஆசிரியர்) 5. T. S, நாராயணன் B. A. 6. M. தேவதாசன் M. A. B. Com. 7. C. W. எலியட் B. A. 8. ஜேஸிந்த் மெண்டஸ் B. A. 9. I. நீதியப்பன் B. A B. T. 10. S. தோதாத்திரி B. A. B. T. 11. வித்துவான் N. அபுபக்கர் B. A. 12 மாதவன் நாயர் (மலையாள வித்துவான்) 13. ஜேம்ஸ் ஞானமுத்து B. A. L. T. 14. பென் ஆல்பர்ட் B. A. L. T. 15. R. முத்தையா பிள்ளை M. A. L. T. 16. K. ரெங்கசாமி M. A. 17. C. சுப்பிரமணியம் M.A. 18. K. S. கிருஷ்ணன் M. A. L. T. 19. கோமதிநாயகம் பிள்ளை B. A. L. T.

4. எல்லாப் பாடங்களுக்கும் அச்சுக் குறிப்புகளும் வினா விடைகளும் அளிக்கப்படும். மலையாளத்திலும் தமிழிலும் வகுப்புகள் உண்டு. பிரதேச மொழியாக தமிழும், மலையாளமும் கற்பிக்கப்படும் பழைய திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் தனித்தனியாக வகுப்புகள் நடைபெறும் மாணவ, மாணவியர் குறைந்த மார்க்குகள் வாங்கும் பாடங்களில் தனித்தனியாகக் கவனம் செலுத்தி, அவர்கள் நல்ல தேர்ச்சிபெற உதவியளிக்கப்படும்.

வாராவாரம் ஒருமணி நேரத் தேர்வுகளும், மாதம் ஒரு முறை அரசினர் தேர்வின் மாதிரியில் தேர்வுகளும் பயிற்சி இறுதியில் இரண்டு வாரங்கள தினப் பரீட்சைகளும், கடைசியில் பள்ளியிறுதிப் பரீட்சையும் நடத்தப்படும். இவற்றில் எங்கள் ஆசிரியர் குழுவினர் தேர்ந்தெடுக்கும் வினாக்களே பெரும்பாலும் S. S. L. C. பரீட்சையில் வரும்.

எங்கள் பழைய மாணவர்களில் பலர் தக்கலைப் பகுதியில் உள்ளனர். அவர்களிடம் இக்கல்லூரியின் பயிற்சித் தரத்தைப் பற்றி விசாரித்துப் பாருங்கள்.

1962 மார்ச் பரீட்சைக்கு வகுப்பு 8-1-'62 முதல் நடைபெறுகிறது.

1962 அக்டோபர் பரீட்சைக்கு (செலக்ஷன் பெறாத மாணவ மாணவியருக்கு) வகுப்பு ஆரம்பிக்கும் தேதி 15-3-'62

K. ஸ்ரீனிவாசன், B. Sc.
டைரக்டர்.

N. வானமாமலை, M. A., L. T.
பிரின்ஸிபால்.



ரெட் ஸ்டார் பனியன்கள்

உங்கள்
எழிலுக்குகந்தது!
உழைப்பில் சிறந்தது!
உங்கள்
லாபத்துக்குரியது!

எல்லாக் கடைகளிலும்
கிடைக்கும்.

Buy:
REDSTAR HOSIERIES,
Palladam Road, TIRUPUR.

Agent: **P. A. PILLAY**
Vellamadam, NAGERCOIL.

எங்கள் பனியனையும் விளம்பரத்தையும் பாராட்டுபவர் பலர்.

"நல்ல முறையில் விளம்பரம் செய்து நல்ல சரக்கை
விற்க முயலும் ரெட் ஸ்டார் பனியன் ஏஜண்டு
திரு பி. ஏ. பிள்ளையைப் பாராட்டுகிறேன்"

(ஒப்பம்) டாக்டர் பா. நடராஜன்.
26-1-1962.

ரெட் ஸ்டார் காட்சியரங்கம்

உளங்கவர் காட்சி ★ மனங்கவர் மாட்சி ★ முயற்சி திருவினையாக்கும்
நிறைந்த உழைப்பு ★ மிகுந்த மகிழ்ச்சி ★ அழகிய அமைப்பு
ஆனந்த உணர்ச்சி திருவருள் துணைசெய்க

வாகையடித்தெரு,
கோட்டாறு

(ஒப்பம்) சா. சிவகுருநாத பிள்ளை,
தமிழாசிரியர்.

HANEEF OPTICALS

Fountain pen dealers & Repairers, Cape Road, NAGERCOIL.

டாக்டர்களால் கண் பரிசோதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல முறையில் கண்ணுக்கு
கண்ணாடிகள் குறைந்த விலையில் கொடுக்கப்படும்.

பவுண்டன்பேனாக்கள் நல்ல முறையில் பழுது பார்த்துக் கொடுப்பதற்கு
தகுந்த இடம்

ஹனீப் ஆப்டிக்கல்ஸ்,
கேப்ரோடு, நாகர்கோவில்.

பல்கலை வல்லார்

(ம. பி. செயிக், தலைவர், சதாவதானி பாவலர் மன்றம்)

பல்கலை வன்மை:

சீர் மல்கும் செந்தமிழின் சுவை துய்த்த செல்வர்—பார் புகழப் பாட்டியற்றிப் பேர் பெற்ற புலவர்—கார்மேகம் என்னக் கவிமழை பொழிந்த கவிஞர்—சேர் சிறப்புச் சொல்லேரால் உலகுழுத வலவர்—என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர் நம் **செய்குதம்பிப் பாவலர்** அவரைப் பைந் தமிழ் பாட்டியற்றிப் புகழ் பெற்ற பாவலர் என்று மட்டும் கூறினால் போதுமா? நாவன்மை மிக்க நாவலரை—"தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சிய"த்தை—நல்லறிவு படைத்த "மகாமதியை" அருங்கலை ஆய்ந்த "அல்லாமா"வை நூறவதானம் வீறுடன் செய்து வெற்றி கண்ட "சதாவதானி"யை கலையாழங் கண்ட "கலைக்கடலை" தமிழ் வளர்த்த தமிழ்ப்பெரும் புலவரை வெறும் பாவலர் என்று மட்டும் கூறுதல் எப்படிப் பொருந்தும்? "பல்கலை வல்லார்" என்று புகழ்தலன்றோ பொருத்தமுடையது?

கவிதைக் கலை:

கல்லுங் கசிந்துருகும் கவின் தமிழில், புல்லும் பசிதீரப் பாட்டியற்றி, நம் வெல்லுந் தமிழுக்கு வியந்தளித்த வலவர் நம் பாவலர். அவர் படைத்த புகழ்க் கோவையைத் தானே அணிந்தாள் நம் தமிழ்ப் பாவை! அவர் பாடிய சிலேடைகள் தாமே அவளுக்கு அணியாயமைந்த சிற்றுடைகள்! அவர் எழுதி விடுத்த தமிழ் மடல்கள் தாமே தழுவின அவள் பொன்னுடலை! பாட்டுக் கலையில் தன்னிகரின்றித் திகழ்ந்த தனிப் பெரும் புலவரன்றோ நம் பாவலர். "பாவலர்" என்ற பெயரும் இதனைத்தானே உணர்த்தி நிற்கின்றது.

பேச்சுக் கலை:

பேச்சுக் கலையிலும் ஈடும் எடுப்புமின்றித் திகழ்ந்தவர் நம்பாவலர். தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களின் ஆசிரியரான யாழ்ப்பாணம் மகாவித்வான் நா. கதிர்வேல் பிள்ளை அவர்களையே எதிர்த்துச் சொற் சமர் புரிந்து வெற்றி கொண்ட செம்மலை என்னென்றழைப்பது? நாவலருக்கும் நாவலரன்றோ நம் பாவலர்! அவரது தித்திக்கும் தேன்தமிழ் கேட்கக் கேட்கக் களிப்பூட்டும். அவரது கம்பராமாயணக் கருத்துரை கேட்போர் கருத்தை அளாவும். அவரது திருக்குறள் தெளிவுரை சுவைக்கச் சுவைக்க இனிப்பூட்டும்! அவரது வீரத்தமிழ்ப் பேச்சு, தமிழ்க் கொலைஞரைத் தாக்கும் கணை வீச்சு! தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியமல்லரோ அவர்!



எழுதியவர்

உரையாடற் கலை:

1709 முதல் 1784 வரை வாழ்ந்து பெரும் இலக்கிய மேதை என்று பெயர் பெற்ற ஆங்கிலப் பெரும் புலவர் டாக்டர் ஜான்சனுக்குப் பெயர் தர வல்லது அவரது உரையாடல். அவரைச் சூழ்ந்து எப்பொழுதும் நண்பர்கள் இருந்து உரையாடுவார்களாம். நம் பாவலரும் உரையாடற் கலையில் வல்லவர். பாவலரையும் நண்பர்கள் சூழ்ந்திருந்து உரையாடுவார்களாம். அவரது இனிய தமிழுரையைக் கேட்டுக் களிப்புறுவார்களாம். ஆனால் பாவலர், டாக்டர் ஜான்சனைப் போல் ஏன் புகழ்பெறவில்லை யென்றால், ஜான்சனுக்குப் பாஸ்வெல் என்ற தோழர் இருந்ததுபோல் பாவலருக்கு ஒரு தோழர் இல்லாமையாலேயேயாகும். பாவலரது புகழைப் பரப்ப அவரது நண்பர் யாரும் முயன்றிலர் என்றே கூறவேண்டும்.

ஆசிரியர் பாவலர்.

பாடஞ் சொல்லித் தருவதில் பாவலர்க்கு இருந்த திறமையை அவரது மாணவர்களைக் கேட்டுத் தெரிதலே முறைமை. அவர்கள் கூறும் கூற்றுக்களைக் கேட்கும் பொழுது, பாவலர் வெறும்

பாவலர் மட்டுமல்லர்; நாவலர் மட்டுமல்லர்; உரையாடல் வல்லார் மட்டுமல்லர்; ஒப்புயர் வற்ற ஆசிரியருமாவர் என்பதை உணரலாம். அவரது மாணவர்கள் இப்பொழுது பெரும் புலவர்களாய் விளங்குகின்றனர். அவரது ஆசிரியப் புலமைக்கு இப்புலவர்களே நின்று சான்று தருவர்.

இயற்றமிழ் வலவர்:

பாவலர், இசைத்தமிழ்ப் பாவலர் மட்டுமல்லர். இயற்றமிழிலும் பெரும் புலமை மிக்கவர். பன்னூற் புலவர் நம் பாவலர். நாடகத் தமிழிலும் கனி சிறந்து விளங்கினார். இவரது "தேவலோகக் கிரிமினல் கேஸ்", "வேதாந்த விவகாரக் கிரிமினல் கேஸ்" என்ற நூற்களைப் பயிலுவோர் இவ்வுண்மையை அறிவர். இவர் ஒரு சிறந்த உரையாசிரியர். உமறுப்புலவர் ஆக்கியளித்த சீறாப்புராணத்திற்கு உரையெழுதிப் புகழ் பெற்றவர். அதனைப் பயிலுவோர் அவரது உரைச் சிறப்பை உணருவர்.

நகைச்சுவைக் கலைஞர்:

நகைச் சுவை ஒரு நல்ல கலை. பாவலர் இக்கலைக்கு ஓர் எல்லை. இவரது பேச்சுக்களிலும் நகைச்சுவையைக் காணலாம்; எழுத்துக்களிலும் நகைச்சுவையைக் காணலாம். பாவலர் சொற்போர் புரியும்பொழுதும் நகைச்சுவையைக் கையாளுவாராம். திருவள்ளுவர் "என் சமயத்தைச் சார்ந்தவர், என் சமயத்தைச் சார்ந்தவர்" என்று கற்றோர் வாதிட்ட வேளையில், பாவலர் முன்வந்து திருவள்ளுவர் தன் சமயத்தைச் சார்ந்தவர் என்று காட்டி விளக்கியமை நல்ல சிரிப்பு மட்டுமன்று, மற்றோர்க்கு நல்ல எதிர்ப்புமாகும். "காக்காயையும் கறி வைத்து மென்று தின்பர் சைவர்" என்று ஒரு சைவ மகாநாட்டிலே பேசினார் பாவலர். ஊனூண் துறந்தவரல்லரோ சைவர்? அவர் காக்காயைக் கறி வைத்துத் தின்பவர் என்று கூறியதைக் கேட்டுப் பொறுத்தனரா என்றால் பொறுத்தனர்; உவகை கொண்டனர். எப்படி? பாவலர் கூறிய "காக்காய்" காக்காயன்று. கால் + காய் என்பதே.

"கொல்லாமை" என்ற சொல்லைக் 'கொல்+ ஆ+மை' என்று பிரித்து, பசுக்களையும், செம்மறியாடுகளையும் கொல்லுங்கள்' என்று பொருள் விரித்தமை யாருக்குத்தான் சிரிப்பை யூட்டாது?

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்ற குறளிலுள்ள "மறுத்தானை" என்ற சொல்லை, மல் + துத்தானை என்று பிரித்து, இலக்கண விதிகளை எடுத்துக்காட்டி, கொன்ற பசுவினது மாமிசத்தை அதிகம் 'தின்றவனை' என்ற பொருள்படக் கூறிக் கேட்டோரைக் களிப்புறச் செய்தவரை "நகைச்சுவை அரசர்" என்று கூறுதலன்றோ பொருந்தும்!

கடவுள் தன்மை:

இவற்றிற் கெல்லாம் மேலாகப் பாவலரிடத்திலிருந்த தனிப் பெரும் ஆற்றல் ஒன்றுண்டு. அதுதான் அவரது 'கடவுள் தன்மை'. "ஒரும் அவதானம் ஒருநூறு செய்தல்" நம்மால் இயலுவதோ? பாவலர் இதனைச் செய்து முடித்தார் என்றால் என்ன பொருள்? அவர் கடவுள் தன்மை பொருந்தியவர் என்பது தானே? ஒருமுறை ஒரு பாடலைக் கேட்டு விட்டு அப்படியே திருப்பிச் சொல்லும் தன்மை நமக்கு உண்டோ? பாவலர் இதனைச்செய்தார் என்றால் அவர் கடவுள் தன்மை பொருந்தியவர் என்பது தானே பொருள்? நினைத்த பொழுதில் பாட்டியற்றும் புலமை தெய்வப் புலமைதானே!

போற்றுவோம் பாவலரை:

இத்தகைய பன்னூற்புலமையும், பல்கலை வன்மையும் மிக்க புலவரைப் "பல்கலை வல்லார்" என்று கூறுதல் பொருத்தமுடைத்தே. ஆனால் பாவலரை அவர் காலத்தவர் அப்பெயர் கூறி அழைக்கத் தவறிவிட்டனர். பாவலரை மட்டுமன்று அவரைப் போன்ற புலவர் பலரையும் மறந்துவிட்டனர். அதனால்தான் தமிழ்மக்கள் தரம் குறைந்து, திறம் குன்றி வாழ்கின்றனர் போலும்! தமிழுக்கும், தமிழ் மண்ணிற்கும் அழிவு தேடினர் போலும்! பிற மொழிப் பயிருக்கு உரமிட்டனர் போலும்! தமிழ் நிலம் சிறந்து, தமிழ் மணம் கமழ்ந்து, தமிழர் தலை நிமிர்ந்து நிற்கவேண்டுமாயின் பாவலர் போன்ற "பல்கலைச் செல்வர்களை"ப் போற்றியே ஆக வேண்டும்.

★

நபிநாயக மான்மிய மஞ்சரி

★ செ. ப. ஜமால் முகம்மது, செயலாளர், சதாவதானி பாவலர் மன்றம். ★

வாழும் வளமார் மொழிகளுள் நம் வண்டமிழ் மொழி தனிச் சிறப்புடையது. தமிழ் மொழியின் இத்தகைய சிறப்புக்குக் காரணம் அம்மொழியில் அமைந்துள்ள இலக்கியச் செல்வங்களேயாம். இத்தகைய இலக்கியச் செல்வங்களை ஆக்கித் தமிழ் மொழியின் மேம்பட்ட புகழுக்குக் காரணமாய் விளங்கிய பாகுதமிழ்ப் புலவர்களுள் சில முஸ்லிம் புலவர்களும் உளர் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத பேருண்மை. அத்தகைய புலவர் திருக்கூட்டத்தில் செயற்கரிய செய்த செய்குதம்பிப் பாவலர் அவர்களும் ஒருவராவர்.

நாஞ்சில் நாட்டில் தோன்றி நற்றமிழின் காவலராய் விளங்கிய சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் தம் புகழ் சொல்லி நிற்க விட்டுச் சென்ற நூற்களுள் "நபிநாயக மான்மிய மஞ்சரி" என்பதும் ஒன்றாகும். இந்நூலின் பாட்டுடைத் தலைவர் அவனி புகழ் அண்ணல் முஹம்மது நபி (ஸல்) அவர்களாவார்கள்.

"மாநிலந் தனக்கோர் மணிவிளக் கெனலாய் முஹம்மது நபிபிறந் தனரே" என்றார், உயரிய கவித்திறத்தால் உலகைப் பாலித்திட விழைந்த உமறும். அவ்வாறே, மாநிலத்தின் மணிவிளக்காய் — நானிலத்தின் நாயகராய் — இருள் போக்கிய ஏந்தலாய் — அருள் தேக்கிய அண்ணலாய் — பெண்ணுரிமை பேசிய பெருந்தகையாய் — கண்ணுமருள் காட்டிய கருணையங் கடலாய் — மக்களாட்சி தழைக்க மன்னிய வழிகோலிய மதி வல்லாராய் — தக்கதொரு மறையளித்துத் தரணியெலாஞ் சிறந்த தனிப்பேரறிஞராய் — உறுதி குன்றா உளத்தராய் - தகுதி வாய்ந்த தூதராய், அவனி புகழ வாழ்ந்தார்கள் அண்ணலெம் பெருமானாரவர்கள்.

இறையின் இறுதித் தூதராக இவ்வுலகில் தோன்றிய இன்ப நபியவர்கள், அறியாமை இருளிலே அமிழ்ந்து கிடந்த அரேபிய மக்களின் அஞ்ஞான இருளகற்றி அவர்களுக்கு மெய்ஞ்ஞான ஒளி காட்டி அறிவுப் பாதையிலே அவர்களை அழைத்து எஞ்ஞான்றும் நின்று நிலவும் பேரொளியாம் இஸ்லாத்தைத் தோற்றுவித்தார்கள். மானுட வாழ்வின் ஒவ்வொரு நிலைக்கும் தக்கவாறு வழிகாட்டும் ஒளி விளக்காய்த் திகழ்ந்தார்கள். பொது மறையாம் திருக்குர்ஆனை உலகிற்களித்து உலகில் ஒழுகும் முறைகளை ஒழுங்குபடத் தம் அறிவுரைகளாகத் தந்தார்கள். இத்தகைய சிறப்புக்குரிய வழிவகைகளை உலகத்திற்குச் சொன்னதோடமையாது சொல்லும் செயலும், வாக்கும் வாழ்வும் ஒருசேர நின்று சொன்னதைத் தாம் முதலில் செய்து காட்டிய செப்பரும் செயல்வீரராய்த் திகழ்ந்தார்கள். நல்ல பல அறிவுரைகளை நாட்டுக்கீந்த நபிமணியார் தம் வாழ்வும் வழியும், இன்ப நபிமணியைப் பின்பற்றும் இஸ்லாமியர்க்கு மட்டுமன்றி இவ்வுலக மக்களனைவருக்குமே சிறந்த முன்மாதிரியாக இருந்து வருகின்றன. வள்ளல் நபியவர்களை வழிகாட்டியாகப் பெற்ற நாம் பெருமைப்படுகிறோம். இறைவனும் தக்கதொரு நேரத்தில் தகுதி வாய்ந்த தூதரை அனுப்பித் தரணிக்கு நல்வழி காட்டியதில் பெருமிதங் கொள்கின்றான்.

அண்ணலெம் பெருமானாரின் இத்தகு எண்ணருஞ் சிறப்பை யெல்லாம் எண்ணியெண்ணிப் பூரிக்கின்றார் நம் பாவலர் பெருமான். வள்ளல் நபியவர்களின் வாழ்வனைத்தையும் வாயாரப் புகழ்கின்றார். நாயகத்தின் மான்மியத்தை நவிலரும்பா மஞ்சரியாய் நவிலவதற்கு இறைவன் அருளை வேண்டுகின்றார்,

"வையமெல்லாம் வாழ்த்தெடுப்ப வந்தநபி நாயகத்தின்
துய்யசெழு மான்மியத்தைச் சொல்லுதற்கே—ஐயமறக்
கூராதோ வான்கருணை கூர்ந்துவந்து வாய்மைநலந்
தாராதோ வெம்மிறையோன் சார்பு"

என்று இறைவன் புகழைக் கூறி எடுத்த காரியத்தைச் செயல்படுத்துகின்றார். நபிகணாதர் தம் வாழ்வில் கண்ட உண்மைகளையும், கொண்ட கொள்கைகளையும், நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் எண்ணி வியந்த கவிகணாதர் பாவலர், நபிகணாதரின் வாழ்வையெல்லாம் படித்தவர் வாய்

தேனூறும் புதுத்தமிழ்க் கவிதைகளாகப் பாடி மகிழ்கின்றார்; நம்மையும் மகிழ்விக்கின்றார்.

பலதெய்வ வணக்கத்தைக் கைக்கொண்டு அறியாமை இருளிலே அமிழ்ந்துகிடந்தனர் அரேபிய மக்கள். அவர்களுடைய இத்தகு இழிசெயலை ஒழித்து இனிய வழிகளை எடுத்தியம்பி "ஒன்றே தெய்வம்" என்று கூறி அவர்களை நன்றும் வழியில் நடாத்திய நாதநபியவர்களின் பொன்றாப் பெருமை சொல்லுதற்கு எளியதா என்று வியந்த பாவலர்,

"ஒன்றுதெய்வ மொன்றுமத மொன்றுமக்கள் சாதியென
நன்றுபெற ஓதியவை நாட்டிநவில் நான்மறையுங்
குன்றுபெறு தீபமெனக் கோத்தளித்துக் காத்தவுங்கள்
துன்றுமுயர் மாபெருமை சொல்லற் கெளிதேயோ
சோதிநபி நாயகமே சொல்லற் கெளிதேயோ"

என்று தம்மால் சொல்லற்கரிய பெருமையைச் சொல்லாமல் சொல்லுகின்றார்.

செம்பு, வெள்ளி, மண் முதலாச் சேர்ந்த பல பொருட்களையும் தெய்வமென வணங்கி வந்தவர்களிடையில் ஒன்றிறைவன் என்னும் உயரிய கொள்கையைக் கூறிய நபிகணாயகம் அந்த ஓரிறைவனும் எத்தகையவன் என இனிது கூற, அதனை இன்பத் தமிழிலே தனக்கேயுரிய நடையில்,

"வானுமில்லை நீருமில்லை வாயுமில்லை தேயுமில்லை
நானுமில்லை நீயுமில்லை நாளுமில்லை கோளுமில்லை
பானுமில்லை மீனுமில்லை பாரமதி யோடுவெளி
தானுமில்லை யேகமென்ற தத்துவத்தை நத்தேமோ
தருமநபி நாயகமே தத்துவத்தை நத்தேமோ"

என்று பல பாடல்களில் பாவலர் பாடி, நபிகணாதரின் தத்துவத்தை எண்ணி நம்மை வியப்படையச் செய்வதோடு தன்னுடைய கவிதை நடையையுங் கண்டு களிப்படையச் செய்கின்றார்.

நபிகள் நாயகம் அவர்கள் ஐம்பெருங் கடமைகளை வரையறுத்து முதலில் அவற்றைத் தம் வாழ்விலே கொண்டு, பின் மக்களுக்கு உணர்த்தியதைக் கண்ட பாவலர் நாயகம,

"ஆதியொரு வன்றெழுகை யைவேளை நோன்புடைமை
போதியநல் லேழைவரி புக்கமக்க ஹஜ்ஜைந்தும்
நீதிதரு சன்மார்க்க நேர்மையென் றோதிமுதன்
மாதிரியா முன்னின்ற வள்ளன்மை யுள்ளேமோ
மன்னர்நபி நாயகமே வள்ளன்மை உள்ளேமோ"

என்று நீதி திரு சன்மார்க்க நேர்மை காட்டிய மன்னர் நபி நாயகத்தின் வள்ளன்மையைத் தன் உள்ளம் உவந்து பாடுகின்றார்.

அரேபிய மக்கள் நீணெடு நாட்களாகக் கொண்டிருந்த கொள்கைகளையும், கோட்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் திருத்தி நல்வழியில் கொண்டுவர நபிகள் நாயகம் ஓயாது உழைத்தார்கள். சரியெனப்பட்ட கொள்கைகளை அவர்கள் சொல்லத் தயங்கியதில்லை. அறியாமையினின்றும் அவர்களை விடுவித்து அறிவுப் பாதையிலே வழிநடத்தத் தம்மால் இயன்றவரை முயன்றார்கள். முதலில் நபிகள் நாயகத்தின் புதிய கொள்கைகள் பிடிக்காத குரைஷிக் கூட்டத்தினர் அவரை முற்றும் வெறுத்தவர்களாய் பெரிய தந்தையாரான அபூதாலிப் அவர்களிடம் சென்று, "முஹம்மது புதிய கடவுள் வழிபாட்டை விட்டுவிடவேண்டும்; அவ்வாறு விடுவதாக இருந்தால் சிறந்த தலைமைப் பதவியும், நிறைந்த செல்வமும் தருகிறோம்; இல்லையெனின் எங்களுடைய பொல்லாக் கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும்" என்று அச்சுறுத்தியும் ஆசை காட்டியும் எச்சரிக்கின்றார்கள். நபிகள் நாயகம் அவர்கள் வந்ததும் அபூதாலிப் அவர்கள் குரைஷிகள் வந்த விவரத்தைக் கூறி, "குரைஷிகளின் கொடுங் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்கப் புது முயற்சியை – புது மார்க்கத்தை விட்டுவிட வேண்டும்" என்று நயமாகவும் பயமாகவும் சொல்கின்றார்கள். இதைக் கேட்ட நபிகள் நாயகம் சிறிதும் அஞ்சாது, "வலக்கரத்தில் சூரியனையும், இடக்கரத்தில் சந்திரனையும் கொண்டுவந்து தந்தாலும் நான் கொண்ட கொள்கையில் இருந்து சிறிதும் விலகமாட்டேன்" என்று துணிந்து கூறுகின்றார்கள். நபி பெருமானின் கொள்கையிற்றவறாத இத்தகைய நல்லருந் தன்மையை எண்ணி மகிழ்கின்றார் பாவலர் பெருமான். அவரின் மகிழ்ச்சி,

"செங்கதிரும் வெண்மதியுஞ் சேரவிரு கைத்தலத்தில்
தங்கவைத்துப் பைம்பொனிதி தந்திறைமை ஈந்தாலுந்
துங்கமிகு சாந்திநலம் தோய்ந்தபரி சுத்தநிலை
யெங்கணெறி யென்றுரைத்த திப்புவியு மொப்பாதோ
ஏந்தனபி நாயகமே யிப்புவியு மொப்பாதோ?

எனும் பாடலாக உருவெடுக்கிறது.

நபிகள் நாயகம் அவர்கள் தம் கொள்கைகளைப் பரப்புவதைத் தொடர்ந்து நடத்திவருகின்றார்கள். சரியெனப்பட்ட கொள்கையினின்று

சற்றும் பிறழாமல் பேரொளியாம் இஸ்லாத்தைப் பரப்புவதில் தீவிரமாக முனைந்து நிற்கின்றார்கள். இந்நிலையில் குறைஷிக் கூட்டத்தினர் நபிகணாதருக்கு எவ்விதத் தீங்குகளையும் செய்யத் தயங்கினார்களில்லை. சொல்லால் பழித்தனர்; கல்லால் அடித்தனர்; நாயகம் அவர்கள் செல்லுமிடங்களில் முள்ளைப் பரப்பினர். இவ்வாறு பொல்லாதவை எல்லாம் செய்து கொல்லவும் துணிந்தனர். மண்ணுண்ட பூழ்தியெலாம் வாரி நபிகணாதரின் தண்ணுண்ட மேனியிலே வீசுகின்றார்கள்; அழுகுமலச் சாணமெடுத்து அண்ணல் நபியின் அங்கமெலாம் எறிந்து ஊறு செய்கின்றார்கள்; கல்லால் எறிந்து கருணை நபியின் கால்களைக் காயமுறச் செய்கின்றார்கள். அண்ணல் நபியவர்கள், குறைஷிக் கூட்டத்தினர் இவ்வாறெல்லாம் செய்தும் அவர்களை நோகாது அவர்கள்பால் அருள் சுரந்து அவர்களைக் காத்து அவர்களுக்கு நல்லறிவைக் கொடுக்குமாறு ஆண்டவனிடம் கையெடுக்கின்றார்கள். அண்ணல் நபியவர்களின் இத்தகைய அன்பையும், அருளையும், பொறுமையையும், பெருமையையும் எண்ணி வியந்த பாவலர் நபிகணாதரின் இத்தகைய மாண்பைப் பல பாடல்களில் பாடி, "நல்லா ருமைப் போலும் நானிலத்தி லுண்டேயோ?" என்று கேட்கின்றார்; நம்மையும் கேட்க வைக்கின்றார்.

தூய்மைமிக்க தூதராம் நபிகணாதரைத் துன்மார்க்கர்கள் தூற்றிப் பலவகையிலும் அல்லல் செய்கின்றனர்; தொழுகையின்போதும் தொல்லை தருகின்றனர். வஞ்சமில்லா நெஞ்சமொடு எல்லாம் வல்ல இறைவனைத் தஞ்சமென நின்றிறைஞ்சும்போது நபிகள் நாயகத்தின் கழுத்தில மிஞ்சுதுகிலிட்டிறுக்கி வேதனை செய்கின்றான் வீணனொருவன். அவன் அவ்வாறு செய்தும் அவனை அஞ்சாதே எனக்காத்து அருளீந்த அண்ணல் நாயகத்தின் அன்புடைமையை எண்ணி வியந்த பாவலர் நாயகம்,

''வஞ்சமற்ற நெஞ்சமொடு வல்லவனைக் கஃபாவில்
தஞ்சமென நின்றிறைஞ்சித் தாழ்பொழுதி லுங்கழுத்தில்
மிஞ்சுதுகி லிட்டிறுக்கி வேதனைசெய் வீணனையு
மஞ்சலெனக் காத்தளித்த வன்புடைமை யென்னேயோ
ஆதிநபி நாயகமே யன்புடைமை யென்னேயோ.

என்ற பாடலை இசைத்து மகிழ்கின்றார். நாமும் இசைத்து அண்ணலெம்பெருமானாரின் அன்புடைமையை எண்ணி வியப்போடு பாவலர் பெருமானாரின் பாத்திறனைச் சுவைத்து மகிழ்கின்றோம்.

அன்றொரு திருநாள் — இஸ்லாமியரின் பெருநாள். ஊரார் அனைவரும் காலையிலெழுந்து புனித நீராடி, புத்தாடை உடுத்தி, வல்லவனை வணங்கத் தங்கள் குழந்தைகளுடன் வணக்கத் தலம் நோக்கிச் செல்கின்றனர். வழியிலே ஓர் சிறுவன் காய்ந்த தலையுடனும், கந்தைத் துணியுடனும், தேய்ந்த உடலுடனும், தோய்ந்த முகத்துடனும் ஓரிடத்தில் சாய்ந்து நின்று கண்ணீர் வடிக்கின்றான். புத்தாடை வாங்கி உடுத்திப் பள்ளிக்குக் கூட்டிச்செல்லத் தந்தை இல்லையே என்பதை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்துகொண்டிருந்த அந்த அனாதைச் சிறுவனை வீதியில் செல்வோர் கண்டும் காணா முகத்தினராய்ச் செல்கின்றனர். அவ்வழியே அண்ணல் நபியவர்களும் வருகின்றார்கள்; சிறுவனைக் காண்கின்றார்கள். அவனது நிலை கேட்டு உள்ளம் உருகுகின்றார்கள். அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துவந்து, தானே நீராட்டி, புதுப் பட்டுடுத்தி, தன்னிரு கைகளால் தூக்கித் தோளில் இட்டு அணைத்தவாறு பள்ளி செல்கின்றார்கள். நபிகணாதரின் இந்த அருட்டன்மை நம் கவிகணாதரை ஈர்க்கின்றது. இன்பநபி நாயகத்தின் இன்னருளை, எண்ணி இறும்பூதெய்துகின்றார். அது,

''வாய்ந்தபெரு நாள்வரிசை வாங்கிநல்கத் தந்தையின்றி
யோய்ந்தழுத வேழைமகற் குள்ளுடைந்து நீராட்டித்
தோய்ந்தநறும் பட்டுடுத்தித் தூக்கியிரு
தோட்டுணைகொண்
டேய்ந்ததிருப் பள்ளிபுக்க வின்னருளு மென்னேயோ
இன்பநபி நாயகமே இன்னருளு மென்னேயோ

என்ற பாடலாக உருவெடுக்கிறது. பாவலரோடு சேர்ந்து இன்ப நபிநாயகத்தின் இன்னருளை எண்ணி நாமும் இறும்பூதெய்துகின்றோம்.

பெண்ணினத்தை ஆடவர்கள் மிக மிகக் கேவலமாக எண்ணி அவர்க்குப் பலவகைகளிலும் கொடுமைகள் பண்ணுவதைத் தன் கண்ணிய உரைகளால் நீக்கிய அண்ணல்நபி நாயகத்தின் பன்னருஞ் செயலை உன்னி உவக்கின்றார் பாவலர். "ஒன்றுமில்லை பெண்களுக்கிங் குற்றகுலச் சொத்துரிமை யென்றுரைக்கும் வஞ்சர் நெஞ்சமீடழிய வாடவரில் நின்றுமொரு நேர்பாதி நீத்தெடுத்து நல்கிய" நாயகத்தின் ஞாயநிலையை நண்ணாருமெண்ணாரோ என்று கேட்கின்றார். "சின்னஞ்சிறுமகளைச் சேர்த்தணைத்த கையோடு தன்னந்தனியாகத் தத்தளிக்கும் கைம்மைகளை துன்னமறுமாமணத்தில் தோய்வித்து வாழ்வித்தல் என்ன குறை'' என்று கேட்டு அவ்வழி நின்ற ஏகநபி

நாயகத்தின் இன்னுரையை இந்நிலமும் உன்னீர்கா என்று கேட்கின்றார் பாவலர்; அவரோடு சேர்ந்து நாமும் கேட்கின்றோம். இவ்வாறு ஆணுக்கும், பெண்ணுக்கும் சமநீதி அளித்துப் பெண்ணுரிமை பேசிய பெட்பு நபியவர்களின் பெருமையினையும் பேருரைகளையும் எண்ணி யெண்ணி வியந்து பல பாடல்களில் பாடிச் செல்கின்றார்

உண்ண உணவின்றிப் பட்டினியால் உற்றுலைவோர் ஒருபுறம்; மண்டியிட்டுப் பண்டிவிம்ம உண்ணும் வன்கணர் ஒருபுறம் இந்நிலையை மாற்றத் தவநோன்பு முப்பதையும் கடமையாக்கி எண்டிசையும் போற்றச்செய்த ஏந்தல் நபியவர்களின் அறிவுடைமையை எண்ணி வியக்கின்றார் பாடல்வழி.

முடியாட்சி என்று கூறி மக்களை வதைக்கும் கடியாட்சியை நீக்குக் குடியாட்சிகொள்ள அடிகோலி முதன்மாதிரியாப் படியாட்சி செய்த பான்மை நபிநாயகத்தின் பாரமதியை எண்ணியும், கள்ளுணர்வு கொள்ளகிலீர் கத்தனுரையீதென்னத் தெள்ளுணர்வு தந்த வள்ளல் நபிநாயகத்தின் செம்மைநிலையை எண்ணியும் உள்ளம் வியந்து பாடுகின்றார்.

அண்ணல் நபிநாயகத்தின் அன்புடைமை, அருளுடைமை, பண்புடைமை, பரிவுடைமை, செம்மைநிலை, ஞாயநிலை, உண்மைநிலை, மேன்மை நலம், வள்ளன்மை, அறிவுடைமை, ஆய்வுடைமை, இன்னோரன்ன மாண்புகளைப் பாவலரவர்கள் அடுக்கிக் காட்டும் முறை படித்தின்புறத் தக்கது. ஆதி நபியும் இறுதி நபியும் உலகெலாம் ஏத்தும் உயர் நபியும் பேரொளியாம் இஸ்லாத்தின் நாயகரும் தாயகரும் ஆன மன்னர் நபியின் மாண்பை யெல்லாம் எண்ணி,

"முன்னபியும் பின்னபியும் மூவுலகு மேத்தெடுக்கும்
நன்னபியு மிஸ்லாத்தி னாயகருந் தாயகரும்
பன்னபியு முண்ணெகிழ்ந்து பத்திமிகப் போற்றிசெயும்
மன்னபியு மானவுங்கள் மாண்பென்ன மாண்பேயோ
வாசநபி நாயகமே மாண்பென்ன மாண்பேயோ"

என்று வியக்கின்றார்; நம்மையும் வியக்க வைக்கின்றார்.

இவ்வாறு நபிகளார் தம் வாழ்வில் கண்ட உண்மைகளையும் கொண்ட கொள்கைகளையும் விண்ட அறிவுரைகளையும் ஒரு நூற்றிரண்டு கலிப்பாக்களில் சொல்லி அண்ணல் நபியவர்களின் வாழ்வையும், வாக்கையும் எண்ணியெண்ணி வியந்து, "நல்லாருமைப்போலும் நானிலத்தி லுண்டேயோ" என்று மீண்டுமீண்டும் கேட்பதோடு நம்மையும் கேட்கவைக்கும் பாவலரின் பாத்திறன் நூல் முழுதும் பரவி நிற்கிறது. நூற்றிரண்டு பாடல்களிலும் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் அகில உலகுக்கும் அருட்கொடையாய் வந்த நபிநாயகம் அவர்களைச் சோதிநபி, ஆதிநபி, நாதநபி, வேதநபி, பான்மைநபி, மேன்மைநபி, பரமநபி, பக்தநபி, மும்மைநபி, முன்னைநபி, நன்மைநபி, தருமநபி, கருணைநபி, விந்தைநபி, ஏந்தநபி, மன்னர்நபி, அண்ணல்நபி, என்றிவ்வாறு பொருத்தமான ஒவ்வொரு அடைமொழியால் புகழ்ந்தேத்துகின்றார் புலவர் பெருமான்.

இறைவனின் ஒப்பற்ற தூதர் வாழ்வனைத்தையும் பாவலர் அவர்கள் தமக்கே உரித்தான நடையிலே சொல்லாட்சியும் ஓசை நயமும் கொண்டு கற்போர் உள்ளத்தைக் கனிவிக்கும் வகையில் ஆழ்ந்த கருத்துப் பொலிவோடு பாடியுள்ளார்கள். துள்ளியோடும் கலிப்பாவிலே, துடிப்பான செந்தமிழ் நடையிலே சொன்னயம், பொருணயம், தொடைநயம், நடைநயம் மற்றென்னயமும் ஒருசேர தெய்வத் திருநபியின் 'துய்யசெழு மான்மியத்தைச் சுவைபடக் கூறிப் பாமாலையாக "நபிநாயக மான்மிய மஞ்சரி" என்னும் திருப்பெயரில் நூலாக்கி இன்பம் பெற்றார் பாவலர் பெருமான். "யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்று எண்ணிச் செய்த வண்ணத் தமிழ்ப் புலவரின் எண்ணம் ஈடேறாமல் அச்சாகாமலேயே இருந்து வருகிறது நூல். தமிழ் மக்கள் ஓர் ஒப்பற்ற தமிழிலக்கியம் கிடைத்தும் பயன்பெற முடியாத நிலையில் இருந்து வருகின்றனர். அந்நிலை மாற - ஒண்டமிழ்ப் பாவலரின் ஒப்பற்ற தமிழிலக்கியச் சுவை பருக அதை அச்சேற்றி வெளிக்கொணரப் பல்வகையிலும் உதவ தமிழர்கள் முன்வருமாறு பணிவன்புடன் விழைந்து வேண்டுகின்றேன்.

★

"கோவைக் குளமளித்த கோன்செண் பகராமக்
காவைக் கனிந்தேத்திக கண்டபள்ளுப்—பாவைநேர்
ஒத்திக்கும் பாகு முறுகனியுங் கற்கண்டுந்
தித்திக்கு மோசொல்வீர் தேர்ந்து"

(பாவலர் அவர்கள் செண்பகராமன் பள்ளுக்களித்தது)

பாவலர் பெருமானைப் பற்றி இவர்கள்....

(தொகுத்தவர்: வை. தங்கப்பன்)

"விண்பட்ட தருமலிபூம் பொதிகையில்வாழ் குறுமுனிவன் விரித்த வைந்து
பண்பட்ட விலக்கணமு மிலக்கியமு முலகுவப்பப் படித்துத் தேர்ந்தோன்
கண்பட்ட மணிபோல்வான் கருதுமுயிர் பான்மையுளான் கற்றோர் போற்று
மெண்பட்ட புகழுடையா னிகழ்வடையான் கோடைநக ரிருந்து வாழ்வோன்"

"ஆற்றுதவப் பேறனைத்து மனுதினமு மோருருவாய் யமைந்தா லொத்துத்
தோற்றுதவம் படைத்துயர்ந்த தொல்குலத்தான் பல்புகழான் தூய வாய்மை
சாற்றுதவ நெறியுடையான் கதியுடையான் மதியுடையான் சார்ந்தோர்ப் போற்றி
ஏற்றுதவ வாய்ந்தசெழு மிருங்குணத்தா னரும்பொறையா னினிய வாழ்வான்"

(முதுபெரும் புலவர் *தா. சாத்தான்குட்டிப் பிள்ளை*—1919-ல்)

"புத்தகத்தை யெப்பொழுதுங் கைக்கொண்டு பொய்யுரைத்துப் பொறுமை யற்று
நத்தகத்தி லுறுபணியி னெயிறன்ன குணம்பொருந்தி நன்மை நீண்ட
வித்தகத்தைக் கைக்கொண்டார் தமைப்பழித்துப் புறங்கூறி வீணே யீண்டுப்
புத்திகெட்டுப் பாவலரென் றேதிரிவா ரொடுங்கும்வகை புரியுந் தீரன்"

"அடுத்தவர்வைத் திருக்கின்ற புத்தகமெ லாம்வாங்கி யன்பீர் நாளைக்
கொடுத்துவிடு வேன்றிரும்ப வெனக்கூறி யேமாற்றிக் கொடுபோ யில்லத்
தடுக்கிவைத்துப் படித்தலின்றி வருவார்க்குத் தம்பெருமை யனைத்துங் காட்டத்
தொடுக்குமறி வெனைத்துமிலாப் பாவலருக் கறிவுறுத்துந் துங்க முற்றோன்"

(*மதுரை ஆசுகவி - ஆறுமுகஞ்சேர்வை*— 1907-ல்)

"பண்டையருந் தமிழ்நூற்கள் பலவுணர்ந்தோ னரியகுரூன் பகர்ந்த மாசில்
எண்டயங்கு நெறிநிற்போ னிசைசெய்குத் தம்பிப்பா வலனென் றோதும்
பண்டழையுங் கவிவாணன் பண்புடைய நட்பாளன் படியிற் சீர்த்தி
எண்டிசையுந் தழைவித்தோ னின்மொழியன் பன்னலஞ்சார்ந் திலகு வோனே"

(*சென்னைத் தமிழ்ப் பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார்*—1919-ல்)

"பன்னயஞ்சேர் மலைநாட்டுக் கணிகலனு யவிர்கோடைப் பதியில் வாழ்வோன்
மன்னியசீர்ச் செழுந்தமிழி னிலக்கணமு மிலக்கியமு மாணக் கற்றோன்
வின்னமற வியன்கவிதை மாரிபொழி கிற்குமதி விரகன் முற்றப்
பன்னருஞ்சீ ரினியகுண சம்பனன்செய் குத்தம்பிப் பாவல் லோனே"

(சென்னை. திரு. கு. *முகம்மது ஜமாலுத்தீன் சாகிபு*—1919-ல்)

"எவ்வகைய பனுவலையு மிம்மென்னு மளவையினி லியற்ற வல்லோன்
செவ்வியநற் றமிழ்ப்புலவன் செய்குதம்பிப் பாவலனுத் திகழு மேலோன்"

(*மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் கா. நமச்சிவாய முதலியார்*—1919-ல்)

"மாவாரு மேருதனை மருவினருக் குயர்வருளு மாறே கல்விக்
காவாரு மடையினுட னரும்புலமைக் காளாக்கு மருமை வாய்ந்தோன்
நாவாரு நறுந்தமிழை நன்றெனக்கு மருள்குரவன் ஞான ரூபன்
பாவாரு நாவுடையான் பண்புடைசெய் குத்தம்பிப் பாவ லோனே"

(*வித்துவான் தா. மாணிக்கவாசகம் பிள்ளை*—1919-ல்)

வசன ரூபக வெண்பாக்கள்.

★

ஞானம் பாக்கியம் அவர்கட்கு மிகவும் வந்தனம்.

ஐயா!

உண்மையுள்ள சர்வேசனது கிருபைகொண்டு யான்முதல் இங்கே எவரும் இந்நாள் வரையுங் குறைவற க்ஷேமம். தாங்களும் தங்கள் சமுகஞ் சார்ந்தவரும் எவ்விதத் தீங்குமின்றி எப்போதும் க்ஷேமமாய் ஆங்கே இருக்கின்ற செய்திக்கு எழுதி அனுப்ப விரும்புகின்றேன்.

தாங்கள் என்மீது கருணையொடுந் தீட்டிவிட்ட காகிதம் என் கைக்கு வரச் சகல சங்கதியும் வாசித்து ஒருபோதுங் கொள்ளாத ஆனந்தங் கொண்டேன். அதில் எழுதியுள்ள புராணம் உரையோடு மதுரையிலிருந்து இதற்குள் வந்திருக்கலாமே. அது விஷயமாய் விவரமாகப் பதில் காகிதம் எழுதத் தங்கள்பால் கேட்டுக் கொள்கின்றேன்.

இது முதல் எப்போதும் இனிக் கண்ணுங் கருத்துமாய்க் கற்றுவந்தால் சொற்ப தினத்துள் நல்ல மேதாவியோ என்ன எண்ணுந் தரத்தில் வரலாம். இதற்கு ஐயமில்லை.

பெருந்தகைமை வாய்ந்த நம் பேராசிரியர் சந்நிதிக்கு அன்புள்ள வந்தனத்தை ஆசையுடன் சொல்லுகின்றேன். அஃதொன்று? நேசத்தர்ல் ஓதரிய வேலாயுத முதலியார்க்கு மதுவே.

தமியேனால் இங்கே வேருக வேண்டுங் காரியாதிகட்குந் தங்களது தேக சுகத்திற்குந் தினந்தினமுங் காகிதங்கள் தந்து கொண்டிருப்பதற்குத் தங்கள் கருணையை விதந்து முவந்தேன். வந்தனம்,

இங்ஙனம்,
தங்களன்பு மறவா,
கா. ப. செய்குதம்பிப் பாவலன்,
42, ஆசாரப்பன் தெரு, சென்னை.

(மேலே கண்ணுற்ற கடிதம் 15—1—1908-ல் சென்னையில் இருந்து பாவலர் அவர்கள் தன் நண்பர் பாக்கியம் என்பாருக்கு எழுதியது. கடிதத்தில் ஏழு வெண்பாக்கள் இருக்கின்றன. எங்கே, கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!)

அசைவம்!

தமிழ் நாட்டின் இலக்கியச் சொற்போர் வரலாற்றில் புகழ் பெற்று நின்ற விவாதங்களின் வரிசையில் அழியா இடம் பெற்ற சொற்போராக அருட்பா மருட்பாப் போர் விளங்குகின்றது. இராமலிங்க சுவாமிகள் எழுதிய தூய்ய தமிழ்த் தேன் பாக்களாலான திருவருட்பாவை மருட்பா என ஒரு கூட்டம் பிரச்சாரம் செய்தது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்களின் அரும்பெரும் சீடரான கதிர்வேல் பிள்ளை அவர்கள் மருட்பாக் கட்சிக்குத் தலைமைதாங்கி அருட்பாவை மருட்பா ஆக்கிக் காட்டி வந்தார். வள்ளலாரின் அமுதொத்த பாடல்கள் மருட்பா வாக்கப்பட்டதைக் கண்டும், கேட்டும் உளம் நைந்துவிட்ட மகாமதி, சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள் 'அருட்பா அருட்பாவே' என்று நிலை நிறுத்த கதிர்வேல் பிள்ளையின் எதிர்வேல் பிள்ளையாக ஊர்வூராய்ச் சென்று சொற்பெருக்காற்றினர். முடிவில் அருட்பா மருட்பாப் போராட்டம் ஓய்ந்தது. அருட்பாக் கட்சிக்கு அழியா வெற்றி கிட்டியது. தமிழ் நாட்டின் சைவாகம பக்தர்களும், தமிழ் இலக்கிய விற்பன்னர்களும், பாவலர் பெருமானரின் சொன்மாரியில் இதயம் பறிகொடுத்த ரசிகப்பெருமக்களும் பாவலர் அவர்கள்பால் தமக்குள்ள நன்றிப் பெருக்கையும் பெருமதிப்பையும் காட்டுவதற்காகக் காஞ்சிபுரத்தில் பெரும் வெற்றித் திருவிழா ஒன்றைக் கொண்டாடினர்.

பாவலர் அவர்களை யானைமீது வைத்து ஊர்வலமாக அழைத்துவந்து காஞ்சிபுரம் கோயிலில் பூரண கும்ப மரியாதை நல்கிக் கௌரவித்தனர். ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்த மாபெரும் கூட்டத்தில் பாவலர் அவர்கள் அருட்பாவின் அருமை பெருமைகளை எடுத்து விளக்கி மக்கள் மனத்தினின்றும் என்றும் அகலா ஒரு மாபெரும் பிரசங்கத்தை நிகழ்த்தி முடித்தார்கள். மணிக்கணக்கில் பாவலர் அவர்களின் தேவாமிர்தப் பிரசங்கத்தில் நெஞ்சம் பறிகொடுத்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுப்பிய கரகோஷம் ஓய்ந்து அடங்கப் பல நிமிடங்கள் ஆயின. கரகோஷம் ஓய்ந்ததும் கூட்டத்திலிருந்த ஒருவர் எழுந்து நின்று அப்பொழுது தான் பிரசங்கத்தை முடித்துவிட்டு மேடை மீது அமர்ந்திருந்த பாவலர் அவர்களை நோக்கி உரக்கக் குரல் கொடுத்தார். விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்த மருட்பாக் கட்சியில் இருந்துகொண்டிருந்த ஒரு சிலருள் முக்கிய ஒருவராக விளங்கிய அவரின் குரலைக் கேட்டதும் கூடியிருந்தோர் அனைவரும் காதைத் தீட்டிக்கொண்டு அவர் சொல்லப் போவதைக் கேட்கத் தயாராக இருந்தனர். அமைதியைக் கிழித்த வண்ணம் பாவலர் அவர்களை நோக்கிக் கணீரென்ற குரலில், "என்ன இருந்தாலும் நீவிர் ஓர் அசைவம்" என்று வெடுக்கென்று கூறிவிட்டு அவர் உட்கார்ந்துவிட்டார். தக்க தருணம் பார்த்துப் பாவலர் அவர்களை அவமதித்துவிட்ட பெருமிதத்தில் அவர் மகிழ்ந்தார். கூடியிருந்தோர் அனைவருக்கும் அவர் மொழிந்த வார்த்தைகள் விரசமாகப்பட்டன. முஸ்லிமாகிய பாவலர் அவர்களுக்கும்; சைவத்திற்கும் என்ன சம்பந்தம் என்று மருட்பாக் கட்சிக்காரர் பாவலர் அவர்களைப் பார்த்துக் கேளாமல் கேட்டுவிட்ட அசம்பாவிதத்தை எண்ணிக் கூடியிருந்தோர் அனைவரும் மனம் வருந்தித் தலை குனிந்திருந்தனர். தாம் கௌரவிக்க அழைத்த ஒரு மாமேதையை இதமற்ற மொழிகள் சொல்லித் தம்மவருள் ஒருவர் அகௌரவித்துவிட்டதை நினைந்து நினைந்து துடிதுடித்தனர் குழுமி இருந்தோர்.

பிரசங்கத்தை முடித்துவிட்டு மேடைமீது அமர்ந்திருந்த பாவலர் அவர்கள் அமைதி இழக்கவில்லை; மனம் நொந்துபோகவில்லை; ஆத்திரப்படவில்லை; ஆவேசம் கொள்ளவும் இல்லை. கனன்றெழுந்த கோபாக்கினியைத் தன்னை அவமதித்து விட்டதாக நினைத்துக் கொண்டிருந்த அந்தப் பேர்வழி மீது கக்கவுமில்லை. புன்முறுவல் பூக்க மெள்ள எழுந்து அந்தக் குறிப்பிட்ட நபர் இருந்த திக்கை நோக்கிய வண்ணம் ஒரு கணம் நின்றார்கள்.

இயற்கையிலேயே பாவலர் அவர்கள் ஆஜானுபாகுவான தோற்றம் உடையவர்கள். நல்ல உயரமும், பரந்த மார்பும், விம்மிய தோள்களும்

[166-ஆம் பக்கம் பார்க்கவும்]

நாவாரப்

அருங்கலைகள் ஆய்ந்தொருநூ றவதானஞ் செய்தவுயர்
பெருங்கவியின் பெருமைதனைப் பேசியுளங் குளிர்ந்திடுவோம்.

பல்விதத்து முன்திறமைப் பயனறியா மக்களெலாங்
கல்விதனி லகத்தியன்போற் கனம்படைத்தா ரரென்பார்.

வெற்றிதரு மிலக்கணத்தின் நற்றிறனுன் பாலறியார்
பற்றிறத்தொல் காப்பியனை மற்றெவரொப் பாரென்பார்.

கள்ளமற இறைமறையைக் கற்றுணர்ந்த நினையறியார்
வள்ளுவன்போல் நீதியுரை வழங்கிடவே ருரென்பார்.

கண்டொத்த நின்கவியைக் கருத்தேற்றிச் சுவையாதார்
விண்டிடுவர் கம்பனைப்போல் வேறெவர்தா முண்டெனவே.

பண்பாயுன் பாநயத்தைப் படித்தறியா தேமாந்தோர்
வெண்பாவிற் புகழேந்தி வெகுசமர்த்த னென்றிடுவார்.

நயன்மிளிரும் விசித்திரநின் நாவன்மைப் பாவறியார்
வியன்சிலேடைக் குயர்காள மேகம்போ லாரென்பார்.

மெச்சுமுமர் கவிக்குமுன் நீ விரித்தவுரை நயமறியார்
நச்சினார்க் கினியருரை நனிசிறந்த தென்றிடுவார்.

செப்பரிய நின்கோவைத் திறனறியா மாந்தரெலாம்
ஒப்புடைய ரெவருலகில் ஒட்டக்கூத் தனையென்பார்.

பகரும்பா வகைக்குனையோர் பாவலனென் றறியார்கள்
செகமதிலே கவிநான்கிற் றிறங்காட்ட லரிதென்பார்.

விரைதமிழி னருங்கவியை விளக்கிடுமுன் னுய்வறியார்
குரைகடலிற் குளித்துமுத்தைக் கொள்வதுமே லென்றிடுவார்.

வானமுது நிகராகா வகைசேருன் பாவறியார்
தேனமுதுங் கற்கண்டுஞ் சிறந்தமது வென்றிடுவார்.

ஒண்மதிசேர் உனைச்சூழ்ந்தே உறைவாரெண் காணார்தாம்
தண்மதிசூழ் தாரகைகள் தன்மதிப்பை வியந்திடுவார்.

கலைக்கடலின் ஆழமதைக் கண்டளந்த நினையறியார்
அலைகடலின் ஆழமதை ஆரறிவ ரெனவியப்பார்.

செய்குதம்பிச் செம்மால்நீ பெய்தமிழை யறியாதார்
பொய்முகிலை யுலகினிலோர் பொருளெனவே புகன்றிடுவார்.

பிரசங்க முனைப்போலும் பேரவையோர் மெச்சிமிக
சிரசங்க மனங்குளிரச் செய்துநின்றார் மற்றெவரே?

போற்றிடுவோம்!

கதிர்வேல் திறத்தோனைக் கண்டஞ்சி நில்லாமல்
எதிர்வேல் எனவந்தே ஏற்றமிக வுற்றாயே.
கம்பனிருங் கவியிலவன் கருத்தினுமேற் கருத்தோதும்
உம்பர்புகழ் உன்திறனை ஒத்தாரா ருலகினிலே?
புவிநாய னுந்தமிழ்நற் போதமதைப் பெற்றிருப்பின்
கவிநாயன் நீயெனவுன் காலடியில் வீழானோ?
வஞ்சிநாட்டிற் றெம்புகொண்டே வருபுலவோ ருன்திறல்முன்
அஞ்சியோடல் கண்டிருந்த அறிஞரெலாம் உனைவியந்தார்.
உற்றபெரும் ஐயமெலாம் உனைத்தேடி வருவார்க்குக்
குற்றமறத் தீர்த்துவிக்குங் குருவாகச் சிறந்தனையே.
தங்களுக்கே தமிழ்மொழியில் தனியுரிமை யெனவுரைத்தோர்
பங்கமுறத் திறன்காட்டிப் பயந்தொடுங்கச் செய்தனையே.
ஆதிமறை முறைவழுவா தறம்வளர்த்தோர் நடுவிலொரு
சோதியென வியந்திடவுஞ் சுடர்வீசி நின்றாயே.
பரம்பொருளை முற்றுணர்ந்து பலன்பெறவே மற்றெவர்க்குந்
திரமாக ஊட்டுமுயர் தேசிகனா யிருந்தனையே.
வெண்மதிமுன் மிகவொடுங்கி விறைத்துநிற்கும் உடுக்குலம்போல்
உன்மதிமுன் புலவரெலாம் ஒடுங்கிமிக நடுங்கினரே.
அள்ளியள்ளி நீசொரிந்த அந்தாதி தனைக்காணிற்
கொள்ளுபுகழ் கவியொட்டக் கூத்தனுஞ்சீர் குலையானோ?
நாயகத்தின் மான்மியத்தை நவிலரும்பா மஞ்சரியாய்
ஆயகத்தோர் மனங்களிக்க ஆக்கியளித் துயர்ந்தனையே.
நாகைநகர் ஆண்டகைமேல் நற்றிரிபந் தாதிசொலி
வாகைமிகச் சூடியவுன் மாபெருமை யாருரையார்?
மதிசிறந்த கோடைநகர் மாஞானி தாளிணைக்கே
பதிற்றுப்பத் தந்தாதி பகர்ந்தவுனைப் போற்றாரார்?
பொன்னிசையும் பின்னிசையப் பொருணயஞ்சேர் பன்னயத்தோ
டின்னிசைப்பா என்றென்றுந் தேற்றமிக வுற்றாயே.
மாமதியாய்ப் பொலிந்துநின்ற மாகவியைக் கலைக்கடலை
நாமதித்துப் புகழ்ந்தென்றும் நர்வாரப் போற்றிடுவோம்!

சதாவதானிப் பாவலர் மன்றத்தார்.

[163-ஆம் பக்கத் தொடர்ச்சி]

உடையவர்கள் அவர்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களின் முகத்தில் தோன்றுகின்ற இறுமாப்பின் பெருக்கும், பெருமிதத்தின் செருக்கும் ஊடே அவர்களுக்கே உரிய ஏளனமும், குறும்பும் கலந்த சிரிப்பும் தோன்றின. பாவலர் அவர்கள் யாது சொல்லப்போகிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் கூட்டத்தினர். தம்மை "அசைவம்" எனக் கூறிய அந்த நபரை நோக்கிப் பாவலர் அவர்கள் "ஆம் யாம் அசைவம்" என்று கூறியபடி மேடையில் நின்ற வண்ணமே தம் ஆஜானுபாகுவான மேனியை இப்பக்கமும் அப்பக்கமுமாக, இடமும் வலமுமாகச் சிறிது அசைத்துக் காட்டினார்கள். தங்களுடைய பரந்த இரு தோள்களையும் இடது புறமும் வலது புறமுமாகச் சற்றே தாழ்த்தித் தாழ்த்திச் சிங்கவேற்றைப் போலத் தலையை நிமிர்த்தி அசைத்துக் காட்டினார்கள். பீடு மிக்க களிற்றினைப் போல் இங்குமங்குமாக அசைந்த வண்ணம் மீண்டும் தம்மை அசைவம் என்றழைத்த அந்த நபரை நோக்கி "ஆம் யாம் அசைவோம்" என்று அசைந்தாடிக்காட்டி நகைத்தவாறே மீண்டும் மேடைமீது அமர்ந்தார்கள். கூட்டத்தினர் கொல்லென்று கைகொட்டிச் சிரித்தனர். பாவலர் அவர்களின் கௌரமும் மாண்பும் மீண்டும் தன்றென நிமிர்ந்துவிட்டதை எண்ணி உள்ளம குளிர்ந்தனர்; மகிழ்ந்தனர்; பாவலர் அவர்களின் சாதுரியததையும், மேதாவிலாசத்தையும் எண்ணி எண்ணி வியந்தனர்; மெச்சினர். அசைவம் என்றழைத்தவரை அப்புறம் கூட்டத்தில் ஒருவராலும் கண்டுகொள்ள முடியவில்லை, இவ்வாறு தன்னை எதிர்த்தவர்களை அவர்களின் வார்த்தைகளைக் கொண்டே மடக்கி வெற்றிகொள்வது பாவலர் அவர்களிடம் அமைந்திருந்த தனித் திறமையாகும்.

★ ★

✻ ● ✻

தமிழ்ப் பெருமக்களுக்கோர் நற்செய்தி!

விரைவில் வெளிவருகிறது!

★ பாவலர் பாடல்கள் ★

சதாவதானி செய்குதம்பிப் பாவலர்

அவர்கள் இயற்றிய

செய்யுட்களின் தொகுப்பு

✻ ● ✻

IDEAL BAKERY

College Road, NAGERCOIL.

HIGH CLASS CAKES
BISCUITS
BUNS & BREADS
always available here.

Please Visit: ★

OUR BAKERY

Prop: S. GEORGE

ஐடியல் பேக்கறி

காலேஜ் ரோடு, நாகர்கோவில்.

எம்மிடம்

ரொட்டி, கேக் வகைகள், பிஸ்கட் திநுசுகள்,
மற்றும் சால்ட் பிஸ்கட்டுகள்
குறைந்த விலையில் எப்பொழுதும் கிடைக்கும்.
ஆர்டர்களுக்கு
குறித்த சமயத்தில் நேர்த்தியான முறையில்
தயாரித்துக் கொடுக்கப்படும்.

உரிமையாளர்: S. ஜார்ஜ்

தந்தி: LIONBRAND

தொலைபேசி: 2964

★ மழைக் காலங்களிலும், ★ கோடைக் காலங்களிலும்,

★ நீடித்த உழைப்பிற்கு ★ சிறந்தவை

சிங்கம் மார்க் குடைகளே!

எல்லா ஊர்களிலும் கிடைக்கும்

வாங்கி உபயோகியுங்கள்

: தயாரிப்பவர்கள் :

சிங்கம் மார்க் குடை கம்பெனி

"லயன் பில்டிங்" 94, கீழ வணி மூலவீதி,

மதுரை—1.

USE ALWAYS LION BRAND UMBRELLAS

Tel: "BABUJI"

★ குறைந்த லாபத்தில் ★ தரமான சாமான்கள்

★ நவநாகரீக தினுசுகள் ★ இவைகளை உங்களுக்கு வழங்குவது

திருநெல்வேலி ஜங்ஷன் **சிவாஜி ஸ்டோர்ஸ்**

சிவாஜியின் நோக்கம் உங்களைத் திருப்திப்படுத்துவதே!

அதனல்தான் எங்கள் கடைக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

தங்கள் வருகைக்கு மிக்க நன்றி!

தூய வெண்மையான சலவைக்குச் சிறந்தது

V. S. செல்லம் சோப்

40, அம்மன் சன்னதி, மதுரை.

ஏஜெண்ட்:

K. N. ராம் பிரதர்ஸ், கோட்டாறு.